UNIVERSITY OF MALAYA

Jilid/Vol. 12 2019

# JURNAL PENGAJIAN INDIA

# இந்திய ஆய்விதழ்

# JOURNAL OF INDIAN STUDIES

# Jurnal Pengajian India

## இந்திய ஆய்விதழ்

# (Journal of Indian Studies)

**Jilid / Vol. XII** **2019**



**Editor-in-Chief:**

**Dr. Mohana Dass Ramasamy**

**Department Editors:**

Professor Dr M. Rajantheran (Malaysia)
Associate Professor Dr. Krishanan Maniam (Malaysia)
Associate Professor Dr. Kumaran Suberamanian (Malaysia)

**Editorial Advisory Committee**

Dr Riaz Mangrio (Pakistan)
Dr Jeevan Chemeen (Mauritius)
Dr Murugaiyan (Paris)



2019

Department of Indian Studies
Faculty of Arts and Social Sciences
University of Malaya
50603 Kuala Lumpur
Malaysia

This journal is published annually ISSN: 1675-171X

# Jurnal Pengajian India
# இந்திய ஆய்விதழ்
# (Journal of Indian Studies)

## தலைமைப் பதிப்பாசிரியர்
**முனைவர் மோகன தாஸ் இராமசாமி**

மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையின் வருடாந்திர வெளியீடு இந்திய ஆய்விதழ். இவ்வாய்விதழ் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் விரிவுரைஞர்கள் தங்களது படைப்புகளை வெளிப்படுத்த ஒரு வாய்ப்பளிக்கும் தடமாக அமைகின்றது. சிறந்த ஆய்வு மனப்பாங்கோடு உருவாக்கப்பட தரமிக்க கட்டுரைகளைத் தேர்ந்தெடுந்து பதிவுசெய்து, கல்வி உலகில் அவற்றைப் பதிவுசெய்யும் முயற்சிக்கு இவ்வாய்விதழ் வழிவகுத்துக் கொடுக்கின்றது. மலேசிய மண்ணிலும், பிற இடங்களிலும் இந்தியர், தமிழ், தமிழர், அவர்தம் வாழ்வியல் அமைப்பு, மாற்றம், எழுச்சி ஆகிய நுண்ணிய பார்வையினை வெளிக்கொணரும் நல்ல கட்டுரைகளைப் பிரசுரிப்பது இவ்வாய்விதலின் முதன்மை நோக்கமாகும். தேசிய மொழியான மலாய், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் எழுத்தப்பட்ட அத்தகைய தரமிக்க கட்டுரைகள் இவ்வாய்விதழில் பிரசுரிக்கப்படுகின்றன.

இந்திய ஆய்வியல் துறையின் கல்வி வளர்ச்சிப்பணியில் ஒரு மைல்கல் இந்திய ஆய்வியல் இதழ். கல்விமான்களும் துறையில் கல்விபயிலும் ஆய்வுமாணவச் செல்வங்களும், பிறரும் தமது சிந்தனைக்கருவில் உதித்த உயர்சிந்தனைகளைப் பிறரோடு பகிர்ந்துகொள்ள தற்போது தடம் வழங்கும் இடமிதுவாக அமைத்துக் கொண்டுள்ளது. சிந்தனைமடல்களில் மலர்ந்த அச்சிந்தனைக்கருக்கள் தம்மையும், தம் சமுதாயத்தையும், தம்தேசத்திற்கும் நன்மையைப் பயக்கும் வண்ணம் அமைந்திடுவது மிகைமுக்கியமாகிறது. இக்கருத்துகள் பொதுவில் இரு பணிகளைச் செய்யும்; ஒன்று, தமது கருத்துகளைப் பிறரோடு பகிந்துகொள்ள உதவுதல்; மற்றொன்று, தமது கருத்துகளைப் பதிவுசெய்து அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டுசெல்லுதல். இவ்விரண்டு செயல்களும் கல்வியுலகில் காலங்காலமாக நடந்துகொண்டு வருகின்றன. இம்முயற்சி தடைபடுமாயின், சமுதாயத்தின் வளர்ச்சியும் ஏதோ ஒரு வகையினில் தடைபடுவதாகவே பொருளாகும்.

இந்த இதழ் 7 ஆய்வுக் கட்டுரைகளைக் கொண்டு மலர்ந்துள்ளது. இவ்விதழில் காணப்படும் 7 கட்டுரைகளும் 7 ஆய்வுப்புலங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன. அந்த வரிசையில் நாகரிகம், பண்டைத் தமிழர் வணிகம், இலக்கணம், நவீன இலக்கியம், சோதிடம், சமயம் மற்றும் ஒப்பீட்டு இலக்கியம் என பல்வகைத் தலைப்புகளில் ஆய்வுக்கட்டுரைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**சிந்துவெளி நாகரிகம் ஓர் ஆய்வியல் அறிமுகம்** எனும் கட்டுரையின் ஆசிரியர்கள் பேராசிரியர் முனைவர் மு.இராசேந்திரன் மற்றும் முனைவர் க.சில்லாழி ஆகியோர் சிந்துவெளி நாகரிகம் குறித்து விளக்கமாக விவரித்துள்ளனர். இக்கட்டுரை நாகரிகம்-பண்பாடு ஆகியவற்றிற்கு இடையில் உள்ள தொடர்புகளையும், நாகரிகமடைந்த மக்களிடையே காணக்கிடக்கும் சில முக்கியக் கூறுகளையும் விளக்கி, பொதுவில் சிந்துவெளி நாகரிகம் உலகின் சிறந்த சில தொல்நாகரிகங்களுள் ஒன்றாகத் திகழ்கிறது என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை என உறுதிபடுத்தியுள்ளனர். சிந்துவெளி தொல்பொருள் ஆய்வு, தனது ஒட்டுமொத்தப் பங்களிப்பில், இந்திய நாகரிக வரலாற்றைச் சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்தள்ளியது என்பதுதான் முதன்மையான பங்களிப்பாக இக்கட்டுரையில் வழங்கியுள்ளனர். இந்த நாகரிகத்தைத் தோற்றுவித்தவர்கள் யார் எனும் கேள்விக்கான துள்ளியமான விடையை ஆய்வாளர்கள் இன்னமும் கண்டறியவில்லை. சிந்துவெளியின் எழுத்துகள் திருப்திகரமான முறையிலும், அனைத்துத் தொல்லியல் ஆய்வாளர்களும் ஏற்கும் வகையிலும் அமையாமல் போனது இவ்விசயத்தில் மிகப்பெரிய பின்னடைவாகக் கருதப்படுகிறது. இருப்பினும், சிந்துவெளி நாகரிகத்தைத் தோற்றுவித்தவர்கள் தொல்தமிழ்/திராவிட முன்னோர்கள்தாம் எனும் அனுமானம் பலவகையிலும் வலுப்பெற்று, தற்போது முதன்மை நிலையில் இருப்பது தெரிகிறது என விளக்கியுள்ளனர்.

இரண்டாம் கட்டுரையாக இடம்பெற்றிருக்கும், **பண்டைத் தமிழரும் வாணிகமும்** எனும் கட்டுரை முனைவர் இரா. கிருஷ்ணன் அவர்களால் படைக்கப்பட்டுள்ளது. மக்கள் வாழ்க்கைக்கு உணவு, உடை போன்றே பொன், வெள்ளி முதலிய செல்வமும் இன்றியமையாதவையாகும். ஒரு நாட்டின் நல்வாழ்விற்கு, பொருள் வளர்ச்சிக்கு அடிப்படையாக விளங்குவன உழவுத்தொழில், கைத்தொழில்கள், நில வழியும் நீர் வழியும் நடத்தப்பெறும் வணிகம் ஆகியன என்று பண்டைத் தமிழர்கள் நன்கு அறிந்து வைத்திருந்தனர்; ஆகையால்தான், நம் முன்னோர்கள் திரை கடல் ஓடியும் திரவியம் தேடு என்றனர் போலும் எனும் அடிப்படையில், இந்தக் கட்டுரை பண்டைய தமிழ் மக்களின் வணிகம், அவர்கள் பிற நாடுகளுடன் மேற்கொண்ட வாணிகம் முதலியவற்றைப் பற்றி ஆராய்கிறது என விளக்கியுள்ளார். பண்டைத் தமிழர் சமுதாயத்தில் வணிகர் உயர்ந்த இடத்தைப் பெற்றிருந்தது எனவும் சங்ககால வாணிகம் தமிழர்களின் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்தது எனவும், வணிகம் ஐவகை நிலங்களில் வெவ்வேறு தொழில்கள் நடைபெற்றதால் வாணிகமும் வேறுபட்டு இருப்பதைக் காண முடிகிறது எனக் கூறியுள்ளார். வணிகர்களால் தமிழகம் செல்வச் செழிப்புற்று விளங்கியது எனவும், இவர்கள் சான்றோர்கள் கூறியுள்ள அறநெறிகளிலிருந்து தவறாது, இல்லற நெறியிலும் பிறழாது வாழ்ந்தனர். வெளிநாட்டினரோடு சிறப்பாக வாணிகம் செய்தனர் என விளக்கியுள்ளார்.

மூன்றாவது கட்டுரை, **வினைச்சொற்கள் கற்றல்-கற்பிப்பதில் பின்னோக்குப் போதனைமுறை உத்தி** எனும் தலைப்பினில் முனைவர் மோகன தாஸ் ராமசாமி அவர்களால் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ் இலக்கணக் கற்றல் கற்பித்தல் என்பது கடுமையான ஒன்று என்பது பலரது பார்வை. அதிலும் வினைச்சொற்களைக் கற்பிப்பது சற்றுக் கடினம். இந்தக் கடினத்துவம் மாணவரது மனதில் இருப்பினும், போதனையாளர்களின் மனதில் ஆழமாகவே உள்ளது. இலக்கணம் என்பது எட்டிக்காய் உண்பது எனும் எண்ணத்தில் பார்க்கும் ஒரு சில போதனையாளர்களின் பார்வை

இப்பாடப் போதனையினை மேலும் சிரமமாக்குகின்றது. மலேசியா போன்ற நாடுகளில் தமிழ் மொழியினை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்படும் வேளையில், இதன் சிரமநிலை மேலும் பன்மடங்கு ஆகின்றது. போதிய ஆழ்நிலை இலக்கண ஆளுமையின்மையும் இந்நிலையினை மேலும் சிரமமாக்குகின்றது. இத்தகையச் சூழலில் தமிழ் இலக்கணத்தில் குறிப்பாக சிரமமான பிரிவாகக் கருதப்படும் வினைச்சொற்களை அறிமுகம் செய்து அவற்றின் இலக்கணக் குறிப்புகளை இலகுவாக விளக்கிடும் ஒரு முறைமையினை, குறிப்பாக உயர் இடைநிலை மாணவர்களுக்கு அறிமுகம் செய்யும் நோக்கினில் இக்கட்டுரை வடவமைக்கப்பட்டுள்ளது. வினைச்சொற்களை வேர், அடி, சொல், தொகை, தொடர் எனப் பிரித்துப் போதனை செய்யாது, எதிர்நிலை முறையில், பின்வடிவாக்க முறையினில் போதிப்பதை இம்முறைமை அறிமுகம் செய்கின்றது. இந்தப் புதுமை முயற்சி ஆசிரியர்களுக்குப் பேருதவியாக அமையும் என்பதில் ஐயமில்லை எனலாம்.

இணைப்பேராசிரியர் வே. சபாபதி அவர்களின் கைவண்ணத்தில் உருவாக்கப்பட்ட கட்டுரை, **தொன்னூறுகளுக்குப் பின் மலேசியத் தமிழ் நாவல்கள் (1990-2007)** என்பதாகும். இக்கட்டுரை தொன்னூறுகளிலிருந்து இன்றுவரையில் மலேசியத் தமிழ் இலக்கியத்தில் நாவல் பற்றிய பொதுவான செய்திகளை விளக்குதல், தொன்னூறுகளுக்குப் பின் மலேசியத் தமிழ்நாவல் வளர்ச்சியில் காணப்படும் முக்கியத் திருப்புமுனைகள், கிரியா ஊக்கிகள், நிகழ்வுகள் ஆகியவற்றை அறிந்து விளக்குதல், தொன்னூறுகளுக்குப் பின் மலேசியத் தமிழ்நாவல் வளர்ச்சிக்கு அதிகமான பங்களிப்பினைச் செய்துள்ள நாவலாசிரியர்களை அடையாளங்கண்டு குறிப்பிடுதல், தொன்னூறுகளுக்குப் பின் வெளிவந்த மலேசியத் தமிழ்நாவல்களின் வளர்ச்சியில் காணப்படும் நாவல், குறுநாவல் பற்றிய ஒருமைப்பாடு, வேறுபாடு ஆகியவற்றை விளக்குதல், தொன்னூறுகளுக்குப் பின் குறிப்பாக அண்மைய பத்தாண்டுகளில் *(1997-2007)* வெளிவந்த மலேசியத் தமிழ்நாவல்களின் உள்ளடக்கத்தின் முக்கியப் போக்குகளை அறிவதோடு அவற்றின் தரமும் திறமும் பற்றி விளக்குதல், தொன்னூறுகளுக்குப் பின் வெளிவந்த மலேசியத் தமிழ்நாவல்களின் *(1997-2007)* உள்ளடக்கத்தில் காணப்படும் நிகழ்காலச் சமுதாயத்தின் சமகாலப் பிரச்சினைகளை அடையாளங்கண்டு விளக்குதல், மற்றும் தொன்னூறுகளுக்குப் பின் வெளிவந்த மலேசியத் தமிழ்நாவல்களின் *(1997-2007)* உள்ளடக்கத்தில் வெளிப்படும் மலேசிய மண்ணின் மணம், அடையாளங்கள், மலேசியத் தன்மைகள் ஆகியவற்றை அடையாளங்கண்டு வெளிப்படுத்துதல் ஆகிய நோக்கங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது.

ஐந்தாவது கட்டுரையாக அமைந்திருக்கும், **தமிழர் சமய வரலாறு: ஒரு பொதுப் பார்வை** என்பது முனைவர் இரா. சீதா லட்சுமி அவர்களால் உருவாக்கப்பட்டது. தாம் பார்க்கின்ற உலகத்தை, இயற்கைக் கூறுகளைக் கண்டு மனிதன் அஞ்சி, வியந்து, அதன் அடிப்படையில் இயற்கையை மனிதன் வழிபடத் தொடங்கினான் என்றும், உலகின் எல்லா நாடுகளிலும் மனிதன் கண்டுணர்ந்த சமயநெறியின் தொடக்கம் இதுவாகவே இருந்தது. பின்னர், இச்சிந்தனை மரபுநெறி வழிபாடாக வளர்ச்சி பெற்றது. சான்றோர் பெருமக்களின் சிந்தனைத்திறத்தால் ஆகமநெறி சமயங்களாக அவை வளர்ச்சி கண்டன. அவ்வகையில், தொல்காப்பியர் காலம் தொடங்கி, பக்தி இயக்கக் காலம் வரையிலான தமிழர் சமயத் தோற்றம், புறச்சமய ஊடுருவல், பக்தி இயக்கத் தோற்றமும் அதன் வளர்ச்சியும் ஆகிய தமிழர் சமய வரலாறு குறித்த ஒரு பொதுப் பார்வையினைத் தொகுத்து வழங்குதலை அடிப்படை நோக்கமாகக் கொண்டு இந்த ஆய்வுக் கட்டுரையை உருவாக்கியுள்ளார்.

தொடர்வது இந்தியர்களின் **சோதிடக்கலை: ஓர் அறிமுகம்** என்பது கோவி. சிவபாலன் அவர்களது கட்டுரை. இக்கட்டுரை ஆசிரியர் இன்றைய காலக்கட்டத்தில் மக்களிடையே சோதிடத்தின் மீது எதிர்மறையான சிந்தனைப்போக்கு ஒருபுறம் இருந்தாலும், சோதிடர்களை நாடிப் பயன்பெறும் நோக்கமும் அக்கலையைப் பற்றி ஆராயவும் கற்றுத்தேறவும் மக்கள் காட்டுகின்ற முனைப்பும் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றன. இவ்வாறு சோதிடக்கலையைக் கற்கவும் ஆராயவும் தலைப்படுவோருக்கு சோதிடக்கலையைப் பற்றியும் அதுசார்ந்த நம்பிக்கையைப் பற்றியும் ஒரு பொதுவான புரிதல் இருப்பது இன்றியமையாதது ஆகும். அந்த வகையில் இந்தியர்களின் சோதிடக்கலையைப்பற்றி அறிய விழைவோர்க்கு அக்கலையைப் பற்றிய பொது அறிமுகத்தைத் தருவதாக இக்கட்டுரை அமைகின்றது என விவரிக்கின்றார்.

நிறைவுக் கட்டுரையாக அமைந்திருக்கும், **மரபுவழி அடையாளமும் வாழும் நாட்டின் அடையாளமும் எழுத்தாளர் கே. எஸ். மணியம் படைப்புகளில் அடையாளத் தேடல்கள் ஓர் ஆய்வு** எனும் கட்டுரையினை, கட்டுரையாளர் விஜயலட்சுமி அவர்கள் உருவாக்கியுள்ளார். எழுத்தாளர் கே.எஸ். மணியத்தின் ஆங்கில மொழி சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள் அனைத்து வகை இலக்கியப் பிரதிகளும் மலாயா/மலேசியாவின் புலம்பெயர் சமூகம் இதுவரை கடந்துவந்திருக்கும் பாதையையும் இனிச் செல்ல வேண்டிய இலக்கையும் அதற்கான வழிகளையும் மீளாய்வு செய்பவையாக இக்கட்டுரை அமைந்துள்ளது. ஒவ்வொரு சமூக உறுப்பினரும் தனது மரபுவழி அடையாளங்களையும் வாழும் நாட்டின் அடையாளங்களையும் ஒருங்கே அணைத்துக் கொள்வதன்வழி பன்முகத் தன்மைகொண்ட ஒன்றைச் சமூகமாக உருவெடுக்க முடியும் எனும் பெரும் எதிர்பார்ப்பைக் கே.எஸ். மணியத்தின் படைப்புகள் முன்வைக்கின்றன. மலேசிய ஆங்கில இலக்கியச் சூழலில் முன்னோடியாகத் திகழும் கே.எஸ்.மணியத்தின் படைப்புகளில் வெளிப்படும் தனிமனித, சமூக அடையாளத் தேடல்கள்; அதை நோக்கிய பயணங்களின் சுவடுகளை அடையாளங்கண்டு விளக்க இக்கட்டுரை முனைந்துள்ளது எனக் கூறலாம். இந்த 7 கட்டுரைகளும் இவ்விதழைச் சிறக்கச் செய்யும் மணிக்கட்டுரைகள் எனலாம்.

இந்திய ஆய்விதழ் புதிய உத்வேகத்துடன் வளர, இந்த 12-ஆவது ஆய்விதழ் தடம் அமைத்துள்ளது. தமிழ்ச் சிந்தனைகளுக்கும் இந்தியச் சிந்தனைகளுக்கும் இடமளிக்கும் வண்ணம் இவ்விதழ் தமிழ்-மலாய்-ஆங்கிலம் என மும்மொழிகளிலும் வெளிவந்து கொண்டிருக்கின்றது. தமிழர் மற்றும் இந்திய வம்சாவளியினர் என இருசாராரது மொழி, இலக்கியம், கலைகலாச்சாரம், சமயம், பண்பாடு, நாகரிகம், அரசியல், பொருளாதாரம், சமூகவியல், சித்தவைத்தியம், ஆயுர்வேதம் என எல்லைக்குட்பட்ட சிந்தனைகளையும், உலக நாகரிகங்கள் பிறவற்றுடன் இணைத்தும் ஆய்வுக்கட்டுரைகள் இவ்விதழ் பிரசுரிக்கும். தமிழரின் சிந்தனைச் சிறப்புகளையும் சித்தாந்தங்களின் சிறப்புகளையும் வெளியுலகிற்குக் காட்டும் வண்ணம் இவ்விதழில் இடம்பெறும் கட்டுரைகள் இருப்பதனையும் ஆற்றின் ஆய்வுத்தரமும் இனிவரும் காலங்களில் மிகுவாக உறுதிசெய்யப்படும்.

இக்காலப்பகுதியில் உலகெங்கும் பல பல்கலைக்கழகங்களில் தமிழ்-இந்திய சார்பு ஆய்வுகள் நடந்த வண்ணமாக உள்ளன; அவற்றையும் நம்மோடு இணைத்து வளர இவ்விதழ் வாய்ப்பளிக்கும். ஆசிய-ஐரோப்பியப் பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் தமிழ்-இந்தியத்துறை அறிஞர்களின் கருத்துகளையும் பதிவுசெய்யும் தடமாக உருமாற்றிட முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இதன்வழி உலகெங்கும் நடைபெறும் தமிழ்த்தொடர்பான ஆய்வுகள் நடைபெறுவதற்கும் தமிழறிஞர்கள் கருத்துப்பரிமாற்றங்கள் செய்வதற்கும் நல்லதொரு களம் உருவாக்கப்பட்டுள்ளது

எனப் பெருமைகொள்ளலாம். தமிழறிஞர்களிடையே ஆக்ககரமான கலந்துரையாடல் நடைபெறுவதற்கு இத்தடம் வலிமைசேர்க்கும் என்பது திண்ணம்.

இந்திய ஆய்வியல் துறையின் பாரம்பரியத்தில் இவ்விதழ் மிக முக்கியமானதாக கருதப்படுகின்றது. 1980-களில் முதல் இதழ் வெளியீடு கண்டது முதல் இன்றுவரை (37 ஆண்டுகள்) 10 இதழ்களே வெளிவந்துள்ளன. தடைகள் பலவற்றை உடைத்தெறிந்து, இவ்விதழ் 7 சிறப்புப்படைப்புகளை ஏந்தி வெளிவரும் ஓர் இதழாக அமைந்துள்ளது. இவ்விதழில் 7 ஆய்வுக்கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன; மொழி, இலக்கியம், சமயம், மொழியியல் எனப் பன்முக ஆய்வுப்படைப்புகளின் முக்கியக் கண்டுபிடிப்புகள் இவ்விதழின் மூலம் பதிவுசெய்யப்பட்டு, வெளியுலகிற்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இந்திய ஆய்வியல் துறையில் ஆய்வுப்பாரம்பரியத்தில் பாதைநெறிகளையும் காட்டும் வண்ணம் அமைந்துள்ளது என்பதும் திண்ணம்.

இந்த ஆண்டுமுதல் இந்திய ஆய்விதழ் (2019) மின்னியல் ஆய்விதழாகவும் பதிவேற்றம் காண உள்ளது. இதன்வழி உலகெங்கங்கும் இருக்கும் தமிழ்-இந்திய ஆர்வலர்கள் இம்மடலினைப் பயன்படுத்தும் நிலைக்கு வாய்ப்புகள் உருவாகியுள்ளது. எனினும், கடந்த 10 ஆண்டுகளாகத் தடைபட்டு இருந்த இதன் வெளியீட்டுத் தடையினைக் களைந்து, கல்வியுலகில் புதிய பரிணாமத்தில் வளர மீண்டும் மலர்ந்த இவ்விதழின் இளமை எக்காரணத்திற்காகவும் என்றென்றும் இழக்காமல் காக்க எம் துறையினர் பெருஞ்சிரத்தையைச் செலுத்துவர் என எதிர்பார்க்கின்றேன்; நாம் வீழ்ந்தாலும் தமிழ் வளரவேண்டும் என்பதனைச் சொல்லினால் அல்லாமல் செயலில் பதித்துச் செயல்படுத்துவோமாக.

இவ்விதழில் வெளிப்படுத்தப்படும் கட்டுரைக் கருத்துகள் பதிப்பாசிரியர் குழுவின் கருத்துகளாகவோ இந்திய ஆய்வியல் துறையின் கருத்துகளாகவோ இருக்க வேண்டிய அவசியமில்லை.

மலாயாப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மேற்பார்வையில் இயங்கும் நாட்டுக்கோட்டைச் செட்டியார் அறக்கட்டளை வாரியம் இவ்விதழ் வெளிவருவதற்கான மானியத்தினைக் கடந்த காலங்களில் வழங்கிச் சிறப்பித்துள்ளது. எனினும், அத்துணைமைச் செயல்பாடு கிடைக்கப் பெறாத நிலையில் இவ்வாய்விதலின் வெளியீடு தடைபெறா வண்ணம் மின்னிதழாக மறுபிரவாகம் பெற்றுள்ளது. இம்முயற்சி இவ்வாய்விதல் பரந்த தமிழ் உள்ளங்களைச் செவ்வனே சென்றடையுமென நம்புகின்றேன்.

இக்கன்,
முனைவர் மோகன தாஸ் ராமசாமி
தலைமைப் பதிப்பாசிரியர்
இந்திய ஆய்வியல் துறை
மலாயாப் பல்கலைக்கழகம்
ஜனவரி 2020.

# Jurnal Pengajian India
## இந்திய ஆய்விதழ்
## (Journal of Indian Studies)

**Chief –in- Editor**
**Dr Mohana Dass Ramasamy**

Jurnal Pengajian India merupakan sebuah jurnal tahunan yang diterbitkan oleh jabatan Pengajian India, Universiti Malaya.

Jurnal ini bertujuan untuk menyediakan wadah bagi menerbitkan hasil penyelidikan yang dijalankan oleh barisan tenaga pengajar di Jabatan Pengajian India.

Jurnal ini menerima artikel berbentuk ilmiah ditulis dalam Bahasa-bahasa Tamil, Bahasa Malaysia dan Inggeris untuk penerbitan.

Harus ditegaskan bahawa dapatan dan pandangan dikemukakan dalam bentuk artikel-artikel yang diterbitkan tidak semestinya merupakan pendapat editor mahupun barisan pengarang atau Jabatan Pengajian India.

Penerbitan jurnal ini dibiayai oleh peruntukan dari Tabung Amanah All-Malaya Nattukkottai Chettiyar yang diselenggara di bawah Timbalan Naib Canselor (Akademik & Antarabangsaan) Universiti Malaya.

Journal of Indian Studies is an annual journal published by the Department of Indian Studies, University of Malaya.

The aim of the journal is to provide a channel for the publication of research works carried out by the teaching staff in the Department of Indian Studies.

Language used in this journal are Bahasa Malaysia, Tamil and English.

Views expressed in the articles are not necessarily the view of the Editorial Board or the Department of Indian Studies.

Publications of this journal is financed by a grant from the *All-Malaya Nattukkottai Cheetiyar Endowment Fund*, administered by the University of Malaya in the past.

# Jurnal Pengajian India
## இந்திய ஆய்விதழ்
## (Journal of Indian Studies)

Jilid/Vol. XII 2019

**உள்ளடக்கம் பக்கம்**

*ஆசிரியர் உரை* *i-vi*
*உள்ளடக்கம்* *vii*

*சிந்துவெளி நாகரிகம்: ஓர் ஆய்வியல் அறிமுகம்* *1*
- *மு.இராசேந்திரன் & க.சில்லாழி*

*பண்டைத் தமிழரும் வாணிகமும்*
- *இரா. கிருஷ்ணன்* *20*

*வினைச்சொற்கள் கற்றல்-கற்பிப்பதில் பின்னோக்குப் போதனைமுறை உத்தி* *31*
- *மோகன தாஸ் ராமசாமி*

*தொன்னூறுகளுக்குப்பின் மலேசியத் தமிழ் நாவல்கள் (1990-2007)* *46*
- *வே. சபாபதி*

*தமிழர் சமய வரலாறு: ஒரு பொதுப் பார்வை* *73*
- *இரா. சீதா லட்சுமி*

*இந்தியர்களின் சோதிடக்கலை: ஓர் அறிமுகம்* *82*
- *கோவி.சிவபாலன்*

*மரபுவழி அடையாளமும் வாழும் நாட்டின் அடையாளமும்* *95*
*எழுத்தாளர் கே.எஸ்.மணியம் படைப்புகளில் அடையாளத் தேடல்கள் ஓர் ஆய்வு*
- *விஜயலட்சுமி*

# சிந்துவெளி நாகரிகம் ஓர் ஆய்வியல் அறிமுகம்

பேராசிரியர் முனைவர் மு.இராசேந்திரன்[1] rajanmun@um.edu.my
துணைப்பேராசிரியர் முனைவர் க.சில்லாழி[2] silllalee@yahoo.com
இந்திய ஆய்வியல் துறை, மலாயாப் பல்கலைக்கழகம்

**ஆய்வுச்சுருக்கம்**

*இந்தியாவின் தொன்மை நாகரிகம் என்றாலே அது சிந்துவெளி நாகரிகத்தைத்தான் குறிக்கும். இந்நாகரிகம் ஹராப்பா நாகரிகம், சிந்து நாகரிகம், சைந்தவ நாகரிகம், ஆரிய-முற்கால இந்திய நாகரிகம், இந்திய வரலாற்றுத் தொடக்க கால நாகரிகம் இப்படிப் பல பெயர்களாலும் குறிப்பிடப்படுவதுண்டு. இந்திய நாட்டின் தொன்மை வரலாற்றின் தொடக்கம் இங்கிருந்துதான் பெறப்படுகின்றது. சிந்துவெளி நாகரிகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட நகர அமைப்பு, சாலைகள், வீடுகள், நீர்வடிகால், தெப்பக்குளம், தவசக்கிடங்கு, படகுத்துறைமுகம், தினசரிப் பயன்பாட்டிற்கான உபகரணப் பொருள்கள், சிற்பங்கள், எழுத்துகள், சித்திரங்கள், வெண்கலக் கருவிகள், ஒப்பொனைக் கருவிகள், சமயம் மற்றும் கடவுள் நம்பிக்கை சார்ந்த பொருள்கள், அளவை/நிறுவைக் கருவிகள் போன்றவை அனைத்தும் சிந்துவெளி மக்கள் எத்தகைய உயரிய நாகரிகத்தை எட்டியிருந்தனை என்பதை ஆதாரப்பூர்வமாக நிறுவுகிறது. அதே வேளையில் இவை யாவுமே இம்மக்களின் பண்பாட்டு அடைவின் சிறப்பைச் சுட்டுவதாகவும் உள்ளது. நகர அமைப்பு உட்பட அனைத்திலும் ஓர் அளவுகோளை வைத்து வாழ்ந்த இம்மக்கள் தங்களின் வாழ்க்கையையும் ஓர் நெறியில் நின்று வாழ்ந்திருக்கின்றனை என்பதை இக்கட்டுரை விளக்குகிறது. இத்துணைச் சிறப்புகளையும் உள்ளடக்கிய சிந்துவெளி மக்கள் தொன்மைத் தமிழர்களே ஆவர். இது வடக்கே அமையப் பெற்றிருந்தாலும் ஆரியர் நாகரிகம் அன்று. இதற்குப் பல ஆதாரங்கள் முன்வைக்கப்பட்டிருந்த போதும் அங்கு கண்டறியப்பட்ட, உழவுத்தொழிலுக்கு ஆதாரமாக விளங்கும் காளை மாட்டின் சிற்பம் ஒன்றே இது தொல்தமிழர் நாகரிகம் என்பதற்குப் போதுமான சான்று எனலாம். இக்கூற்றையே சிந்துவெளி நாகரிகத்தை ஆய்வுசெய்த சார் ஜான் மார்ஷல் உள்ளிட்ட பல ஆய்வாளர்களும் தங்கள் கருத்தாக வெளிப்படுத்தியுள்ளனர்.*

***கருச்சொற்கள்***: *சிந்துவெளி நாகரிகம், ஹரப்பா, ஆரியர் நாகரிகம், தொல்தமிழர் வரலாறு, நகர அமைப்பு, இந்தியா தொன்மை நாகரிகம்.*

## *Abstract*

Indus Valley civilization is known as antediluvian civilization of the Indian sub-continent. Impartially, this highly meritorious civilization is known by other prominent names such as Harappan civilization, the Indus civilization, the Scythian civilization, the pre-Indo-Aryan civilization, and the early Indian civilization as well. Indus civilization is the embarkation of primordial and venerates history of ancient India. The established township, roads, houses, drainage system, the great bath, burial, yacht, utensils for daily use, sculptures, scripts, drawing, brass utensils, religious and ritual objects, scale/installation tools, etc., evident that civilization had reached such lofty levels. At the same time, they were all indicative of the level of sophistication in cultural heritage of these people. This article tends to assert how people of the great civilization lead their life virtuously and systematically very much similar to their well-organized city planning. It is apparent that people of this venerate civilization are the people known as Tamils in the present day. Despite the fact that the Indus civilization region is located up north geographically; it is undeniably a non-Aryan civilization. There were abundant substantiations to support this. For instance, the figurine of several bulls found in the vicinity representing agriculture trails of this magnificent civilization to the ancient Tamil's civilization. This is verified by well-known scholar such as Sir John Marshall, who abstracted the Indus civilization.

**Key words**: Indus Valley Civilization. Harappan civilization. Ancient Tamil's civilization. Ancient India. Aryan civilization. Township

***முன்னுரை***

*சிந்துவெளி நாகரிகம் குறித்து விளக்கமாகப் பார்ப்பதற்கு முன்னர் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றிற்கு இடையில் உள்ள தொடர்புகளையும், நாகரிகமடைந்த மக்களிடையே காணக்கிடக்கும் சில முக்கியக் கூறுகளையும் சிந்திப்பது பயனுடையதாக இருக்கும். பொதுவில் நாகரிகத்தையும் பண்பாட்டையும் ஒன்று எனக் கருதுவதுண்டு. ஆனால்*

[1] *இவர் மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையின் பேராசிரியர். rajantheran@gmail.com*
[2] *இவர் UTAR பல்கலைக்கழகத் துணைப்பேராசிரியர். silllalee@yahoo.com*


*இவ்விரண்டும் தொடர்புடைய வேறு வேறான பொருள் கொண்டவை (Stephen Blaha, 2002, p.14). மக்களால் பொதுவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட எத்தகைய வாழ்க்கை முறையும் பண்பாடு ஆகிறது. இயற்கைச் சூழல், இனம், மொழி, எனும் தனித்துவ அடையாளத்தில் உருவாகும் பொருளியல் மற்றும் அருளியல் வாழ்க்கை முறையே பொதுவில் பண்பாடு எனப்படுகிறது.*

*பண்பாடு எனப்படுவது மாற்றமடையும் தன்மையையும் மேம்பாடடையும் தன்மையையும் உடையது. இப்பண்பாட்டுக் கூறுகள் காலம் காலமாக தக்க வைத்துக் கொள்ளப்பட்டு முதிர்ச்சியை அடையும்போது அவற்றை நாகரிகக் கூறுகளாகக் காண்கிறோம் (Rajantheran, 2012, p.1). இவ்வளர்ச்சியானது நீண்ட காலப் பண்பாட்டு மேம்பாட்டின் பதிவில் நிலைபெறுவதாகும். எனவே, நாகரிகம் எனப்படுவது ஒரு பண்பாட்டின் முதிர்ச்சியைக் குறிப்பதாகும். இவ்வாறு உருவாக்கம் காணும் கூறுகள் யாவும் மனிதனின் உயர்ந்த சிந்தனை வளர்ச்சியாலும் திறமையாலும் அடையப் பெறுகின்ற அகப் புற வளர்ச்சி எனவும் கூறலாம் (Stephen Blaha, 2002, p.14).*

***நாகரிகக் கூறுகள்***

*நாகரிகம் அடையப்பெற்ற ஒரு சமுதாயமானது குறைந்தது நான்குச் சிந்தனைகளுக்கு முக்கியத்துவம் அளித்திருக்க வேண்டும் (Rajantheran, 2012, p.1).*

*குறிவரைவுப் படம் 1: நாகரிக மக்களின் சிந்தனை அடைவுகள்*




*மேற்கண்ட குறிவரைவு காட்டுவது போல, நாகரிகம் அடைந்த மக்கள் போற்றுதலுக்குரிய சிந்தனை உடையவர்களாக இருப்பர். அவர்கள் தங்கள் வாழ்விலும் அதன் தொடர்புடைய செயல்பாடுகள் அனைத்திலும் நன்னெறிப்பண்புகளுக்கு முக்கியத்துவம் அளிப்பவர்களாக இருப்பர். இதன் அடிப்படையில் அம்மக்களிடையே போற்றத்தக்கச் செயல்கள் நிறைந்திருக்கும். அவற்றை மதிக்கும் மன அமைவும் இருக்கும். இவ்வுயர்ப் பண்புகளால் எல்லா மனிதர்களையும் மதித்து அவர்களுடன் பண்புமிக்க முதிர்ந்த மனிதத் தொடர்புகளை இவர்கள் கொண்டிருப்பர். இக்கூறுகளை அடையப் பெற்ற சமுதாயம் தனது அங்கத்தினர் அடைய வேண்டிய உயர் அகப்புற இலக்கையும் நிர்ணயித்து, அவற்றை அடையும் நெறிகளையும் வகுத்திருப்பர் (Chandra Muzaffar, 2004, p.3). பொதுவில், நாகரிகம் அடைந்த சமுதாயத்தை மேலும் சில அடையாளக் கூறுகளைக் கொண்டு நாகரிகவியலாளர்கள் மதிப்பிடுவர்.*

***நாகரிக மக்களின் அடையாளக் கூறுகள்***

*நாகரிகம் அடைந்த மக்களுக்கென சில அடையாளக் கூறுகள் உள்ளன. அவை பின்வருமாறு (Rajantheran, 2012, pp.1-3):-*

1. *நாகரிகம் அடைந்த மக்கள் தங்களுக்கென சுயமான மொழியையும், எழுத்தையும் கொண்டிருக்க வேண்டும். எழுத்தின் மூலமாக மக்களின் சிந்தனைகள் நிலைநிறுத்தப்படுவதோடு அவை வருங்காலச் சந்ததியினருக்கும் சேர்ப்பிக்கப்படுவதால் எழுத்தும் மொழியும் மிக முக்கியமான நாகரிகக் கூறாகக் கருதப்படுகின்றன.*
2. *நாகரிகம் என்பது உயர்ந்த சிந்தனைகளின் வெளிப்பாடு. இதனை மக்களின் வாழ்க்கை முறையின் அடைவு மற்றும் சரிவு நிலையை வைத்து அறிந்துகொள்ளலாம். நாகரிக மக்களின் உயர்ந்த சிந்தனைகளை அம்மக்களின் அறிவாற்றல், செயல்பாடுகள், சமூகக் கட்டமைப்பு, கலை ஆகியன வெளிப்படுத்திக் காட்டிவிடும்.*
3. *நாகரிகமிக்க வாழ்க்கையானது அனுபவங்களின் அடிப்படையில் உயர்ந்திருக்கும். நாகரிகம் மக்களிடையே சிறந்த சிந்தனையை உருவாக்கியிருக்கும். புதிய சிந்தனைகளை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவமும் பெற்றிருக்கும்.*
4. *நாகரிக மக்கள் எல்லோருக்கும் பொதுவான நன்னெறிக் கோட்பாடுகளைக் கொண்டிருப்பர். இது நடுநிலையான நீதியில் நிற்பது போன்ற உலகமயக் கோட்பாடாக விளங்கும்.*
5. *நாகரிகம் அடைந்த மக்கள் மருத்துவம், கலை, அறிவியல், ஆராய்ச்சி போன்ற இத்தகைய வளர்ச்சிகள் மானுடத்தின் மேன்மைக்காக யாவரிடமும் பகிர்ந்திருக்கப்பட வேண்டும்.*
6. *நாகரிகம் அடைந்த ஒரு சமுதாயத்தில் எல்லோரும் கல்விமான்களாக இருக்க வேண்டும் என்பதில்லை. ஆனால் அச்சமுதாயத்தில் படித்த மக்களுக்கும் படிக்காத மக்களுக்கும் இடையே அறிவுப்பறிமாற்றம் ஏற்பட்டிருக்க வேண்டும். இத்தொடர்பால் சில வேளைகளில் பாமரனின் இயல்பான சிந்தனைகள்கூட அறிஞர்களுக்கு அரிய தகவல்களைக் கொடுக்கின்றன.*
7. *நாகரிகம் என்பது தனிமனிதச் செயல்பாடுகள் அல்ல. அது ஒரு சமுதாயத்தின் அடைவு. ஒரு சமுதாயத்தில் வாழும் மக்கள் அனைவரின் ஒருமித்த செயல்பாடு., ஒரே நோக்கில் ஒரு பிரச்சனையை அச்சமுதாயம் அணுகுவது, ஒரே மாதிரியான சிந்தனைகள் ஆகியனவே நாகரிகத்தின் கூறுகளாகின்றன.*
8. *நாகரிகம் அடையப்பெற்ற மக்கள் மூன்று முக்கியமான சிக்கல்களுக்கு விடைகண்டிருக்க வேண்டும். முதலாவதாக, நாம் எங்கிருந்து வந்தோம்? இந்த உலக வாழ்க்கையின் நோக்கம் என்ன, இறப்பிற்குப் பிறகு என்ன நடக்கும் என்பன ஆகும். இந்தக் கேள்விகளை அச்சமுதாயம் சிந்தித்திருக்க வேண்டும் என்பது முக்கியம்.*

***சிந்துவெளி நாகரிகம்***

சிந்துவெளி நாகரிகம் பின்வரும் வேறு பல பெயர்களாலும் அறியப்படுகின்றது. ஹராப்பா நாகரிகம், சிந்து நாகரிகம், சைந்தவ நாகரிகம், ஆரிய-முற்கால இந்திய நாகரிகம், இந்திய வரலாற்றுத் தொடக்கக்கால நாகரிகம் இப்படிப் பல பெயர்களாலும் குறிப்பிடப்படுபவை அனைத்துமே ஒரு பொருள் குறித்தனவே ஆகும். இக்கட்டுரையில் 'சிந்துவெளி நாகரிகம்' எனும் கலைச்சொல் பொதுவில் கையாளப்படுகிறது. ஒரு காலத்தில் சிந்துவெளி நாகரிகம் அந்தச் சிந்துசமவெளியைக் கடந்து பரவியிருந்தது எனும் கருத்துடையாரும் உள்ளனர். *1876*-ஆம் ஆண்டு ஆதிச்சநல்லூரில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வும், தற்போது தமிழகத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும், கீழடி அகழ்வாராய்ச்சியின். தொடக்கச் செய்திகளும் அவ்விடத்து கண்டுபிடிக்கப்பட்ட கட்டிட அமைப்புகள் சிந்துவெளிக் கட்டிட அமைப்புகளோடு ஒத்திருப்பதாகக் *(Balakrishnan, R. 25 September 2019, https://www.bbc.com/tamil/india-49802510)* கூறப்படுவது இவ்விடம் கருத்தில் கொள்ளத்தக்கது. சிந்துவெளி நாகரிகம் இந்தியத் துணைக்கண்டத்தின் வடமேற்குப் பகுதியில் தற்போதைய பாக்கிஸ்தான் நாட்டின் எல்லைக்குள் அமைந்துள்ளது.

நிலவரைபடம் *1*: சிந்துவெளி *WIW*

சிந்துவெளி நாகரிக அகழ்வாய்வுப் பகுதி தற்போது பாக்கிஸ்தான் நாட்டின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தபோதும், அங்கிருந்துதான் இந்திய நாகரிக வரலாறு இன்றும் பேசப்படுகிறது. காரணம், *1947*ஆம் ஆண்டு ஆகஸ்ட் *15*ஆம் தேதிக்கு முன்னதாக பாக்கிஸ்தான் என்ற ஒரு நாடு கிடையாது. அப்போதைய பிரிட்டிஷ் இந்தியாவானது அரசியல் நிலைத்தன்மைக் காரணத்திற்காக இந்திய துணைக்கண்டம், இந்து முஸ்லிம் நாடுகளாக பிரிட்டிசாரால் சட்டத்திருத்தம் மூலம் அதிகாரப்பூர்வமாகப் பிரிக்கப்பட்டன. இந்தியாவின் ஒரு பகுதியாகிய வடமேற்கு மற்றும் வடகிழக்கு நிலப்பரப்புகள் பாக்கிஸ்தானாகவும், எஞ்சிய பகுதிகள் இந்தியாவாகவும் பிரிட்டிசாரால் சாசனப்படுத்தப்பட்டன *(The British House of Commons passed an act on July 16, 1947, Muhammad Asif Malik, 2001, p.59)*. பின்னர் வடகிழக்குப் பகுதியில் இருந்த பாக்கிஸ்தானின் நிலப்பரப்பு *1971*-ஆம் ஆண்டு தனிநாடாகப் பிரிந்து, வங்காலதேசம் *(Bangladesh)* எனப் பெயர்பெற்றது *(On March 26, 1971, East Pakistan declared itself an independent nation called Bangladesh. Craig Baxter, 1984, p.51)*.

**சிந்துவெளி அகழ்வாராய்சி வரலாறு**

சிந்துவெளியின் முதல் அகழ்வரய்வு *1921*-ஆம் ஆண்டு ஹரப்பா *(Harappa)* எனும் இடத்திலும் *1922*-ஆம் ஆண்டு மொஹஞ்சோதாரோ *(Mohanjodaro)* எனும் இடத்திலும் மேற்கொள்ளப்பட்டது *(Sindhav, 2016, p.101)*. இதன் வழி, ஒட்டுமொத்த சிந்துவெளி நாகரிகக் கண்டுபிடிப்பு மேற்கொள்ளப்பட்டு இந்திய நாகரிக வரலாற்றில் மிகப் பெரிய திருப்புமுனை ஏற்பட்டது. அதுவரையில் வேதகாலமே இந்திய நாகரிகத்தின் தொன்மை இடத்தைப் பெற்றிருந்தது. இக்கண்டுபிடிப்பு இந்திய நாகரிக வரலாற்றுத் தொன்மையை ஏறக்குறைய *1500* ஆண்டுகளுக்கு முன் கொண்டு சேர்த்துள்ளது *(Charles, 2010, p.2-3)*.

சிந்துவெளி அகழ்வாய்வு முறையாகத் தொடங்கப்படுவதற்கு முன்னமே அந்த இடம் குறித்துச் சில அறிஞர்கள் குறிப்புகளை விட்டுச் சென்றுள்ளனர். *1826*-ஆம் ஆண்டு சார்ல்ஸ் மெர்சன் *(Charles)* எனும் பிரிட்டிஷ் சுற்றுப்பயணி ஹராப்பா பகுதியில் பழைய செங்கற்கள் அதிக அளவில் இருந்தது குறித்துக் கூறியிருக்கின்றார். *1831*-ஆம் ஆண்டு கர்னல் பெர்ன்ஸ் *(Colonel Burns)* என்பார் ரஞ்சித் சிங் மகாராஜாவைச் சந்திக்கச் செல்லும் வழியில் ஹரப்பாவைக் கண்டிருக்கிறார். சார்ல்ஸ் மெர்சனும் கர்னல் பென்ஸுூம் தங்கள் குறிப்புகளில் ஐந்து கிலோ மீட்டர் பரப்பளவுக்குத் தொல்பொருள் இடிபாட்டு எச்சங்கள் பரவிக் கிடந்தமையைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளனர் *(Md Usmangani Ansari & Asha Prasad, 2017, pp.26-27)*.




*1853-1857* காலக்கட்டத்தில் அலெக்ஸ்சாண்டர் கன்னிங்ஹம் *(Alexander Cunningham)* எனும் அறிஞர்கூட ஹரப்பா நிலப்பகுதியை மேற்பார்வை செய்துள்ளார் என்ற குறிப்பும் கிடைக்கிறது *(Gregory, 2002, p.10)*. அக்கால கட்டத்திலேயே *1856*-ஆம் ஆண்டு ஹரப்பாவின் மதிப்பு தெரியாததாலும் அதன் வரலாற்றுப் பின்னனியும் அறியாத நிலையில் லாகூரிலிருந்து முல்டானுக்கு இடையே அமைக்கப்பட்ட தொடர்வண்டித் தண்டவாள நிர்மானிப்புக்கு ஹராப்பாவிலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட பெரும்பகுதி செங்கற்களையே பயன்படுத்தினர் என்பதும் தெரிய வருகிறது (இராமநாதன், *2000, p.29*). இதன் விளைவாகத்தான் ஹரப்பாவில் ஒரு மிகப்பெரிய பழைய நாகரிகம் புதைந்திருக்கிறது என்பது தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தச் செய்தி அப்போதைய இந்தியத் தொல்பொருளாய்வுத் தலைவரும், இந்தியத் தொல்லியல் தந்தையுமான சார் ஜோன் மார்ஷல் *(Sir John Hubert Marshall)* அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது *(Md Usmangani Ansari & Asha Prasad, 2017, p.14)*.

இதே காலக்கட்டத்தில், *1920*-ஆம் ஆண்டு இந்தியத் தொல்பொருள் ஆய்வாளராகிய ஆர்.டி.பனர்ஜி *(Rakhal Das Banerjee)* என்பார் ஹரப்பாவுக்கு அருகில் புத்த ஸ்தூபி ஒன்றை அகழ்வாய்வு மூலம் கண்டுபிடித்தார். இவர் தமது ஆய்வு அனுபவத்தின்படிப் பழம்பெறும் பட்டிணம் ஒன்று அருகாமையில் புதையுண்ட நிலையில் இருப்பதாகக் கருத்துரைத்தார். அத்தோடு நில்லாமல் தொல்லியல் ஆய்வுத்துறையை ஹரப்பாவில் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப் பரிந்துரை செய்தார் *(Malti Malik, 2016, p.11)*.

ஹரப்பாவில் தொடக்க கால அகழ்வாராய்ச்சிப் பணிகள் சார் ஜோன் மார்ஷல் அவர்களால் முறையாகத் தொடங்கப்பட்டது. இந்த ஹரப்பா அகழ்வாராய்ச்சி ராய் பஹதூர் தயா ராம் சஹானி *(Rai Bahadur Daya Ram Sahni)* என்பவரின் தலைமையில் ஓர் அகழ்வாராய்வுக் குழுவால் மேற்கொள்ளப்பட்டது. நூற்றுக்கும் மேற்பட்ட அகழ்வாய்வுத் தளங்கள் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டன. இதன் விளைவாக ஹரப்பாப் பகுதியில் பரந்து விரிந்த தொல் பட்டிணம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது *(Daniel Michon, 2015, p.60)*. வட மற்றும் வடமேற்கு இந்திய எல்லைக்கும் பாக்கிஸ்தான்

எல்லைக்குமாக இந்த ஆய்வுத் தளம் அமைந்திருந்தது. உலகத்திலேயே மிகவும் பரந்து விரிந்த நாகரிகமாக இந்தச் சிந்துவெளி நாகரிகம் திகழ்கிறது.

**சிந்துவெளி காலக்கட்டம்**

சிந்துவெளி நாகரிகத்தின் காலக்கட்டம் குறித்துப் பல கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன. பிறகு கதிரியக்க கரிமக் கால அளவை (radiocarbon dating) அடிப்படையில் கி.மு.2900 தொடங்கி 2000 வரை என இதன் காலக்கட்டம் நிர்ணயிக்கப்பட்டது. முன்னதாக பண்பாட்டு மானுடவியல் (cultural anthropology) அடிப்படையில் தொல்லியல் ஆய்வாளர் பலரும் கூறியுள்ள கருத்துகளும் கவனத்தில் கொள்ளப்படவேண்டும். சார் ஜோன் மார்ஷல் மற்றும் ஆர்.கே.முக்கர்ஜி போன்றோர் சிந்துவெளி நாகரிகத்தின் காலக்கட்டம் கி.மு.3250 தொடங்கி கி.மு.2750 என்றும், எம்.எஸ்.வாட்ஸ் கி.மு.3500 தொடங்கி கி.மு.2700 என்றும், வீலர் (Wheelar) மற்றும் வி.சிமித் (V.Smith) போன்றோர் கி.மு.2500 தொடங்கி கி.மு. 1500 என்பதாகவும் கருத்துரைத்துள்ளனர் (Md Usmangani Ansari & Asha Prasad, 2017, p.26). இவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட காலக்கட்டங்கள் யாவுமே ஹரப்பா நாகரிகம் அடைந்த பின்பு, உருவாக்கம் பெற்ற பொருள்களை கதிரியக்கக் கரிமக் கால அளவு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டதன் வாயிலாகவே பெறப்பட்டவை. ஆனால் ஹரப்பா, நாகரிகத் தகுதியை அடைவதற்கு எத்தனை ஆயிரம் ஆண்டுகளைக் கடந்திருக்கும் எனும் கணக்கு நம் கருத்துக்கு எட்டாததாகவே உள்ளது. ஏனென்றால், முன்பு கூறியதுபோல ஒரு நாகரிகம் என்பது ஒரு பண்பாட்டின் முதிர்ச்சியில் மலர்வதே ஆகும். இதற்குப் பல ஆயிரம் ஆண்டுகள் கூட ஆகியிருக்கலாம்.

சிந்துவெளி தொல்லியல் ஆய்வு நிலப்பரப்பானது மிகவும் பரந்து விரிந்ததாக உள்ளது. இது சிந்துநதியின் முகத்துவாரம் தொடங்கி இந்திய டெல்லி வரை விரிந்துள்ளது. பாக்கிஸ்தானின் சிந்து, பஞ்சாப், பலிசிஸ்தான் உட்பட வடக்கே இமயமலை அடிவாரம் வரையும், கிழக்கே ஆலம்கீர்பூர் வரைக்கும் இது விரிகிறது. இப்பெரிய நிலப்பரப்பில் எழுபதுக்கும் மேற்பட்ட இடங்கள் மட்டுமே இதுவரை தொல்லியல் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் அம்ரி, கோட் டிஜி, கலிபங்கன் ஆகியவை தொடக்கநிலை நாகரிக அடைவுக்கு (கி.மு.3000-2500) சான்று பகர்வனவாக உள்ளன. மொஹஞ்சோதாரோ, ஹரப்பா, சன்னுதாரோ, லோத்தல் (கிமு.2500-1800) போன்றவை சிந்துவெளி நாகரிகத்தின் முதிர்ந்த நாகரிக அடையாளத்திற்கு உதாரணமாக அமைகின்றன (இராமநாதன் 2000, p.28-29).

அந்த வகையில், சிந்துவெளி நாகரிக ஆய்வுத்தலங்களில் முதன்மையானதும் மிகப்பெரியவையாகவும் இருக்கக் கூடியவை மொஹஞ்சோதாரோவும் ஹரப்பாவும் ஆகும். இவ்விரு தொல்லியல் ஆய்வு நகரங்களுக்கிடையே நிறைய ஒருமைப்பாடு காணப்படுவதால் சிந்துவெளியில் இருக்கும் ஏனைய தொல்லியல் ஆய்வுத்தலங்களுக்கும் இவை பொருந்தும் எனும் வகையில் இந்த இரண்டு இடங்கள் ஆய்வாளர்களின் கவனத்தில் முதலிடம் வகிக்கின்றன (Basham, 2002, p.7). மொஹஞ்சோதாரோ சிந்துமாநிலத்தின் சிந்து ஆற்றின் மேற்குப்பகுதியில் அமைந்துள்ளது. ஹரப்பா மேற்குப் பஞ்சாப் மாநிலத்தில் முன்னொரு காலம் ஓடிக்கொண்டிருந்த ரவி எனும் பெயர் கொண்ட ஆற்றின் கிழக்குப்பகுதியில் அமைந்திருக்கின்றது. மொஹஞ்சோதாரோவில் 30,000 மக்களும், ஹரப்பாவில் 40,000 மக்களும் வாழ்ந்திருக்கக் கூடும் எனத் தொல்லியல் ஆய்வாளர்கள் அனுமானிக்கின்றனர் (Bridget Allchin & Raymond Allchin, 1982, p.180).

இந்த இரண்டு தொல்லியல் ஆய்வுத்தளங்களைத் தவிர்த்து, மேலும் பல தலங்களும் சிந்து வெளியில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் சில முதன்மைத் தலங்களின் வரிசை பின்வருமாறு:-

பட்டியல் 1: சிந்துவெளித் தொல்லியல் ஆய்வு

| எண் | தொல்லியல் இடம் | அமைவுற்ற இடம் | முதன்மை ஆய்வாளர் | வருடம் |
|---|---|---|---|---|
| 1. | ஹரப்பா (150 ஹெக்டர்) | மொண்டிகோமெரி-பஞ்சாப், பாக்கிஸ்தான் | சார் ஜான் மார்ஷல் | 1921 |
| 2. | மொஹஞ்சோதாரோ (100 ஹெக்டர்) | லர்க்கானா-சிந்து, பாக்கிஸ்தான் | ஆர்.டி. பனேர்ஜி | 1922 |
| 3. | சிர்க்ககேண்டோர் | பலுசிஸ்தான் - பாக்கிஸ்தான் | ஓ ஸ்தேன் | 1927 |
| 4. | சன்னுதாரோ | மொஹஞ்சோதாரோவில் அருகில் (80 கி.மீ), பாக்கிஸ்தான். | என்.ஜி.மஜும்தார் | 1931 |
| 5. | ரங்பூர் | அஹ்மதபாத்-குஜராத், இந்தியா | எம்.எஸ்.வாட்ஸ் | 1953 |
| 6. | ரோப்பார் | பஞ்சாப்-இந்தியா | யக்ஞ தத் சர்மா | 1955-1956 |
| 7. | கலிபங்கா | கங்காநகர்-ராஜஸ்தான் இந்தியா | பி.பி.லால் & ஏ.என்.கோஷ் | 1953 |
| 8. | கோட்டிஜி | சிந்து-பாக்கிஸ்தான் | ஃபசால் அஹ்மட் கான் | 1955 |
| 9. | லோத்தல் | அஹமதப்பத்-குஜிராத், இந்தியா | எஸ்.ஆர். ராவ் | 1957 |
| 10. | அலம்கீர்பூர் | மேரூட்-உத்திரபிரதேசம், இந்தியா | - | 1958 |
| 11. | சுர்கோத்தாடா | குச்சா-குஜ்ராத், இந்தியா | ஜகத்பதி ஜோஷி | 1972 |
| 12. | மேத்தட்ஹால் | பிவானி-அரியானா, இந்தியா | சுரஜ்பஹன் | 1968 |
| 13. | பனாவலி | ஹிசார்-அரியானா, இந்தியா | ஆர்.எஸ்.விஸ்தா | 1973-1974 |
| 14. | டௌல்விரா | குச்ஹா அருகில்- குஜ்ராத், இந்தியா | ஆர்.எஸ்.விஸ்தா | - |

| | | | | |
|---|---|---|---|---|
| *15.* | கன்வேரிபல் | பாக்கிஸ்தான் | ராஃபிக் முகல் | - |
| *16.* | ரக்கிகர்ஹி | ஜிந்-அரியானா, இந்தியா | சுரஜ்பஹன் | - |

மூலம்*: Md Usmangani Ansari & Asha Prasad, 2017, p.26)-***சில மாற்றங்களுடன்**.

*மொத்தத்தில் 1500-கும் மேற்பட்ட இடங்களை சிந்து வெளியில் தொல்லியல் ஆய்வுக்குரிய இடங்களாகக் காணப்பட்ட போதும் சுமார் 20 இடங்களில் மட்டுமே தொல்லியல் ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன என்பது முக்கியமான கருத்தாகும். உதாரணமாக மொஹஞ்சோதாரோவை எடுத்துக் கொண்டால் 10% பகுதி பட்டுமே அகழ்வாய்வு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள பகுதிகள் நீருக்கடியில் மூழ்கியிருப்பதால் அகழ்வாய்வு நிகழ்த்தப்பட்டவில்லை.*

**சிந்துவெளி நாகரிக முதன்மை அகழ்வாய்வுக் கண்டுபிடிப்புகள்**

*சிந்துவெளியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட பெருநகரங்கள், நகரங்கள் ஆகியவற்றுக்கு இடையே நிறைய ஒற்றுமைக் கூறுகள் தெரிகின்றன. குறிப்பாக நகர அமைப்புகள், பாதாளச் சாக்கடை அமைப்பு, செங்கற்களின் அளவு, அளவை மற்றும் நிறுவைக் கருவிகள், வீட்டு அமைப்புகள், கட்டட அமைப்புகள், எழுத்து வகைகள், சமய நம்பிக்கைகள் இப்படி எல்லாமே ஒரே மாதிரியாக அமைந்திருப்பது தெரிய வருகிறது. இதன் வழி சிந்துவெளி ஒரு மத்திய ஆட்சிக்கு உட்பட்டிருந்திருக்க வேண்டும் என ஆய்வாளர்கள் கருதுகிறார்கள் (Basham, 2002, p.15). இனி, இக்கண்டுபிடிப்புகளின் விபரங்களை ஒவ்வொன்றாகக் காண்போம்.*

*1)* **நகரமைப்பு**

*சிந்துவெளி நாகரிக அமைப்பானது, நகர்ப்புற நாகரிகமாகவும், வேளாண்மை வணிக நாகரிக அமைப்பாகவும், செம்புக்கால நாகரிக (chalcolithic civilization) அமைப்பாகவும் அறியப்படுவதாக அறிஞர்கள் கருத்துரைக்கின்றனர். இதில் ஹரப்பா, மொஹஞ்சோதாரோ, கலிபங்கன் ஆகிய மூன்று பெருநகரங்களின் அமைப்பு இரண்டு பகுதிகளைக் கொண்டவையாக உள்ளன. மேற்குப் பக்கம் கோட்டையும் (citadel) கிழக்குப் பகுதியில் பொதுமக்கள் குடியிருப்பும் அமைந்திருக்கின்றன. கோட்டையானது 30-50 அடி உயரம் கொண்டது. இது 1200 x 600 அடி பரப்பளவைக் கொண்ட பீடத்தின் மேல் அமைக்கப்பட்டுள்ளது (Chopra, 2003, p.14).*

*நகர்ப்புற நாகரிகம் கொண்டது சிந்து வெளி என்பதற்கொப்ப ஹரப்பா, மொஹஞ்சோதாரோ ஆகிய இரண்டு நகரங்களுமே திட்டமிட்டு உருவாக்கப்பட்ட நகரங்களாக உள்ளன. சிந்துவெளி மக்கள் நகர் அமைப்புத் திட்டமிடலில் நல்ல அறிவு பெற்றிருந்தவர்களாகத் தெரிகிறது. பெருநகரங்களும், நகரங்களும் சதுர வடிவமைப்பு முறையில் அமைக்கப்பட்டுள்ளன (Ranbir Vohra, 2001, p.14).*

*இந்தக் கட்டட வேலைப்பாடுகளை உற்றுநோக்குகையில் சிந்துவெளி நாகரிக மக்கள் கட்டிடக்கலையில் சிறந்து விளங்கினர் என்பதும் தெளிவாகிறது. அந்தக் காலக்கட்டத்தில் (கி.மு.3000-1500) இத்தகையதோர் ஓர் அடைவை வேறு எந்த நாகரிகமும் அடைந்திருக்கவில்லை என்பதுதான் உண்மை. இப்படி ஒரு வளர்ச்சியைக் கண்டிருந்ததற்குச் சிந்துவெளி மக்கள் கணிதம், பொறியியல், புவியியல் அறிவு, கட்டிட நிர்மானிப்பு, உபரிப்பொருள் தயாரிக்கும் திறம், கட்டிட வரைகலை நுட்பம் இப்படிப் பலவிதமான அறிவைப் பெற்றிருந்தனர் எனக் கருதுவது பிழையாகாது. இதற்கும் மேலாக, மொஹஞ்சோதாரோ, ஹரப்பா, கலிபங்கன் ஆகிய பெருநகரங்கள் அமைப்பால் ஒத்திருப்பதன் அடிப்படையில் இவை ஓர் ஆட்சிக்குடையின்கீழ் இருந்திருக்கக்கூடிய வாய்ப்பும் உண்டு (Jayapalan, 2001, p.5). இதில் நகர அமைப்புப் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தும் வண்ணம் அமைந்திருப்பது நாகரிகமடைந்த ஒரு மக்கள் கூட்டத்தால் அல்லாது விளைந்திருக்காது.*

*2)* ***சாலைகளும் வீடுகளும்***

*குடியிருப்புப் பகுதியில் பெரிய சாலைகள் (33 அடி அகலம் வரை) வடக்கு-தெற்கு நோக்கிய அமைப்பில் நேர்த்தியாக நீண்டு நேராக அமைந்திருந்தன. இச்சாலையின் இருமருங்கிலும் கிழக்கு-மேற்கு நோக்கிய அமைப்பில் குறுக்குத் தெருக்களும் (9-12 அடி) நேராக நூல் பிடித்தாற்போல் அமைந்திருந்தன (Sehdev Sharma & Damanjit Kaur Pahuja, 2017, p.8). சாலை ஓரங்களில் தாழிகள் குப்பைத் தொட்டிகளாக அமைக்கப்பட்டிருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது (Sanjeevkumar Tandle, 2014, p.29).*

*சாலையை ஒட்டியே வீடுகள் முறையாக அமைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு வீட்டுக்கும் இடையே இடைவெளி விடப்பட்டிருந்தது. சிறிய வீடுகளும், மாளிகையை ஒத்த வீடுகளும் அளவில் மாறுபட்டிருந்த போதும் அவற்றுள் அமைப்பில் வேறுபாடுகள் இல்லாதிருந்தன. இந்த வீடுகளின் அஸ்திவாரம் மண்கற்களாலும், உடைந்த செங்கற்களாலும் அமைக்கப்பட்டிருந்தன. வீடுகள் அனைத்துமே உயர்ந்த அஸ்திவாரத்தில் எழுப்பப்பட்டிருந்தன. ஒவ்வொரு வீட்டிலும் சமையலறை, குளியலறை, முற்றம் ஆகியவை அமைத்துக் கட்டப்பட்டிருந்தன. வீட்டின் சுவர்களில் மேற்பகுதியில் துளைகள் போன்ற சிறுசன்னல்கள் அமைந்திருந்தன. ஒற்றை மற்றும் இரட்டை மாடி வீடுகளும் இருந்தன (இராமநாதன், 2000, p.34).*

*இரண்டு அறைகள் கொண்ட தொடர் தொழிலாளர் குடியிருப்பு வீடுகள் மொஹஞ்சதாரோ மற்றும் ஹரப்பாவிலும் கண்டுபிடிக்கப்பட்டன. இவை தற்கால இந்தியாவின் தேயிலைத் தோட்ட தொழிலாளர்களின் வீட்டு அமைப்பை ஒத்திருப்பதாக உள்ளன (Basham, 2002, p.17). வீடுகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட அறைகள் இருந்தன. கதவுகள் உட்பக்கமாகத் திறக்கின்ற அமைப்பில் இருந்தன. வீட்டின் கூரைகள் தட்டையாக, இன்று தமிழகத்தில் பெருவாரியாக இருப்பதுபோலவே இருந்திருக்கின்றன (Brian Williams, 2016, p.20). மேலும், முதன்மைச் சாலையை நோக்கிய அமைப்பில் வீடுகள் இருந்தபோதும் அவற்றின் கதவுகள் அப்பெரிய சாலைகளைப் பார்க்கும்படி அமையாமல் பக்கவாட்டில் இருக்கும் குறுக்குத் தெருக்களை நோக்கியே அமைந்திருந்தன. (Basham, 2002, p.15).*

*ஒவ்வொரு வீட்டிலும் தண்ணீர்ப் பயன்பாட்டுக்காகக் கிணறுகள் அமைக்கப்பட்டிருந்தன. இவை நீள்வட்ட முட்டை அமைப்பில் செங்கற்களால் வடிவமைக்கப்பட்டிருந்தன. கிணற்றின் வடிவமைப்புக்கு ஏற்ப செங்கற்கள் வளைந்த அமைப்பிலும் இருந்தது தெரிகிறது. குளியலறையில் இருந்து கழிவுநீர் செல்ல வடிகால்கள் அமைக்கப்பட்டிருந்தன. வீட்டுக்கழிவுநீர் தெருக்களுக்குச் செல்லாதிருக்க பாதாளச் சாக்கடை வழி அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. அவை பெரிய செங்கற்கள் கொண்டு மண்ணுக்கடியில் அமைக்கப்பட்டிருந்தன (Sanjay Sharma & Rashmi Sanghi, 2012, p.4). தெருக்களில் அமைக்கப்பட்டிருந்த கழிவுநீர்க் வடிகால்கள் பெரிய சாலையின்கீழ்*

அமைக்கப்பாட்டிருந்த பாதாளச் சாக்கடை வழி வெளியேற்றப்பட்டது. இது போன்ற கழிவுநீர் அகற்றும் முறையான சாக்கடை அமைப்பு குடியிறுப்பு முழுவதும் சாலை, தெரு போன்றவற்றிற்கு அடியில் முறையாக அமைக்கப்பட்டிருந்தன. இந்தப் பாதாளச் சாக்கடைகளில் துளையிடப்பட்ட தாழிகளை வைத்து, குப்பைகள் தண்ணீரோடு சேர்ந்து போகாமல் தடுத்த நுட்பத்தையும் சிந்துவெளி நாகரிகத்தில் காண முடிகின்றது *(இராமநாதன், 2000, p.34)*. இது போன்ற பாதாளச் சாக்கடைகள் அமைத்த நாகரிகம் உலகின் வேறு எங்கிலும் காணக்கிடைக்காத ஒன்றாகும் என்றும் சிந்துவெளி நாகரிகத்திற்கு 2000 ஆண்டுகளுக்குப் பின், கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் தோன்றிய ரோமா சாம்பிராஜ்யத்தில்தான் இது போன்றதொரு வளர்ச்சியைக் காண முடிவதாகவும் ஏ.எல்.பாஷம் தமது நூலில் குறிப்பிடுகிறார் *(Basham, 2002, p.16)*.

வீடு கட்டுவதற்கான கற்கள் பெருவாரியாக 28x14x7 செ.மி. எனும் ஒரே அளவில் அமைந்திருந்தன. வீடு கட்டுவதற்காகப் பயனப்படுத்தியுள்ள இவை வெயிலில் காய வைக்கப்பட்ட செங்கற்களாகவும். சூளையிட்டுச் சுடப்பட்ட செங்கற்களாகவும் இருந்துள்ளன. செங்கற் கட்டிடங்களைத் தவிர்த்து, கற்கட்டிடங்கள் வேறு எதுவும் சிந்துவெளியில் இருந்ததாகத் தெரியவில்லை.

ஒருங்கான சாலை, தெருக்களின் அமைவு, திட்டமிடப்பட்ட நேர்த்தியான பாதாளச் சாக்கடை அமைப்பு, வீடுகளுக்கிடையே இடைவெளி, சுவர்களுக்கு மேலே சிறிய சன்னல்கள் இப்படி எல்லா அடைவுகளும் அறிவியல் அறிவு இல்லாமல் ஏற்படுவதற்கான வாய்ப்பில்லை. இன்று நாம் சொல்கின்ற அமைப்பில்/கருத்தில் அன்றைய அறிவியல்/பொறியியல் அறிவு அறியப்படாமல் இருந்திருக்கலாம். ஆனால், மேற்சொன்ன நேர்த்தியான திட்டமிடல்களைக் குறிப்பாக பாதாளச் சாக்கடை அமைக்கும் அறிவை இன்றைய உலகம் சில நூறு ஆண்டுகளுக்கு முன்புதான் அடைந்தது எனும் ஒரு செய்தி சிந்துவெளி நாகரிகத்தின் உயர்வைக் காட்டுவதற்குப் போதுமானது.

சாலைக்கு அடியில் பாதாளச் சாக்கடை அமைப்பது நிலத்தின் பயனை உச்சபட்சமாக பயன்படுத்தும் பொருளாதாரச் சிந்தனையைக் காட்டுகிறது. அடுத்த நிலையில் சுகாதாரத்திற்கும் தூய்மைக்கும் சிந்துவெளி மக்கள் அதிக முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள் என்பது பாதாளச் சாக்கடை அமைப்பைக் கொண்டே உணரலாம். கழிவுநீர் மட்டுமன்றி அதன் துர்நாற்றம் மக்களைப் பாதிக்காத வகையில் அப்புறப்படுத்தும் ஒரு நுட்பத்தை ஏறக்குறைய 5000 ஆண்டுகளுக்கு முன்பே சிந்துவெளி மக்கள் கண்டிருந்தனர் என்பது பெரிய நாகரிக அடைவு அல்லவா. இன்றளவும் உலகின் பல நாடுகளிலும் நகரங்களிலும் இது போன்ற பாதாளச் சாக்கடை அமைக்கும் பணி இன்னமும் அறியாத ஒன்றாக/எட்டாத ஒன்றாக இருப்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

*3)* **தெப்பக்குளம்**

மொஹஞ்சோதாரோவின் கோட்டைப் பகுதியில் அகழ்வாய்வு மேற்கொள்ளப்பட்ட போது பெரிய தெப்பக்குளம் *(Great Bath)* ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இது 12 மீட்டர் நீளமும் 7 மீட்டர் அகலமும் 2.4 மீட்டர் ஆழமும்கொண்டு நீள்சதுர வடிவில் வடக்கு-தெற்கு நோக்கி அமைந்துள்ளது. இக்குளத்தின் இருமறுங்கிலும் (வடக்கு-தெற்கு) படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. குளத்தின் அடித்தளத்தில் நிலக்கீலை/பிடுமன் *(Bitumen)* கொண்டு நீர்க்கசிவைத் தவிர்த்துள்ளனர் *(Raj Pruthi, 2004, p.141)*.

இக்குளத்தில் இறங்குவதற்கான நேர்த்தியான படிகளும் குளத்தைச் சுற்றிலும் சமயச் சடங்குகள் மேற்கொள்வதற்கு ஏதுவான சிறிய அறைகளும் காணக் கிடக்கின்றன. இவற்றுள் சில சமயச் சடங்குகளை நிகழ்த்துகின்ற பூசாரிகளின் குடியிருப்பாகவும் இருக்கக் கூடும் எனக் கருதப்படுகிறது *(Basham, 2002, 17-18)*. இந்தக் குளத்துக்கான நீர் அருகில் இருந்த ஒரு பெரிய கிணற்றில் இருந்து பெறப்பட்டதாகத் தெரிகிறது. இக்குளமானது நீச்சல் குளமன்று. மாறாக, சமயச் சடங்குகளுக்காகப் பயன்படுத்தப்பட்டதாக சார் ஜான் மார்ஷல் கருத்துரைக்கின்றார் *(Sudeshna Sengupta, 2009, p.77)*.

இக்குளத்தில் நீர் நிறப்பப்பட்டுப் பின்பு தேவையான காலங்களில் அதனை முழுமையாக காலிசெய்துவிடும் ஒரு தொழில்நுட்பத்தையும் சிந்துவெளி மக்கள் கொண்டிருந்தனர் என்பது அவர்களின் பொறியியல் அறிவு அடைவுக்குச் சான்றாக இருக்கின்றது.

படம் 1: தெப்பக்குளம்



மூலம்: *http://appiusforum.net/indusvalley.html*

*4)* **தவசக்கிடங்குகள்**

ஹரப்பாவின் கோட்டைப் பகுதியில் பத்துக்கும் மேற்பட்ட தவசக்கிடங்குகள் அகழ்வாய்வில் கண்டறியப்பட்டன. இவை ஒவ்வொன்றும் 16 x 6 மீட்டர் அளவில் அமைந்திருந்தன. இத்தவசக்கிடங்குகள் தானியங்களைத் தட்ப வெட்பப் பாதிப்பிற்கு உட்பட்டு அழிந்து போகாமல், நீண்ட நாள் பாதுகாக்கக் கூடிய தன்மையுடையதாக இருந்ததாக ஆய்வாளர்கள் கருத்துரைக்கின்றனர். இவற்றின் அருகே செங்கற்களால் கட்டப்பட்ட வட்டவடிவிலான அமைப்புகள் இருந்தன. இவை தானியங்களைக் குவிப்பதற்கோ அவற்றை அடித்துப் பிரிப்பதற்கோ களமாக இருந்திருக்கலாம் *(Raj Rajagopalan, 1992, pp.33-35)*.

*5)* **துறைமுகம்/படகுத்துறை**

லோத்தல் அகழ்வாய்வுப் பகுதியில் 219 x 37 மீட்டர் பரப்பளவும், 4.5 மீட்டர் உயரச் செங்கற் சுவர்களாலான அமைப்பு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இது கப்பல் துறைமுகமாகப் பயன்பட்டிருக்க வேண்டும் எனத் தொல்லியல் ஆய்வாளர்கள் பலரும் கருத்துரைக்கின்றனர். இது தவிற மொஹஞ்சோதாரோ மற்றும் ஹரப்பா அகழ்வாய்வுப் பகுதிகளில்

படகுத்துறைகள் பலவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. குறிப்பாகச் சிந்துநதி நெடுகிலும், அதன் கிளைநதிகளிலும் இதுபோன்ற படகுத்துறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை பொருள்களை ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டுசெல்லும் நீர்வழிப் பாதைகள் சிந்து வெளியில் முக்கியத்துவம் பெற்றிருந்ததைக் காட்டுகின்றது *(Milo Kearney, 2004, p.16).*

*6)* ***வெண்கலக் கருவிகள்***

*வீட்டுப் பயன்பாட்டுக் கருவிகள் பலவும் சிந்துவெளி அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றுள் சில வெண்கலத்தால் உருவாக்கம் கண்ட பொருள்களாகும் (Lionel & Patricia Fanthorpe, 2009, p.36). வெண்கலம் என்பது இயற்கையில் கிடைக்கும் உலோகமன்று. இது தாமிரத்தையும் ஈயத்தையும் ஒரு குறிப்பிட்ட அளவில் உருக்கிக் கலந்து மேலும் சில உலோகக் கலவைகளைச் சேர்த்துத் தயாரிக்கப்படும் ஒரு செயற்கை உலோகமாகும். தற்போதைய காலத்தில் 88% தாமிரமும், 12% ஈயமும் கொண்டு வெண்கலம் உருவாக்கப்படுகிறது. தாமிரத்தை உறுக்குவதற்கு 1,984ºF (1,085ºC) அளவு வெப்பம் தேவை (http://www.onlinemetals.com/meltpt.cfm). ஈயத்தை உறுக்குவதற்கு 449.5ºF (231.9ºC) அளவு வெப்பம் தேவை (https://prezi.com/w0hy0ltdwdsi/element-of-the-day-tin). இத்தனைப் பெரிய அளவு வெப்பத்தைச் சிந்துவெளி மக்கள் எந்தத் தொழில்நுட்பத்தைக் கொண்டு உருவாக்கினார்கள் என்பது வியப்பாகவே உள்ளது. இதற்கு என்ன விதமான எரிபொருளைப் பயன்படுத்தினார்கள் என்பதுவும் தெளிவாகத் தெரியவில்லை. ஆயினும், அவர்கள் இந்த வெப்ப அளவை எட்டி வெண்கலப் பொருள்களை உருவாக்கினர் என்பது மட்டும் உண்மை.*

*7)* ***அழகுசாதன/ஒப்பனைக் கருவிகள்***

*சிந்துவெளி மக்கள் தங்களை ஒப்பனை செய்து கொள்வதிலும் ஆர்வம் கொண்டிருந்தனர் என்பது அவ்விடம் அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்ட ஒப்பனைப் பொருள்களால் கண்டறியப்படுகின்றது. இவற்றுள் சிலவற்றைத் தங்கம், இரத்தினக் கற்கள், யானைத்தந்தம் போன்றவற்றைக் கொண்டு தயாரித்திருக்கின்றனர் (Raj Pruthi, 2004, p.211). தங்கத்தை உருக்குவதற்கும் இரத்தினக் கற்களை வடிவமைப்பதற்கும் உரிய தொழில்நுட்பத்தை அவர்கள் பெற்றிருந்திருந்தார்கள் என்பதே சிந்துவெளி மக்களின் நாகரிக உயர்வைப் பறைசாற்றுவதாக உள்ளது.*

*8)* ***துணி***

*பருத்தி ஆடையைச் சிந்துவெளி மக்கள் பயன்படுத்தியதற்குரிய ஆதாரம் அகழ்வாய்வில் கிட்டியுள்ளது.*

*படம் 2: பருத்தி ஆடை அணிந்துள்ள மனிதரின் சிலை*



*படம் 2 பருத்தி ஆடை அணிந்துள்ள மனிதரைக் காட்டுகிறது. பருத்தி இலையின் வடிவம் இச்சிலையில் காணப்படுவதால் சிந்துவெளி மக்கள் பருத்தியை அறிந்திருந்தனர், அதனை ஆடையாகத் தரித்து உடுத்தினர் எனும் முடிவை எட்ட முடிகின்றது. எனவே, பருத்தியைக் கொண்டு துணி தயாரித்து அதனை ஆடையாக அணியும் நாகரிகம் பெற்றவர்களாகச் சிந்துவெளி மக்கள் இருந்திருக்கின்றனர் என்பது தெரிய வருகின்றது. அதிலும் ஆடையில் வேலைப்பாடுகளைப் புகுத்தி (பருத்தி இலை வடிவமைப்பு) அதனை மேலும் அழகுறச் செய்யும் கலையையும் அவர்கள் கற்றிருந்தனர் என்பது தெரிய வருகிறது.*

*9)* ***சிலைகளும் கலைப்பொருள்களும்***


*மணல்கற்கள், யானைத்தந்தம், சுடுமண் (terracotta), கற்கள், உலோகம் போன்றவற்றால் பல கலைப்பொருள்களையும் சிலைகளையும் சிந்துவெளி மக்கள் செய்துள்ளனர். குறிப்பாக மட்பாண்டம், முத்திரைகள், சுடுமண் சிலைகள், விளையாட்டுப் பொருள்கள் (மாட்டு வண்டி, தாயக்கட்டை, மிருகப் பொம்மைகள், கிலுகிலுப்பை) அம்மை வழிபாட்டுச் சிலைகள், தொடக்ககால சிவ வழிபாட்டு முத்திரை, சுடுமண் முத்திரைகளில் காணக்கிடக்கும் பலவகை மிருக உருவங்கள், வெங்கலத்தாலான நடனப்பெண் சிலை (dancing girl), அவள் முழங்கை முழுவதும் வளையல்கள், சிகை அலங்காரக் கலை, மட்பாண்டங்களின் மீது அமைந்திருக்கும் ஓவியங்கள், கோடுகள், பூ அமைப்பு வேலைப்பாடுகள், இயற்கை காட்சிகள் ஆகியவற்றைக் காண முடிகின்றது (Robin Coningham & Ruth Young, 2015, p.481). இவற்றின்வழி சிந்துவெளி மக்கள் கலையின்மீது கொண்டிருந்த ஆர்வம், அறிவு, திறன் ஆகியவற்றை அறிய முடிகின்றது. ஒருபக்கம் மிருக உருவம் பொறிக்கப்பட்டும் மறுபக்கத்தில் எழுத்து வடிவம் கொண்ட சதுரவடிவிலும் நீள்சதுரவடிவிலுமான வெண்கலத்துண்டுகள் பலவும் அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்டன. இவை தாயத்துப்போல பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்பதாகத் தொல்லியல் ஆய்வாளர்கள் கருத்துரைக்கின்றனர் (இராமநாதன், 2000, p.). இவற்றின் கலைவேலைப்பாடும் நேர்த்தியாகவும், அழகாகவும் இருப்பது சிந்துவெளி மக்களின் கலைநுணுக்கத்தைக் காட்டுவதாக அமைகின்றது.*

*10)* ***எழுத்து***

*சிந்துவெளி நாகரிகத் தொல்லியல் ஆய்வில் எழுத்து வரிவடிவங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை பெரும்பாலும் முத்திரை எழுத்துகளாக (pictograph-picture) படம் மற்றும் கோடுகளின் அடிப்படையில் அமைந்த ஓவிய எழுத்துகள் என்று கூடச் சொல்லலாம். இந்த எழுத்து முறை, படம் ஒன்றைக் கொண்டு அதன் தொடர்புடைய ஒலியியல் வடிவ அமைப்பில் உள்ள ஒரு குறிப்பிட்ட சொல்லை விளக்குவதாக அமைந்துள்ளது (Parpola Asko, 1969, p.8). உதாரணத்திற்குச் சீப்பு*

வடிவிலான ஒரு படத்தை இட்டு, இந்தப் படத்தின் வாயிலாக பெண் எனும் சொல்லை அடையாளப்படுத்தினர். திராவிட மொழிகளுள் கன்னடம், துளு, தெலுங்கு, கோண்டி போன்ற மொழிகளில் 'பெண்டிகா', எனும் வார்த்தைச் சீப்பு எனப் பொருள்படும். பெண்டிகா (பெண்) என்பது பெண்பாலைக் குறிக்கும் சொல்லாக மேற்கூறிய மொழிகளில் பயன்படுத்தப்படுகிறது. எனவே, சீப்பு எனும் ஓவியம் அதன் ஒலியியல் வடிவு அமைப்பில் 'பெண்' எனும் மகளிரைக் குறிக்கப் பயன்படுத்திய எழுத்தாகக் கொள்ளப்படுகிறது *(Rajakrishnan & Rajantheran, 1994, p.6-7).*

பட்டியல் 2: சிந்துவெளி எழுத்து மாதிரிகள்

| குறியீடு | குறியீட்டின் நேரடிப் பொருள் | திராவிட மொழி ஒலியியல் வடிவப் பகிர்வு | சொல்ல வந்த பொருள் |
|---|---|---|---|
|  | மீன் | மீன் | நட்சத்திரம் |
|  | கூரை + மீன் | மை + மீன் | கருப்பு + நட்சத்திரம் (சனிக்கிரகம்) |
|  | ஆறு + மீன் | அறுமீன் | ஆறு + நட்சத்திரம் (கார்த்திகை) |

மூலம்: ***Cristian Violatti**, 5 June 2015, https://www.ancient.eu/Indus_Script/* **சில மாற்றங்களுடன்.**

இந்த வகையில் சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட 750 முத்திரைகளில் பதிவாகியிருக்கும் வரிவடிவங்களை 1934-இல் ஆராய்ந்த ஜி.ஆர்.ஹண்டர் என்பார், சிந்துவெளி நாகரிக எழுத்துகள் இந்தோ-ஆரிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவையாக இருக்க வாய்ப்பில்லை என்பதையும், மாறாக, அவை ஓரசைச்சொல் மிகுந்து வரும் திராவிட மொழிகளை ஒத்ததொரு மொழிக்குடும்பத்தைச் சார்ந்தது என்பதுவே சரியாக இருக்கும் என்று முதன் முதலில் ஆராய்ந்து அறிவித்தார் *(Hunter, 1934, p.210).* சிந்துவெளி நாகரிகம் திராவிடர்களின் முன்னோர் கண்ட நாகரிகம் என்பதாகக் கருத்துரைக்கும் சார் ஜான் மார்ஷல் அவர்களின் கொள்கைக்கு இவ்வாய்வின் முடிவு வலுசேர்த்தது எனலாம் (இராமநாதன், 2000, p.83).

சிந்துவெளி நாகரிக எழுத்துகள் தொல்திராவிட மொழிக்குடும்பத்தைச் சார்ந்தவை எனும் கருத்தைப் பல ஆய்வுக்கட்டுரைகளில் நிறுவியவர் எஸ்.ஹீராஸ் பாதிரியார் அவர்கள். இவர், சிந்துவெளி மொழியை முந்துதிராவிட மொழி என வலியுறுத்துகிறார். இந்த எழுத்துகள் படவெழுத்து அல்லது சொற்குறியீடு (logosyllabic/logographic) எழுத்து என்பதாகவும் தெரிகிறது. இவை ஒலிகொள் வடிவ (phonograph) அமைப்பினதாகவும் உள்ளன. அவற்றைக் கண்டுபிடிப்பது ஓர் ஓவிய எழுத்துப் புதிர்போன்ற (rebus/homophonic) அமைப்பில் இருப்பதாகவும் அறிஞர்கள் கருதுகின்றனர் (Heras, 1953).

சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட எழுத்துகள் தொல்திராவிட/தொல்தமிழ் மொழி எழுத்துகளே எனும் கருத்தை முதலில் முன்வைத்த ஹீராஸ் பாதிரியாரைத் தொடர்ந்து மேலும் பல அறிஞர்களும் தங்களது மொழி ஆய்வுக்குப் பிறகு, இதே கருத்தை முன்வைக்கின்றனர். இவர்களுள் இரஷ்யா, பின்லாந்து மற்றும் இந்திய அறிஞர்களும் அடங்குவர். அந்த வகையில் நாரசாப் மற்றும் இரஷ்ய அறிஞர்களின் படைப்பு (1968&1979), அஸ்கோ பர்போலா (Asko Parpola) குழுவினர் (1969 முதல்), ஐ.மஹாதேவனின் கணினியின் துணையோடு 1977இல் மேற்கொள்ளப்பட்ட குறியீட்டு அமைப்பாய்வு (structural analysis), வால்டர் பேர் சர்வீஸின் ஓவிய எழுத்துப் புதிர் (Rebus) கோட்பாட்டு அடிப்படையிலான ஆய்வு (1983), சுப்பிரமணியம் மலையாண்டி (1978) அவர்களின் ஆய்வு, கிளைட் அகமது வின்டர்ஸ் (1985), பூர்ணசந்திரஜீவா (1990), பேராசிரியர் இரா.மதிவாணன் (1991) போன்ற ஆய்வுகள் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன (இராமநாதன், 2000, p.87).

அதிலும், பேராசிரியர் இரா.மதிவாணன் அவர்களின் *சிந்துவெளி எழுத்தின் திறவு* எனும் தலைப்பிலான ஆராய்ச்சி நூலானது (1991) மிகவும் தெளிவாகச் சிந்துவெளி எழுத்துகள் தொல்தமிழ் எழுத்துகளே எனவும், சிந்துவெளி எழுத்து வரிவடிவங்களை உருவெழுத்து, அசையெழுத்து எனப் பிரித்து அவற்றிற்கு ஈடான தமிழ்ப்பிராமி எழுத்து வடிவங்களையும் தொடர்ந்து அவை இன்றைய நவீனத் தமிழ் எழுத்து வடிவங்களோடு ஒப்பிட்டுத் தெளிவாக ஆய்வின் முடிவை முன்வைப்பது கவனிக்கத்தக்கது. இவர் சிந்துவெளி அசையெழுத்துகள் தொல்தமிழ் எழுத்து வடிவங்களாக இந்தியத் துணைக்கண்டம், இலங்கை எங்கும் பரவியிருந்ததாகக் கூறி அவை பின்னர் சங்கத் தமிழ்ப் புலவர்களால் மேம்படுத்தப்பட்டு "முதலெழுத்து", எனும் நெடுங்கணக்காக கி.மு.1800-1700இல் உருவாகி, பிற்காலத் 'தமிழி'-யாக (**தமிழி** அல்லது **தமிழ்ப் பிராமி** என்பது பண்டைக்காலத்தில் தமிழ் எழுத்துக்களை எழுதப் பயன்பட்ட ஒலிப்பியல் எழுத்து முறைமை) உருப்பெற்றதாகவும் அதன் பிறகே வட இந்தியர்கள் பிராமி என்ற பெயரில் இவற்றைத் தமக்குரிய எழுத்துகளாக உருவாக்கிக் கொண்டனர் என்று கருத்துரைப்பர். இது குறித்த விரிவான தகவல்களை இரா.மதிவாணன் அவர்களின் "Indus Script among Dravidian Speakers" (1995) எனும் நூலில் காண்க.

மேற்சொன்ன கருத்துகளின் அடிப்படையில் காமில் சுவாலேபில் (1990), ஸ்டான்லி வால்பர்ட் (1991), ஜே.எம்.ராபர்ட்ஸ் (1992) போன்ற அறிஞர்களும் சிந்துவெளி எழுத்துகள் திராவிட மொழியைச் சார்ந்ததாகத்தான் இருக்க முடியும் எனும் ஒருமித்த கருத்தை முன்வைக்கின்றனர். ஆயினும், இந்தக் கருத்துக்கு எதிர்கருத்து இல்லாமல் இல்லை. இதன்படி சிந்துவெளி எழுத்துகள் இந்தோ-ஆரிய மொழியாகவோ, வேறு இன மொழியாகவோ, ஓவியப்பட உபகரண படைப்புகளாகவோ இருக்கலாம் என்பன போன்ற கருத்துகளை முன்வைப்பாரும் உள்ளனர். சுவாமி சங்கரானந்தா (1943), பி.எம்.பருவா (1943), டி.என்.இராமச்சந்திரன் (1956), ஆர்.எம்.நாத், எஸ்.கே.ரே (1959), டாக்டர்.என்.ஜா, எஸ்.ஆர்.ராவ் (1982&1991) ஆகியோர் அது சமஸ்கிருத மொழித் தொடர்புடையவையே எனக் கருத்துரைத்துள்ளனர் என விளக்குகிறார் பி.இராமநாதன் (2000, p.83).

இக்கருத்துகளைக் கண்ணுற்ற பார்ப்போலா (1994) மேற்குறிப்பிட்ட ஆய்வாளர்கள் வம்புத்தனமாக சிந்துவெளி எழுத்துகளை வேதகாலச் சமஸ்கிரதமாகப் பொருள்படுத்தும் நோய்க்கு ஆட்பட்டுவிட்டவர்கள், இவர்கள் எப்படியும் சிந்துவெளி நாகரிகம் வேதகால நாகரிகத்திற்கு முந்தையது அல்ல என்பதை நிறுவுவதில் கவனம் செலுத்துபவர்களாக இருக்கிறார்கள் என்பதாகக் குறிப்பிடுகிறார். ஆராய்ச்சியால் முறையாக நிறுவப்படமுடியாத ஆய்வுநெறிக்குப்

பொருந்தாத எப்படியாவது சிந்துவெளி எழுத்துகளைச் சமஸ்கிரதம் எனக் காட்ட வேண்டும் எனும் நோக்கில் செய்துள்ள ஆய்வுகளைக் குறிப்பாக எஸ்.ஆர்.ராவ் அவர்களின் ஆய்வுகளைச் சரியென ஒப்புக்கொள்ள வேண்டுமானால் சமஸ்கிரதத்தின்மீது மூடப்பற்றும் ஓரளவு மூளைக்கோளாறும் கொண்டவர்களால் மட்டுமே முடியும் என காமில் சொலாபில் *(1985)* எனும் பேரறிஞர் குறிப்பிடுவதை புறந்தள்ள முடியாது.

மேலும், இன்றைய சிந்துவெளி விளிம்புப்பகுதியில் வாழும் மக்களிடையே பேசப்படும் மொழிகளாகிய கோய், குரூக், கொலாமி, பிராஹுய், மல்டோ போன்ற மொழிகள் திராவிட மொழிக்குடும்பத்தைச் சார்ந்தவைதான் என்பது ஆய்வுப்பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது *(Asko Parpola, 2015)*. சிந்துவெளியை மேம்படுத்திய தொல்தமிழ்/திராவிட எச்சங்களின் ஒரு பகுதியாகக் கூட இம்மக்களின் வழக்கில் இருந்துவரும் இம்மூன்று மொழிகளும் இருக்கலாம் என்பதாகவே தெரிகிறது. இன்றைய நிலையில் வடக்கு, வடமேற்கு இந்தியப் பகுதிகள் முழுவதும் இந்தோ-ஆரிய மொழிக்குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளைப் பேசுபவர்கள் மலிந்திருக்கும் இடமாக உள்ளது என்பது அனைவரும் அறிந்த ஒன்றே. ஆனால், சிந்துவெளி விளிம்பில் மட்டும் திராவிட மொழிக்குடும்ப மொழிகள் பேசப்படுவது மேற்குறித்த கருத்திற்கு வலுசேர்ப்பதாக உள்ளது.

சிந்துவெளி எழுத்துகளைத் தொல்தமிழ்/திராவிட மொழியாகவோ அல்லது சமஸ்கிருதம் சார்ந்த மொழியாகவோ உறுதியாக நிறுவப்படவில்லை. உலக அறிஞர்களும் கூட இவ்விசயத்தில் ஒரு முடிவான முடிவுக்கு வரவில்லை என்பது உண்மையாகிலும், சிந்துவெளி எழுத்துகள் தொல்தமிழ்/திராவிட மொழியாகவே இருக்க வேண்டும் எனும் கோட்பாடு மற்றவற்றைக் காட்டிலும் வலுவுள்ளதாகவும் ஆய்வுப்பூர்வமானதாகவும் அறிவுப்பூர்வமானதாகவும் இருப்பதை நடுநிலையில் நின்று காணும் எந்த ஒருவரும் எளிதில் புரிந்துகொள்ளலாம்.


*11)* **சமய நம்பிக்கைகள்**

பேராசிரியர் பிக்கோட் *(Piggott, 1950)*, "சிந்துவெளி நாகரிகம் ஆன்மீக நம்பிக்கைகள் மிகுந்த நாகரிகமாக உள்ளது" என உறுதிபடுத்துகிறார். சிந்துவெளி அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்டவற்றுள் சில, சிந்துவெளி மக்களின் சமய நம்பிக்கையைப் பறைசாற்றுவதாக அமைகின்றன. அவற்றுள் தாய்தெய்வ *(Mother Godess)* வழிபாட்டைக் குறிக்கும் சிலைகள் ஏறக்குறைய எல்லாக் குடியிருப்புகளிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன *(Sanjeevkumar Tandle, 2014, p.35)*. அடுத்த நிலையில் அகழ்ந்தெடுக்கப்பட்ட முத்திரைகளுள் ஒன்றில் தொல்சிவ வழிபாட்டுக் குறியீடு கிட்டியுள்ளது *(Mugambi, 2015, p.72)*. ஹரப்பாவில் அகழ்ந்தெடுக்கப்பட்ட தெப்பக்குளமும் சமயச் சடங்குகளுக்காகப் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படுகிறது. இதனைத் தவிர்த்து, சிவலிங்க வடிவிலான சிலைகளும் கிடைக்கப்பட்டுள்ளன. இயற்கையைப் போற்றும் கருத்தை உணர்த்தும் முத்திரைகளும், மிருகங்களைக் குறிப்பாக மாடு, பசு போன்றவற்றைப் போற்றும் கருத்தை உணர்த்தும் முத்திரைகளும் கிடைத்துள்ளன. இவற்றையெல்லாம் பகுப்பாய்வு செய்த தொல்லியல் நிபுணர்கள் குறிப்பாக சார் ஜான் மார்ஷல் அவர்கள் சிந்துவெளி நாகரிகத்தில் கண்டறியப்பட்ட தகவல்களுள் ஒன்று மட்டும் தனித்தன்மையுடையதாக உள்ளது. அது என்னவென்றால் தொல்சைவச் சமய வழிபாடு சிந்துவெளி மக்களிடையே இருந்திருக்கின்றது எனும் கண்டுபிடிப்பாகும். இதன்வழி உலகிலேயே வாழும் சமயங்களுள் மிகப்பழமையானது சைவ சமயம் என்பது நிலைநிறுத்தப்படுகிறது.

*i.* ஆதிசிவ வழிபாடு *(Proto-Shiva)*

ஆதிசிவ வழிபாட்டு முத்திரை *(Smith Vincent, 1958, p.29)*. இந்த முத்திரை இங்கு சிவவழிபாடு நடைபெற்றிருப்பதற்கான ஆதாரமாக அமைவதாக சார் ஜோன் மார்ஷல் கூறுகின்றார் *(1973, vii-x)*. இம்முத்திரையின் நடுவில் ஒரு மனித உருவம் யோகப்பாவனையில் அமர்ந்திருப்பது போல உள்ளது. கண்கள் பாதி மூடி தியான நிலையில் இருப்பது போல இருக்கிறது. தலைக்குமேல் மூன்று கொம்புகள்போல் ஓர் அமைப்பு. ஆசனமிட்டு அமர்ந்திருப்பது போல அமைப்பு. அவ்வுருவத்தைச் சுற்றிலும் யானை, புலி, காண்டாமிருகம், ஆடு, மான், மனிதன் போன்ற உருவ அமைப்புகளும் காணக்கிடக்கின்றன. முத்திரையின் மேற்பகுதியில் சிந்துவெளி மக்களின் வழக்கில் இருந்த எழுத்து வரிவடிவங்களும் காணக்கிடக்கின்றன *(Majumdar, 1961, 20-21)*.

படம் *3:* ஆதிசிவ முத்திரை



மூலம்*: harappa.com.*

இது இறைவனைத் தந்தையாகக் காணும் நிலைப்பாட்டைக் காட்டுகிறது என்பதாகத் தொல்லியல் ஆய்வாளர்கள் முடிவுசெய்துள்ளனர். இதன் நடுவில் அமைந்துள்ள உருவம் சிவப்பரம்பொருளைக் (பதி) குறிப்பதாக உள்ளது. அவ்வுருவத்தைச் சுற்றியுள்ள மற்ற உயிரினங்கள் பசுவாகிய உயிரைக் குறிக்கும் தத்துவத்தைக் காண்டுகின்றது. பதி பசு கொள்கை சைவ மதத்தின் முதன்மைக் கூறு என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது *(Rajantheran, 2012, p.41)*. 'அரைக் கண்' யோக நிலையையும், அமர்ந்த நிலை தவயோகத்தையும் குறிப்பதால் இது இந்து மதத்தில்

இறைவனை மகாயோகியாகக் காணும் நிலையைக் குறிப்பதாகப் பொருள் கொள்ளப்படுகிறது. மேற்சொன்ன உருவத்தின் தலையில் உள்ள மூன்று கொம்புகள் போன்ற அமைப்பு இறைவனின் முத்தொழிலாகிய படைத்தல், காத்தல் அழித்தல் ஆகியவற்றைக் குறிப்பதாகப் பொருள்கொள்ளப்படுகிறது (Allchin & Allchin, 1968). சித்தவியளாலர் சிலர் இந்த மூன்று கொம்புகள் குண்டலினி யோக அடைவில் சகஸ்ராரத்தில் ஏற்படும் சிவ சக்தி ஐக்கியத்தை உணர்த்துவதாகவும், அது உச்சந்தலையிலிருந்து 18 அங்குல உயரத்தில் நிகழ்வதாகவும் பொருள் கொள்கின்றனர். இம்முத்திரையில் தவநிலை காட்டப்பட்டிருப்பதால் இந்தக் கருத்து முற்றிலும் பிழை என ஒதுக்கிவிட முடியாது.

ii. தாய்தெய்வ வழிபாட்டு மரபு (Mother Goddess)

மொஹஞ்சதாரோ, ஹராப்பா ஆகிய நகரங்களில் அமையப்பெற்றிருந்த பெரும்பான்மையான வீடுகளில் தாய்தெய்வச் சிலை எனக் கருதப்பட்ட பெண்ணின் உருவச் சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டன. இது தமிழர்களின் 'அம்மன்' வழிபாட்டுடன் தொடர்புடையதாக அறியப்படுகின்றது (இராமநாதன், 2000, p.56).

படம் 4: தாய்தெய்வ வழிபாட்டுச் சிலை



தாய்தெய்வ வழிபாடு இறைவியை உலக உயிர்களுக்கெல்லாம் தாயாக உருவகித்துக் காட்டும் நிலையைக் குறிப்பது (Sen Sailendra Nath, 1990, 28-29). இவ்வகை நம்பிக்கையும் வழிபாடும் 'அம்மன்' எனும் பெயரில் இன்றளவும் தமிழர்/திராவிடர் மத்தியில் மிகவும் பிரபலமாக இருந்துவரும் வழிபாட்டுக் கொள்கைகளுள் மிகவும் முக்கியமானதாகும். தாய் தன் பிள்ளைகளை எந்த நிலையிலும் கைவிடாமல் பேணிக் காப்பதுபோல இறைவன் தனது குழந்தைகளான உயிர்களைக் கடைத்தேற்றம் செய்வார் எனும் உண்மையை விளக்கவல்லது இக்கொள்கை.

சங்க இலக்கிய நூல்களுள் ஒன்றான பெரும்பாணாற்றுப்படை (457) சேயோனாகிய முருகனின் தாயாகிய கொற்றவையைத் 'தாய்தெய்வம்' என்றே குறிப்பிடுகிறது. இக்கொற்றவை பழையோள், கானமர்செல்வி, காடு கிழாள், கடல் கெழு செல்வி எனப் பல பெயர்களால் சங்க இலக்கியங்களில் அறியப்படுகிறாள் (இராமநாதன், 2000, p.56). பி.எல். சாமி எனும் அறிஞர் ஹராப்பாவில் கண்டெடுக்கப்பட்ட தாய்தெய்வ சிலைகள் கொற்றவையின் வடிவே எனக் கருதுகிறார். லோத்தலில் கண்டுபிடிக்கப்பட்ட 'வனவாசி கொட்டறி மாதா' என்பது கானமர்செல்வியே அதாவது எல்லையம்மனின் (எல்லம்மன்) மறுவுருவமே என்றும் கருதப்படுகிறது. இவ்வம்மையே ரேணுகா எனும் பெயரில் பின்பு அறியப்பட்டாள் என்பதுவும் ஆய்வாளர் பி.எல்.சாமியின் கருத்தின் அடிப்படையில் இவ்விடம் முன்வைக்கப்படுகிறது (சாமி, 1984, p.90).

தமிழர்/திராவிடர் பாரம்பரியத்தில், குறிப்பாக சைவ சமயத்தில் 'அம்மையப்பர்' எனும் கொள்கையும் இறைவனை தாய் தந்தையாக உருவகித்துப் பேசும் போக்கையுடையது. அந்த வகையில் சிவ முத்திரையும் தாய்தெய்வ வழிபாட்டுச் சிலையும் பழந்தமிழர்தம் 'அம்மையப்பர் கொள்கையை' காட்டுவதாகப் பொருள் கொள்ளப்பட்டிருப்பது (Mahajan, 1990, pp.33-34) ஏற்புடையதாகவே இருக்கிறது.

iii. தெப்பக்குளம்

ஹராப்பா பெருநகர அகழ்வாய்வில் தெப்பக்குளம் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது குறித்து முன்னரே கூறப்பட்டது. இக்குளம் சமயச் சடங்குகள் செய்வதற்காக உருவாக்கப்பட்டது என்று பொருள்கொள்ளப்பட்டுள்ளது (Basham, 2002, pp.17-1

படம் 5: தெப்பக்குளம்



கோவில்களுடன் குளத்தை இணைத்தே அமைக்கும் பாரம்பரியமானது தென்னிந்தியர்களுக்கே உரிய ஒன்றாகும். பிறகு இப்பழக்கம் வட இந்தியர்களிடையேயும் பரவியது. "கோவில் குளம் சென்று வருகிறேன்/கோவில் குளம் சென்று வாருங்கள்" எனும் முதுமொழி இன்றும் பேச்சுவழக்கில் தமிழரிடையே இருப்பது அனைவரும் அறிந்த ஒன்றே (தட்சிணாமூர்த்தி, 2005). இன்றும் தென்னக முக்கியக் கோவில்களில் குளம் இல்லாத நிலையைக் காண்பது அரிது. கும்பகோண மகாமகக்குளம், ஹராப்பாவில் அகழ்ந்தெடுக்கப்பட்ட தெப்பக்குளம் போலவே சடங்குகள் செய்வதற்கு ஏதுவாக அமைந்த இடவமைப்புடன் இருப்பது இவ்விடம் சிந்திக்கத்தக்கது. மாறாக, வட இந்திய முக்கியக் கோயில்களுள் பலவற்றில் குளங்கள் இருப்பதில்லை. தொடக்கக் காலம் தொட்டே

உள்ளம் மற்றும் உடல் தூய்மையைத் தமிழர் பாரம்பரியம் பெரிதும் வலியுறுத்தி வந்துள்ளது. குளம் மேற்சொன்ன இரண்டு தூய்மை நிலைக்கும் அடிப்படையாக அமைகின்றது (Rajantheran, 2012, p.12).

சிந்துவெளியில் கோயில்கள் இருந்திருக்கக்கூடும் எனும் கருத்தும் உள்ளது. அவை, அழியும் பொருட்கள் கொண்டு அமைக்கப் பெற்றமையால் காலத்தால் அழிவுற்றிருக்கலாம். எனவே சிந்துவெளியில் கோயில்கள் இல்லை எனும் கருத்து முழுமையாக ஏற்றுக்கொள்வதற்கு இல்லை என்பது இராமநாதன் கருத்து (2000, p.55). சிந்துவெளி மக்களின் வீடுகளில் தாய்தெய்வ வழிபாட்டு உருவங்கள், சமயத் தொடர்புடைய தகடுகள், தாயத்துகள் போன்றவையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை, தமிழர்/திராவிடர் இறைவழிபாட்டு முறைகளில் இன்றும் பயன்பாட்டில் உள்ளன. கண்டெடுக்கப்பட்ட முத்திரைகளில் அரசமரம் போன்ற அமைப்புகளும் எருது, யானை போன்ற விலங்குகளின் உருவப்படங்களும் அமைந்துள்ளன (Sanjeevkumar Tandle, 2014, p36). இவற்றின் வழி, இயற்கையில் இறையைக் காணும் கொள்கையையும் எல்லா உயிர்களிலும், இறைவன் ஒன்றாய் இருக்கிறார் எனும் சைவசித்தாந்தத் தத்துவங்களின் வெளிப்பாட்டையும் காணமுடிகின்றது.

சிந்துவெளியில் லிங்க வடிவங்கள் பலவும் கிடைத்துள்ளன. இதன்வழி அவ்விடம் தொல்சிவ வழிபாடு இருந்தமை மேலும் உறுதிபடுகின்றது (Basham, 2002, p.13). சக்கரம், சுவாஸ்திகம், ஞாயிற்றைக் குறிப்பதாதலின் சௌர சமய வழிபாடாகிய சூரிய வழிபாடும் சிந்துவெளி மக்களிடையே இருந்திருக்க வாய்ப்புண்டு.

சிந்துவெளி மக்கள் ஓர் உயர்ந்த நாகரிகத்தை அடைந்திருந்தனர் என்பது தெளிவு. இவர்கள் தொடக்ககாலச் சைவ வழிபாட்டை தம் வாழ்க்கை நெறியாகக் கொண்டிருந்தனர் என்பதற்குரிய ஆதாரங்களும் நிறைவாக உள்ளன. இதில் குறிப்பிட்டுச் சொல்லத் தக்கதாகச் சிவமுத்திரை, தாய்தெய்வ வழிபாடு மற்றும் சடங்குகள் செய்யும் வசதியுடன் கூடிய தெப்பக்குளம் போன்றவை முதன்மை வகிக்கின்றன. இதன் அடிப்படையில் இந்நாகரிகத்தை வளர்த்த மக்கள் திராவிடர்களின் முன்னோர்களாக தான் இருக்க வேண்டும் என்பது சிலரது ஒட்டுமொத்தக் கருத்தாக உள்ளது (Rajakrishnan & Rajantheran, 1994, p.7-8). இதற்கும் மேலாக சிலைகள் வைத்து வழிபடும் பாரம்பரியம் தென்னகத்திற்கே உரிய ஒன்று என்பதை ஜி.எம்.போங்கார்ட் லேபின் (G.M.Bongard Levin, 1986) தமது நூலில், "இந்து சமயத்தில் காலம் காலமாகக் காணப்படும் உருவவழிபாடு இந்தியாவில் இருந்த ஆரியர் அல்லாதார் வழிபாட்டு முறைகளில் இருந்தே பிராமணியத்துக்குள் வந்தது" எனப் பதிவுசெய்துள்ளார். இது போலவே யோகம் (தியானம்), தாய்தெய்வ வழிபாடு போன்றவையும் ஆரியர்களுக்கு முற்பட்ட மக்களிடமிருந்தே ஆரியர்கள் பெற்றிருக்க வேண்டும் என்பதாக வால் பர்ட் எனும் அறிஞர் தமது *An Introduction to India* எனும் நூலில் குறிப்பிடுகிறார். இதற்கும் மேலாக வால்பர்ட் (1991), "சிவ வழிபாடு வட இந்தியாவைக் காட்டிலும் தென்னாட்டு மக்களிடம்தான் முதன்மை பெற்றுள்ளது. தென்னாட்டுத் திராவிட மக்கள் ஆரியர்களுக்கு பன்னெடும் காலத்திற்கு முன்னதாகவே அங்கு வாழ்ந்து வந்திருந்தனர் என்பதை இச்செய்தி காட்டுவதாக உள்ளது" எனக் குறிப்பிடுவதும் சிந்துவெளியில் நிலவி வந்த சமய நம்பிக்கைகள் தொல்தமிழர்/திராவிடர் பாரம்பரியமே என்பதை வலியுறுத்துவதாகவே உள்ளது.

ஜி.எம்.ராபர்ட்ஸ் தமது உலக வரலாறு (1992) எனும் நூலில் மொஹஞ்தாரோவில் கண்டெடுக்கப்பட்ட சிவமுத்திரை, சிவலிங்கங்களின் அடிப்படையில் இன்று உலகத்தில் பின்பற்றப்படும் சமயங்களுள் சிவன் வழிபாடே அனைத்தையும்விட தொன்மை வாய்ந்தது என உய்த்துணர சான்றுகள் உள்ளன எனும் கருத்தைப் பதிவுசெய்கிறார்.

மாறாக, வட இந்தியர்கள் வேத நூல் பாராயணம், வேள்வி வளர்த்தல் போன்ற வழிபாட்டு முறைகளிலேயே தோய்ந்திருந்ததால் சிந்துவெளி நாகரிக வழிபாட்டு அமைப்புகள் ஆரியர்களைக் காட்டிலும் தொல்தமிழர்/திராவிடர் வழிபாட்டு முறையைப் பெருமளவில் ஒத்திருக்கிறது என்பது இவ்விடம் குறிப்பிடத்தக்கதாகும்.

### 12) பொருளாதார நடவடிக்கைகள்

சிந்துவெளிப் பெருநகரங்களின் இடையேயும், விளிம்புகளிலும் விவசாயம் செழித்து இருந்ததாகவும் தெரிகிறது. ஆடு, மாடு வளர்த்தல், கோதுமை, பார்லி, நெல், போன்ற தவசங்கள், பருத்திப் பயிரீடு போன்ற விவசாய, கால்நடை வளர்ப்பு நடவடிக்கைகள் இருந்துள்ளன. உலகத்திலேயே கி.மு.5000 ஆண்டுகளுக்கு முன்பே பருத்தியை விளைச்சல் செய்து அதைக் கொண்டு, துணிநெய்த வரலாறு இந்தியாவுக்கு மட்டுமே உள்ளது (Sanjeevkumar Tandle, 2014, p.34).

மேலும், தொழிலாளர்களுக்கு இரண்டு அறைகள் கொண்ட வீட்டு வசதி இருந்தது. வியாபாரம் முக்கியமான தொழிலாக இருந்திருக்கிறது. ஹரப்பாவின் விளிம்புகளில் இருக்கின்ற பலுசிஸ்தான் கிராம மக்களோடு வியாபாரம் நிகழ்ந்ததற்கான ஆதாரங்கள் கிட்டியுள்ளன. இவர்களது உற்பத்திகள் மற்றும் தயாரிப்புகள் மெசபொட்டாமியா வரை சென்றிருந்தது அவ்விடம் கண்டெடுக்கப்பட்ட சிந்துவெளி வியாபாரிகளின் முத்திரைகள் உறுதிபடுத்துகின்றன. இவ்விடம் பருத்தித் துணி வியாபாரம் முதன்மை பெற்றிருக்கக் கூடும் என்றும் வியாபாரிகள் பலர் மெசபொட்டாமியாவிலேயே தங்கி வியாபார நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டிருக்கக் கூடும் என்றும் அறிஞர்கள் கருதுகின்றனர் (Basham, 2002, p.19). சிந்துவெளியில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட முத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவை பெரும்பாலும் உரிம அடையாளத்தைக் காட்டுவதற்காக வியாபாரிகளால் பயன்படுத்தப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது (Allchin 1988, p.185). கி.மு.2300-2000 வருடப் பழமை வாய்ந்த சிந்துவெளிப் பொருட்கள் சில சுமேரிய நாகரிகத்திலும் கண்டெடுக்கப்பட்டன (Majumdar, 2012, p.69).

### 13) சிந்துவெளி தோற்றுனர்

சிந்துவெளியில் சிறந்த நாகரிகம் தோன்றியது என்பதில் யாரும் கருத்து வேறுபாடு கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், இந்த நாகரிகத்திற்குச் சொந்தக்காரர்கள் யார் என்பதில்தான் இதுவரையிலும் ஒரு முழுமையான, ஆதாரப்பூர்வமான அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு முடிவு எட்டப்படவில்லை.

மேலும், மத்தியக் கிழக்கு நாகரிகத்தின் பாதிப்பு எதுவும் சிந்துவெளி நாகரிகத்தில் இருப்பதாக அறிஞர்கள் நம்பவில்லை. அதே நேரம், வெளியிலிருந்து இந்தியத் துணைக்கண்டத்திற்குள் ஏறக்குறைய கி.மு.2000-1500-இல் வந்தேறிய ஆரிய வம்சாவளியினருடைய நாகரிகமாகவும் இதனைக் காண முடியாது. மாறாக சிந்துவெளி நாகரிகப் பெருநகரங்கள் இந்தியத் துணைக்கண்டத்தில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே குடியேறிவிட்ட அந்த மூத்த குடிமக்களால்தான் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும் (Basham, 2002, p.15).

சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட எழுத்துகளைப் பொருள்படுத்தும் முயற்சிகள் முழு அளவில் வெற்றி அளிக்காததால் இந்தக் குழப்பத்திற்கு முடிவு காணும் வாய்ப்புக் குறைந்துள்ளது. ஆயினும், சிந்துவெளி சமய நம்பிக்கைகள் அடிப்படையில் பெருவரியாக அவர்கள் தமிழர்/திராவிடர் சமயப் பண்பாட்டோடு மிக நெருங்கியத் தொடர்புகளைக் கொண்டிருப்பதால் சிந்துவெளி மக்கள் தொல்தமிழ்/திராவிடர்களின் முன்னோர்களால் உருவாக்கப்பட்டிருக்கலாம் எனும் கருத்து வலிமைபெற்றுள்ளது. இதற்கு ஆதாரமாக சிந்துவெளி எழுத்துகளை ஆராய்ந்தவர்களில் பெரும்பான்மையோர் அவை தொல்தமிழ் எழுத்துவடிவங்களாக இருக்கக் கூடும் என்பதாகத்தான் கருத்துரைக்கிறார்கள் (இராமநாதன், 2000, pp.87-94).

1966-இல் சார் மோர்ட்டிமர் வீலர் தமது அகழ்வாய்வில் 57 சமாதிகளைச் சிந்துவெளியில் கண்டுபிடித்தார். இதன்வழி சிந்துவெளி மக்கள் பிணங்களைப் புதைக்கும் பாரம்பரியம் கொண்டவர்களாக இருப்பது தெரிய வருகிறது. ஹராப்பாவில் கிடைக்கப்பெற்ற எலும்புக்கூடுகள், நீண்ட தலையும் குறுகிய மூக்கும் கொண்டவர்களாக இருந்திருப்பர் என்பது ஆய்வாளர்களின் கருத்து. இதனை மெடித்திரேனியன் (Mediterranean) வகை எலும்புக்கூடுகள் எனக் குறிப்பிடுவர். இவ்வகை மனிதர்கள் மத்தியக் கிழக்கு, எகிப்து தவிர தற்போதைய இந்திய மக்களிடையே இது ஒரு முக்கியக் கூறாக அமைந்துள்ளது. இரண்டாவது வகை எலும்புக்கூடுகள் புரோத்தோ அஸ்துரோலைட் (Proto-Australoid) என வகைப்படுத்தப்பட்டுள்ளது. இவை சப்பை மூக்கு, தடித்த உதடு போன்ற கூறுகளைக் கொண்டது. இது தற்போதைய இந்திய மலைவாழ் மக்கள் மற்றும் ஆஸ்திரேலிய பூர்வகுடிகளின் உடல் கூறுகளோடும் ஒத்துப் போகிறது. மூன்றாவது வகை அல்பாய்ன் (Alpine) வகையினது. இது, குட்டைத்தலை மனிதக் கூட்டத்தைக் குறிப்பது. ஒரே ஒரு மங்கோலிய வகை மண்டையோடும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது (Basham, 2002, p.15). இது தவிர்த்து சிந்துவெளியில் கண்டுபிடிக்கப்பட்ட சிலைவடிவங்களின் அடிப்படையில் நடன மங்கையின் சிலை நிச்சயமாகப் புரோட்டோ-அஸ்திரோலைட்டைச் சார்ந்தது என்பது நிறுவப்பட்டுள்ளது. பிற சிலைகளின் அடிப்படையிலும் அந்த மனிதர்களினுடைய உடல் கூறுகள் அடையாளம் காணப்பட்டன. உதடுகள் அமைப்பு, முடி அமைப்பு போன்றவை சிலைகளின் அடிப்படையில்தான் பெருவாரியாக விளக்கப்பட்டுள்ளன.

இதுபோன்ற உடல் அமைப்புகளில் மெடித்திரேனியன் மற்றும் புரோட்டோ-அஸ்திரோலைட் ஆகிய இரு கூறுகளின் கலவையாகத்தான் இன்றைய தென்னிந்திய மக்கள் குறிப்பாகத் தமிழர்கள் இருக்கிறார்கள் என்பது கவனிக்கப்பட வேண்டிய முக்கியக் குறிப்பாகும். எனவே எலும்புக்கூடுகள் அடிப்படையிலும் சிந்துவெளித் தோற்றுனர்கள் தொல்தமிழ்/திராவிடரின் முன்னோர்கள் எனும் கருத்துதான் வலுபெற்றிருக்கின்றதே ஒழிய இந்தோ ஆரியர்களின் கூறுகள் எந்த வகையிலும் வெளிப்படையாக அமையவில்லை. எனவே, இந்தோ ஆரியர்கள் அல்லது இருக்கு வேத மக்கள் சிந்துவெளி நாகரிகத்திற்குச் சொந்தக்காரர்களாக இருக்க முடியாது என மிகவும் உறுதியாக ஏ.எல்.பாஷம் அவர்கள் குறிப்பிடுகிறார் (Basham, 2002, pp.24-25).

14) **அளவையும் நிறுவையும்**

உலகிலேயே மிகத்தொன்மையான எடை அளவு முறை சிந்துவெளி நாகரிக மக்களிடையேதான் இருந்தது. இதற்கு முன்னர் இது போன்றதொரு எடை அளவுக் கருவிகளும் முறைகளும் வேறெந்த நாகரிகத்திலும் இருந்ததில்லை என்பது சிந்துவெளி நாகரிகத்தின் உயர்ந்த அடைவுக்கு மற்றொரு ஆதாரமாகும் (Berriman, 1953). சிந்துவெளியில் எடைக்கற்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றினை மெயின்கார் (Mainkar, 1984) எனும் அறிஞர் ஆய்வு செய்து சில குறிப்புகளை வைத்துள்ளார். சிந்துவெளி எடைகளை அவர் இரண்டு வகையாகப் பிரித்து விளக்கமாகக் கருத்துகளை முன்வைக்கிறார்.

சிந்துவெளியில் அடிக்கோள்கள் போன்ற அளவீட்டு மதிப்பில் பொறிக்கப்பட்ட குச்சிகள் சிலவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவையெல்லாம் சிந்துவெளி மக்கள் எடை மற்றும் அளவைக் குறித்த அறிவைப் பெற்றிருந்தனர் என்பதை நமக்குக் காட்டுகிறது.

படம் 6: எடை அளவு



சிந்துவெளி மக்கள் அளவை மற்றும் நிறுவை அறிவைத் தமது வியாபாரத் தேவைக்காகவும், நிர்மானிப்புத் தொழில்நுட்பத்திற்காகவும் அதிகமாகப் பயம்படுத்தியிருக்கின்றனர். குறைந்தபட்ச அளவையாக 0.856 கிராம் இருந்திருக்கிறது. அளவை 1, 2, 4, 8, 16, 32, 64 எனும் மடங்கு அமைப்பிலும் மற்றவை 16 தசம மடங்குகள் கணக்கு வகையிலும் அமைந்திருந்ததாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.

பொறியியல் அறிஞரான செங்கம் வளையாம் பட்டு கு.வெங்கடாசலம் தமது, 'A Study of the Weights and Measures of the Indus Vally Civilizatin" (Venkatachalam, 1983) எனும் நூலில் சிந்துவெளி நாகரிகத்தில் வழக்கில் இருந்த 'சிற்றிலக்க' அடிப்படையில் அமைந்த எண் முறையே தற்போதைய தமிழ்மக்களின் மத்தியில் சமீபக் காலம்வரை நிலவி வந்துள்ளது என்பதாகக் குறிப்பிடுகிறார். கிராம், கிலோ போன்ற நிறுவை முறைகள் அமலுக்கு வந்தபின் இவை வழக்கொழிந்தன என்பதாகவும் அவர் கருத்துரைக்கின்றார்.

**தொகுப்புரை**

**மேம்பாடுகள்**

I. சிந்துவெளி நாகரிகம் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட நிரந்தரக் குடியிருப்பு பண்பாட்டு அடிப்படையில் வளர்ந்து ஓங்கிய ஒரு நாகரிகமாகும்.
II. இது, கட்டடம் மற்றும் பிற நிர்மானிப்புத் திறன்கள் அடிப்படையில் அமைந்த ஒரு பெருநகர நாகரிகமாகவும் இருக்கிறது.

III. சிந்துவெளி மக்களின் தொழில்துறை வளர்ச்சி (செங்கல் உற்பத்தி, செம்பு போன்ற உலோகத் தயாரிப்பு, பருத்தி ஆடை தயாரிப்பு, ஒப்பனைப் பொருட்கள் தயாரிப்பு இப்படிப் பல) இப்பெருநகர நாகரிகத்திற்கு அடிப்படையாக அமைந்திருக்கிறது. இத்தொழிற்துறைகள் வளர, தொழில்நுட்பம் அடிப்படையாக அமைகிறது. எனவே, சிந்துவெளி மக்கள் உயர்ந்த தொழில்நுட்ப அறிவைக் கொண்டவர்களாகத் தெரிகிறது (பாதாளச் சாக்கடை அமைப்பு ஒன்றே இதற்கு ஆதாரமாகச் சொல்லலாம்).

IV. இந்த வசதிகளையும் தொழிற்திறன்களையும் ஒரு கட்டுக்குள் வைத்து முறைசெய்து காக்கும், தரமான அரசும் ஆட்சி முறையும் அங்கே இருந்திருக்கிறது என்பதும் தெரிகிறது.

V. எந்த வசதியையும் (சாலை, வீடுகள், சாக்கடை இன்ன பிற) உருவாக்குவது எளிது. அவற்றைப் பராமரிப்பது என்பது கடினம். ஆனால், சிந்துவெளி மக்கள் (குறைந்தது 1500 ஆண்டுகளுக்கு) அவர்கள் உருவாக்கிய வசதிகளைப் பராமரிப்பதற்கு முக்கியத்துவம் அளித்துள்ளனர்.

VI. அவ்விடம் கண்டுபிடிக்கப்பட்ட வீட்டு உபயோகப் பொருட்கள், தாழிகள் போன்றவை எளிமையாக இருந்தாலும்கூட, அவற்றை உருவாக்குவதற்கான சிந்தனை ஆற்றல் சிந்துவெளி மக்களிடம் இருந்திருக்கிறது என்பதுதான் முக்கியம்.

VII. அவர்கள் எண்ணிக்கை அளவை, நிறுவை அளவை குறித்த ஆழ்ந்த அறிவைப் பெற்றிருந்தனர் என்பது அவர்களது கட்டடக்கலையின் மூலம் எளிதில் அறிந்து கொள்ளலாம்.

VIII. வியாபாரத் துறையிலும் அவர்கள் பிற நாகரிகங்களோடு தொடர்பு கொண்டிருந்தனர் என்பதும் தெரிய வருகிறது. முத்திரைகள், நீர்வழிப் பயணத்திற்கான படகுத்துறைகள், தவசங்கள் சேகரிப்புக் கிடங்கு போன்ற பலவும் இதனை உறுதிபடுத்துகின்றன.

IX. அறிவை நிலைநிறுத்தி எதிர்காலச் சந்ததியினருக்குக் கொண்டுசேர்க்கும் நோக்கம் கொண்டவர்களாகச் சிந்துவெளி மக்கள் இருந்திருக்கிறார்கள் என்பதற்கு அவர்களுடைய எழுத்துவடிவங்களே ஆதாரமாகின்றன.

X. வாழும் சமயங்களுள் மிகப் பழமையான சமயத்திற்கு (சைவ சமயம்) இவர்கள் சொந்தக்காரர்கள்.

XI. உலகுக்குப் பருத்தி ஆடையை தந்தவர்கள் இவர்கள்.

XII. எல்லையால் எல்லா நாகரிகங்களையும் விட மிகப்பரந்து விரிந்த நிலப்பரப்பைக் கொண்டது சிந்துவெளி நாகரிகம்.

**வீழ்ச்சி**

சிந்துவெளி நாகரிகம் ஏறத்தாள கி.மு.2000-1500-இல் வீழ்ச்சி கண்டதாக தொல்லியல் அறிஞர்கள் கருதுகிறார்கள். அவற்றுக்கான சில காரணங்களின் அடிப்படையில் முன்வைக்கப்படும் அனுமானங்கள் பின்வருமாறு:-

I. வெளியில் இருந்து வந்தவர்களால் (ஆரியர்) தாக்குதல்களுக்கு உட்பட்டது.

II. திடீர் வெள்ளத்தால் பேரழிவு.

III. மக்களிடையே தொற்று நோய் பரவியதால் பேரழிவு.

IV. இயற்கைப் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளிக்காமை.

அறிஞர்களால் மேற்காணும் நான்கு அனுமானங்கள் முன்வைக்கப்பட்டிருந்த போதும், பொதுவில் முதல் அனுமானம் குறித்த விவாதம்தான் பல விமர்சனங்களுக்கு உட்பட்டதாக உள்ளது. பிற மூன்றும் பொதுவில் ஆய்வுலகில் முக்கியத்துவம் பெறவில்லை. எனவே, முதல் அனுமானத்தை மட்டும் இவ்விடம் சற்றே விளக்கப்படுத்துவது பயனளிப்பதாக இருக்கும்.

முதல் அனுமானம் பலராலும் பொதுவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாக இருந்த போதிலும் தமிழ் அறிஞர்கள் சிலர் இதனை ஏற்பதாக இல்லை. வட இந்திய ஆய்வாளர்கள் பலரும் கூட இந்தக் கருத்துக்கு ஒத்து வருவதில்லை. இதனை ஒப்புக் கொண்டால் ஆரியரும் இந்தோ-ஆரியரும் இந்திய நாட்டின் வந்தேரிகள் எனும் பட்டியலுக்குள் செல்ல நேரிடும். எனவேதான் இக்கருத்து மறுக்கப்படுவதாகத் தெரிகிறது.

இந்தியாவின் மக்கள் எங்கிருந்து வந்தவர்கள் என்பதை அறிய தாய்வழிப்பெண் வாரிசுகளுக்குக் கடத்தப்படும் X-குரோமோசம்கள்-மரபணு (Matrilineal DNA) ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது. இவ்வாய்வு 12,500 ஆண்டுகளுக்கு முன்பு வரை யாரும் இந்தியாவுக்குள் வந்தேரியவர்கள் இல்லை என்பதாக முடிவு கண்டது. இதன்வழி ஆரியர்கள் வந்தேரிகள் எனுங்கருத்து அடிபட்டுப் போனதாக இந்திய ஆய்வாளர்கள் தொட்டு, அரசியல்வாதிகள் வரை பேசியிருக்கின்றனர் (ஆரியர்கள்வந்தேறிகள்தான்- நிரூபிக்கிறதுமரபணுவியல்ஆய்வு, 2017).

ஆயினும், தற்போது மேற்கொள்ளப்பட்ட புதிய மரபணுவியல் ஆய்வு இதற்கு முற்றிலும் மாறுபட்ட கருத்தை முன்வைத்துள்ளது (Martin Richards, 2017). இந்த ஆய்வின்படி தந்தைவழியாக ஆண்வாரிசுகளுக்குக் கடத்தப்படும் Y-குரோமோசோம்கள்-மரபணு (Patrilineal DNA) தொடர்பாகப் பேராசிரியர் மார்ட்டின் பி.ரிச்சர்ட்ஸ் தலைமையிலான 16 ஆராய்ச்சியாளர்களைக் கொண்ட குழுவினரின் தரவுகளின் அடிப்படையில் பார்க்கும்போது இந்திய மக்களிடையே ஏறத்தாழ கி.மு.2000-ஆம் ஆண்டு வாக்கில் பெருமளவு வெளிக்கலப்பு ஏற்பட்டிருப்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இதன் அடிப்படையில் பார்க்கும்போது ஆரியர்கள் இந்தியத் துணைக்கண்டத்திற்குள் வந்தேறினார்கள் என்ற அனுமானம் கோட்பாடாக நிறுவப்படுவது தவிர்க்கவியலாததாக இருக்கிறது. இதன்வழி சிந்துவெளி நாகரிகம், வெளியில் இருந்து வந்தவர்களால் (ஆரியர்) தாக்குதல்களுக்கு உட்பட்ட்தெனும் கோட்பாடு வலுபெறுகிறது. இதற்கும் மேலாகச் சிந்துவெளி நாகரிகத்தின் தோற்றுனர்கள் வரிசையில் ஆரியர்களுக்கு நிச்சயமாக இடம் இல்லை என்பது உறுதிபடுத்தப்படுகிறது.

**முடிவுரை**

பொதுவில் சிந்துவெளி நாகரிகம் உலகின் சிறந்த சில தொல்நாகரிகங்களுள் ஒன்றாகத் திகழ்கிறது என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. சிந்துவெளி தொல்பொருள் ஆய்வு, தனது ஒட்டுமொத்தப் பங்களிப்பில், இந்திய நாகரிக வரலாற்றைச் சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்தள்ளியது என்பதுதான் முதன்மையான இதன் பங்களிப்பாகும். இந்த நாகரிகத்தைத் தோற்றுவித்தவர்கள் யார் எனும் கேள்விக்கான துள்ளியமான விடையை ஆய்வாளர்கள் இன்னமும் கண்டறியவில்லை. சிந்துவெளியின் எழுத்துகள் திருப்திகரமான முறையிலும், அனைத்துத் தொல்லியல் ஆய்வாளர்களும் ஏற்கும் வகையிலும் அமையாமல் போனது இவ்விசயத்தில் மிகப்பெரிய பின்னடைவாகக் கருதப்படுகிறது. இருப்பினும், சிந்துவெளி நாகரிகத்தைத் தோற்றுவித்தவர்கள் தொல்தமிழ்/ திராவிட முன்னோர்கள்தாம் எனும் அனுமானம் பலவகையிலும் வலுப்பெற்று முதன்மை நிலையில் இருப்பது தெரிகிறது.

**துணைக்குறிப்பு நூல்கள்**

*இராமநாதன், பி. (2000). சிந்துவெளித் தொல் தமிழ் நாகரிகம். சென்னை: சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.*

*சாமி.பி.எல். (1984). தமிழ் நாட்டில் சிந்துவெளி எழுத்தோவியம். சென்னை: சேகர் பதிப்பகம்.*

*மதிவாணன்,இரா. (1991). சிந்துவெளி எழுத்தின் திறவு. சென்னை: கழக வெளியீடு.*

Asko Parpola. (2015). The Roots of Hinduism: The Early Aryans and the Indus Civilization. Oxford: Oxford University Press.

Basham, A., L. (2002). *The Wonder That Was India: A Survey of the History and Culture of the Indian Sub-Continent Before the coming of the Muslims*. 38th Impression. New Delhi: Rupa & Co.

Berriman, A., E. (1953). Historical Metrology, a New Analysis of the Archaeological and the Historical Evidence Relating to Weights and Measures. UK: J.M. Dent and Sons.

Brian Williams. (2016). Daily Life in the Indus Valley Civilization. UK: Raintree.

Bridget Allchin and Raymond Allchin. (1982). *The Rise of Civilization in India and Pakistan.* Cambridge: Cambridge University Press.

Chandra Muzaffar, Che Wan Jasimah Wan Mohd Radzi, Hashim Hj. Musa, Mohd., Zuhdi Marsuki. (2004). "pengenalan Ilmu Ketamadunan", *Tamadun Islam dan Tamadun Asia*. Kuala Lumpur: Penerbitan Universiti Malaya.

Charles S. Prebish, Damien Keown. (2010). *Buddhism: The Ebook: an Online I ntroduction.* USA: Journel of Buddhist Ethics online Books.

Chopra, P., N., et,al (Eds). (2003). *A Comprehensive History of Ancient India.* New Delhi: Sterling Publishers Pvt. Ltd.

Craig Baxter. (1984). *Bangladesh: A New Nation in an Old Setting*. USA: Westview Press

Daniel Michon. (2015). Archaeology and Religion in Early Northwest India: History, Theory, Practice. London: Routledge.

Gregory L. Possehl. (2002). *The Indus Civilization: A Contemporary Perspective*. UK: Rowman Altamira.

Heras, S., J., H., Rev. (1953). *Studies in Proto-Indo-Mediterranean Culture*. (Vol. I). Bombay: Indian Historical Research Institute.

Hunter, G.R. (1934). *The script of Harappa and Mohenjodaro and its connection with other scripts.* London: Kegan Paul.

Jayapalan, N. (2001). *Indian Administration*. (vol.1). New Delhi: Atlantic Publishers & Distributors.

Lionel and Patricia Fanthorpe. (2009). *Secrets of the World's Undiscovered Treasures*. Toronto: Dundurn.

Mainkar, V.,B. (1984). 'Metrology in the Indus Civilization'. Braj Basi Lal, Swarajya Prakash Gupta (Eds), *Frontiers of the Indus Civilization*: Sir Mortimer Wheeler Commemoration Volume. (pp. 144-145). USA: Books & Books.

Majumdar Sumit, K. (2012). India's Late, Late Industrial Revolution: Democratizing Entrepreneurship. Cambridge: Cambridge University Press.

Malti Malik. (2016). *History of India*. Delhi: New Saraswati House Pvt Ltd.

Martin B. Richards, et.al. (2017). "A genetic chronology for the Indian Subcontinent points to heavily sex-biased dispersals" in *BMC Evolutionary Biology.*https://doi.org/10.1186/s12862-017-0936-9.

Mativanan,Ira. (1995). *Indus script among Dravidian speakers*. Madras: Tamil Chanror Peravai Adyar.

Md Usmangani Ansari & Asha Prasad (Eds). (2017). *The History Compendium for IAS Prelims General Studies CSAT Paper 1, UPSC & State PSC* (2nd Ed). New Delhi: Disha Publications.

Milo Kearney. (2004). *The Indian Ocean in World History*. New York: Routledge.

Mugambi, J.N.K. (2015). *A Comparative Study of Religions*. Nairobi: University of Nairobi Press.

Muhammad Asif Malik. (2001). *Ideology and dynamics of politics in Pakistan*. Lahore: Publishers Emporium.

Parpola Asko, et.al.(1969). *"Decipherment of the proto-Dravidian inscriptions of the Indus civilization*. A First Announcement. Progress in the decipherment of the proto-Dravidian Indus script". Copenhagen: The Scandinavian Institute of Asian Studies.

Parpola Asko. (1994). *Deciphering the Indus script*. Cambridge: Cambridge University Press.

Raj Pruthi. (2004). *Prehistory and Harappan Civilization*. New Delhi: APH Publishing.

Raj Rajagopalan. (1992). *The Secrets of Indus Valley*. New Delhi: Children's Book Trust.

Rajakrishnan, R & Rajantheran,M. (1994). *Pengantar Tamadun India*. Kuala Lumpur: Penerbit Fajar Bakti Sdn. Bhd.

Rajantheran, M, Silllalee, K, Viknarasa, R. (2011). *An Introduction to Hinduism, A Religious Text for Hindu Students*. Petaling Jaya: Malaysia Hindu Sangam.

Ranbir Vohra. (2001). *The Making of India: A Historical Survey*. New York: M.E. Sharpe.
Rhona Dick (2005). *The Indus Valley Civilisation.* London: Evans Brothers.
Roberts, J.M. (1992). *History of the world*. USA: Pelican.
Robin Coningham & Ruth Young. (2015). *The Archaeology of South Asia: From the Indus to Asoka, c.6500 BCE-200 CE*. Cambridge: Cambridge University Press.
Sanjay K. Sharma, Rashmi Sanghi. (2012). *Wastewater Reuse and Management*. New York: Springer Science & Business Media.
Sanjeevkumar Tandle. (2014). *Indian History*. Maharastra: Laxmi Book Publications.
Sehdev Sharma & Damanjit Kaur Pahuja. (2017). *Five Great Civilizations of Ancient World*. New Delhi: Educreation Publishing.
Sindhav, Hetalben Dhanabhai. (2016).Indus Valley Civilisation (Harappan Civilisation). *International Journal of Social Impact*, Volume 1, Issue 2 (98-106).
Stephen Blaha. (2002). *The Life Cycle of Civilizations*. USA, Auburn: Pingree-Hill Publishing.
Stuart Piggott. (1950). *Prehistoric India to 1000 B.C.* Penguin Books.
Sudeshna Sengupta. (2009). *History & Civics*. Delhi: Ratna Sagar.
Venkatachalam, K. (1983). *A Study of the Weights and Measures of the Indus Vally Civilizatin* (Seminar Paper). Tanjore: Tamil University.
Wolpert, Stanley. (1991). *An Introduction to India*. California: University of California Press.
Zvelabil, Kamil,.V. (1990). *Dravidian Linguistics, an introduction*. Pondichery: Pondicherry Institute of Linguistics and Culture.

**அகப்பக்கங்கள்**

Balakrishnan, R. 25 September 2019, https://www.bbc.com/tamil/india-49802510
Cristian Violatti, 5 June 2015, https://www.ancient.eu/Indus_Script
http://appiusforum.net/indusvalley.html
http://appiusforum.net/indusvalley.html
http://timesofindia.indiatimes.com/city/madurai/Harappa-like-site-surfaces-in-Tamil Nadu/articleshow/52495353.cms
http://timesofindia.indiatimes.com/city/madurai/Harappa-like-site-surfaces-in-Tamil-Nadu/articleshow/52495353.cms
http://weknownyourdreamz.com/symbols/indian-water-symbols.html
http://www.historytuition.com/indus_valley_civilization/weights_and_measures
http://www.onlinemetals.com/meltpt.cfm
http://www.onlinemetals.com/meltpt.cfm
http://www.vinavu.com/2017/06/23/tamil-translation-of-how-genetics-is-settling-the-aryan-migration
https://prezi.com/w0hy0ltdwdsi/element-of-the-day-tin
https://www.harappa.com/answers/how-common-yogi-figure-possibly-proto-shiva-figure-across-various- indus-sites
https://www.harappa.com/slide/weights-harappa
https://www.pinterest.com/pin/312366924128449005
https://www.pinterest.com/pin/503418064576894083
https://www.youtube.com/watch?v=mxsykkyhc7Q
https://www.youtube.com/watch?v=mxsykkyhc7Q
ஆரியர்கள் வந்தேறிகள்தான் நிரூபிக்கிறதுமரபணுவியல் ஆய்வு -, 2017
http://www.vinavu.com/2017/06/23/tamil-translation-of-how-genetics-is-settling-the-aryan-migration-debate.

## ***பண்டைத் தமிழரும் வாணிகமும்***

*இரா.கிருஷ்ணன்*
*மொழி-மொழியியல் துறை, மலாயாப் பல்கலைக்கழகம்*
krishnan@um.edu.my

***ஆய்வுச்சுருக்கம்***

*மக்கள் வாழ்க்கைக்கு உணவு, உடை போன்றே பொன், வெள்ளி முதலிய செல்வமும் இன்றியமையாதவையாகும். ஒரு நாட்டின் நல்வாழ்விற்கு, பொருள் வளர்ச்சிக்கு அடிப்படையாக விளங்குவன உழவுத்தொழில், கைத்தொழில்கள், நில வழியும் நீர் வழியும் நடத்தப்பெறும் வணிகம் ஆகியன என்று பண்டைத் தமிழர்கள் நன்கு அறிந்து வைத்திருந்தனர்; ஆகையால்தான், நம் முன்னோர் தம் மக்களைத் திரை கடல் ஓடியும் திரவியம் தேடு என்றனர் போலும் எனும் அடிப்படையில், இந்தக் கட்டுரை பண்டைய தமிழ் மக்களின் வணிகம், அவர்கள் பிற நாடுகளுடன் மேற்கொண்ட வாணிகம் முதலியவற்றைப் பற்றி ஆராய்கிறது என விளக்கியுள்ளார். பண்டைத் தமிழர் சமுதாயத்தில் வணிகர் உயர்ந்த இடத்தைப் பெற்றிருந்தது எனவும் சங்ககால வாணிகம் தமிழர்களின் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்தது எனவும், வணிகம் ஐவகை நிலங்களில் வெவ்வேறு தொழில்கள் நடைபெற்றதால் வாணிகமும் வேறுபட்டு இருப்பதைக் காண முடிகிறது எனக் கூறியுள்ளார். வணிகர்களால் தமிழகம் செல்வச் செழிப்புற்று விளங்கியது எனவும், இவர்கள் சான்றோர்கள் கூறியுள்ள அறநெறிகளிலிருந்து தவறாது, இல்லற நெறியிலும் பிறழாது வாழ்ந்தனர். வெளிநாட்டினரோடு சிறப்பாக வாணிகம் செய்தனர் என விளக்கியுள்ளார்.*

***கருச்சொற்கள்**: பண்டைத் தமிழர், பண்டைத் தமிழர் வணிகம், வணிக நாகரிகம், தமிழர் வாழ்வியல்*

### *Abstract*

Just like the food and other props, having and saving gold, silver and other forms of ornaments became important practices for many people. The same is true for the people of ancient Tamilnadu, who believed that agriculture, manufacturing, land and water-based trading were equally important, along the mentioned practices. For the very reason, the author claimed that our forefathers were looking for fortune even by travelling far from their homeland. In this line, the article is aimed at studying the importance of trading in the life of the ancient Tamils. The article explores the business tradition and the nature of the ancient Tamil people and their dealings with foreign nations in particular. As such, it is aimed at tracing the origin and links in the trading ties that have been established with distance nations. The article has concluded that business has occupied important proposition of their life-style and it is intertwined with the life of many Tamils who were divided along the different *tinai* localities. The author also argued that the Tamils were prosperous businessmen, who did not deviate from the morality of the business culture. The same has been practiced among the local traders and foreigners, which placed the Tamils as one of the respected trading community, argued the paper.

Keywords: Ancient Tamils, Ancient Tamil Trading, Tamil Civilization, Tamil Livelihood

***முன்னுரை***

*மக்கள் வாழ்க்கைக்கு உணவு, உடை போன்றே பொன், வெள்ளி முதலிய செல்வமும் இன்றியமையாதவையாகும். ஒரு நாட்டின் நல்வாழ்விற்கு, பொருள் வளர்ச்சிக்கு அடிப்படையாக விளங்குவன உழவுத்தொழில், கைத்தொழில்கள், நில வழியும் நீர் வழியும் நடத்தப்பெறும் வணிகம் ஆகியன என்று பண்டைத் தமிழர்கள் நன்கு அறிந்து வைத்திருந்தனர். ஆகையால்தான், நம் முன்னோர் தம் மக்களைத் திரை கடல் ஓடியும் திரவியம் தேடு என்றனர் போலும். இந்தக் கட்டுரை பண்டைய தமிழ் மக்களின் வணிகம், அவர்கள் பிறநாடுகளுடன் மேற்கொண்ட வாணிகம் முதலியவற்றைப் பற்றி ஆராய்கிறது.*

***சங்க காலத்தில் வாணிகம்***

*ஒரு நாட்டில் நடைபெறும் தொழில்களிலே உழவும் வணிகமுமே தலை சிறந்தன என்பது அறிஞர் கொள்கை. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் இவ்விரு தொழில்களும் ஒருங்கு செழித்திருத்தல் வேண்டும் என்பர். தமிழகமும் சங்க காலத்தில் இவ்விரு தொழிலையும் குறைவறப் பெற்றிருந்தது எனலாம். எடுத்துக்காட்டிற்கு மதுரைக்காஞ்சியில் இடம்பெற்றுள்ள பின்வரும் அடிகளாலும்,*

> *"வியன்மேவன் விழுச்செல்வத்து*
> *இருவகையா னிசைசான்ற*
> *சிறுகுடிப் பெருந்தொழுவர்*

*குடிகெழீஇய நானிலவரோடு" (மதுரைக்காஞ்சி, 120-123)*

*அப்பகுதிக்கு ஆசிரியர் நச்சினார்க்கினியார், "உலகத்துத் தொழில்களில் மேலாகச் சொல்லும் உழவு, வாணிகம் என்கின்ற இரண்டு கூற்றாலே அகலம் பொருந்துதலையுடைய சீரிய செல்வத்தாலே புகழ் நிறைந்த குடிமக்கள் பொருந்தின நான்கு நிலத்து வாழ்வோருடனே" எனக் கூறும் உரையாலும் தமிழ்நாட்டில் இவ்விரு தொழில்களும் பெற்றிருந்த செல்வாக்கினை உணரமுடிகிறது.*

*பண்டைத் தமிழகத்திலே வணிகத்தின் பெருமையை நன்கு உணர்ந்த புலவர்கள் பலர் வணிகத்தைத் தம் தொழிலாகக் கொண்டு வாழ்ந்தனர். கூல வணிகன் (தானிய வணிகன்) சீத்தலைச் சாத்தனார் நெல், புல், வரகு முதலிய தானியங்களை விற்றனர். இளவேட்டனார் என்ற புலவர் ஆடை வியாபாரி. இளநத்தனார் பலசரக்கு வியாபாரம் செய்தவர். (வித்தியானந்தன், 1971:232). இவ்விருவகை வணிகத்தையும் ஊக்குவிப்பதற்காகத் தமிழகத்தை ஆண்ட மூவேந்தர்களும் நல்ல சாலைகளையும் துறைமுகங்களையும் அமைத்துப் பாதுகாத்தனர் என்பதற்குப் பல சங்க பாடல்கள் சான்றுகளாக விளங்குகின்றன.*

*நிலவணிகர் வணிகப் பொருள்களைக் குதிரைகள் மேலும் கோவேறு கழுதைகள் மேலும் ஏற்றிக்கொண்டு கூட்டங்கூட்டமாகக் காட்டு வழியே தமிழகத்தை அடுத்த வடுகநாட்டிற்கும் நெடுந்தொலைவில் இருந்த வடநாட்டிற்கும் காவற்படையுடன் சென்று ஏராளமாய்ப் பொருள் ஈட்டி வந்தனர். அந்த வணிகக் கூட்டங்களுக்குச் சாத்து என்று பெயர். எடுத்துக்காட்டிற்குச் சிலப்பதிகாரத்தில் பின்வரும் அடி கோவலன் வணிகக் கூட்டத்திலிருந்து பிரிந்து தனியாகத் துன்புற்றதைச் சுட்டுகின்றது.*

*"சாத்தோடு போந்து தனித்துய ருழந்தேன்" (சிலப். 11:190)*

*ஐயனார் வணிகச் சாத்துகளின் காவல் தெய்வமாகும். இவரைச் சாத்தன் என்றும் அழைப்பர். அதனால், வணிகர்க்குச் சாத்தன், சாத்துவன் என்னும் பெயர்கள் இயற்பெயராய் வழங்கின. ஐயனார் கோவில்களில், வணிகச் சாத்தைக் குறிக்க மண்ணால் செய்யப்பட்ட குதிரைகள் இருப்பதைக் காணலாம். சாத்தன் என்னும் தெய்வப்பெயர் வடமொழியில் சாஸ்தா எனத் திரியும்.*

**உள்நாட்டு வாணிகம்**

*சங்க காலத்தில் நில வாணிகம் அல்லது உள்நாட்டு வாணிகம் நல்ல வளர்ச்சியுற்றிருந்தது என்பதைச் சங்க பாடல்களில் உய்த்துணர முடிகிறது. சங்க காலத்தில் உள்நாட்டு வணிகப் பொருள்களைக் கொண்டு செல்வதற்கு வண்டிகளும் கழுதைகளும் பயன்படுத்தப்பட்டன. அவரவர் தம்தம் பொருள்களைக் கொடுத்துத் தமக்குத் தேவையான பொருள்களை மாற்றிக் கொண்டனர். பண்டமாற்ற முறையில் வாணிகம் நடந்தது. சிலப்பதிகாரத்தில் கூட கோவலன் கண்ணகியிடம் சிலம்பைப் பெற்றுக் கொண்டதும், "மதுரை சென்று மாறி வருகுவன், மயங்காதொழி" என்று கூறிச்சென்றான்.*

*சங்க காலத்தில் உப்புவணிகம் முக்கியமான ஒன்றாகக் கருதப்பட்டது. உப்புக்குப் பதிலாக நெல்லையும் பிற பொருள்களையும் மாற்றிக் கொள்வார்கள். உப்புமூட்டைகளை ஏற்றிச் செல்லும் எருதுகள் வரிசையாக ஒழுங்காகச் செல்லும் என்பதைச் சிறுபாணாற்று வரிகள் உணர்த்துகின்றன.*

*"நோன்பகட் டுமண ரொழுகையோடு வந்த" (சிறுபாண். 55)*

*உப்பு மூட்டைகளை ஏற்றிவரும் இவ்வண்டிகளை உமணப் பெண்களே ஓட்டிச் செல்வார்கள். இவ்வாறு செல்லும்போது அவ்வண்டிகளின் இரு புறத்திலும் உப்புவணிகர்கள் வண்டியின் அச்சு முறியாமல் பாதுகாத்து நடப்பர்; அவ்வாறு செல்லும்போது, வண்டியில் முன் ஓட்டிய எருதுகள் இளைத்தால் அவற்றின் இடத்திற்குச் சில எருதுகளை மேலதிகமாக உடன்கொண்டு செல்வார்கள். இச்செய்தியை நாம் பெரும்பாணாற்றுப் பாடல்களில் காண முடிகிறது.*

*"முடலை யாக்கை முழுவலி மாக்கள்*
*சிறுதுளைக் கொடுநுக நெறிபட நிரைத்த*
*பெருங்கயிற் றொழுகை மருங்கிற் காப்பச்*
*சில்பத வுணவின் கொள்ளை சாற்றிப்*
*பல்லெருத் துமணர் பதிபோகு நெடுநெறி" (பெரும்பாண்: 61-65)*

*உப்புமூட்டைகளைத் தவிர்த்து மிளகுப் பொதிகளையும் கழுதைகளின் முதுகில் ஏற்றிச் சென்று வணிகம் செய்தனர் பண்டைய தமிழர்கள் என்பதை அறிய முடிகிறது. சுளைகளை உடைய பலாப் பழத்தைப் போன்ற மூட்டைகளைச் சுமக்கும் நேரான காதினையுடைய குறிசுட்ட உரமான முதுகையுடைய கழுதைகளைப் பற்றிப் பெரும்பாணாற்றுப்படை கூறுகிறது.*

*"தடவுநிலைப் பலவின் முழுமுதற் கொண்ட*
*சிறுசுளைப் பெரும்பழங் கடுப்ப மிரியற்*
*புணர்ப்பறை தாங்கிய வடுவாழ் நோன்புறத்*
*தணர்ச்செவிக் கழுதைச் சாத்தொடு வழங்கும்*
*உல்குடைப் பெருவழிக் கவலை காக்கும்" (பெருபாண்: 77-81)*

**பண்டமாற்று வாணிகம்**

*பண்டைய தமிழர்கள் வாழ்க்கையில் பண்டமாற்று வணிக முறையே பெருவழக்கில் இருந்தது. பண்டமாற்று முறையால் பண்டைத் தமிழ் மக்கள் தங்களுக்குத் தேவையான பொருள்களைப் பெற்று வாழ்ந்ததைப் பல தமிழ் இலக்கியச் சான்றுகளிலிருந்து அறியலாம். எடுத்துக்காட்டிற்கு இனிய கரும்பையும் அவலையும் விற்று அவற்றிற்கு மாறாக மானினது தசையும் கள்ளும் பண்டமாற்றாகப் பெற்றதை,*

*"தீங்கரும்போ டவல்வகுத்தோர்*
*மான்குறையொடு மதுமறுகவும்"      (பொருந. 216-17)*

*என்று பொருநராற்றுப்படையிலும், பாலை விற்று உணவினைப் பெற்றதை,*

*"பாலொடு வந்து கூழொடு பெயரும்"      (குறுந். 221:3)*

*என்னும் குறுந்தொகை அடியாலும் அறிய முடிகிறது.*

*சங்க கால மக்கள் நெல்லை அளவாக வைத்தே மற்ற பொருள்களின் மதிப்பை அல்லது விலையைக் கணக்கிட்டனர் என்பதைத் தமிழ் இலக்கியங்களில் காண முடிகிறது. ஏனென்றால், அக்காலத்தில் நெல்லும் உப்பும் ஒரே மதிப்புடையனவாக இருந்தன. "ஊரவரே நெல்லும் உப்பும் விலை ஒப்பாகும்; கொள்வீராக" என்று சேரிகள் தோறும் கூறி விற்கும் அழகிய வளைந்த உந்தியினையும் மூங்கில் போன்ற தோளினையுடைய நெய்தல் நிலப் பெண்ணைப் பற்றி பின்வரும் அகப்பாடல் கூறுகிறது.*

*"நெல்லும் உப்பும் நேரே யூரிர்*
*கொள்ளீ ரோவெனச் சேரிதொறும் நுவலும்"   (அகம்: 290 )*

*மற்றொரு சான்று, படகில் மீன்பிடிக்கச் சென்ற பரதனுக்கு அவன் மகள் உப்புக்கு ஈடாக மாற்றிப் பெற்றுவந்த வெண்ணெற் சோற்றினை அயிலை மீன் குழம்போடு கொடுத்தாள் என்னும் அகப்பாடல் வரிகள் உணர்த்துகின்றன.*

*"நெடுதிமில் தொழிலொடு வைகிய தந்தைக்கு*
*உப்புநொடை நெல்லின்மூரல் வெண்சோறு*
*அயிலை துழந்த அம்புளிச் சொரிந்து*
*கொழுமீன் தடியொடு குறுமகள் கொடுக்கும்" (அகம் 60)*

*அடுத்து, மலைநாட்டு வேட்டுவர்கள் காட்டில் வாழ்பவர்கள். இவர்களிடம் சினம்பொருந்திய நாய்கள் இருக்கும். இவர்கள் தயிர்கொண்டு வந்த முட்டிகளுக்குள் (குடத்திற்குள்) பாண்டிநாட்டு உழத்திகள் பதரைக் களைந்து வெண்மையான குளநெல்லை நிரப்பித் தருவார்கள் எனப் பின்வரும் புறநானுற்றுப் பாடல் அடிகள் கூறுகின்றன.*

*"கானுறை வாழ்க்கைக் கதநாய் வேட்டுவன்*
*மான்றசை சொரிந்த வட்டியு மாய்மகள்*
*தயிர்கொடு வந்த தசும்பு நிறைய*
*ஏரின் வாழ்நர் பேரி லரிவையர்*
*குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்ணல்*
*முகந்தனர் கொடுப்ப வுகந்தனர் பெயரும்"      (புறநா. 33:1-6)*

*இதைப் போலவே, பெருநாராற்றுப்படையில் (214-216) தேனையும் உணவுக்குகந்த கிழங்கு வகைகளையும் மீனின் கொழுப்புக்காக விற்கும் வழக்கம் இருந்ததை அறிய முடிகிறது. மேலும், கள்ளுக்காகவும் மான் இறைச்சிக்காகவும் கரும்பையும் சோற்றையும் கொடுக்கும் வழக்கம் இருந்தது. உமணர்கள் என்பவர்கள் பெரிய வண்டியில் உப்பை மட்டுமின் தம் வீட்டுச் சாமான்களையும் ஏற்றிக்கொண்டு உள்நாட்டுக்குள் நெடுந்தொலைவு சென்று விற்பார்களாம். இவர்களைப் பற்றிய செய்திகள் பெரும்பாணாற்றுப்படையிலும் சிறுபாணாற்றுப்படையிலும் காணலாம். எ.கா.*

*"பல்லெருத் துமணர் பதிபோகு நெடுநெறி" (பெரும்பாண்: 65)*

***சந்தைகள்***

*அடுத்து, சங்க காலத்தில் பல்வேறு பொருள்களை வைத்து வாணிகஞ் செய்யும் கடைத்தெரு அங்காடி எனப்பட்டது. அன்று பெரிய நகரங்களில் அங்காடிகள் இருந்தன. தற்காலத்தில் கூடுகின்ற சந்தைகள் போல சங்க காலத்தில் பகல்நேரத்தில் நாளங்காடிகளும் இரவுநேரங்களில் அல்லங்காடிகளும் கூடின; வியாபாரம் நடைபெற்றது என்று சங்க பாடல்களில் கூறப்பட்டுள்ளது. அந்நாளில் அங்காடிகள் நியமம் என்ற சொல்லாலும் அழைக்கப்பட்டன. விற்பனைக்குரிய கடைகளில் ஒவ்வொரு விற்பனைப் பொருளுக்கும் கொடி நாட்டப் பெற்றிருந்தது. இதனைப் பட்டினப்பாலை,*

*"நறவு நடைக் கொடியோடு*
*பிற பிறவும் நனிவிரைஇப்*
*பல்வேறு உருவிற் பதாகை"      (பட்டினப்பாலை 180-182)*

*எனக் குறிப்பிடுகின்றது.*

*புகார்நகரத்து அங்காடி பற்றி சிலம்பும், மதுரைநகரத்து அங்காடி பற்றி மதுரைக்காஞ்சியும் குறிப்பிடுகின்றன. இந்த அங்காடிகளில் தங்கள் கடைகளில் விற்கப்படும் பொருள்களுக்கு ஏற்ப கொடிகள் பறக்கும். இராக்காலங்களில் வண்ணவிளக்குகள் கொடிகளுக்குப் பதிலாகப் பயன்படுத்தப்பட்டன. மதுரைக்காஞ்சியில் இடம்பெற்றுள்ள பின்வரும் அடிகள் இதற்கு நல்ல சான்றுகளாகும்.*

*"மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூட*
*னாளங் காடி நனந்தலைக் கம்பலை" (மதுரைக்காஞ்சி: 429-330)*

*இவ்வங்காடிகளில் சங்குகளை அறுத்து வளையல் செய்து விற்பவர்களும், மணிகளில் துளையிடுவோர்களும், நல்ல பொன்னைக் கொண்டு ஒளிரும் நகைகள் செய்பவர்களும், பட்டு, பருத்தித் துணிகள், புடவைகள் விற்பவர்களும், செம்பு நிறை கொள்ளுவாரும், பூக்களும் மணப்பொருள்கள் விற்பவர்களும், மண் பொம்மைகள் செய்து விற்பவர்களும், சித்திரம் வரைபவர்களும் இன்னும் பல வணிகர்களும் கூடியிருப்பர் என்று கூறுவர். இங்குக் கள் விற்கும் கடைகள் இருந்தன; அங்கு ஓயாது மீனையும் இறைச்சியையும் அறுத்துப் பொரிக்கும் ஒலி கேட்கும். இந்தக் கடையிலும் கொடி பறக்கும் என்று பட்டினப்பாலை அடிகள் (176-180)) பகர்கின்றன.*

*பண்டைக் காலத்தில் வாணிகம் பொருள் ஈட்டும் நோக்கத்திற்காக மட்டும் நடைபெறவில்லை. மாறாக, நாட்டு மக்களின் நன்மைக்காகவே நடந்தது என்பதைச் சங்க பாடல்கள் வழி அறிய முடிகிறது. பல நிலங்களில் வளரும் பயிரை ஓரிடத்திற்குக் கொண்டு வந்து குவித்து, அவை கிடைக்காத வேறிடங்களுக்கு அனுப்பி வைத்தனர். இதன் வழி நாட்டில் மக்கள் வறுமையின்றி நலமாக வாழ்ந்தனர்.*

***சங்க காலத்தில் வாழ்ந்த வணிகர்கள்***

*மதுரைக்காஞ்சியிலும் பிற சங்கப் பாடல்களின் வழி அறிய வரும் சில வணிகர்கள் பின்வருமாறு:*

*கலிங்கம் பகர்நர் (மது.கா. 512) - புடவைகள் விற்போர்*
*செம்புநிறை கொண்மர் (மது.கா. 514) - செம்பு நிறுக்கப்பட்டதை வாங்குவோர்*
*பூவும் புகையும் ஆயும் மாக்கள் ( மது.கா. 515) - பூக்களையும் சாந்தையும் நன்றாக ஆராய்ந்து விற்பவர்*
*வயமீன் முகந்து கொள்ளை சாற்றிய கொடுமுடி வலைஞர் (மது. கா. 225-26) - மீன் விற்போர்*
*இருங்கழிச் செறுவின் வெள்ளுப்புப் பகர்நர் (மது.கா.1.7) - உப்பு விற்பவர்*
*கள்ளோர் களிநொடை நுவல (மது. 66) - கள் விற்போர்*
*நெல் விற்போர் (மலை. 413) - நெல் விற்போர்*
*அருவிலை நறும்பூ (பட்டி. 198) - மலர் விற்போர்*
*கூலம் விற்போர் (பதி. 13:21) - தானியம் விற்போர்*
*சிறியவும் உளீண்டு வினைஞர்கை வளையே (குறுந். 117) - வளையல் விற்போர்*
*வளைபடு முத்தம் பரதவர் பகரும் (ஐங். 195) - முத்து விற்போர்*
*பகாஅர் பண்டம் நாறும் (அகம்: 81) - பல்வேறு பொருள்கள் விற்போர்*

***வணிகப் பண்பு***

*அக்காலத்து வணிகர்கள் நேர்மையானவர்கள்; உண்மை பேசுபவர்கள், பொய் பேசுவதை நாணுதற்குரியது என்று எண்ணினர். "கொள்வதும் மிகை கொள்ளாது கொடுப்பதும், குறைகொடாது பல் பண்டம் பகர்ந்து ஈதலும் வணிகர்க்கு," என்று தொல்காப்பியர் கூறியதற்கு ஏற்பத் தமக்குக் கிடைக்கும் இலாபத்தை வெளிப்படையாகக் காட்டி, பொருள்களை விற்றார்கள். பிறர் பொருளை மிகுதியாகக் கொள்ளாமலும், தம்முடைய பொருள்களைக் குறைவான விலைக்குக் கொடுக்காமலும் நடுநிலைமையோடு அதாவது. நெடிய நுகத்தில் தைத்த பகலாணி போல உண்மையோடும் நேர்மையோடும் வாணிகம் செய்தனர். இவ்வாறு பண்டைத் தமிழர்கள் அறம் பிறழாமல் தங்கள் செல்வத்தை ஈட்டினர் என்று பட்டினப்பாலை கூறுகின்றது.*

*"நெடுநுகத்துப் பகல்போல*
*நடுவுநின்ற நன்னெஞ்சினோர்*
*வடுவஞ்சி வாய்மொழிந்து*
*தமவும் பிறவு மொப்ப நாடிக்*
*கொள்வதூஉ மிகைகொளாது*
*கொடுப்பதூஉங் குறைகொடாது*
*பல்பண்டம் பகர்ந்துவீசுந்" (பட்டினப்பாலை: 206-212)*

*பண்டைய தமிழர் சமுதாயத்தில் உள்நாட்டு வாணிகர்கள் மிகச் சிறப்பிடம் பெற்றிருந்தனர் எனலாம். தமிழர்களின் வாணிகத்தால் நாடு செழிப்புற்று விளங்கியது. வாணிகம் மிக நேர்மையுடன் மக்கள் நன்மைக்காக நடந்தது என்பதைப் பல சங்க பாடல்கள் நமக்குப் படம் பிடித்துக் காட்டியுள்ளன. தமிழகத்தில் உழவுத்தொழிலுக்கு அடுத்து வாணிகமும் சிறந்து விளங்கியது எனலாம்.*

**கடல் வாணிகம்**

*இதுவரை பண்டைத் தமிழர்கள் செய்த உள்நாட்டு வாணிகத்தைப் பற்றி ஓரளவுக்குத் தெரிந்து கொண்டோம். ஒரு நாடு தன் மக்களுக்கு வேண்டிய அனைத்தையும் கொண்டிருக்க முடியாது. ஆகவே, ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கும், ஓர் ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கும் பொருள் பரிமாற்றம் செய்தது இயல்பாயிற்று. அந்த வகையில், தமிழர்கள் பல்லாயிரம் ஆண்டுளுக்கு முன்னரே கடல்கடந்து சென்று உலகில் பல நாடுகளில் வாணிகம் புரிந்தனர் என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் பல உள்ளன.*

*தமிழர்கள் எகிப்து, பர்சியா, மெசபடோமியா, கிரீஸ், உரோம், பாலஸ்தீனம், சிற்றாசியா முதலிய நாடுகளோடு மிகப் பழங்காலத்தி லிருந்தே வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதற்கு இன்று அந்த நாடுகளில் தோண்டி எடுக்கப்பட்ட புதைபொருள்களே தக்கச் சான்றுகளாகும். இவற்றை உலக வரலாற்று ஆசிரியர்களும் அகழ்வாரய்வாளர்களும் ஒப்புக் கொள்கின்றனர். மேலை நாடுகளுக்கு மட்டும் தமிழர்கள் வாணிபம் செய்யச் செல்லவில்லை; சமத்திரா, ஜாவா, மலேயா, சீனம் முதலான கீழை நாடுகளோடும் பண்டைத் தமிழர்கள் வாணிபத் தொடர்பு கொண்டிருந்தனர்.*

*கடல் வாணிகத்தில் பண்டைத் தமிழர்கள் சிறந்து விளங்கினார்கள். கடல் வாணிகம் செய்வதற்கும், சிறப்புற்று ஓங்குவதற்கும் துணையாக இருந்தவை கப்பல்களும் அவற்றைச் செலுத்தும் மாலுமிகளும் ஆகும். ஆழ்கடலிலே அச்சமின்றிச் செல்வோர்க்குப் "பெருநீரோச்சநர்" என்னும் பட்டம் அளித்துப் பாராட்டினர். பண்டைத் தமிழகத்தில்*

*கடலைப் பிளந்து செல்லும் மாபெரும் கப்பல்கள் செய்ததாகப் பின்வரும் அகநானூறு பாடல் அடிகள் சுட்டுகின்றன. தலைவர் பொருள் ஈட்டுவதற்காகக் கப்பலிலே சென்றுகொண்டிருக்கிறார் என்று தலைவி தோழியிடம் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.*

*உலகுகிளர்ந்த தன்ன உருகெழு வங்கம்*
*புலவுத்திரைப் பெருங்கடல் நீரிடைப் போழ*
*இரவும் எல்லையும் அசைவின் றாகி*
*விரைசெலல் இயற்கை வங்கூ ழாட்டக்*
*கோடுயர் திணிமணல் அகன்துறை நீகான்*
*மாட வொள்ளெரி மருங்கறிந் தொய்ய*
*ஆள்வினைப் பிரிந்த காதலர் ....* *(அகம்.:255)*

*மேலும் கப்பல், வங்கம், கலம், நாவாய், தோணி முதலிய சொற்கள் பண்டைத் தமிழில் இருந்தது வாணிகத்தின் சிறப்பைக் காட்டுகின்றன என்று சொல்லலாம். எடுத்துக்காட்டிற்கு,*

*வளிவழக் கறுத்த வங்கம்* *(புறம். 368:9)*
*கடலே கால் தந்த கலன் எண்ணுவோர்* *(புறம். 386:14)*
*அருவினை நாவாய் தோன்றும் பெருந்துறை* *(நற். 295:6)*
*கலந்தந்த பொற்பரிசம் கழுத்தோணியாற்*
*கரைசேர்க்குந்து* *(புறம். 343:5-6)*

*கலம், வங்கம், நாவாய் என்பன சரக்குகளை ஏற்றி நெடுந்தொலைவு கடலில் செல்வதற்குப் பயன்பட்ட பெரிய மரக்கலங்களாக இருக்கக்கூடும். இவை பெரும்பாலும் ஒரு துறைமுகத்திலிருந்து இன்னொரு துறைமுகத்திற்குப் பொருள்களைக் கொண்டு செல்பவையாக இருக்கும். ஆக, இதிலிருந்து அயல் நாட்டிலிருந்து வரும் கப்பல்கள் அடைவதற்குச் சிறந்த துறைமுகங்களும் பண்டைத் தமிழ்நாட்டில் இருந்திருக்கும் என்று கருதலாம். இலக்கிய வழக்கில் கப்பல்கள் தங்கும் துறைமுகத்தைச் சேர்ப்பு, கொண்கு என்பர்.*

*பண்டைத் தமிழகத்தில் சிறப்புற்று விளங்கிய துறைமுகங்கள் காவிரிப்பூம்பட்டினம் (புகார்), முசிறி, தொண்டி, கொற்கை, வஞ்சி ஆகியவையாகும். கடற்கரை வணிகத்தில் தலையாயது காவிரிப்பூம்பட்டினமாகும். அது காவிரியாறு கடலோடு கலக்குமிடத்தில் அமைந்த துறைமுகம் என்பதால் புகார் என்றும் வழங்கப்பட்டது. காவிரிப்பூம்பட்டினத்தின் கடை மறுகில் பல நாடுகளிலிருந்து வந்த பல்வேறு பொருள்கள் மண்டி கிடந்தன என்று பின்வரும் பட்டினப்பாலை வரிகள் மூலம் அறிய முடிகிறது.*

*னீரின் வந்த நிமிர்பரிப் புரவியுங்*
*காலின் வந்த கருங்கறி மூடையும்*
*வடமலைப் பிறந்த மணியும் பொன்னுங்*
*குடமலைப் பிறந்த வாரமு மகிலுந்*
*தென்கடன் முத்துங் குணகடற் றுகிருங்*
*கங்கை வாரியுங் காவிரிப் பயனு*
*மீழத் துணவுங் காழகத் தாக்கமு*
*மரியவும் பெரியவு நெரிய வீண்டி*
*வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகி* *(பட்டி. 185-193)*

*காவிப்பூம்பட்டினம் போல முசிறி, தொண்டி, கொற்கை முதலிய துறைமுகப் பட்டினங்களும் தமிழகத்தில் சிறப்புற்று விளங்கின. மேலும், கடல் வாணிகத்தின் காரணத்தால், பல்வேறு மொழிகள் பேசும் பல நாட்டுமக்கள் காவாரிப்பூம்பட்டினத்தில் குறைவில்லாத சிறப்போடு இனிது வாழ்ந்தனர் என்பதையும் அறிய முடிகிறது.*

*மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்*
*புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்*
*முட்டாச் சிறப்பிற் பட்டினம்* *(பட்டி. 216-218)*

*அடுத்துப் பார்த்தோமானால், மேற்குக் கடற்கரைப் பகுதியில் சேரநாட்டின் துறைமுகப் பட்டினமாக விளங்கியது முசிறி. இங்கு யவன் வணிகர்கள் சிறந்த வேலைப்பாடமைந்த மரக்கலன்களில் வந்து பொன்னைத் தந்து சேரநாட்டில் விளைந்த மிளகினை வாங்கிச் செல்வார்கள் என்று அகப்பாடல் ஒன்றின் மூலம் அறிய முடிகிறது.*

*யவனர் தந்த வினைமாண் நன்கலம்*
*பொன்னொடு வந்து கறியொடு பெயரும்*
*வளங்கெழு முசிறி* *(அகம். 149-11)*

*கொற்கை தென்பாண்டி நாட்டில் புகழ்மிக்க பழைமையான துறைமுகப் பட்டினமாகும். இத்துறைமுகப் பட்டினத்திற்கு மேலைநாட்டினர் முத்து வாங்குவதற்கு வந்தனர் என்று சங்க இலக்கியங்களின் வழி அறிய முடிகிறது. தமிழகம் முத்தினால் பெரும் பொருள் ஈட்டியதாகவும் கூறுவர். அதற்குச் சான்றாக சில பாடல் வரிகள் பின்வருமாறு:*

*கொற்கை முன்துறை இலங்குமுத்து உறைக்கும்* *(ஐங். 185)*
*முத்துபடு பரப்பின் கொற்கை முன்னுறை* *(நற். 23:5-6)*

சோழநாட்டில் இருந்த துறைமுகம் பொதுகை (பாண்டிச்சேரி) ஆகும். பாண்டிச்சேரிக்கு அருகிலுள்ள அரிக்கமேட்டில் கண்டெடுத்த புதைபொருள்களிலிருந்து கி.பி. முதலாவது நூற்றாண்டில் பொதுகை ஒரு சிறப்பு மிக்க துறைமுகமாக விளங்கியது என்று கூறுவர்.

பொதுவாகப் பண்டைய தமிழகத் துறைமுகங்களில் ஏற்றுமதியும் இறக்குமதியும் ஏராளமாயிருந்தது என்பதனைப் பல சங்க பாடல் அடிகள் தெள்ளத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன. மதுரைக்காஞ்சியில் தமிழகத்திலிருந்து என்னென்ன பொருள்கள் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன என்ற செய்தியையும் அறியலாம்.

முழங்குகடல் தந்த விளங்கதிர் முத்தம்
அரம்போழ்ந் தறுத்த கண்ணேர் இலங்குவளை
பரதர் தந்த பல்வேறு கூலம்
இருங்கழிச் செறுவில் தீம்புளி வெள்ளுப்புப்
பரந்தோங்கு வரைப்பின் வன்கைத் திமிலர்
கொழுமீன் குறைஇய துடிக்கண் துணியல்
விழுமிய நாவாய் பெருநீர் ஓச்சுநர்
நனந்தலைத் தேயத்து நன்கலன் உய்ம்மார்
புணர்ந்துடன் கொணர்ந்த புரவியொ டனைத்தும்
வைகல் தோறும் வழிவழிச் சிறப்ப (ம.காஞ்சி: 315-324)

ஒலிக்கும் கடலில் கிடைக்கும் ஒளியுடைய முத்துக்களும், வாளரத்தால் கீறியறுத்துச் செய்யப்பட்ட அழகிய சங்குவளைகளும், பரதர் தந்த பல்வேறு பாண்டங்களும், கரிய கழியிடத்துப் பாத்தியில் விற்கும் தித்திப்புக் கூட்டிப் பொறித்த புளியோடே ஆண்டு விளையும் வெள்ளிய உப்பும்; மீனின் உணங்கற்றுணிகளும் ஆகியவற்றை ஏற்றுமதி செய்தனர். இவற்றோடு அருங்கலன்களும் ஏற்றுமதி செய்யப்பட்டன.

பண்டைத் தமிழகத்திலிருந்து பல்வகை பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டதுபோல பல்வகை பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும் சங்க பாடல்களிலே காண முடிகிறது. எடுத்துக்காட்டிற்கு,

வேறுபல நாட்டிற் கால்தர வந்த
பலவுறு பண்ணியம் இழிதரு நிலவுமணல் (நற். 31:8-9)

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

யவனர்கள் தமிழகத்திற்கு அன்ன விளக்கினையும், பாவை விளக்கினையும் தந்தனர் என்று பெரும்பாணாற்றுப்படையிலும் நெடுநல்வாடையிலும் காணமுடிகிறது.

............... யவனர்
ஓதிம விளக்கின் உயர்மிசை (பெரும். 315-6)
யவனர் இயற்றிய வினைமாண் பாவை
கையேந்து ஐயகல் (நெடுநல். 101-02)

இவற்றைத் தவிர்த்து இன்னும் பல பொருள்கள் பல நாடுகளிலிருந்து தமிழகத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பழந்தமிழகத்தில் சமன்செய் வாணிகம் (Balanced Trade) நடைபெற்றது எனலாம். ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களும் இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களும் வெவ்வேறானவையாக இருந்தாலும் மதிப்பு ஒன்றாக இருந்தது.

**பண்டைய தமிழர்களின் வெளிநாட்டு வாணிகம்**

தமிழர்களுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் தென்கிழக்காசிய நாடுகளுக்கும் இயேசு பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே வாணிகத் தொடர்பு இருந்ததாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுவர். எகிப்தில் கண்டெடுக்கப்பட்ட கி.மு.15வது நூற்றாண்டுக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் இலவங்கப்பட்டை சேரநாட்டிலிருந்து சென்றதாக இருக்கலாம். இதைத்தவிர, கி.மு. 800க்கு முன்னிருந்தே தமிழகத்திற்கும் மேற்கு ஆசிய நாடுகளுக்கும் கடல் வழி வாணிகம் நடந்ததற்கான சான்றுகள் உள்ளன (கே. கே. பிள்ளை, 1969:30). கி.மு. எட்டாவது நூற்றாண்டில் தென் இந்தியாவிலிருந்து பாலஸ்தீனத்தை ஆண்ட சாலமனுக்கு மூன்றாண்டிற்கு ஒருமுறை பல அரிய பொருள்கள் பரிசுகளாகக் கப்பலில் அனுப்பப்பட்டு வந்தன என்கிறார். தங்கம், வெள்ளி, தந்தம், குரங்குகள், மயில்கள், சந்தனக் கட்டைகள், வைரங்கள் முதலியன இவற்றுள் அடங்கும்.

**தமிழகமும் பாபிலோனும்**

பாபிலோனியாவுடன் தமிழர் செய்த வணிகம் பற்றிய செய்திகளும் சான்றுகளும் உள்ளன. பாபிலோனில் ஆடைகளை விவரிக்கும் பட்டியல் ஒன்றில் 'ஸிந்து' என்ற பெயர் காணப்படுகிறது. வெண் துகிலைக் குறிக்கும் இச்சொல்லானது கன்னடத்திலும் துளுவிலும் வழங்கி வரும் 'சிந்தி' என்ற பழைய திராவிடர் சொல்லிலிருந்து தோன்றியிருக்கலாம். இது தென் இந்தியாவோடு குறிப்பாகத் தமிழரோடு நடத்திய வணிகத் தொடர்பை விளக்குவதற்கு நல்ல சான்றாகும்.

**தமிழகமும் சுமேரியாவும்**

தென்னகத்திற்கும் சுமேரியாவிற்கும் இடையே கி.மு. நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வணிகம் நடைபெற்றது என்று சாய்சு என்பவர் குறிப்பிடுகின்றார். சுமேரிய தலைநகரத்தில் உள்ள சந்திரன் கோயிலின் சிதைவுகளில் சேரநாட்டுத் தேக்கு மரத்துண்டுகள் கிடைத்துள்ளன. இந்த ஊர் கி.மு. மூவாயிரத்தில் அழிந்துவிட்டதால், இம்மரத்துண்டுகள் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று உறுதியாகக் கூறுகின்றனர்.

**தமிழரும் ரோமானியரும்**

*ரோமாபுரியை ஆண்ட அகஸ்டஸ் பேரரசர் காலத்தில் அநேக இந்திய தூதர்கள் நிலமார்க்கமாக ரோமாபுரிக்குச் சென்றதாகக் கூறுவர். கி.மு. முதல் நூற்றாண்டின் இறுதி காலத்தில் பேரரசன் அகஸ்டஸ் தமிழகத்தோடு கொண்டிருந்த வாணிக உறவினைப் பலவகையில் வளர்க்க முயன்றான். இங்குத் தமிழ்நாட்டுத் தூதுவர்கள் நன்கு வரவேற்கப்பட்டனர். இதனால் தமிழர் வாணிகம் அங்கு வளரத் தொடங்கியது.*

*ரோம் நாட்டுமக்கள் நாகரிக வாழ்வில் கொண்ட மோகத்தினால், வகைவகையாக வனப்பூட்டும் வெளிநாட்டு வாணிகப் பொருள்கள் வரம்பின்றி வந்து குவிந்தன. அவற்றிற்கு ஈடாகப் பொருள்கள் தரமுடியாத ஒரு நிலை ஏற்பட்டபோது ஆட்சியாளர்கள் பொற்காசுகள் வழங்கினர். 'அன்று முதல் பொருளுக்குப் பொருள் என்ற பண்டமாற்று முறை மாறிக் காசுக்குப் பொருள் பொருளுக்குக் காசு என்ற புது முறை புகுந்தது'. எண்ணற்ற ரோம நாணயங்கள் வெளிநாடுகளில் சென்று வழங்கலாயின (வி. சி. சசிவல்லி, 1989:220).*

*ரோமுக்குத் தமிழகத்திலிருந்து பொருள் ஏற்றிச் சென்ற வணிகர்கள் தம் கலங்கள் நிறைய பொன்னும் வெள்ளியும் தவிர வேறுபொருள்களைக் கொண்டு வரவில்லை என்பார்கள். ரோம நாட்டு வீதிகளிலே தமிழகத்தின் யானைத் தந்தங்களும், எருமை நெய்யும், பஞ்சும், பட்டும் சென்று குவிந்தன. ரோமப் பேரரசின் பெருவளத்தை வற்றச் செய்தது கொற்கை முத்து என்பர். முத்தை அடுத்துத் தமிழகத்தில் செல்வம் தழைக்கச் செய்த பொருள் மிளகாகும். ரோமாரியர்கள் தமிழகத்தின் மிளகோடு இஞ்சி, இலங்வகம், உறையூர் சேலைகள், பஞ்சு முதலியவற்றை விரும்பி வாங்கினர். இந்திய வணிகத்தினால் ஆண்டுதோறும் ஆறு இலட்சம் பவுனுக்கும்மேல் ரோமிலிருந்து வெளியேறியது எனப் பிளைநி என வரலாற்று ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார் (கே. கே. பிள்ளை 1969:34).*

*பண்டைத் தமிழர் ரோமனியரோடு மேற்கொண்ட வாணிகத்தின் விளைவாய் ரோமானியர்கள் பலர் தமிழகத்திற்கு வந்தனர். வாணிகத்தின் காரணமாக வந்தவர்களுள் சிலர் தமிழத்திலேயே தங்கி வாழ்ந்தனர். மேற்குக் கடற்கரை நகரமான முசுறியில் தங்கள் மன்னன் அகஸ்டசுக்குக் கோயில் ஒன்று கட்டி வழிபட்டனர் என்றும் கூறுவர். ரோமர் குடியிருப்பு மதுரையிலும் இருந்ததாகவும், ரோமனிய நாணயங்கள் புதைபொருள்களில் கிடைத்துள்ளன என்றும் அறிய முடிகிறது.*

**யவனர் வாணிகம்**

*"சங்க காலத்தில் தமிழகத்தோடு வாணிகம் செய்து வந்த ஐரோப்பியர் யவனர் எனப்பட்டனர். இச்சொல் 'ஐ ஓனிஸ்' என்னும் கிரேக்கச் சொல்லிலிருந்து திரிந்து வந்தது. வடமொழிக் கவிதையிற் பெரும்பாலும் கிரேக்கரை உணர்த்தவே இச்சொல் வழங்குகிறது" என்று சு. வித்தியானந்தன் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.*

*"தமிழ் நாட்டில் மலிந்திருந்த யவனர்கள் என்பவர்கள் கிரேக்கம், அரேபியா, எகிப்து முதலிய மேனாடுகளிலிருந்து வந்தவர்களே. இவருள் கிரேக்க யவனர் இங்கு வந்து வியாபாரஞ் செய்தவராயினும், சங்க நாளிலும் அதன் பின்பும் தமிழகத்தில் மிகுதியாகத் தங்கினவர் சோனகர் என்னும் யவனர் ஆவர். வயர்கள் அரேபிய நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று கருதப்படுகிறது. தமிழர்கள் சோனகரை யவனர் என்னும் பெயரால் அழைத்து வந்தனர் என்பது, 'சோனகர் யவனர்' என்னும் திவாகரத்தாலும், பத்துப்பாட்டில் யவனர் என்னுஞ் சொல் வருமிடமெல்லாம் உரையாசிரியர் நச்சினார்க்கினியார் 'சோனகர்' என்றே உரை கூறிப் போதலாலும் விளங்கத் தக்கது", என மு.இராகவையங்கார் தமது ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.*

*யவன நாட்டிலிருந்து இறக்குமதி செய்த பொருள்களில் உயர்வகை மதுவும் ஒன்று என்று புறப்பாடல் வரிகள் சுட்டுகின்றன.*

*யவனர் நன்கலம்தந்த தண்கமழ் தேறல்*
*பொன்செய் புனைகலத் தேந்து நாளும்*
*ஒண்டொடி மகளிர் மடுப்ப (புறம். 56)*

**தமிழக கிரேக்க வாணிகம்**

*வரலாற்று ஆசிரியர் கே.கே. பிள்ளை, தென் இந்தியர்கள் ஏறத்தாழ கி.மு. 500 முதல் ஐரோப்பியர்களோடு வாணிகம் செய்யத் தொடங்கினர் என்று கூறுகிறார். தென்னிந்திய பொருள்களை மேற்கு ஆசியாவிலிருந்து பெற்று, ஐரோப்பாவில் விற்றவர்கள் கிரேக்கர்கள். ஆகையால்தான், சோபாக்கிளிஸ், அரிஸ்டோபேனிஸ் முதலியோரின் நூல்களில் சில பொருள்களின் தமிழ்ப்பெயர்கள் நுழைந்துவிட்டன என்கிறார். எடுத்துக்காட்டிற்கு, 'அரிசி' என்ற தமிழ்ச்சொல் 'ஒராய்ஸ்' என்றும், கருவாப்பட்டை என்ற சொல் 'கார்பியன்' என்றும், இஞ்சிவேர் என்னும் சொல், 'ஜிக்கிபஎரோஸ்' என்றும், வைடூரியம் என்ற சொல், 'பெரியலொஸ்' என்றும் கிரேக்க மொழியில் வழங்குகின்றன.*

**தமிழகமும் எகிப்தும்**

*பன்னெடுங்காலமாக எகிப்துடன் தமிழர்கள் தொடர்பு கொண்டிருந்தனர். "கிரேக்க மக்கள் அநாகரித்தினின்றும் விழித்தெழுவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எகிப்தும் பண்டைய இந்திய நாடுகளும் வாணிகத் தொடர்புகொண்டிருந்தன. பாரசீக வளைகுடாவின் வடபால் இந்நாடுகள் ஒன்றொடொன்று பண்டமாற்றுச் செய்துகொண்டன" என்று டபிள்யூ எச். ஸ்காப் கூறுகிறார் (அ.தட்சிணாமூர்த்தி, 1994:96).*

*எகிப்து நாட்டுமக்களுக்கும் தமிழகத்து வணிகர்களுக்கும் தரகர்களாய் விளங்கியவர்கள் அரேபிய நாட்டு வணிகர்கள் ஆவர். தமிழ் வணிகர்கள் பர்சியா வளைகுடா, ஏடன் நகரத்தோடு நின்றுவிட்டனர். அங்கு அவர்கள் கொண்டு சென்று குவித்த பொருள்களை எகிப்து முதலான நாடுகளுக்குக் கொண்டு சென்றவர்கள் அரேபியர்கள்.*

*பண்டைத் தமிழர்கள் தம் கலங்களில் மிளகு, ஏலம், இலவங்கம், இஞ்சி, அகில், சந்தனம், தந்தம், கருங்காலி, தேக்கு, முத்து, பூனக்கண் முதலான மணிகளையும், நூலும் பட்டும் கலந்து நெய்யப்பட்ட சோழ நாட்டுப் பூந்துகில்களும் முதலியவற்றையும் ஏடன் நாட்டிற்குக் கொண்டு சென்றனர். அரேபிய வணிகர்கள் அவற்றை எகிப்து, சிரியா, ஈராக், சிற்றாசியா முதலான நாடுகளில் விற்று அங்கிருந்து பெற்று வந்த விலையுயர்ந்த ஆடைகள், வேலைப்பாடமைந்த கண்ணாடிப் பொருள்கள், பன்னீர், அத்தர் போன்ற நறுமணப் பொருள்கள், பொன் முதலியவற்றைத் தமிழக வணிகர்களிடம் கொடுப்பர்.*

**தமிழர்களும் அரேபியர்களும்**

*பண்டைக் காலத்தில் தமிழகத்து வணிகர்களின் பொருள்களை ஏடன் நகரில் பெற்று எகிப்து முதலான தொலைநாடுகளுக்குச் சென்று விற்று, பொருள் திரட்டும் தரகர்களாய் விளங்கியவர்கள் அரேபியர்கள். ஆனால், பர்சிய வளைகுடாவை மறந்து எப்போது தமிழகத்து வணிகர்கள் செங்கடல் நோக்கிச் சென்றார்களோ அன்றிலிருந்து அரேபியர் வாணிகம் குன்றத் தொடங்கியது. அரேபியர் இடத்தைக் கிரேக்கர்களும் ரோமனியர்களும் பிடித்து கொண்டனர். மீண்டும் கி.பி. ஏழாம் நூற்றாண்டில்தான் தமிழர், அரேபியர் வாணிகம் தொடர்ந்ததாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுவார்கள்.*

**தமிழகமும் பாலஸ்தீனமும்**

*கி.மு, பத்தாம் நூற்றாண்டில் பாலஸ்தீனத்தை மன்னன் சோலமன் ஆண்டான். இமன்னன் காலத்தில் மூன்றாண்டிற்கு ஒரு முறை இவனுடைய கப்பல்கள் சந்தன மரங்கள், வெள்ளி, பொன், யானைத் தந்தம் முதலிய பொருள்களைக் கொண்டுவந்து குவிக்குமாம் என்று இந்நாட்டு வரலாற்று நூல்கள் கூறுகின்றன. சோலமன் பெற்ற அப்பொருள்கள் தமிழ்நாட்டில் இருந்து கொண்டு செல்லப்பட்டவை என்பதில் சற்றும் ஐயமில்லை. ஏனெனில், அப்பொருள்களின் பெயர்கள் தமிழிலே வழங்கப்பட்டன. 'அகில்' என்ற தமிழ்ச்சொல் 'அகல்' என்றும், 'தோகை' என்ற சொல் 'துக்கி' என்றும் வழங்கப்படுகின்றன. இவை போன்றே இன்னும் பல தமிழ்ச்சொற்கள் பாலஸ்தீன மொழியில் திரிந்து வழங்கி வருகின்றன.*

**தமிழகமும் கீழைநாடுகள் வாணிகமும்**

*மேலை நாட்டாரோடு நடத்திய வணிகம் குன்றிய பிறகு தமிழர்கள் பன்னெடுங்காலமாகக் கீழை நாடுகளான சீனா, மலாயா, ஜாவா, வடபோர்னியோ முதலியவற்றோடு வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். ஏறக்குறைய கி.மு.1000 ஆண்டில் தமிழக வணிகர்கள் சீன நாட்டோடு வாணிகம் செய்தனர். சீனாவில் தமிழகப் பொருள்கள் விற்கப்பட்டன. சீனாவிலிருந்து சீனியும் பட்டும் தமிழகத்துக்குக் கொண்ட வரப்பட்டன. இவற்றைத் தவிர சீனக் களிமண், கண்ணாடி, காக்கை, குடை, சுக்கான், பருத்தி, மிளகு, கற்கண்டு எனப் பலவகை சீனப் பொருள்கள் தமிழகத்தில் விற்கப்பட்டன.*

*கி.பி. ஆரம்ப நூற்றாண்டுகளில் இந்தியாவே ரோமுக்கும் கீழ்நாடுகளுக்கும் தரகராக இருந்து வாணிகம் நடத்தி வந்ததென வரலாற்றுக் குறிப்புகள் காட்டுகின்றன. மலாயாவிற்கும் தமிழகத்திற்கும் நீண்டகால வரலாறு உண்டு. இராசேந்திர சோழன் கடாரத்தை வென்று ஆட்சி அமைத்தான். தமிழகத்திற்கும் மலாயாவிற்கும் நீண்டகால வாணிகத் தொடர்பு இருந்தது.*

**பண்டசாலைகள்**

*துறைமுகங்களில் வாணிகத்தின் காரணமாக ஏற்றுமதி செய்ய வேண்டிய பொருள்களையும், இறக்குமதி செய்யட்ட பொருள்களையும் வைக்கப் பயன்பட்ட இடங்களைப் பண்டசாலைகள் என்பார்கள். பண்டைத் தமிழகத்தில் ஏற்றுமதி, இறக்குமதி நடைபெற்ற துறைமுகங்களில் பண்டசாலைகள் நிறுவப்பட்டிருந்தன என்ற செய்தியைச் சங்க பாடல்களின் அறிய முடிகிறது.*

*பெரும்பாணாற்றுப்படையில் (பெரும். 324), பட்டினத்தின் சிறப்பைக் கூறும்பொழுது பண்டசாலை பற்றிய குறிப்பும் உள்ளது. பால்போலும் வெள்ளிய நிறத்தினையும், தலையாட்டத்தினையும் உடைய குதிரைகளுடனே வடதிசைக்கண் உள்ள நுகரப்படும் பொருள்களைக் கொண்டு வந்து தருகின்ற மரக்கலங்கள் சூழ்ந்து கிடக்கின்ற கடற்பக்கத்தினையும், வணிகர் வாழும் பற்பல தெருக்களையும் தொழில் செய்வோரால் காக்கப்படும் மிகவும் உயர்ந்த பண்டசாலைகளையும் உடைய பட்டினம் என்ற கருத்தமைய அமைந்துள்ளது.*

*இவ்வாறே, பட்டினப்பாலையில் சிறந்த காவலையுடைய பண்டசாலையைப் பற்றி பாடல் ஒன்று உள்ளது. இப்பாடல், மேலை நாடுகளிலிருந்து கப்பல் மூலமாகக் கொண்டுவரப்படும் பல பண்டங்கள் காவிரிப்பூம்பட்டினத்தில் இறக்குமதி செய்யப்பட்டன. அதே வேளையில், பல பண்டங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. வெளி அனுப்பப் பண்டசாலையில் குவிந்து கிடக்கும் மூட்டைகள் மேல் சோழ மன்னனுடைய புலி முத்திரை இடம்பெற்ற பண்டங்கள்தான் வெளியேற முடியும் என்று கூறுகிறது. அப்பாடல் பின்வருமாறு:*

> *நீரினின்று நிலத்தேறவும்*
> *நிலத்தினின்று நீர்பரப்பவும்*
> *அளந்தறியாப் பலபண்டம்*
> *வரம்பறியாமை வந்தீண்டி*
> *அருங்கடிப் பெருங்காப்பின்*
> *வலியுடை வல்லணங்கினோன்*
> *புலிபொறித்துப் புறம்போக்கி*
> *மதிநிறைந்த மலிபண்டம் (பட்டி: 129-36)*

*இதே போல, பண்டைத் தமிழகத்தில் பண்டசாலை இருந்ததற்கான குறிப்பு, பதித்துப்பற்றுப் பாடலில் காணப்படுகிறது. 'இனிதாக ஒலித்தலைச் செய்யும் அலைகள் ஒலி செய்கின்ற கடல் வழியாக வந்த நல்ல கலன்களாகிய செல்வம் தொகுக்கப்பெற்றுக் கிடக்கும் பண்டசாலைகள் பொருந்திய நல்லநாடு' என வருமிடத்தில்,*

> *இன்னிசைப் புணரி இரங்கும் பௌவத்து*
> *நன்கல வெறுக்கை துஞ்சும் பந்தர் (பதி.55)*

*எனப்பட்டது. பந்தர் என்ற சொல் இங்குப் பண்டசாலையைக் குறித்தது என்று அறிஞர்கள் கூறுவர்.*

*தற்காலத்தில் இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் உள்நாட்டில் விற்கப்படும் பொருகள்களுக்கு வரி வசூலிப்பது போல பண்டைத் தமிழகத்திலும் சுங்கங்கொண்ட வழக்கம் இருந்ததைச் சங்கப்பாடல்களில் காண முடிகிறது. சுங்கம் என்பது 'உல்கு' என்ற சொல்லால் குறிப்பிடப்பட்டுள்ளது, நாம் இப்பொழுது அதை 'வரி' என்கிறோம்.*

**முடிவுரை**

*பண்டைத் தமிழர் சமுதாயத்தில் வணிகர் உயர்ந்த இடத்தைப் பெற்றிருந்தனர். சங்ககால வாணிகம் தமிழர்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்தது எனலாம். ஐவகை நிலங்களில் வெவ்வேறு தொழில்கள் நடைபெற்றதால் வாணிகமும் வேறுபட்டு இருப்பதைக் காண முடிகிறது. வணிகர்களால் தமிழகம் செல்வச் செழிப்புற்று விளங்கியது எனலாம். இவர்கள் சான்றோர்கள் கூறியுள்ள அறநெறிகளிலிருந்து தவறாது, இல்லற நெறியிலும் பிறழாது வாழ்ந்தனர். வெளிநாட்டினரோடு சிறப்பாக வாணிகம் செய்தனர்.*

***Refeences***

*இலக்குவனார். சி. 2000. தொல்காப்பிய ஆராய்ச்சி. சென்னை: அபிராமி பதிப்பகம்.*
*காசி விசுவநாதன் சட்டியார். மு 1957. அகநானூறு. சென்னை: சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.*
*சசிவல்லி. வி. சி. 1989. பண்டைத் தமிழர் தொழில்கள். சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.*
*சாமிநாதய்யர். உ. வே. (தொகுப்பாசிரியர்). 1986. பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியருரையும். தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம்.*
*சிதம்பரனார். சாமி. 1956. பத்துப் பாட்டும் பண்டைத் தமிழரும். சென்னை: ஸ்டார் பிரசுரம்.*
*சிதம்பரனார். சாமி. 1967. பட்டனப் பாலை - ஆராய்ச்சி உரை. சென்னை: இலக்கிய நிலையம்*
*சிதம்பரனார். சாமி. 2002. தொல்காப்பியத் தமிழர். சென்னை: நியூ செஞ்சரி.*
*சோமசுந்தரனார். வே. 1991. புறநானறு. சென்னை: கழக வளியீடு.*
*தட்சிணாமூர்த்தி. அ. 1994.தமிழர் நாகரிகமும் பண்பாடும். சென்னை: ஐந்திணைப் பதிப்பகம்.*
*தண்டாயுதம். இரா. 1978. சங்க இலக்கியம்.சென்னை: தமிழூப் புத்தகாலயம்.*
*துரை அரங்கசாமி. மொ. அ. 1959. பண்டைத் தமிழ் நேறி. சென்னை: பழனியப்பா பிரதர்ஸ்*
*துரைசாமிப் பிள்ளை. சு. 1903. புறநானாறு. சென்னை:சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.*
*பாலசுப்பிரமணியன். மு. பி. 1994. இலக்கிய நெஞ்சம். சென்னை: பாரி நிலையம்.*
*பாலசுப்பிரமணியன். சி. 1994. கட்டுரை வளம். சென்னை: பாரி நிலையம்*
*பிள்ளை. கே. கே. 1969. தென்னிந்திய வரலாறு. சென்னை:பழனியப்பா பிரதர்ஸ்.*
*மகாலிங்கம். நா & இராமலிங்கம் பகீரதன். மு. 1994. தொல்காப்பியம். சென்னை: இராமலிங்க பணி மன்றம்.*
*வரதராசன். மு. 1989. தமிழ் இலக்கிய வரலாறு. புதுடெல்லி, சாகித்தய அககாதெமி.*
*வித்தியானந்தன். சு. 1971. தமிழர் சால்பு. சென்னை: பாரி புத்தகப் பண்ணை.*
*விமலானந்தம். மது. ச. 2002. தமிழ் இலக்கிய வரலாறு. சென்னை: அபிராமி பதிப்பகம்.*

# வினைச்சொற்கள் கற்றல்-கற்பிப்பதில் பின்னோக்குப் போதனைமுறை உத்தி

மோகன தாஸ் ராமசாமி
இந்திய ஆய்வியல் துறை, மலாயாப் பல்கலைக்கழகம்
rmohana_dass@um.edu.my

**ஆய்வுச் சுருக்கம்**

*தமிழ் இலக்கணக் கற்றல் கற்பித்தல் என்பது கடுமையான ஒன்று என்பது பலரது பார்வை. அதிலும் வினைச்சொற்களைக் கற்பிப்பது சற்றுக் கடினம். இந்தக் கடினத்துவம் மாணவரது மனதில் இருப்பினும், போதனையாளர்களின் மனதில் ஆழமாகவே உள்ளது. இலக்கணம் என்பது எட்டிக்காய் உண்பது எனும் எண்ணத்தில் பார்க்கும் ஒரு சில போதனையாளர்களின் பார்வை இப்பாடப் போதனையினை மேலும் சிரமமாக்குகின்றது. மலேசியா போன்ற நாடுகளில் தமிழ் மொழியினை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்படும் வேளையில், இதன் சிரமநிலை மேலும் பன்மடங்கு ஆகுகின்றது. போதிய ஆழ்நிலை இலக்கண ஆளுமையின்மையும் இந்நிலையினை மேலும் சிரமாமாக்குகின்றது. இத்தகைய சூழலில் தமிழ் இலக்கணத்தில் குறிப்பாக சிரமமான பிரிவாகக் கருதப்படும் வினைச்சொற்களை அறிமுகம் செய்து அவற்றின் இலக்கணக் குறிப்புகளை இலகுவாக விளக்கிடும் ஒரு முறைமையினை, குறிப்பாக உயர் இடைநிலை மாணவர்களுக்கு அறிமுகம் செய்யும் நோக்கினில் இக்கட்டுரை வடிவமைக்கப்பட்டுள்ளது. வினைச்சொற்களை வேர், அடி, சொல், தொகை, தொடர் எனப் பிரித்துப் போதனை செய்யாது, எதிர்நிலை முறையில், பின்வெட்டாக்க முறையினில் போதிப்பதை இம்முறைமை அறிமுகம் செய்கின்றது. இந்தப் புதுமை முயற்சி ஆசிரியர்களுக்குப் பேருதவியாக அமையும் எனலாம்.*

***கருச்சொற்கள்**: தமிழ் வினைச்சொற்கள் கற்பித்தல், பின்வடிவாகம் உத்தி, பின்னோக்குப் போதனாமுறை உத்தி, தமிழ் வினைச்சொற்கள், தமிழ் இலக்கணம்,*

**Abstract**

Teaching Tamil grammar is a tough exercise for many educators. Teaching verbs and its extension components were even difficult, as some instructors usually found it hard to master and teach the verbal extension and its system attractively. The incapability as this made the ways of understanding them properly also hard among the student as well. Teachers who use the old taxonomy methods as the best tools to teach the grammar in their pedagogy found that there were so little rooms were available for innovations. As an alternative, the author has offered an unconventional method so-called, Back-formations in teaching the system of verb and its extension in Tamil. The article is aimed at introducing verbs and verbal system teaching and learning, which are considered to be a particularly difficult category in Tamil grammar, using an innovative strategy. The approach has been proposed after having tested the strategy and its effectiveness among the students at higher educational levels (HSC and University). The strategy is believed to ease the ways of explaining the grammatical features coherently to the upper secondary students as well. The approach does not promote teaching the division of verbs from the roots, feet, words, and so on as highlighted by the traditional grammarians; alternatively it promotes a reversal form of teaching. This innovation is expected to ease and favor the teaching activities to a great level.

**Keywords**: Teaching Tamil Verbs, Backformation Strategy, Reversal Strategy, Tamil Verbs, Tamil Grammar.

***முன்னுரை***

*செம்மொழி எனும் தகுதியை முழுமையாகப் பெற்ற ஒரு மொழிக்கு இருக்க வேண்டிய அனைத்துத் தகுதிகளையும் முழுமயாகப் பெற்ற ஒரு மொழியாக அமைந்திருக்கும் மொழிகளுள் ஒன்று தமிழ் மொழி என்றும், அதுவே அனைத்துத் தகுதிகளையும் பெற்ற ஒரே உலகச் செம்மொழி என்றும் மனவை முஸ்தபா கூறுவார் (2007). செம்மொழி எனத் தகுதிபெற்ற உலக மொழிகளுள் தமிழ் மொழிக்கென்று வகுத்துக் கொடுக்கப்பட்ட நனிச்சிறந்த இலக்கண முறைமை உண்டு. தொல்காப்பியம் இதனை நன்முறையில் எடுத்துவடிவமாகக் கொடுக்கும் முன்னரே, அகத்தியம் எனும் முந்துநூல் இதனை அறிமுகம் செய்ததாக முன்னவர் கூறுவர்; எனினும், அந்நூல் கிடைக்காத பட்சத்தில், தொல்காப்பியமே முதனூலாகக் கொண்டு இன்றைய தமிழ் இலக்கண நூல்கள் வளர்ந்து வருவதாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. இந்நூல்கள் வழங்கியிருக்கும் இலக்கணச் செய்திகள் தமிழ் மொழியின் பண்டைய செழுமையினையும் வளர்ச்சியினையும் நன்கு தெளிவுசெய்யும்.*

*தமிழ் இலக்கணக் கற்றல் கற்பித்தல் என்பது கடுமையான ஒன்று என்பது பலரது பார்வை. அதிலும் வினைச்சொற்களைக் கற்பிப்பது சற்றுக் கடினம். இந்தக் கடினத்துவம் மாணவரது மனதில் இருப்பினும், போதனையாளர்களின் மனதில் ஆழமாகவே உள்ளது. இலக்கணம் என்பது எட்டிக்காய் உண்பது எனும் எண்ணத்தில் பார்க்கும் ஒரு சில போதனையாளர்களின் பார்வை இப்பாடப் போதனையினை மேலும் சிரமமாக்குகின்றது. மலேசியா போன்ற நாடுகளில் தமிழ் மொழியினை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்படும் வேளையில், இதன் சிரமநிலை மேலும்*

பன்மடங்கு ஆகுகின்றது. போதிய ஆழ்நிலை இலக்கண ஆளுமையின்மையும் இந்நிலையினை மேலும் சிரமாமாக்குகின்றது.

இத்தகையச் சூழலில் தமிழ் இலக்கணத்தில் குறிப்பாக சிரமமான பிரிவாகக் கருதப்படும் வினைச்சொற்களை அறிமுகம் செய்து, அவற்றின் இலக்கணக் குறிப்புகளை இலகுவாக விளக்கிடும் ஒரு முறைமையினை, குறிப்பாக உயர் இடைநிலை மாணவர்களுக்கு அறிமுகம் செய்யும் நோக்கினில் இக்கட்டுரை வடவமைக்கப்பட்டுள்ளது. வினைச்சொற்களை வேர், அடி, சொல், தொகை, தொடர் எனப் பிரித்துப் போதனை செய்யாது, எதிர்நிலை முறையில், பின்வெட்டாக்க முறையினில் போதிப்பதை இம்முறைமை அறிமுகம் செய்கின்றது.

உதாரணமான, ஒரு வினைச்சொல்லினை அறிமுகம் செய்யுங்கால், பொதுவாக பின்வரும் உத்தி முறையே பெரும்பாலும் கையாளப்படுகின்றது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) | முதல் படிநிலை | : | வேர்ச்சொல் அறிமுகம் | - | படி |
| | இரண்டாம் படிநிலை | : | அடிச்சொல் அறிமுகம் | - | படித்தல் |
| | மூன்றாம் படிநிலை | : | கூட்டுச்சொல் அறிமுகம் | - | படித்துணர் |
| | நான்காம் படிநிலை | : | எச்சம் அறிமுகம் | - | படிக்க/படிக்கா |
| | ஐந்தாம் படிநிலை : | | வினைமுற்று அறிமுகம் | - | படித்தான் |
| | ஆறாம் படிநிலை | : | பயன்பாட்டு வினைமுற்றுகள் அறிமுகம் - அவன் பாடம் படித்தான். (செய்வினை) | | |

இவ்வாய்வுக் கட்டுரை இம்முறைமையினை மாற்றி,

| | | | | |
|---|---|---|---|---|
| 2) | முதல் (ஐந்தாம்) படிநிலை | : வினைமுற்று அறிமுகம் | - படித்தான் |
| | இரண்டாம் (நான்காம்) படிநிலை | : எச்சம் அறிமுகம் - படிக்க/படிக்கா | |
| | மூன்றாம் படிநிலை | : கூட்டுச்சொல் அறிமுகம்- படித்துணர் | |
| | நான்காம் (இரண்டாம்) படிநிலை | : அடிச்சொல் அறிமுகம் | - படித்தல் |
| | ஐந்தாம் (முதல்) படிநிலை | : வேர்ச்சொல் அறிமுகம் | - படி |
| | ஆறாம் படிநிலை | : பயன்பாட்டு வினைமுற்றுகள் அறிமுகம் - அவன் பாடம் படித்தான். (செய்வினை) | |

இதன் வழி மாணவர்கள் ஒரு வினைச்சொல்லுக்குள் அடங்கி இருக்கும் ஏனைய உபரி வினைச்சொற்களை உணர்ந்து கொள்ள வழிசெய்யும். இந்தப் பின்வெட்டாக்கப் போதனா முறையினைக் காண்பதற்கு முன்பாக, இதன் தேவையினையும், தமிழ் மொழியின் சொல்லாக்க முறையினைச் சற்றுக் கண்ணோட்டம் இடுவது நன்மை பயக்கும்.

**இலக்கணம் கற்றல் கற்பித்தல் – முந்தைய ஆய்வுகளின் பார்வை**

இலக்கணம் கற்றல் கற்பித்தல் இலக்கியம் கற்பித்தலைவிட சற்றுக் கடினமானது. இலக்கியக் கூறுகளை உள்வாங்கிக் கொண்டு, அதனைச் சான்றுகளோடு ஒப்பிப்பதற்கும், இலக்கண விதிகளைத் தடம்பிறழாது உள்வாங்கிக் கொண்டு, அவற்றைச் சரியான இடத்தில் சரியான விளக்கத்தோடு பயன்படுத்திக் காட்டுவது சற்றுக் கடினமான நிலையே ஆகும். அவ்வகையில் மலேசியக் கல்விச்சூழல் நிலையில் மொழி-இலக்கணம் சார்ந்த ஆய்வுகள் கூறும் அடிப்படைச் செய்திகளைச் சற்றுக் காண்போம்.

மலேசியக் கல்விச் சூழலில் இலக்கணம் முழுமையான இலக்கணப் பாடமாக வழங்கப்படவில்லை. ஆரம்பக் கல்வி நிலையிலும், இடைநிலைப்பள்ளிக் கல்வி நிலையிலும் இதுவே நிலை. எனினும், இலக்கணக் கூறுகள் சிதறல்களாக, சொல்லியல், உருபனியல், தொடரியல், சந்தி இலக்கணம், யாப்பிலக்கணம் (உறுப்பியல் கூறுகள்) என பாடத்திட்டங்களில் படர்ந்து கிடக்கின்றன (Pusat Perkembangan Kurikulum, KPM, 2002). இக்கூறுகளை மாணவர்கள் சரிவர உள்வாங்கிக் கொள்ள வேண்டுமெனக் கருவூளப் பாடத்திட்டம் எதிர்பார்க்கின்றது.

நமக்குக் கிடைக்கப்பெற்ற சில ஆய்வுகள் மாணவர்களின் இலக்கணக் கற்றல் நிலையினையும் அதனை உள்வாங்கிக் கொள்ளும் திறன்களைப் பற்றியும் ஓரளவு விளக்கங்களை வழங்குகின்றன. ராஜேந்திரம் (2018) தனது ஆய்வின் முடிபாக, மாணவர்கள் சொற்களைப் பற்றிய இலக்கணச் செய்திகளை அறிந்து உணர்ந்துகொள்வதில் இடையூறு கொள்கின்றனர் என விளக்கியுள்ளார். அவரது மற்றொரு ஆய்வானது வினைச்சொற்களை, குறிப்பாக, உணர்ந்துகொள்வதில் சிரமம் அடைகின்றனர் என எடுத்துக்காட்டியுள்ளார். இதே நிலைப்பாட்டினையே வீரப்பன், பா. (2004), அமுதன் (2006), காந்திமதிலட்சுமி, ந. (2007), விசுவநாதம், செ. (2007), அப்பாசாமி (2012) ஆகிய ஆய்வுகளும் நமக்கு விளக்குகின்றன. பெயர்ச்சொற்களை விளக்கும்போது கிடைக்கும் இலகுத்தன்மையினை வினைச்சொற்களைப் பார்க்கும்போது கிடைக்கப் பெறுவதில்லை. வேர்ச்சொல், அடிச்சொல், கிளைச்சொல் என வினைச்சொற்களின் பகுப்புகள் பலவாறாக விரிந்து நிற்க, எச்சங்களின் உட்பிரிவும் பலவாக மாறுபட்டு நிற்பதே இதற்குக் காரணங்களாக அமைகின்றன என்பது இவர்களது துணிபு. தமிழ் மொழி-இலக்கணக் கற்றல் கற்பித்தலில் வினைச்சொற்கள் மிக முக்கிய இடத்தினைப் பெற்றிருப்பதனால், வினைச்சொற்களை இலகுவாகக் கற்பிக்க ஏதுசெய்வது இலக்கணப் போதனையாளர்களின் கடைமையாகும் என்பதும் ஆய்வாளர்களின் எதிர்பார்ப்பாக அமைகின்றது எனலாம்.

வினைச்சொற்களை இலகுவாகக் கற்பதில் சில இடையூறுகள் இருப்பதையும் சில ஆய்வாளர்கள் கண்டுணர்ந்து விளக்கியுள்ளர். அந்த வரிசையில் தமிழ் மொழி, மலாய் மொழி மற்றும் பிறமொழிகளிலும் ஆங்கிலம் என எம்மொழிக்கும் அடிப்படையாக அமைவது கற்றலில் பயன்படுத்தப்படும் ஏற்புடைமை இல்லாக் கற்பித்தல் முறைமையே ஆகும் எனவும் கண்டறியப்பட்டுள்ளது. தமிழ் மொழியில் காந்திமதிலட்சுமி, 2006,; வேதாநாயகி 2015,; பவானி, 2019), மலாய் மொழியில் (Sarinah 2014) berkesan (Abdul Rasid, 2012) என இந்த வரிசையை நீட்டித்துச் செல்லலாம். ஆங்கில மொழியில் காணப்படும் வினைச்சொற்கள் தொடர்பான இலகுத்தன்மை, அம்மொழியில் இத்தகைய ஆய்வுகளுக்கு அதிகமாக இடம் கொடுக்கவில்லை எனத் தோன்றுகின்றது. தமிழ் மொழியில் விதிவரும் முறை மற்றும் விதிவிளக்க முறை (கணபதி, 2007) அடிப்படையிலான இலக்கணப் போதனாமுறைமை, தொல்காப்பியம் மற்றும் நன்னூல் மரபிலக்கணக்கணங்களை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படுவதாலும் வினைச்சொற்களைக் கற்பிப்பதில் ஏற்படும் சிக்கல்களுக்கு அடிப்படையாக விளங்கலாம். எனவே, ஒரு மாறுபட்ட அமைப்புமுறையில் வினைச்சொற்களைக்

கற்பிக்கும் முறைமையை அணுக வேண்டிய கட்டாயம் தமிழ் மொழிக்கு அவசியம் எனும் அடிப்படையிலேயே இக்கட்டுரை உருவாக்கம் கண்டுள்ளது.

இக்கட்டுரை முன்வைக்கும் முறைமைக்கும் ஜேக்குவஸ் டெரிட்டா *(1930-2014)* முன்வைக்கும் பின்வடிவாக்கம் எனும் கோட்பாட்டு அடிப்படைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இலக்கியப் படைப்புகளை மாறுபட்ட கோணத்தில் கற்றுணரும் வண்ணம், அதன் கருத்துகளைப் பின்வடிவாக்க அடிப்படையில் உணர்ந்துகொள்வது நன்மையைப் பயக்கும் என்பது டெரிட்டாவின் வாதம். இதன்வழி விடுபட்ட கருத்துகளையும், அவற்றின் கருத்து முழுமையினையும் நிறைவாக அறிய வாய்ப்புள்ளது. இதன் அடிப்படையில், அதன் பொருண்மை அடிப்படையினை உள்வாங்கிக் கொண்டு வடிவமைக்கப்பட்ட புத்தாக்க முயற்சியே, இக்கட்டுரை முன்வைகும் பின்வடிவாக்க முறைமை. அதன் அடிபடையில் வினைச்சொற்களை இலகுவாக அறிமுகம் செய்து மாணவர்களுக்கு விளக்கும் பணியினைச் செவ்னே ஆற்றலாம் என்பது இம்முறைமையின் எதிர்பார்ப்பு.

இதனைப் பின்வரும் எடுத்துக்காட்டுகளின் அடிப்படையில் கண்டுகொள்ளலாம். உதாரணமாக, *சென்றான்* எனும் ஒரு வினைமுற்றினை எடுத்துக் கொள்வோம். அதனை அடிப்படையாகக் கொண்டும் பின்வடிவாக்கம் எவ்வாறு முழுமைபெறுகின்றது என்பதனைக் காண்போம்.

எடுத்துக்காட்டு:

படிநிலை 1 - வென்றான் - வினைமுற்று - [பகுதி – சந்தி - இடைநிலை – சாரியை –விகுதி] முழுமைச்சொல்
படிநிலை 2 - வென்ற - வினையெச்சம் - [பகுதி – சந்தி - இடைநிலை – சாரியை] விகுதி அற்றது
படிநிலை 3 - வெல் - வினையடி [பகுதி] சந்தி - இடைநிலை – சாரியை – விகுதி அற்றது
படிநிலை 4 - வெல்க - வியங்கோள் – 'க' விகுதி பெற்றது [விதித்தல் வியங்கோள் வினைமுற்று]
படிநிலை 5 - வெல்லுங்கள் – உங்கள் – பன்மை விகுதி பெற்றது [ஏவல்/கட்டளை– வினைமுற்று]
படிநிலை 6 - மேற்காணும் அனைத்தும் வாக்கியச் சூழலில் வரும்போது, பயன்பாட்டு வினைச்சொற்களாக பிறவகைப் பெயர்களைப் பெறுகின்றன; உடன்பாட்டுவினை-எதிர்மறை வினை; தன்வினை-பிறவினை; செய்வினை-செயப்பாட்டுவினை
படிநிலை 7 – பிறவகை வினைச் சொற்கள் – குறைவினைகள், கூட்டுவினைகள் மற்றும் பிற

இம்முறைமை முன்னம் அறிந்த தகவல்களைப் பயன்படுத்திக் கற்கும் முறைமையினை முன்னிருத்துவதால் இம்முறைமை, மேல்நிலைக்கல்விப் பருவ மாணவர்களுக்கே ஏற்புடையதாக அமைகின்றது. வினைச்சொற்களைப் பற்றிய அடிப்படைத் தகவல்களை அறிந்திராக் கீழ்நிலைக் கல்விப்பருவ மாணவர்கள் இக்கொள்கையின் வழி கற்றுக் கொள்வதில் சிரமம் அடைவர்.

**தமிழ் மொழியில் சொல்லாக்க முறைமை**
தமிழ் மொழியில் காணப்படும் சொல்லாக்க முறையினைப் பின்வரும் வழிகளில் சுருக்கமாக விளக்கிச் செல்லலாம். அடிப்படையில்,

3) எழுத்து → சொல் → தொடர் → வாக்கியம்

எனும் முறைமை, தமிழ் மொழியில் காணப்படும் சொற்களின் அமைப்பு முறைக்கும் அடித்தளம் அமைப்பது, எழுத்து எனக் குறிப்பிடுகின்றது. அவ்வகையில் எழுத்துகளையும் பின்வருமாறு தமிழ் இலக்கணம் பிரித்துக் காட்டுவது நாம் அறிந்த ஒன்றே.

4) எழுத்து → உயிர் + மெய் + உயிர்மெய்

இந்த இரு அடிப்படை ஒலிகளின் கூட்டமைப்பில்தான் தமிழ் மொழியில் காணப்படும் அனைத்துச் சொற்கள் எழுத்தமைவு பெறுகின்றன. அவ்வாறு பெறப்படும் சொற்களைக் கீழ்க்காணும் முறைகளில் பகுப்பாய்வு செய்து பார்க்கலாம்.

5) சொல் → ஓரெழுத்து – ஒரு சொல்
→ ஈரெழுத்துச் சொல்
→ தொடர்மொழி
➨ சொல் → பெயர் – வினை – இடை - உரி

இவ்வாறு நால்வகைச் சொற்களாகப் பிரிந்து கிடக்கும் சொற்களுள், வினைச்சொற்களைப் பற்றிய அடிப்படைகளை உணர்ந்து, அவற்றை உள்வாங்கிக் கொண்டு, எளிதாகப் போதிக்கும் ஒரு வழிமுறையினை முன்வைப்பது இக்கட்டுரையில் அடிப்படை நோக்கம்.

மேற்படிப் பகுப்பின் உட்சாரத்தினை ஒரு ஹைக்கூகவிதையின் துணையைக் கொண்டு, ஆராய்ந்தறிவோம்.

6) இரையைத் தூவினேன்
இதுவும் ஒருவகை பாவம்தான்
கோழிகளுக்குள் சண்டை

இக்கவிதையில் இடம்பெற்றுள்ள ஏழு சொற்களையும் முறையே ஆராய்வோம்.

| | | |
|---|---|---|
| 7) | இரை | – களை - (கள் – ஐ) - த் |
| | தூவினேன் | – தூவு – இன் - ஏன் |
| | இது | – வும் (உம்) – |
| | ஒரு | _ வகை – பாவம் - தான் |
| | கோழி | – கள் – (கு)- உள் |
| | சண்டை | |

இக்கவிதையில் இடம்பெற்றுள்ள சொற்களை அலகிட்டுப் பார்க்கின் பின்வரும் பகுப்புகள் கிடைக்கும்;

8)

| | |
|---|---|
| பெயர்ச்சொல் | இரை, கோழி, பாவம், சண்டை |
| வினைசொல் | தூவினேன் |
| இடைச்சொல் | கள், ஐ, உள், உம், தான், (கு-சாரியை) |
| உரிச்சொல் | - |

இவற்றை மேலும் அவ்வவ்வின குழுக்களுக்கும் பிரித்துக் கொடுப்போமானால், கீழ்வரும் பகுப்புக் கிடைக்கும்;

9) பெயர்ச்சொற்கள் வகைகள்:

| | |
|---|---|
| பொருள் | கோழி, இரை |
| இடம் | - |
| காலம் | - |
| சினை | - |
| குணம் | - |
| தொழில் | சண்டை (வினைப்பெயர்) |

எனினும், இந்தக் கவிதைக்குள் வெளிப்படையாகக் கூறப்படாத, மறைநிலையில் உணர்ந்துகொள்ளக் கூடிய சில பெயர்ச்சொற்களும் உள்ளன. அவையாவன;

10)

| | |
|---|---|
| பொருள் | கோழி, இரை |
| இடம் | (தோட்டம்) |
| காலம் | (காலை, மாலை…) |
| சினை | (கை..அலகு,கால்..) |
| குணம் | (சிவப்பு, கறுப்பு, சிறிய..) |
| தொழில் | (சாப்பிடுதல், கொக்கரித்தல், கொத்துதல்) |

எனினும், இந்த வெளிநிலை-மறைநிலை பெயர்ச்சொற்களின், துணையோடு மட்டும், இக்கவிதை நமக்கு வழங்கிடும் பொருளை அறிந்துகொள்வது இயலாது. இவற்றை இணைக்கும் இடைச்சொற்கள் பங்களிப்பு மிகவும் தேவையான ஒன்றாக அமைகின்றது. அவ்வகையில், இடைச்சொற்களின் வகைமைகளைக் கீழ்க்காணும் அட்டவணையில் காணலாம்.

11) இடைச்சொற்கள்

| | |
|---|---|
| கள் | பன்மை விகுதி |
| ஐ | இரண்டாம் வேற்றுமை விகுதி |
| உள் | ஏழாம் வேற்றுமை விகுதி |
| உம் | உம்மை இடைச்சொல் |
| தான் | பதிலீடுப்பெயர் |
| (கு-சாரியை) | சாரியை |

நாம் இதுவரை இக்கவிதையில் இடம்பெற்றுள்ள முக்கியச் சொற்களையும் அவற்றின் குழுமத்தையும் கவனித்தோம்; எனினும், அதன் பொருள் முற்றுப்பெற தேவையான முக்கியச் சொல்லான வினை இல்லாமையால், அதன் பொருளுணர்தல் சற்றுக் கடினம். அதனையும் சற்றுக் காண்போம்.

தமிழ் மொழியில் இடம்பெறும் வினைச்சொற்களைப் பின்வருமாறு அடையாளம் கண்டுணரலாம். ஒரு செயலைக் குறிக்கும் சொல் வினைச்சொல்லானது வினைமுற்று, வினையெச்சம் மற்றும் பெயரெச்சம் எனப் பொதுவாக அறியப்படும். எனினும், வினைமுற்று காலத்தைக் காட்டும் தன்மையின் அடிப்படையில் தெரிநிலை, குறிப்பு வினைமுற்று எனப் பிரிக்கப்படும். அவ்வகையில், தெரிநிலை வினைமுற்றுகள் பொருள்நிலையில் பின்வரும் ஆறு பொருள்களை வெளிப்படையாக விளக்க வேண்டும். அவையாவன; செய்பவன், செயல், கருவி, நிலம், காலம், செய்பொருள் என்பன ஆகும். ஆழ்ந்து நோக்குவோமாயின், இந்தக் குழுமத்தில் அமையவல்ல சொற்களையே, மறைநிலை பெயர்ச்சொற்களாக காண முடிந்தது என்பது தெளிவுபடும்.

இந்த வினைச்சொற்களின் உட்பகுப்பினை மேற்கண்ட ஹைக்கூவில் காணக்கிடக்கும் வினைச்சொல்லான, *தூவினேன்,* எனும் சொல்லின் துணையோடு காண்போம். இதன் உள்ளடக்கம் கீழ்வருமாறு பிரிகின்றது;

*12)* தூவு: வினையடி,
இன்; இறந்த கால இடைநிலை,
ஏன்: படர்கை-ஆண்பால்-ஒருமை-உயர்திணை

இந்த ஒரு வினைச்சொல்லின் முழுமையான வினைப்பொருளினை கீழ்வரும் அட்டவணையின் துணையோடு காணலாம்.

*13)*

| | |
|---|---|
| செய்பவன் | ஆண்பால்-ஒருமை-உயர்திணை-படர்கை |
| செயல் | தூவுதல் |
| கருவி | கைகள், விரல்கள், அலகு |
| நிலம் | தோட்டம், கூடம் |
| காலம்<br>(இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம், (எதிர்மறை) + முக்காலம்) | காலை, மாலை |
| செய்பொருள் | புண்ணியம் தேடுதல் |

இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த வினைச்சொற்களைப் போதிப்பது சற்றுக் கடுமையான நிலைபாடுதான். இதனை மாற்றுமுறையில் போதிக்கும் முறையினை இனங்காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

**பின்னோக்கு வடிவாக்க முறை - போதனாமுறை**

போதனா முறைக்கான வினைச்சொற்கள் இரு வகைப்படுகின்றன. ஒன்று கோட்பாட்டு அடிப்படையிலான விளக்கம், மற்றொன்று பயன்பாட்டு அடிப்படையிலான விளக்கம். முன்னது, வினைச்சொல்லினை சொல்லளவில் விளக்குவதைக் குறிக்கும், பின்னது வினைச்சொல்லினை அவை பயன்படுத்தப்படும் சூழலுக்கேற்ப விளக்கும். இப்பகுப்பினைப் பற்றி ஆழ்ந்து உணர்ந்துகொள்வது, போதனாமுறையில் சிக்கலின்றிச் செயல்பட நன்மைப் பயக்கும்.

முதலாவதாக, சொல்லளவில் வினைச்சொற்களை அறிமுகம் செய்வதற்கு முன், ஒரு முழுநிலை வினைமுற்றின் அமைப்பு மற்றும் அதன் இலக்கணப் பொருள்களை அறிந்துகொள்வது முக்கியமாகும்.

**படிநிலை *1:* தெரிநிலை வினைமுற்று அறிமுகம்**

தெரிநிலை வினைமுற்று வினைச்சொல்லுக்கே உரிய பொதுத்தன்மைகளான திணை, பால், எண், இடம், காலம் ஆகிவற்றை இவ்வகைச் சொல் தெளிவாகக் காட்டி நிற்கும். அதனோடு செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்ப்பொருள் ஆகிய மேலும் ஆறுபொருள்களையும் தெளிவாகக் காட்டிடும்.

*14)* கண்ணன் பாடம் படித்தான்.

இவ்வாக்கியத்தில் படித்தான் என்பது வினைமுற்று. இவ்வினைமுற்றின் பொதுத்தன்மைகள்:

| | | | |
|---|---|---|---|
| *15)* | திணை | - | உயர்திணை |
| | பால் | - | ஆண்பால் |
| | எண் | - | ஒருமை |
| | இடம் | - | படர்க்கை |
| | காலம் | - | இறந்த காலம் |

இவ்வினைமுற்றின் மேற்படிக் கருத்துகள்:

| | | | |
|---|---|---|---|
| *16)* | செய்பவன் | - | கண்ணன் |
| | கருவி | - | தாள், பென்சில், பேனா |
| | நிலம் | - | வகுப்பறை, அறை |
| | செயல் | - | படித்தான் (காலம் - இறந்த காலம்) |
| | செய்பொருள் | - | பாடம் படித்தல் |

**படிநிலை *2:* தெரிநிலை வினைமுற்று ஒட்டாக்கம் அறிமுகம்**

போதனா முறைக்கான வினைச்சொற்கள் இரு வகைப்படுகின்றன என்பதனைக் கண்டோம்; ஒன்று, கோட்பாட்டு அடிப்படையிலான விளக்கம்; மற்றொன்று, பயன்பாட்டு அடிப்படையிலான விளக்கம். முன்னது, வினைச்சொல்லினை சொல்லளவில் விளக்குவதைக் குறிக்கும், பின்னது வினைச்சொல்லினை அவை பயன்படுத்தப்படும் சூழலுக்கேற்ப விளக்கும். இப்பகுப்பினைப் பற்றி ஆழ்ந்து உணர்ந்துகொள்வது, போதனாமுறையில் சிக்கலின்றிச் செயல்பட நன்மைப் பயக்கும்.

இம்முறையினைப் போதிப்பதற்கு முன்னதாக மாணவர்க்கு வினைச்சொல்லின் உருவாக்க அமைப்பு முறையினை போதித்தாக வேண்டும். மேல்நிலைக் கல்விப்பருவ மாணவர்களுக்கு இப்போதனை வழங்கப்படுவதனால்,

இத்தகவல்களை வழங்குவது சிரமம் இரா. அவ்வகையில் கீழ்க்காணும் பகுபத அமைப்புமுறை அறிமுகம் செய்யப்பட வேண்டும்.

*17)* பகுதி -சந்தி- இடைநிலை -சாரிய- விகுதி

இதனை ஓர் எடுத்துக்காட்டுடன் கூறுவது நன்று. படித்தான் எனும் வினைமுற்றின் துணையோடு இதனை ஆராய்வோம்.

*18)* பகுதி - சந்தி - இடைநிலை - சாரிய - விகுதி

படி த் த் - ஆன்

மேற்காணும் முக்கிய அடிப்படைகளில் என்னென்ன இடம்பெறும் என்பதும் மாணவர்களுக்குத் தெளிபடுத்துதல் வேண்டும். மாணவர்கள் உயர் இடைநிலை வகுப்புகளை மாணவர்களாக இருப்பதால், இதனை மீள்பார்வை செய்வதும் சுலபம்.

*19)* பகுதி: ஒரு வேர் அல்லது அடிச்சொல் இடம்பெறலாம் – வினையாக இருக்க வேண்டும்

*20)* சந்தி: க்,ச்,த்,ப் – ஏதேனும் ஒன்று இரட்டிக்கும் (இடைநிலையில் இடம்பெறும் எழுத்துக்கேற்ப)

*21)* இடைநிலை: கால இடைநிலைகள்:
அ. இறந்த கால இடைநிலைகள்: த், ட், ற், இன், ன், ய்
ஆ. நிகழ்கால இடைநிலைகள்: கிறு, கின்று, ஆநின்று
இ. இறந்த கால இடைநிலைகள்: ப், வ், க்


*22)* சாரியை: அவை, அன், இன், அற்று, இற்று, அத்து, அம், அ, உ, கு

*23)* விகுதி: பெருவாரியாக திணை, பால், எண், இடம் ஆகியவற்றைக் குறிப்பனவாக அமைந்திருக்கும்.

இந்த இரண்டாம் படிநிலையில், ஆசிரியர்கள் மாணவர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு வினைமுற்றின் துணையோடு, தமிழ் மொழியில் ஒரு வினைமுற்று எவ்வாறு உருவாக்கம் காண்கின்றது என்பதனை விளக்க வேண்டும்.

*24)* படித்தான்? → வினைமுற்று
i. படி (த்) – த் – ஆன்
ii. பகுதி – இ.நி. - விகுதி
iii. பகுதி – படி; இ.நி.;த்; விகுதி – ஆன்
படி; வினையடி - த் ; இறந்த கால இ.நி. - ஆன் - விகுதி

*25) வினைமுற்றின் முழுமையான கட்டமைப்பு பின்வருமாறு அமைவதைக் குறிப்பிடலாம்.*




**படிநிலை 3: தெரிநிலை வினையெச்சம்**
இந்நிலையில் மாணவர்களுக்கு எச்சம் தொடர்பான அடிப்படைச் செய்திகளை வழங்க வேண்டும். குறிப்பாக அதன் காலம் காட்டும் தன்மையை விளக்க வேண்டியது அவசியம். இவற்றும் பின்வரும் இருவகைகளுக்கு முக்கியத்துவம் வழங்கல் வேண்டும்.

26) பெயரெச்சம்
   i. படித்த பெண் (கால வேறுபாடு உண்டு: முக்காலத்தையும் காட்டும் – எதிர்மறை உண்டு)

27) வினையெச்சம்
   i. எழுதி வைத்தான் (கால வேறுபாடு உண்டு; முக்காலத்தையும் காட்டும் - எதிர்மறை உண்டு)

இந்த விளக்கத்திற்குப் பின், மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய செய்தி, இந்த எச்சங்கள் உருவாக்கம் காணும் முறையாகும். அவ்வகையில், இப்படிநிலையின் கலைச்சொல்லாக, விகுதி விடின்: எச்சம்! என அறிமுகம் செய்யலாம்.

28) படி (த்) - த் - ஆன்
பகுதி - இ.நி. - விகுதி
படி (த்) - த (எச்சம்)
பெயரெச்சம் - படித்த பெண்
வினையெச்சம் - படித்து முடித்தாள்

**படிநிலை 4: தெரிநிலை வினைமுற்று – கட்டளை/ஏவல் வினைமுற்று**
இந்நிலையில் மாணவர்களுக்கு ஏவல் வினைமுற்று அல்லது கட்டளை தொடர்பான அடிப்படைச் செய்திகளை வழங்க வேண்டும். குறிப்பாக அதன் காலம் காட்டாத தன்மையை விளக்க வேண்டியதும் அவசியம்.

இப்படிநிலையின் கலைச்சொல்லாக, இடைநிலை விடின்: கட்டளை!! என அறிமுகம் செய்யலாம்.

29) படி (த்) - த் - ஆன்
பகுதி - இ.நி. - விகுதி
படி - கட்டளை (விதித்தல்) (ஏவல் வினைமுற்று) (செய்யென் ஏவல் வினைமுற்று)

இவற்றுள் பின்வரும் வகைகளுக்கு முக்கியத்துவம் வழங்கல் வேண்டும். ஏவல் என்பது ஏவுதல் எனும் பொருளினைக் குறிக்கும்; இதன் பொருளாகும் ஒருவரை அழைத்து ஒரு செயலினைச் செய்ய ஆணையிடுதல் அல்லது ஏவுதல் என்பதாகும். சுருங்கக் கூறின், ஒரு செயலினைச் செய்யத் தூண்டும் வினைச்சொல்லே ஏவல் வினைமுற்றாகும்.

30) எ.டு.
நீ பாடு ! - ஏவல் ஒருமை வினைமுற்று
நீ பாடாதே ! - எதிர்மறை ஏவல் ஒருமை வினைமுற்று
நீங்கள் பாடுங்கள் ! - ஏவல் பன்மை வினைமுற்று
நீங்கள் பாடாதீர்கள் ! - எதிர்மறை ஏவல் பன்மை வினைமுற்று

**படிநிலை 5: தெரிநிலை வியங்கோள் வினைமுற்று**

இந்நிலையில் மாணவர்களுக்கு வியங்கோள் வினைமுற்றுத் தொடர்பான அடிப்படைச் செய்திகளை வழங்க வேண்டும். குறிப்பாக அதன் காலம் காட்டாத தன்மையை விளக்க வேண்டியது அவசியம். அதனோடு ஒருமை-பன்மை தன்மையினையும் விளக்க வேண்டும்.

இப்படிநிலையின் கலைச்சொல்லாக, பகுதியோடு.. க, இயர், இய சேர்ப்பின்: வியங்கோள்! என அறிமுகம் செய்யலாம்.

31) படி (த்) – த் – ஆன்

32) பகுதி – இ.நி. - விகுதி
படி (ப) – வியங்கோள் (வியங்கோள் வினைமுற்று)

33) வாழ்த்துதல் (வாழ்க!)
விதித்தல் (செய்க!)
வேண்டுதல் (வருக!)
சபித்தல் (ஒழிக!)

வியங்கோள் வினைமுற்றுகளுள் பின்வரும் வகைகளுக்கு முக்கியத்துவம் வழங்குதல் சிறப்பு. ஒரு சொல்லினையோ செயலினையோ வியந்துகூறும் பொருட்டு அமையும் சொற்களே வியங்கோள் வினைமுற்றுகளாகும். இவை பெரும்பாலும் க, இய, இயர், எனும் விகுதிகளை ஈற்றில் பெற்று, பின்வரும் நான்கு முறைகளில் பயன்படுத்தப்படுகின்றன:அவையாவன .

34) வாழ்த்துதல் - வாழ்க! தலைவர். வாழிய! அரசு. வாழிய வாழியவே!
விதித்தல் - சொல்க! நீ.
வேண்டுதல் - தருக! நீர்.
வைதல் - ஒழிக! கொடுங்கோலன்.என்பவையேயாகும்.

இந்நிலையினை அடையும் தருணத்தில் கோட்பாட்டு அடிப்படையிலான வினைச்சொல் அறிமுகம் பற்றிய செய்திகளை மாணவர்கள் முழுமையாக அறிந்திருக்கும் நிலையினை அடைகின்றனர். இதனோடு கோட்பாட்டு நிலையிலான வினைச்சொல் போதனாமுறை நிறைவடைகின்றது. இந்த அடிப்படை அறிவு மாணவர்களை அடுத்த கட்டநிலைக்கு எடுத்துச் செல்லும். அடுத்த 6-ஆம் படிநிலையான, பயன்பாட்டு வினைச்சொல் அறிமுகம் இதனைத் தெளிவுபடுத்தும்.

**படிநிலை 6: பயன்பாட்டில் தெரிநிலை வினைமுற்று**
இவ்வாறு அமையவல்ல தெரிநிலை வினைமுற்றுகள் வாக்கியங்களில் அவை ஆற்றும் பணிக்கு ஏற்ப பல்வேறு பெயர்களின் அறியப்படுவதுண்டு. இப்படிநிலையின் கலைச்சொல்லாக, சூழலுக்கேற்ப வினைமுற்றுகள் – தன்மை மாறும்! என அறிமுகம் செய்யலாம். அவையாவன,

34) அ. தன்வினை x பிறவினை x காரணவினை
ஆ. செய்வினை x செயப்பாட்டுவினை
இ. உடன்பாட்டுவினை x எதிர்மறைவினை
ஈ. செயப்படுபொருள் குன்றிய வினை x செயப்படுபொருள் குன்றா வினை

**தன்வினை x பிறவினை x காரணவினை**
வினைச்சொல் செயலைக் குறிப்பதாக அமைந்துவரும் என்று முன்னர்க் கண்டோம். அவ்வாறு அமையவல்ல செயல்களைச் செயல்படுத்தும் கருத்தாவின் ஈடுபட்டிற்கு ஏற்ப வினைச்சொற்களை, தன்வினை, பிறவினை, காரணவினை எனப் பகுத்துக் கூறலாம். ஒரு செயலினை கருத்தாவே செயல்படுத்துவதைக் குறிப்பது தன்வினை; இதில் வினையின் பயனைக் கருத்தாவே ஏற்பதாக அமையும். அதே செயலினைப் பிறரைக் கொண்டு செயல்படுத்தப்படுமானால் அது பிறவினை; இதில் வினையின் பயனைக் கருத்தா பெறாமல் வேறொருவரோ வேறொன்றோ ஏற்பதாக அமையும். இவ்விரு வகை வினைகளுக்கும் அப்பாற்பட்டு, ஒரு செயல் பிறரின் துணையோடு செயல்படுத்தப்படுமானால் அது காரணவினை ஆகும்.

34) எ.டு.
ராமன் சோறு உண்டான். தன்வினை -
ராமன் தம்பிக்குச் சோறு ஊட்டினான். பிறவினை -

*ராமன் சோற்றை ஊட்டுவித்தான்.* *-காரணவினை*

***செய்வினை x செயப்பாட்டு வினை***

*ஒரு வாக்கியத்தில் இடம்பெறும் பயனிலை (வினைமுற்று) எழுவாய் செய்வதாக அமைந்திருக்கும். அவ்வாறு ஒரு காரியத்தைக் கருத்தாவே முன்னின்று செய்வது செய்வினையாகும்.*

*35) எ.டு. அருசுனன் கருணனைக் கொன்றான்.*

*இவ்வாக்கியம் கருணனைக் கொன்றது அருசுனன் எனப் பொருள் வழங்குகின்றது; அதாவது, எழுவாய் (அருசுனன்) அந்தத் தொழிலை முன்னின்று நிகழ்த்தியதைக் குறிக்கின்றது. இவ்வாக்கியத்தில் காணப்படும், கொன்றான், ஒரு செய்வினையாகும்.*

*கீழ்காணும் வாக்கியத்தைச் சற்று ஆழ்ந்து கவனியுங்கள்.*

*36) எ.டு. கருணன் அருசுனனால் கொல்லப்பட்டான்.*

*இந்த வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள எழுவாயும் செயப்படுபொருளும் இடம் மாற்றம் கண்டுள்ளன. அதாவது, அதே வினைச்சொல் எழுவாயின்பால் ஒருவனால் செய்யப்படுமானால் செயப்பாட்டுவினை என்று பெயர். மேற்படி வாக்கியத்தில், கருணன் கொல்லப்பட்ட செயல் அருசுனனால் செய்விக்கப்படுவதால் கொல்லப்பட்டான் செயப்பாட்டுவினை ஆகின்றது.*

*இவ்விரு வாக்கியங்களிலும் உணர்த்தும் கருத்துகள் ஒன்றே; ஆனால், அவற்றுக்கிடையே சில அமைப்பு மாற்றங்கள் மட்டுமே நிகழ்ந்துள்ளன. செய்வினை வாக்கியம் செயப்பாட்டுவினை வாக்கியமாக மாற்றப்படும்போது, எழுவாய் மூன்றாம் வேற்றுமை உருபாகிய ஆல் உருபினைப் பெற்றுச் செயப்படுபொருளாகவும், செயப்படுபொருள் எழுவாயாகவும் மாறுகிறது. பயனிலையில் நின்ற வினைமுற்றுப் படு என்னும் இடைச்சொல்லினை ஏற்கும். இம்மாற்றங்களே செய்வினை வாக்கியத்தைச் செயப்பாட்டுவினை வாக்கியமாக மாற்றி அமைக்கின்றது.*

***உடன்பாட்டு வினை x எதிர்மறை வினை***

*ஒரு வாக்கியத்தில் இடம்பெறும் வினைமுற்றினை, எழுவாய் (கருத்தா) உடன்பட்டு நிகழ்த்துவதை உணர்த்தவது உடன்பாட்டு வினை; மாறாக, அதே செயலினை எழுவாய் (கருத்தா) உடன்படாமல் (மறுப்புநிலை) நிகழ்த்துவதை உணர்த்தவது எதிர்மறை வினையாகும். எதிர்மறை வினைகள் இல்லை, மாட்டேன் போன்ற இடைச்சொற்களைப் பெறுவது இயல்பாகும். கீழ்க்காணும் சான்றுகள் இதற்கு மேலும் வலுவை சேர்க்கின்றன. எ.டு.*

*37) நான் புத்தகக்கடையில் புத்தகம் வாங்கினேன். - உடன்பாட்டு வினை*
*நான் புத்தகக்கடையில் புத்தகம் வாங்கவில்லை. - எதிர்மறை வினை*

***செயப்படுபொருள் குன்றிய வினை x செயப்படுபொருள் குன்றா வினை***

*ஒரு வாக்கியம் எழுவாய், செயப்பொருள், பயனிலை ஆகியவற்றைக் கொண்டு முழுமையாக அமைவது சிறப்பு. இம்மூன்று கூறுகளையும் முழுமையாகப் பெற்று ஒரு வாக்கியம் எழுமானால் அது செயப்படுபொருள் குன்றாவினை வாக்கியமாகும். மாறாக, அவ்வாக்கியத்தில் செயப்படுபொருள் குன்றி வருமானால் அது செயப்படுபொருள் குன்றியவினை வாக்கியமாகும். பின்வரும் எடுத்துக்காட்டுகள் இதனை மேலும் விவரிக்கின்றன.*

*38) எ.டு.*
*கதவு திறந்தது. - செயப்படுபொருள் குன்றிய வினை வாக்கியங்கள்*
*மரம் அசைந்தது.*
*கிளை ஒடிந்தது.*

*கதவு கண்ணனால் திறந்தது. - செயப்படுபொருள் குன்றா வினை வாக்கியங்கள்*
*மரம் காற்றால் அசைந்தது.*
*கிளை புயலால் ஒடிந்தது.*

***படிநிலை 7: பிறவினைகள் வேற்று –நிலை வினைச்சொற்கள்***

*மேற்குறித்த இயல்பான வினைவகைகளுக்கு அப்பாற்பட்டு, தமிழ் மொழியில் பிறவகை/பிறவினைகள் உள்ளன. அவற்றுள் பின்வரும் வகை வினைச்சொற்கள் பயன்பாட்டில் அதிகமாகவே உள்ளன. இவற்றைத் தேவைக்கு ஏற்ப அறிமுகம் செய்யலாம்.*

*41) அ. குறைவினை*
*ஆ. துணைவினை*
*இ. கூட்டுவினை*
*ஈ. குறிப்பு வினைமுற்று*
*உ. பெயரடை*
*ஊ. வினையடை*

***குறைவினை***

*குறைவினை எனும் பெயர் குறிப்பது போலவே, குறைப்பாடுகளைக் கொண்டுள்ள வினைகளையே குறைவினைகள் எனக் கருதப்படுகின்றன. இவ்வகைச் சொற்கள் வினைச்சொல்லுக்கு உரிய காலத்தைக் காட்டும் உருபுகளையும் திணை, பால், இடம் காட்டும் உருபுகளையும் ஏற்பதில்லை. கீழ்க்காணும் வாக்கியங்கள் இதனை விளக்குகின்றன.*

*39) அவன் வீட்டில் இல்லை.*
*அவளுக்கு வீரம் உண்டு.*
*அவர்களுக்கு அந்த உண்மை தெரியும்.*
*வெட்டுக்கிளியினால் தூரத்தில் ஏற்படும் அதிர்வினை உணர முடியும்.*
*வௌவால்களுக்கு இரவில் நன்கு பார்க்க முடியும்.*

*இன்றைய தமிழில் இல்லை, உண்டு, கூடும், முடியும், தெரியும், மட்டும் ஆகும் போன்ற குறைவினைகளும் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. இவை பெரும்பாலும் இருதிணைகளுக்கும் (உயர்திணைக்கும் அஃறிணைக்கும்), முக்காலங்களுக்கும் (இறப்பு, நிகழ், எதிர்) மூவிடங்களுக்கும் (தன்மை, முன்னிலை, படர்க்கை) எல்லாப் பால்களுக்கும் (ஆண், பெண், பலர், ஒன்றன், பலவின்) பொதுவாக வரும்.*

**துணைவினைகள்**

*சில வினைமுற்றுகள் வழங்கும் பொருள்களுக்கு துணை விளக்கங்கள் பணியினை ஆற்றுவது துணைவினை (auxiliaries) ஆகும். துணைவினை பொதுவாக மற்றொரு வினைமுற்றோடு இணைந்து, அவ்வினைக்குரிய பொருளினை நுட்பமாக வேறுபடுத்திக் காட்டும். தமிழ் மொழியில் காணப்படும் பார், காட்டு, கொடு, கொள், இரு, வை, விடு, போ, வா, போடு, செய், தள்ளு போன்றவை துணைவினை பணியினைச் செய்கின்றன.*

*40) எ.கா.*
*செய்து பார்த்தார், வாங்கிக் கொண்டார், செய்யப் பார்த்தான், படித்து விட்டார் .*

*இவற்றுள் முதலாம் சொல்லாக அமைந்திருப்பவை யாவும் முதன்மை வினைகளாகும். இம்முதல் வினைகளைத் தொடர்ந்து வரும் வினையடிகளாக நிற்கும் பார்த்தார், கொண்டார், பார்த்தான், விட்டார் போன்றவை துணைவினைகளாகும். இவ்வகைகள் (auxiliary) குறிப்பாக காலம் (tense), செயல்நிலை (aspects) பேசுபவர் மனோநிலை (modal), வினைத்தன்மை (voice) ஆகியவற்றைக் காட்டி நிற்கும். கீழ்க்காணும் விளக்கம் இதனை மேலும் விவரிக்கின்றது.*

*41) எ.டு. செய்து பார்த்தார்.*

| | | | |
|---|---|---|---|
| *காலம்* | *:* | *இறந்த காலம்* | |
| *செயல்நிலை* | *:* | *முயல்தல்* | |
| *மனோநிலை* | *:* | *இயல்பினை ஆராய்தல்* | |
| *வினைமை* | *:* | *செயல் முடிவுற்றது* | *(மோகன தாஸ், 2005).* |

*தமிழில் காலம் தவிர்ந்த மற்ற மூன்றையும் (modal verbs): வேண்டும், கூடும், முடியும் போன்ற துணைவினைகள் தருகின்றன.*

**கூட்டுவினை**

*தற்காலத் தமிழில் காணப்படும் ஒரு புதுவகை வினைமுற்று கூட்டுவினை ஆகும். இதுவரை நாம் கண்ட வினைகளைப் போல அல்லாமல் இவ்வகைச் சொற்கள் பொருள் வழங்குவதில் சற்று மாறுபடுகின்றன. இவை பெயர்ச்சொல், வினைச்சொல் அல்லது இடைச்சொல்லோடு இணைந்த மற்றொரு வினைச்சொல்லின் துணையோடு பிறக்கலாம். இவ்வாறு இரண்டு சொற்களின் சேர்க்கையின் மூலமாகப் பிறக்கும் கூட்டுவினைகள், முற்றிலும் தனிப்பொருளையோ பகுதிப்பொருளையோ கொடுக்க வேண்டும். தமிழ் மொழியில் மூவகை கூட்டுவினைகள் காணப்படுகின்றன. அவையாவன:*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| *44)* | *பெயர்* | *+* | *வினை* | *> கூட்டுவினை* | |
| | *துன்பம்* | *+* | *படு* | *> துன்பப்படு* | |
| | *பழுது* | *+* | *பார்* | *> பழுதுபார்* | |
| | *வினை* | *+* | *வினை* | *> கூட்டுவினை* | |
| | *எடுத்து* | *+* | *காட்டு* | *> எடுத்துக்காட்டு* | |
| | *இடைச்சொல்* | *+* | *வினை* | *> கூட்டுவினை* | |
| | *முன்* | *+* | *ஏறு* | *> முன்னேறு* | |
| | *பின்* | *+* | *அடை* | *> பின்னடை* | *(மோகன தாஸ், 2005)* |

*கூட்டுவினைகளை உருவாக்கிக் கொடுக்கும் வினைகளை வினையாக்கி என்று அழைப்பர்.*

**குறிப்பு வினைமுற்று**

*தெரிநிலை வினைமுற்றுக்கு உரிய சிறப்புத் தன்மைகள் அனைத்தையும் வெளிப்படையாகக் குறிப்பிடாமல் குறிப்பால் உணர்த்துவது குறிப்பு வினைமுற்றாகும். இது பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகிய பொருட்பெயர்களைச் சார்ந்து வரும்.*

*42) பொருள் - இவன் பொன்னன்.*
*இடம் - இவன் மலேசியன்.*
*காலம் - இவன் கார்த்திகேயன்.*
*சினை - இவன் மூக்கன்.*
*குணம் - இவன் சிவப்பன்.*
*தொழில் - இவன் தேன்மொழியன். (சொ.பரமசிவம், 1990)*

**பெயரடை**

*பெயரடை என்பது ஒரு பெயர்ச் சொல்லுக்கு முன்னின்று அதன் சிறப்பியல்புகளை விளக்கும் தன்மையைக் கொண்டவையாகும். அவ்வகையில் பெயரடை பண்பு, தன்மை, வடிவம் ஆகிய இயல்புகளை விளக்கிப் போகும்.*

*43) அழகிய குழந்தை (பண்பு)*
*நல்ல குழந்தை (தன்மை)*
*சிறிய குழந்தை (வடிவம்)*

**வினையடை**

*வினையடை என்பது ஒரு பெயர்ச்சொல்லோடு இணைந்து அதன் முன்னிற்கும் வினைச்சொல்லின் தன்மையினை விரிவுபடுத்திக் காட்டுவதாகும். அவ்வகையில் ஆக, ஆய் எனும் விகுதிகள் இணைவுபெறும் போது, வினையடைகள் கிடைக்கும்.*

*44) வேகமாக ஓடிய*

**ஆய்வுமுடிவுகள்**

*இந்த ஆய்வுக்கட்டுரை வினைச்சொற்களைப் போதிப்பதில் புதிய அணுகுமுறையினை வழங்கும் நோக்கத்தில் எழுதபப்பட்டதாகும். அவ்வகையில் பழமை முறையாகிய நிரல்நிறை முறையினைக் கையாளாது, பின்வெட்டு முறையினைக் கையாண்டு போதிக்கும் முறையினை இக்கட்டுரை அறிமுகம் செய்கின்றது. அவ்வகையில்,*

*45) முதல் படிநிலை : வேர்ச்சொல் அறிமுகம் - படி*
*இரண்டாம் படிநிலை : அடிச்சொல் அறிமுகம் - படித்தல்*
*மூன்றாம் படிநிலை : கூட்டுச்சொல் அறிமுகம் - படித்துணர்*
*நான்காம் படிநிலை : எச்சம் அறிமுகம் - படிக்க/படிக்கா*
*ஐந்தாம் படிநிலை : வினைமுற்று அறிமுகம் - படித்தான்*
*ஆறாம் படிநிலை : பயன்பாட்டு வினைமுற்றுகள் அறிமுகம் - அவன் பாடம் படித்தான்.*
*(செய்வினை)*

*எனும் வழமை முறையினைக் கைவிட்டு, இக்கட்டுரை,*

*46) முதல் (ஐந்தாம்) படிநிலை : வினைமுற்று அறிமுகம் - படித்தான்*
*இரண்டாம் (நான்காம்) படிநிலை : எச்சம் அறிமுகம் - படிக்க/படிக்கா*
*மூன்றாம் படிநிலை : கூட்டுச்சொல் அறிமுகம்- படித்துணர்*
*நான்காம் (இரண்டாம்) படிநிலை : அடிச்சொல் அறிமுகம் - படித்தல்*
*ஐந்தாம் (முதல்) படிநிலை : வேர்ச்சொல் அறிமுகம் - படி*
*ஆறாம் படி : பயன்பாட்டு வினைமுற்றுகள் அறிமுகம் - அவன் பாடம் படித்தான்.*
*(செய்வினை)*
*ஏழாம் படி: பிறவினைகள் : இல்லை; உண்டு….*

*என அடிப்படையினை மாணவர்களின் முன்னறிவினைப் பயன்படுத்தி, நிரல்படுத்தி ஏனைய வினைச்சொற்களையும் வடிவங்களையும் நன்குணர்ந்தறிந்து கொள்ள ஏதுசெய்கின்றது.*

**முடிவுரை**

*செம்மொழி எனும் தகுதியை முழுமையாகப் பெற்ற ஒரு மொழிக்கு இருக்க வேண்டிய அனைத்துத் தகுதிகளியும் முழுமயாகப் பெற்ற ஒரு மொழியாக அமைந்திருக்கும் மொழிகளுள் ஒன்று தமிழ் மொழி. சில ஆய்வாளர்கள் தமிழ் மொழி ஒன்றே அனைத்துத் தகுதிகளையும் பெற்ற ஒரே உலகச் செம்மொழி என்றும் கூறுவர். இம்மொழியின் நீண்ட நெடுமை வளர்ச்சிக்குக் காரணம் இதன்கண் காணப்பெறும் இலக்கண வடிவமைப்பு ஓர் அடிப்படை என்பதில் எள்ளளவும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. அவ்வகையில், மொழியின் பல்வேறு அடிப்படைக் கூறுகளை மிகச் செறிவாக வடிவமைத்து, அவற்றுக்கான செயல்முறை-வரன்முறை விளக்கங்களையும் அழகுற வடிவமைத்துக் கொடுத்து,*

மொழியின் நீண்ட வளர்ச்சிக்கு வழிவகுத்த பெருமை தொல்காப்பிய-நன்னூல் அரண்களுக்கே சேரும். அவை மொழியின் வளத்திற்கு மட்டும் வழிவமைக்காது, வளர்ச்சிக்கும் வழியமைத்துக் கொடுத்து, அதனோடு, இலக்கணக் கூறுகளைச் செவ்வனே கற்றுக் கொடுக்கும் வழிமுறைகளையும் வழிவகுத்துக் கொடுத்துள்ளன.

தமிழ் மொழியில் கற்றல்-கற்பித்தல் பல காலநிலைகளையும் அவற்றிற்கேற்ப தேவைமாற்றங்களையும் கண்டு வந்துள்ளன. மரபிலக்கணம் குருகுலக் கல்வி முறைமைக்கு முன்னுரிமை வழங்கும் வண்ணம், இலக்கண விதிகளை இலகுவாக மன்னம்செய்யும் வண்ணம் விதிகளை வகுத்து, விதிவருமுறை, விதிவிளக்கமுறை என இரு வகுப்புமுறைகளில் கற்றல்-கற்பித்தலை வழங்கும் வண்ணம் வடிவமைத்துள்ளது எனலாம். அக்காலக்கட்ட மாணவர்களுக்கு ஏதுவாக அமைந்த முறையும் அதுவே என இதன்வழி கருத இடமுண்டு. காலங்கடந்த இந்நிலையில் அம்முறைமை இலகுவாக அமைவதாகத் தெரிந்தாலும், ஆழ்நிலையில் மாணவர்களுக்குச் சில இடர்பாடுகளை வழங்குவதாகவே அமைகின்றது. அதுவும், தமிழ் மொழியையும், அதனூடே இலக்கணத்தையும் கற்கும் சூழலில், இக்கற்றல் முறைமை சற்றுக் கடினமானதாகவே அமைத்து விடுகின்றது. அதிலும், வினைச்சொற்களைக் கற்பித்தலில் சற்று அதிகபட்ச இடர்பாடுகளையே வழங்குகின்றது எனலாம். இம்முறைமைக்கு மாற்றுமுறைமையாகவே, பின்வடிவாக்கமுறைமையை இக்கட்டுரை முன்வைக்கின்றது. கீழ்நிலைக் கல்விப்பருவங்களில் வினைச்சொற்களைப் பற்றிய அடிப்படைச் செய்திகளை மானவர்கள் கற்றுக் கொள்ளும் வாய்ப்புகள் உள்ளமையால், பின்வடிவாக்கமுறைமை மேல்நிலைக் கல்விப்பருவத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கே உகந்த வடிவமாக அமையும் என்பதையும் இக்கட்டுரை உறுதிசெய்கின்றது.

தற்காலக் கற்றல்-கற்பித்தல் முறைமை பல்வேறு மாற்றங்கள் கண்டு வந்துள்ளது. ஆசிரியர்கள் மாணவர்களுக்குப் போதிக்கும் முறைகளிலும் பல மாற்றங்களைக் கொண்டு வருவது அவசியமாக அமைகின்றது. மாணவர்களின் தேவைகளும், மாணவர்களின் தரமும் இதனை உறுதிசெய்கின்றன. மலேசிய கல்விச்சூழலில் இரண்டாம் மொழியாகவே இடைநிலைப் பள்ளிகளில் தமிழ் மொழியைக் கற்கும் சூழலில், கற்றல்-கற்பித்தல் பல மாற்றங்களையும் புதுமைகளையும் உள்ளேற்க வேண்டிய தேவைகள் உள்ளன. அவ்வாறு கொண்டுவரப்படும் சில மாற்றங்கள் பெரு மாற்றங்களுக்கு வழிவிடும். எனவே, இக்கட்டுரை அறிமுகம் செய்துள்ள பின்னோக்கு வடிவாக்க முறைமை–போதனாமுறை ஒரு பயிற்சி முயற்சி. மாணவர்கள் வினைச்சொற்களைப் பற்றிய முன்னறிவோடு, பின்னவற்றை ஈடுபடுத்திக் காட்ட உதவும் முயற்சியாக இது கட்டாயம் விளங்கும். கற்பித்தல் தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியப் பெருந்தகைகளுக்கு பின்வடிவாக்க முறைமை ஓர் உதவும் கருவியாக அமையும் என நம்புகின்றேன்.

**துணைநூல்கள்**


Abdul Rasid, J. (2012). *Permasalahan Pengajaran dan Pembelajaran Bahasa Melayu Dalam Kalangan Murid Cina*. Sastera dan Pendidikan, 1(Universiti Putra Malaysia).

Appasamy, M. (2012). Focus constructions in Modern Tamil. International Journal of Dravidian Linguistics, 38 (2), Pp.43-69.

Bavani, A. S. (2012). *Penggunaan Kata Hubung Dalam Bahasa Tamil*. (Ijazah Sarjana Pendidikan), Universiti Pendidikan Sultan Idris, Tanjong Malim, Perak. (Tesis Tidak Diterbitkan)

*Kurikulum Bahasa Tamil*, Pusat Perkembangan Kurikulum, KPM, 2002.

Jacques Derrida. (1973). *"Difference" in Speech and Phenomena*. Northwestern University Press (D.B. Allison.).

Jacques Derrida. (1992). *Acts in Literature*. New York: Routledge.

Kulandasamy.R. (1990). *Persepsi Murid Terhadap Pengajaran Bahasa Tamil Di Sekolah Menengah*. (Masters Tesis (Tidak Diterbitkan)), Universiti Malaya, Kuala Lumpur.

Paramasivam. (2000). Natramil Ilakkanam (Vol. 6). Chennai, India: Kavikuyil Printers.

Mokanarangan, T., Pranavan, T., Megala, U., Nilusija, N., Dias, G., Jayasena, S., & Ranathunga, S. (2016, June). *Tamil morphological analyzer using support vector machines*. In International Conference on Applications of Natural Language to Information Systems (pp. 15-23). Springer, Cham.

Rajendran, S. 2018. *Grammaticalization of Verbs in Tamil*." Paper presented in 40th International Conference of Linguistic Society of India (ICOLSI 40) held in CIIL, Mysore from 5th to 7th December 2018. Uplodade in Academia.edu and Reseach Gate.

Sarinah, S. (2014). *Terjemahan kata kerja bahasa Jepun ke Bahasa Melayu dalam sari kata filem animasi Jepun* (PhD thesis), University Malaya., Kuala Lumpur.

வேதநாயகி சாமிகண்ணு. (2015). இசை வழி இலக்கணம் கற்பித்தல்- 9th International Conference - Seminar On Tamil Studies. *Nurturing Tamil Studies In The Era Of Globalization, Volume III*. Kuala Lumpur Malaysia. (pp.468-474)

அமுதன். தி. (2006). *தமிழ் இலக்கண நூல்களில் உத்திகள்* (Doctoral dissertation, தமிழ்த் துறை. புதுவைப் பல்கலைக்கழகம்).

எம்.ஏ.நுஃமான். (2005). அடிப்படைத் தமிழ் இலக்கணம். பூபாலசிங்கம், இலங்கை.

மோகன தாஸ் ராமசாமி. (2005). அடிப்படைத் தமிழ் இலக்கணம். மலாயாப் பல்கலைக்கழகம்: கோலாலம்பூர்.

பரந்தாமனார், அ.கி. (1978). *நல்ல தமிழ் எழுத வேண்டுமா?* சென்னை: பாரி நிலையம்.

மனவை முஸ்தபா. (2007). உங்கள் குரல். தமிழ்ச் செம்மொழிச் சிறப்பு இதழ். கோலாலம்பூர்.

http://www.tamilvu.org/ta/search/node/ தொல்காப்பியம் (1.12.2019 - தேடல்)

http://www.tamilvu.org/ta/search/node/ நன்னூல் (1.12.2019 - தேடல்)

வீரப்பன், பா. (2004). உயர்நிலை தமிழ் கற்பித்தலில் புதிய அணுகுமுறைகள். சென்னை: வனிதா பதிப்பகம்.

காந்திமதிலட்சுமி, ந. (2007). தமிழ்வழிக் கற்றல்- கற்பித்தலில் புதிய உத்திகள் (மொழி): *தமிழ் வழிக் கற்றல் –*

*கற்பித்தலில் புதிய உத்திகள் பாகம் 6.* சென்னை: கலைஞன் பதிப்பகம்.
விசுவநாதம், செ. (2007). *தமிழ் வழிக் கற்றல் -கற்பித்தலில் புதிய உத்திகள் தமிழ் வழிக் கற்றல் -கற்பித்தலில் புதிய உத்திகள் பாகம் 6.* சென்னை: கலைஞன் பதிப்பகம்.
கணபதி, வி., & சந்திரிகா ராஜமோகன். (2010). *நற்றமிழ் கற்பிக்கும் முறைகள்.* சென்னை: சாந்தா பப்ளிஷர்ஸ்.
சுப்பு ரெட்டியார், ந. (2010). *தமிழ் பயிற்றும் முறை.* சென்னை: மெய்யப்பன் பதிப்பகம்.

## *தொன்னூறுகளுக்குப்பின் மலேசியத் தமிழ் நாவல்கள் (1990-2007)*

வே. சபாபதி
இந்திய ஆய்வியல் துறை, மலாயாப் பல்கலைக்கழகம்
sabavenu@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

*இக்கட்டுரை தொன்னூறுகளிலிருந்து இன்றுவரையில் மலேசியத் தமிழிலக்கியத்தில் நாவல் பற்றிய பொதுவான செய்திகளை விளக்குதல், தொன்னூறுகளுக்குப்பின் மலேசியத் தமிழ்நாவல் வளர்ச்சியில் காணப்படும் முக்கியத் திருப்புமுனைகள், கிரியா ஊக்கிகள், நிகழ்வுகள் ஆகியவற்றை அறிந்து விளக்குதல், தொன்னூறுகளுக்குப்பின் மலேசியத் தமிழ்நாவல் வளர்ச்சிக்கு அதிகமான பங்களிப்பினைச் செய்துள்ள நாவலாசிரியர்களை அடையாளங்கண்டு குறிப்பிடுதல் ஆகும். தொன்னூறுகளுக்குப்பின் வெளிவந்த மலேசியத் தமிழ்நாவல்களின் வளர்ச்சியில் காணப்படும் நாவல், குறுநாவல் பற்றிய ஒருமைப்பாடு, வேறுபாடு ஆகியவற்றை விளக்குதல், தொன்னூறுகளுக்குப்பின் குறிப்பாக அண்மைய பத்தாண்டுகளில் (1997-2007) வெளிவந்த மலேசியத் தமிழ்நாவல்களின் உள்ளடக்கத்தின் முக்கியப் போக்குகளை அறிவதோடு அவற்றின் தரமும் திறமும் பற்றி விளக்குகின்றது. தொன்னூறுகளுக்குப்பின் வெளிவந்த மலேசியத் தமிழ்நாவல்களின் (1997-2007) உள்ளடக்கத்தில் காணப்படும் நிகழ்காலச் சமுதாயத்தின் சமகாலப் பிரச்சினைகளை அடையாளங்கண்டு விளக்குதல் மற்றும் தொன்னூறுகளுக்குப்பின் வெளிவந்த மலேசியத் தமிழ்நாவல்களின் (1997-2007) உள்ளடக்கத்தில் வெளிப்படும் மலேசிய மண்ணின் மணம், அடையாளங்கள், மலேசியத் தன்மைகள் ஆகியவற்றை அடையாளங்கண்டு வெளிப்படுத்துதல் ஆகியனவற்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது.*

***கருச்சொற்கள்***: *நாவல் வளம், மலேசிய தமிழ் நாவல், மலேசிய இலக்கியம், மலேசிய தமிழ் நாவல் செல்நெறிகள்*

*Abstract*

This article is aimed at giving the details of the development Novels, the catalyst, the important milestones, their trends, their thematic approaches and the turning points in the history of novel productions that have been witnessed in Malaysian setting since 1990's Special focus has been given on studying the catalyst of novel and short novels development, their quality and their nature, especially in last decades of 20$^{th}$ century (1997-2007). Interest has been given in knowing and verifying the exposition of phenomena, especially the social issues revolving the Indian community that have been captured in these novels. Efforts also have been given in studying the aspects of the Malaysian representation in the novels that turn them be unique from others, in the novels that have been produced after 1990's.

Keywords: Novel Resources, Malaysian Tamil Novel, Malaysian Literature, Malaysian Tamil Novel Trends

### *1.* **இக்கட்டுரையின் நோக்கம்:**

*இக்கட்டுரை பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. அவை:-*

- *தொன்னூறுகளிலிருந்து இன்றுவரையில் மலேசியத் தமிழிலக்கியத்தில் நாவல்பற்றிய பொதுவான செய்திகளை விளக்குதல்,*
- *தொன்னூறுகளுக்குப்பின் மலேசியத் தமிழ்நாவல் வளர்ச்சியில் காணப்படும் முக்கியத் திருப்புமுனைகள், கிரியா ஊக்கிகள், நிகழ்வுகள் ஆகியவற்றை அறிந்து விளக்குதல்,*
- *தொன்னூறுகளுக்குப்பின் மலேசியத் தமிழ்நாவல் வளர்ச்சிக்கு அதிகமான பங்களிப்பினைச் செய்துள்ள நாவலாசிரியர்களை அடையாளங்கண்டு குறிப்பிடுதல்,*
- *தொன்னூறுகளுக்குப்பின் வெளிவந்த மலேசியத் தமிழ்நாவல்களின் வளர்ச்சியில் காணப்படும் நாவல், குறுநாவல் பற்றிய ஒருமைப்பாடு, வேறுபாடு ஆகியவற்றை விளக்குதல்,*
- *தொன்னூறுகளுக்குப்பின் குறிப்பாக அண்மையப் பத்தாண்டுகளில் (1997-2007) வெளிவந்த மலேசியத் தமிழ்நாவல்களின் உள்ளடக்கத்தின் முக்கியப்போக்குகளை அறிவதோடு அவற்றின் தரமும் திறமும் பற்றி விளக்குதல்,*
- *தொன்னூறுகளுக்குப்பின் வெளிவந்த மலேசியத் தமிழ்நாவல்களின் (1997-2007) உள்ளடக்கத்தில் காணப்படும் நிகழ்காலச் சமுதாயத்தின் சமகாலப்பிரச்சினைகளை அடையாளங்கண்டு விளக்குதல்,*
- *தொன்னூறுகளுக்குப்பின் வெளிவந்த மலேசியத் தமிழ்நாவல்களின் (1997-2007) உள்ளடக்கத்தில் வெளிப்படும் மலேசிய மண்ணின் மணம், அடையாளங்கள், மலேசியத் தன்மைகள் ஆகியவற்றை அடையாளங்கண்டு வெளிப்படுத்துதல் ஆகியன.*

*மேற்காணும் நோக்கங்களின் அடிப்படையில் இக்கட்டுரை உருவாக்கப்பட்டுள்ளது. இவற்றுக்கான தக்கச் சான்றுகள் உடனே வழங்கப்பட்டுள்ளன.*

***2. நாவல் இலக்கியம்***

*சமுதாயத்தைச் சிறப்பாகவும் ஆழமாகவும் சித்திரிக்கின்ற, பிரதிபலிக்கின்ற தற்கால இலக்கிய வடிவங்களுள் நாவல் இலக்கியத்திற்கு எப்பொழுதுமே தனியிடம் உண்டு. ஒவ்வொரு காலப்பகுதியிலும் நிகழும் சமுதாய நிகழ்வுகளைப் பதிவுசெய்யும் முக்கிய ஆவணமாகத் திகழ்வது நாவல் இலக்கியமே. நிகழ்காலச் சமுதாயம் எப்படி இருக்கிறது என்பதனை எதார்த்தப்பூர்வமாகப் பிரதிபலித்துக்காட்டுவதோடு சமுதாயம் இப்படித்தான் இருக்கவேண்டும் என்கிற எதிர்பார்ப்பை வெளிப்படுத்துவ-தாகவும் நாவல்கள் அமைகின்றன. மெத்தப்படித்தவர், ஓரளவு படித்தவர் என அனைவரையும் எளிதில் அது சென்றடைவதால் சமுதாயத்தில் இன்று நாவலுக்கென்று தனி மதிப்பும் மரியாதையும் ஏற்பட்டுவிட்டது. அதனால், பழஞ்சமூகத்தில் காவியம் பெற்றிருந்த இடத்தைத் தற்காலச் சமூகத்தில் நாவல் பெற்றிருப்பதில் வியப்பேதுமில்லை.*

*சமூகவாழ்வின் அனைத்துக் களங்களுக்குள்ளும் நுழைந்து வாழ்வின் அர்த்தங்களைத் தேடுவதும் அர்த்தங்கள் அழிந்துவிட்ட நிலையில் வாழ்வின் அவலத்தைச் சொல்வதும் எதிர்கால நோக்கில் வாழ்வின் நிறைவை எடுத்துக்காட்டுவதும் நாவலின் செயற்பாடுகளாகக் கருதப்படுகின்றன. எனவே, இன்றைய நிலையில் சமூகவாழ்க்கையிலும் தனிமனிதவாழ்க்கையிலும் காணப்படும் பிரச்சினைகளையும் அவற்றுக்குத் தீர்வினையும் சிந்திப்பதற்குத் தகுந்த வாயப்பினை வாசகர்களுக்கு நாவல் இலக்கியம் ஏற்படுத்தித் தருகின்றது. இத்தகைய சிறப்புவாய்ந்த நாவல் இலக்கியம் மேனாட்டில் தோன்றியது; இந்திய மண்ணிற்கு ஆங்கிலேயர் ஆட்சியில் இறக்குமதி செய்யப்பட்டது. தமிழிலும் தோன்றி, அது தொடர்ந்து வளர்க்கப்பட்டு வருகின்றது. தமிழகத்தின் தாக்கத்தினால் அது மலேசிய மண்ணிலும் தமிழில் காலூன்றித் தொடர்ந்து வளர்க்கப்பட்டு வருகின்றது.*

***3. தமிழகத்தில் நாவல் இலக்கியம்***

*பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் (1879) தமிழில் நாவல் இலக்கியம் தோன்றி வளரத் தொடங்கியது. மாயூரம் வேதநாயகம் பிள்ளை (பிரதாப முதலியார் சரித்திரம்), அ.மாதவையா (பத்மாவதி சரித்திரம்), ராஜம் ஐயர் (கமலாம்பாள் சரித்திரம் அல்லது ஆபத்துக்கிடமான அபவாதம்), தி. ம. பொன்னுசாமிப்பிள்ளை (கமலா சரித்திரம், ஞானாம்பிகை), பண்டித நடேச சாஸ்திரி (தீனதயாளு, திக்கற்ற இரு குழந்தைகள்), சு. வை. குருசாமி சர்மா (பிரேம கலாவத்யம்) போன்றோர் தொடக்க காலத்தில் நாவல் இலக்கியம் இன்னது என்று தமிழ் மக்களுக்கு உணர்த்தும் முயற்சியில் வெற்றி பெற்றனர். மேற்கத்திய நாகரிகத்தின் தாக்குதலால் தமிழ்மக்களின் வாழ்வில் ஏற்பட்ட சிதைவுகளை இவர்களின் நாவல்கள் வெளிப்படுத்தின. எனினும், இவர்களைத் தொடர்ந்து நாவல் எழுத வந்தவர்களிடம் காணப்பட்ட மேனாட்டுத் தாக்கத்தினால் இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கதில் மர்மமும் துப்பறிதலும் தமிழ்நாவலின் முக்கியப் பண்புகளாக மாறின. இதனால் பெரும்பாலான தமிழ்நாவல்கள் தமிழர்களின் வாழ்வையோ அதில் ஏற்பட்ட நெருக்கடிகளையோ அல்லது பிரச்சினை-களையோ காட்டத் தவறின. இதனை "அக்கால எழுத்தாளர்கள் நாவல் எனும் புதிய இலக்கிய வடிவத்தை ஆமோகித்து நின்றார்களே- அன்றி அதன் பேராற்றலைப் புரிந்து கொண்டார்களில்லை" எனவரும் கூற்று உணர்த்துகின்றது.(1) எனவே, இக்காலப்பகுதியில் நாவல் இலக்கியத்தை எந்த அளவுக்கு வீழ்ச்சியுறச் செய்யமுடியுமோ அந்த அளவிற்கு வீழ்ச்சியுறச் செய்தனர்.*

***4. மலேசியாவில் தமிழில் நாவல் இலக்கியம்***

*தமிழகத்தில் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ்நாவல் வளர்ச்சியில் ஏற்பட்ட வீழ்ச்சியின் போதுதான் மலேசியாவில் தமிழில் நாவல் இலக்கியம் மெல்லத் தோன்றி வளரத் தொடங்கியது. மலேசியாவின் முதல் தமிழ் நாவல் இலக்கியம் மீனாட்சி அல்லது மலாய்நாட்டு மங்கை எனும் தலைப்பில் 312 பக்கங்களில் 1916-ஆம் ஆண்டில் கா.கந்தையா பிள்ளை என்பவரால் கிள்ளானில் நூல் வடிவில் வெளியிடப்பட்டது.(2) 1916-க்கும் 1938-க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் ஏறத்தாழ இருபத்தைந்து நாவல்கள் இங்கு நூல்வடிவில் வெளியாகியுள்ளன. இவற்றுள் மிகுதியானவை அப்போதைய மலாய்நாட்டுப் பத்திரிகைகளில் தொடர்கதைகளாக வெளிவந்தது இங்குக் குறிப்பிடத்-தக்கது. இவை தமிழகம், இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து வந்தக் குடியேறிகளால் எழுதப்பட்டுள்ளன. எனவே, இந்நாவல்களின் கதை, கரு, களம், பின்னல், கதைமாந்தர், உரையாடல், மொழிநடை போன்ற-வற்றில் தமிழக, இலங்கைச் சார்புகளே மேலோங்கிக் காணப்படுகின்றன. இவற்றில் மலேசியச் சூழல்களோ கால, களப்பின்னணிகளோ மிகவும் அருகியே காணப்பட்டன. தமிழ்நாவலின் வீழ்ச்சிக்காலத்தில் தமிழகத்தில் காணப்பட்ட அத்தனைப் போக்குகளும் பண்புகளும் தொடக்ககாலத்தில் எழுந்துள்ள மலேசியத் தமிழ் நாவல்களிலும் காணப்பட்டன. அவற்றுள் சிலவாகத் துப்பறியும் போக்கு, மர்மப்பண்பு, இரட்டைப் பெயரிடும் போக்கு, கதையோடு தொடர்பற்ற பகுதிகளை இணைத்தல், கதையின் இடையிடையே நாவலாசிரியர் குறுக்கிட்டுப் பேசுதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.*

*விடுதலைக்குப் பின்னர் மலேசியத் தமிழ்நாவல்களுள் மிகுதியானவை மலேசியாவிலேயே பிறந்து வளர்ந்து தமிழ்கற்ற இளைய தலைமுறையினரால் எழுதப்பட்டுள்ளன. இவற்றுள் மலேசிய மண்ணின் மணம் முழுமையாகக் கமழ்வதனைக் காணமுடிகின்றது. இவற்றுள் பல நாவல்கள் வயிற்றுப்பிழைப்புக்காக இந்நாட்டில் குடியேறிய இந்தியச்சமுதாயத்தின் உள்ளும் புறமும் அலசி ஆராய்வனபோல் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. விடுதலைக்குப் பின்னரிலிருந்து தொன்னூறுவரை (1957-1990) ஒவ்வொரு காலக்கட்டத்திலும் மலேசிய இந்தியச் சமூகம் அடைந்த வளர்ச்சியும் தளர்ச்சியும் அடையாளங் காணப்பட்டு அவற்றுக்கான காரணக் காரியங்களையும் பொருத்தமான தீர்வுகளையும் கூறும்வகையில் அமைந்துள்ள நாவல்களுள் துயரப்பாதை (1958), செம்மண்ணும் நீலமலர்களும் (1969), இலட்சியப் பயணம் (1975), பசித்திருக்கும் இளங்கொசுக்கள் (1978), மரவள்ளிக்கிழங்கு (1979), வானத்து வேலிகள் (1982), பயணங்கள் முடிவதில்லை (1988) ஆகியன குறிப்பிடத்தக்கன. இந்நாவல்களில் தோட்டப்புற மக்களின் துன்பவாழ்வியல், தோட்டத்துண்டாடல் பிரச்சினை, சமூகத்தில் காணப்படும் செல்லரித்த போக்குகள், இளையதலைமுறையினரிடம் காணப்படும் கூடாப் பழக்கவழக்கங்கள், மேலோங்கிவரும் பொருளியல் சிந்தனைகள், தனிமனிதச் சிக்கல்களும் உணர்வுகளும், அரசியல்வாதிகளின் முரண்பட்ட போக்குகள் போன்றவை காட்டப்பட்டுள்ளன.*

### *5. தொன்னூறுகளில் மலேசியத் தமிழ் நாவல் இலக்கியம்*

*தொன்னூறுகளில் மலேசியத் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சியானது தரத்திலும் எண்ணிக்கையிலும் ஏறுமுகம் கண்டதாக உள்ளது குறிப்பிடத்-தக்கது. விடுதலைக்குப்பின் ஒவ்வொரு பத்தாண்டிலும் (Decade) நாவல்களின் எண்ணிக்கை கூடியுள்ளதனைக் காணமுடிகின்றது. அவ்வகையில் எண்பதுகளில் நூல்வடிவில் வெளிவந்துள்ள நாவல்களின் எண்ணிக்கை மொத்தம் 27 ஆகும். ஆனால், இந்த எண்ணிக்கையானது தொன்னூறுகளில் (1990-1999) 43 ஆக உயர்ந்துள்ளது குறிப்பிடத்-தக்கது. இவற்றுள் மிகுதியானவை குறுநாவல்களாகவே அமைந்திருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. குறைவான படைப்புகளே பக்கங்களால் நீண்டு நாவல்களாக(நெடுங்கதை) அமைந்துள்ளன.*

### *5.1 நாவல், குறுநாவல் ஆகியவற்றிற்கான விளக்கம்*

*பொதுவாக நாவல் (Novel) என்பது நெடுங்கதையாகக் கருதப்படுகின்றது. குறுநாவல் (Novellette) அதனினும் சிறியதாகக் கருதப்படுகின்றது. இவ்விரண்டுக்குமிடையே உள்ள வேறுபாட்டைத் தமிழில் எழுத்தாளர்களும் திறனாய்வாளர்களும் இன்னும் தெளிவாக உணரவில்லை என்ற கருத்து உண்டு.(3) நாவலைவிடச் சிறியதாய், சிறுகதையைவிடப் பெரியதாய் அமைந்திருப்பது குறுநாவல் என்று பொதுவாக விளக்கம் தரப்படுகின்றது. ஆனால், நாவல், குறுநாவல் இரண்டிற்குமிடையே காணப்படும் வேறுபாட்டை வெறும் பக்க அளவால் மட்டும் அளவிடக்கூடியதன்று. இதனைச் "சிறுகதையிலும் பார்க்க நீளமானதாகவும் நாவல்களிலும் பார்க்கக் குறுகியதாகவும் உள்ள கதை அமைப்பே குறுநாவல் என விளங்கிக் கொள்ளுதல் பாமரத்தனமானது"(4) எனவரும் பகுதியால் அறியலாம். மேலும், "நாவலின் குறுக்கமும் சிறுகதையின் நீட்சியும் குறுநாவலை உருவாக்கியிருக்குமோ என்ற ஐயம் எழுவது இயற்கை"(5) எனவரும் பகுதியாலும் "சிறுகதைக்கும் நாவலுக்கும் பிறந்த குழந்தையாகக் குறுநாவலைக் கருதலாம்"(6) எனவரும் பகுதியாலும் அறியலாம். மேலைநாடுகளில் குறுநாவலுக்கான விளக்கத்தையும் இலக்கணத்தையும் கண்டு தெளிந்துள்ளனர். ஆனால், தமிழில் இதற்கான விளக்கமும் இலக்கணமும் இன்னும் முறையாகவும் முழுமையாகவும் புரிந்துகொள்ளப்படவில்லை. அதனால் தமிழ்ப்படைப்பாளர்கள் மத்தியில் அதுபற்றிய ஐயங்கள் தீர்க்கப்படாமல் உள்ளன.*

*குறுநாவல் நாவலின் இலக்கணங்களைப் பெற்று பக்க அளவில் சிறியதாக அமைந்திருந்தாலும் கதைநிகழ்ச்சிகளுக்கு முதன்மை கொடுத்துப் படைக்கப்பட்டிருக்கும் தன்மையைப் பெற்றது. குறுநாவலில் ஒரு கருத்தை முழுமையாக விளக்கப்படும் அளவுக்குக் கதைநிகழ்ச்சிகள் பலவாக அமைக்கப்பட்டிருக்கும். கதைமாந்தர்களின் பண்பில் பல கோணங்கள் விவரிக்கப்படாமல் குறிப்பிட்ட சில பண்புகள் மட்டுமே விளக்கப்பட்டிருக்கும். தேவையற்ற வருணனை, விளக்கம், செய்தி, கதைமாந்தர், உரையாடல், சொற்றொடர் போன்றவை அதிகளவு காட்டப்படாது. கிளைக்கதைகளை உருவாக்காது முதன்மைக்கதையிலேயே முழுக்கவனம் செலுத்தப்பட்டிருக்கும்.*

*தமிழில் குறுநாவல் என்ற பிரிவைத் தொடங்கிய எழுத்தாளர் யார் என்பது சரியாகத் தெரியவில்லை என்ற கருத்தும் ஏறத்தாழ 1960-ஆம் ஆண்டளவில் ஏற்பட்டிருக்கலாம் என்று தோன்றுகின்றது என்ற கருத்தும் இங்குக் கருத்ததக்கது.(7) தொடக்ககாலத்தில் தமிழில் கலைமகள், அமுதசுரபி போன்ற இதழ்கள் குறுநாவலை வளர்த்துள்ளன. காலப்போக்கில் மங்கை, மங்கையர் மலர், மஞ்சரி, தீபம், தாமரை போன்ற இதழ்களும் குறுநாவலை வளர்த்துள்ளன. குறுநாவலை மலேசியாவில் மயில், இதயம், நயனம் போன்ற வாரமாத இதழ்களும் வெளிவரும் எல்லா நாளிதழ்களும் வளர்த்துள்ளன. இன்றைய நிலையில் குறுநாவல்கள் வாசகர்களின் ஆர்வத்தையும் காலச்சூழலின் தேவையையும் கருதியே படைக்கப்படுகின்றன.*

*மலேசியத் தமிழ்ப்படைப்பாளர்கள் பலருக்குக் குறுநாவல் பற்றிய அறிவும் தெளிவும் இருப்பதாக இளம்பிறை எம்.ஏ.ரஹ்மான் அவர்கள் வானம் காணாத விமானங்கள்(1999) எனும் நூலுக்கு எழுதியுள்ள முன்னுரையில் குறிப்பிட்டுள்ளதானது தொன்னூறுகளில் மலேசியத் தமிழ் நாவலாசிரியர்கள், மலேசியத் தமிழ் நாவல் இலக்கியம் பற்றிய நல்ல தகுதி மதிப்பீடாக அமைந்துள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது. தொன்னூறுகளில் மலேசியாவில் மிகுதியான குறுநாவல்கள் வெளியீடு கண்டதற்கு அதில் ஏற்பட்டுள்ள பிடிப்பும் தெளிவும் ஒரு காரணம் எனலாம்.*

### *5.2 தொன்னூறுகளுக்கு முந்தியவை நூல்வடிவம் பெறுதல்*

*தொன்னூறுகளில் பதிப்பிக்கப்பட்ட நாவல்களுள் சில ஏற்கெனவே எழுபதுகளிலும் எண்பதுகளிலும் இதழ்களில் தொடராகவும் நூலாகவும் வெளிவந்தவை. அவ்வகையில் ந.சந்திரனின் இதயரோஜா (1991), மா.இராமையாவின் அழகின் ஆராதனை (1992), சுவடுகள் (1994), சங்கமம் (1995), நா. ஆ. செங்குட்டுவனின் விடியலுக்காக (1998), விலங்கு (1998), நெருப்புக்கொடிகள் (1998), எம், ஏ. இளஞ்செல்வனின் மோகங்கள் (1999), பசித்திருக்கும் இளங்கொசுக்கள் (1999), கனகாம்பரமும் கிளிஞ்சல் மலர்களும் (1999) ஆகியன இவ்வகையில் அமைகின்றன.*

### *5.3 தொகுப்புகளாக வெளிவந்த மலேசியத் தமிழ்நாவல்கள்*

*தொன்னூறுகளில் வெளிவந்துள்ள நாவல்களின் அமைப்புமுறையில் குறிப்பிடத்தக்க தன்மை காணப்படுகின்றது. நான்கு நூல்கள் குறுநாவல்களின் தொகுப்பாக வெளியிடப்பட்டுள்ளன. அவற்றுள் ஒவ்வொன்றிலும் ஒன்றுக்கு மேற்பட்ட குறுநாவல்கள் கொண்டு தொகுக்கப்பட்டுள்ளன. அவை வா! அருகில் வா! (1990), விடியலுக்காக (1998), கோடுகள் கோலங்களானால் (1998), வானம் காணாத விமானங்கள் (1999) ஆகியன. இவற்றுள் முதலாவதான வா! அருகில் வா! எனும் தொகுப்பில் வா! அருகில் வா!, நெஞ்சுக்குத் தெரியும் ஆகிய இரண்டு குறுநாவல்களும் விடியலுக்காக எனும் தொகுப்பில் விடியலுக்காக, விலங்கு ஆகிய இரண்டு குறுநாவல்களும் கோடுகள் கோலங்களானால் எனும் தொகுப்பில் கோடுகள் கோலங்களானால், நொண்டிப்பறவை ஆகிய இரண்டு குறுநாவல்களும் வானம் காணாத விமானங்கள் எனும் தலைப்பில் வானம் காணாத விமானங்கள், மோகங்கள், பசித்திருக்கும் இளம்கொசுக்கள், கனகாம்பரமும் கிளிஞ்சல் மலர்களும் ஆகிய நான்கு குறுநாவல்களும் தொகுக்கப்பட்டுள்ளன. தவிர, பேராசிரியர் ரெ.கார்த்திகேசு அவர்கள் தம்முடைய இன்னொரு தடவை, ஊசி இலைமரம் ஆகிய இரு தொகுப்புநூல்களில் சிறுகதைகளோடு சில குறுநாவல்களையும் தொகுத்துத் தந்துள்ளதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. இன்னொரு தடவை எனும் தொகுப்புநூலில் நல்லவராவதும் தீயவராவதும், ராகதேவதை ஆகிய இரு குறுநாவல்களையும் ஊசி இலைமரம் எனும் தொகுப்புநூலில் புழுத்துளைகள், தீக்காற்று ஆகிய இரு குறுநாவல்களையும் சேர்த்துத் தொகுத்துள்ளார். படைப்பாளிகள் தங்கள் படைப்புகள் இதழ்களிலேயே மக்கி மடிந்துவிடக் கூடாது; கண்டிப்பாக நூல் வடிவில் வரவேண்டும் என்ற நன்னோக்கத்தில் இவ்வாறு ஒரே நூலில் ஒன்றுக்கு மேற்பட்ட குறுநாவல்களைத் தொகுத்து வெளியிட்டுள்ளதனைக் காண முடிகி றது.*

***5.6 மலேசியத் தமிழ்நாவல் வளர்ச்சிக்கு ஊக்கமளித்த நிகழ்வுகள்***

*தொன்னூறுகளில் மலேசியத் தமிழ் நாவல் இலக்கியத்திற்கு ஊக்கமும் எழுச்சியும் தரும் வகையில் பல இலக்கிய முயற்சிகள் நடந்தேறியுள்ளன. இக்காலப்பகுதியில் நாவல்களின் எண்ணிக்கை உயர்வுக்கு இவ்விலக்கிய முயற்சிகளும் காரணங்களாக அமைந்திருந்தன எனில் மிகையில்லை. இனி, அவை ஒவ்வொன்றாக விளக்கப்படுகின்றன.*

***5.6.1 மலேசியத் தமிழ்நாவல் கருத்தரங்கு (1992)***

*மலேசியத் தமிழ் நாவல் வரலாற்றில் முதன்முறையாகத் தேசிய அளவில் இக்கருத்தரங்கு பிப்ரவரி, 1992-இல் மலாயாப் பல்கலைக்கழக, இந்திய ஆய்வியல் துறையினரின் பெருமுயற்சியின் விளைவாக ஏற்பாடு செய்யப்பட்டது. ஒரு நாள் நிகழ்வாக நடந்தேறிய இக்கருத்தரங்கில் மலேசியத் தமிழ் நாவல் இலக்கியம் தொடக்கநாள் முதல் முழுமையாக ஆய்வுக்குட்படுத்தப்பட்டது. மலேசியத் தமிழ் நாவலின் தரம், திறம் ஆகியவற்றைக் கண்டறியும் நோக்கத்தில் நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கில் மலேசியத் தமிழ்நாவலை ஒட்டிய ஐந்து கட்டுரைகள் பல்வேறு தலைப்புகளில் ஆய்வாளர்களால் வாசிக்கப்பெற்று கருத்துப் பரிமாற்றமும் செய்யப்பட்டது.(8) பேராசிரியர் ரெ. கார்த்திகேசு, வே. சபாபதி, எம்.கிருஷ்ணன், லெட்சுமி மீனாட்சிசுந்தரம் ஆகியோர் இக்கட்டுரைகளைப் படைத்தனர். எழுத்தாளர்களும் இலக்கிய ஆர்வலர்களும் பொதுமக்களும் என நூற்றுக்கணக்கானோர் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர். இக்கருத்தரங்கு நாவல் எழுதிக்கொண்டிருந்தோர்க்கும் எழுதவிரும்பு-வோர்க்கும் மிகுந்த பயனைத்தந்த நிகழ்வாக அமைந்திருந்தது. இந்நிகழ்வுக்குப் பிறகு வெளிவந்துள்ள நாவல்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதோடு அவற்றின் தரமும் கூடியுள்ளது. ஆக, மலேசியத் தமிழ் நாவல் கருத்தரங்கு மலேசியத் தமிழ்நாவல் வளர்ச்சியில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வரலாற்று நிகழ்வாகும்.*

***5.6.2 சிறுகதையாசிரியர்களும் நாவல் முயற்சிகளும்***

*தொன்னூறுகளில் மலேசியத் தமிழ் நாவல்களின் எண்ணிக்கை கூடியதற்கு நாவல் இலக்கியத்தின்மீது மலேசியத் தமிழ் எழுத்தாளர்-களுக்குக் குறிப்பாகச் சிறுகதை ஆசிரியர்களுக்கு ஏற்பட்ட ஈடுபாடும் ஆர்வமும் ஒரு காரணமாக அமைகின்றது. இதுநாள் வரையில் சிறுகதையின்மீது மிகுந்த ஈடுபாடுகொண்டு எழுதிக்கொண்டிருந்தவர்கள், ஒரு காலக்கட்டத்திற்குப் பிறகு எழுத்துத்துறையில் வளர்ச்சியும் முதிர்ச்சியும் பெற்றபின்னர் எழுத்துத்துறையில் தங்களின் ஆற்றலைக்காட்ட அடுத்த கட்ட நடவடிக்கையாக, ஒரு மாற்றமாக நாவலின் பக்கம் அவர்களின் கவனத்தைத் திருப்பியுள்ளதனைக் காணமுடிகின்றது. அவ்வகையில் கோலலங்காட் அ.ரெங்கசாமி, மு.அன்புச்செல்வன், ஆர்.சண்முகம், சை.பீர் முகம்மது, பூ.அருணாசலம், பாவை, சரஸ்வதி அரிகிருஷ்ணன், நிர்மலா பெருமாள் போன்றோர் அவ்வாறு சிறுகதைத் துறையிலிருந்து நாவல்துறைக்கு வந்து சேர்ந்தனர். சிறுகதை ஆசிரியர்கள் நாவல் எழுதுவதில் புதுமையொன்றும் இல்லை. தமிழக, இலங்கை நாவல் இலக்கிய வரலாற்றைப் பார்க்கும்போது சிறுகதையாசிரியர்களாய் இருந்தவர்களே சிறந்த நாவல் ஆசிரியர்களாகவும் இருந்து சிறந்த படைப்புகளைத் தந்துள்ளனர். அகிலன், த. ஜெயகாந்தன், செ. கணேசலிங்கன் போன்றோர் தொடக்கத்தில் சிறுகதைத்துறையில் இருந்து, பின்னர் நாவல்துறைக்கு வந்தவர்கள் ஆவர். ஆக, இங்குத் தொன்னூறுகளில் சிறுகதைத் துறையில் சிறந்து விளங்கியவர்களும் நாவல் ஆசிரியர்களாக மாறியுள்ளது குறிப்பிடத்தக்கது.*

***5.6.2 மூத்த எழுத்தாளர்களின் நாவல் பங்களிப்பு***

*தொன்னூறுகளில் மூத்த எழுத்தாளர்களின் பங்களிப்பு நாவல்துறையில் கணிசமாகக் காணப்படுகின்றது. இங்கு ஐம்பதுகளிலும் அறுபதுகளிலும் இருந்து தொடர்ந்து இங்கு எழுதிவரும் எழுத்தாளர்களான மா.இராமையா, ஆர். சண்முகம், ரெ. கார்த்திகேசு, சை. பீர் முகம்மது, கோலலங்காட் அ. ரெங்கசாமி, நா. ஆ. செங்குட்டுவன், மு. அன்புச்செல்வன், டாக்டர் சி.சொக்கலிங்கம், பாவை போன்றோர் இக்காலப்பகுதியில் ஒன்றுக்கும் மேற்பட்ட நாவல்களை எழுதியுள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது. எழுத்தாற்றல் நிரம்பிய அவர்களின் அந்நாவல் படைப்புகள் பல்வேறு சிறப்புகளையும் தனித்தன்மைகளையும் கொண்டு விளங்கி, மலேசியத் தமிழ்நாவல் இலக்கியத்திற்கு வளத்தைச் சேர்த்துள்ளன.*

*இவர்களுள் பேராசிரியர் ரெ. கார்த்திகேசு தொன்னூறுகளுக்குப்பின் பதினான்கு நாவல்கள், குறுநாவல்களைப் படைத்து அதிகமான படைப்புகளைத் தந்தவர் என்ற சிறப்புக்கும் புகழுக்கும் உரியவர் ஆகின்றார். அவை கொப்புளங்கள் (1991/92), ராகதேவதை (1991) மனசுக்குள் கட்டுகிற மணற்கோபுரங்கள் (1991), தேடியிருக்கும் தருணங்கள் (1993), அம்மாவும் சாமியாரும் (1994), சாரங்கன் வருகிறான் (1995), அந்திம காலம் (1998), நாளைக்கு (1999), காதலினால் அல்ல (1999), நல்லவராவதும் தீயவராவதும் (2002), தீக்காற்று (2003,) புழுத்துளைகள் (2004), சூதாட்டம் ஆடும் காலம் (2005), சேர்ந்து வாழலாம் வா! (2005) ஆகியன. இவர் தொன்னூறுகளுக்கு முன்பே நாவல் எழுதத் தொடங்கி விட்டாலும் தொன்னூறுகளிலிருந்து இன்றுவரை மேலும் பல நாவல்களைப் படைத்து மலேசியத் தமிழ்கூறு நல்லுலகிற்கு வளம் சேர்த்துள்ளார். மலேசியத் தமிழ் எழுத்தாளர்களுள் மாறுபட்டு விளங்கும் எழுத்தாளராக இவரைக் கூறலாம். ஏனெனில், இவர் சார்ந்திருந்த பல்கலைக்கழக பேராசிரியப் பணி, வெளிநாட்டுத் தொடர்புகள், பயணங்கள், பன்மொழியறிவு, தொடர்ச்சியான வாசிப்புப் பழக்கம், இணையத்து வலைப்பக்கங்களில் சென்று உலக அளவில் எழுத்தாளர், வாசகர், இலக்கிய ஆர்வலர், திறானாய்வாளர் ஆகியோருடன் கொள்ளும் இலக்கியத் தொடர்புகள் ஆகியன அவருடைய அறிவை விசாலப்படுத்தி, அனுபவ வட்டத்தையும் விரிவடையச் செய்துள்ளது.*

*இது மற்ற எழுத்தாளர்களுக்குக் கிட்டாத வாயப்பும் வசதியும் ஆகும். அவருடைய தேடியிருக்கும் தருணங்கள் எனும் நாவலுக்குப் பிறகே மலேசியத் தமிழ் நாவல் இலக்கிய வளர்ச்சி மறுமலர்ச்சி கண்டது எனில் மிகையில்லை. இந்நாவல் குறித்து இக்கட்டுரையில் தனியாக விளக்கப்படுவதால் அந்நாவலைப் பற்றிய கூடுதல் விவரங்கள் கீழே தனித்தலைப்பில் தரப்படுகின்றன. இந்நாவல் வெளியான சில ஆண்டுகளில் இவர் பதவி ஓய்வுபெற்றதனால், அதன் பின்னர் முழுநேர எழுத்தாளரானது இங்குக் குறிப்பிடத்தக்கது. இவருடைய புழுத்துளைகள் எனும் குறுநாவல் முழுக்க முழுக்க அறிவியல் பார்வையில் அறிவியலை மையமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. அறிவியலை மையமாகக் கொண்ட முதல் மலேசியக் குறுநாவல் என இந்நாவலைக் கருதுவதிலும் மலேசியாவில் தமிழில் அறிவியல் நாவலின் முன்னோடியாக இவரைக் கொள்வதிலும் தவறிருக்க முடியாது. தொன்னூறுகளிலும் புத்தாயிரத்திலும் சிறுகதைகள், தொடர்-கதைகள், ஆய்வுக்கட்டுரைகள், கருத்துக் கடிதங்கள் எனப் பலவற்றை அவர் எழுதுவதும் அவை அவ்வப்போது*

பத்திரிகைகளில் வெளிவருவதும் காணக் கூடியதாயுள்ளது. இவற்றுள் இவருடைய நாவல் எழுதும் முயற்சிகள் மலேசியத் தமிழ்நாவல் இலக்கியத்திற்குச் சிறப்பையும் வளத்தையும் சேர்த்துள்ளன. எனவே, இவரை மலேசியத் தமிழ்நாவல் இலக்கியம் மறுமலர்ச்சி பெறுவதற்குத் துணைபுரிந்த முன்னோடியாகக் கொள்வதில் தவறிருக்க முடியாது. மேலும், இக்காலப் பகுதியில் இவர் பிற எழுத்தாளர்களையும் நாவல் எழுதத் தூண்டி வழிகாட்டியுள்ளதோடு அவர்களின் நாவல்கள் நூல்வடிவில் வெளிவரவும் 'முகில் எண்டர்பிரைஸ்' நிறுவனத்தின் மூலம் உதவி வருகிறார். எனவே, இவருடைய முயற்சிகள் மலேசியத் தமிழ் நாவல் இலக்கியம் தரத்திலும் எண்ணிக்கையிலும் உயர்வதற்குத் துணைபுரிந்துள்ளது.

அடுத்து, நா.ஆ.செங்குட்டுவன் தொன்னூறுகளிலிருந்து இன்றுவரை ஆறு நாவல்களை அச்சில் கொண்டுவந்து எண்ணிக்கையில் இரண்டாவது இடத்தில் உள்ளார். அவை நெருப்புக் கொடிகள் (1998), விடியலுக்காக (1998), விலங்கு (1998), துன்பங்கள் உறங்கு-வதில்லை, (2001) கனவுப்பந்தல் (2005), கால்களே நில்லுங்கள் (2005) ஆகியன. நீண்டகாலமாக மலேசியத் தமிழ் இலக்கிய உலகோடு தம்மைப் பிணைத்துக் கொண்டவர்களுள் ஒருவர் இவர். கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை எனப் பல்வேறு துறைகளிலும் ஈடுபட்டு சளைக்காமல் இன்றும் எழுதி வரும் எழுத்தாளர். இவருடைய பல நாவல்களுள் பல பத்திரிகைகளில் வெளிவந்தவை ஆகும். அவை பத்திரிகைகளிலேயே இருந்து மடிந்தும் முடங்கியும் போய்விடக் கூடாது என்ற நோக்கத்தில் அவற்றிற்கு நூலுருவம் கொடுத்தே தீரவேண்டும் என்பதில் உறுதியுடனிருந்து செயல்படும் எழுத்தாளர் ஆவார்.

மூத்த எழுத்தாளர்களுள் தனித்தன்மை வாய்ந்த மற்றொரு எழுத்தாளர் கோலலங்காட் அ.ரெங்கசாமி. தொன்னூறுகளுக்குப்பின் இவர் எழுதிய நாவல்கள் நான்கு. அவை புதியதோர் உலகம் (1993), நினைவுச்சின்னம் (2005), லங்காட் நதிக்கரை (2006), இமயத்தியாகம் (2007) ஆகியன. இந்நான்கும் மலேசியத் தமிழ் நாவல் இலக்கியத்தில் இதுநாள் வரையில் பதிவு செய்யப்படாத மலேசியத் தமிழினத்தின் பழைய வரலாற்றுச் சுவடுகளைப் பதிவு செய்துள்ளன. இந்நாவல்களில் மலேசிய இந்தியர்களின் உண்மை வரலாறும் அவலவரலாறும் கதையாக்கப்பட்டுள்ளன. இவருடைய நாவல்களின் சிறப்புக்கும் வெற்றிக்கும் இவர் பல சிரமங்களுக்கு மத்தியில் மேற்கொண்ட கள ஆய்வும் அவை தொடர்புடைய மனிதர்களிடம் நடத்திய சந்திப்புகளும் காரணங்கள் ஆகும். அவற்றுக்கான ஆதாரங்களை அந்தந்த நாவல்களில் பின்னிணைப்புகளாக இணைத்துள்ளார். இந்நான்கு நாவல்களுக்கும் காலப்பின்னணி இருபதாம் நூற்றாண்டின் நாற்பதுகள் ஆகும். நாற்பதுகளில் இரண்டாம் உலகப்போர், ஜப்பானியர் ஆட்சி (1942-45), போருக்குப்பின் கம்யூனிசத் தீவிரவாதிகளின் கலகங்களும் நாசவேலைகளும் ஆகிய சூழல்களின்போது நடைபெற்ற கதையை இந்நாவல்களில் காட்டியுள்ளார். களப்பின்னணி மலேசியத் தோட்டப்புறங்களும் கிராமங்களும் சயாம் மரணரயில் அமைந்துள்ள இடங்களும் ஆகும். மலேசியத் தமிழ் நாவல் இலக்கியத்தில் இவற்றைப் பதிவுசெய்து வைப்பதில் இவர் வெற்றிபெற்று சிறந்து விளங்குகின்றார். புதியதோர் உலகம் எனும் நாவலில் ஜப்பானியர் ஆட்சியில் தோட்டப்புறத்தில் ஆண்மக்களெல்லாம் மரணரயில் பாதை அமைக்க சயாம் சென்றுவிட்டநிலையில் தோட்டப்புறங்களில் பெண்மக்கள் ஆண்துணையின்றிக் குழந்தைகளையும் முதியவர்களையும் கவனிக்கப்பட்ட அவலவாழ்க்கை நாவல் முழுக்கக் காட்டப்பட்டுள்ளது. நினைவுச்சின்னம் எனும் நாவலில் மரண ரயில்பாதை அமைக்க ஜப்பானியர்கள் சயாமுக்குத் தமிழர்களைக் கால்நடைகளைப்போல அடைத்துவைத்து ஓட்டிச் சென்ற அனுபவங்களும் சயாமில் வேலைக்கொடுமையாலும் முறையான உணவு, மருந்து, உடை, உறையுள் ஆகியன கிடைக்காத நிலையினாலும் கொத்துக்கொத்தாய் ஆயிரக்கணக்கில் மனிதர்களைக் குற்றுயிரும் குலையுயிருமாய்ப் புதைகுழியில் தள்ளிப்புதைத்த ஜப்பானியரின் கொடுங்கோன்மை ஆட்சிமுறை நாவல் நெடுகக் காட்டப்பட்டுள்ளது. லங்காட் நதிக்கரை எனும் நாவலில் அன்றைய மலாயாவில் ஜப்பானியரின் கொடுங்கோலாட்சி ஒருமுடிவுக்குவர, ஜப்பானியர் ஆட்சியை விட்டு நாட்டை விட்டு வெளியேறிய நிலையில் முந்தைய ஆட்சியாளர் ஆங்கிலேயர் நாட்டுக்கு இன்னும் திரும்பாத நிலையில் சுமார் இரண்டு வார காலம் மலாயா மக்களின் ஜப்பானிய எதிர்ப்புப் படையிலிருந்த (*MPAJA - Malayan Peoples Anti Japanese Army*) கம்யூனிஸ தீவிரவாதிகள் இந்நாட்டை ஒரு கம்யூனிஸ நாடாக மாற்றும் திட்டத்தில் அராஜக ஆட்சி நடத்தி மக்களை ஆட்டிப்படைத்தனர். ஆங்கிலேயர் நாடுதிரும்பிய பின்னரும் கம்யூனிஸ்டுத் தீவிரவாதிகள் ஆயுதங்களுடன் காடுகளுக்குத் தப்பியோடி தங்கள் நடவடிக்கைகளைத் தொடர்ந்தனர். அதனையொட்டி இந்நாட்டில் அவசரகாலம் (*Emergency*) பிரகடனமும் ஊரடங்குச் சட்டமும் (*Curfew*) அறிவிக்கப்பட்டது. அந்தச் சூழலில் தோட்டப்புறங்களிலும் கிராமங்களிலும் வாழ்ந்த மலேசியத் தமிழர்கள் கம்யூனிஸ்டுகளிடம் சிக்கித் தவித்த அவலம் இந்நாவலில் கதையாக்கப்பட்டுள்ளது. இமயத் தியாகம் எனும் நாவல் நேதாT சுபாஷ் சந்திரபோஸ் அவர்களை மையமாகக் கொண்டு புனையப்பட்ட நாவல் இது. இரண்டாம் உலகப்போரின் போது, நேதாஜி அவர்கள் இந்தியாவிலிருந்து வெளியாகி, முதலில் ஐரோப்பா சென்று பின் அங்கிருந்து நீர்மூழ்கிக் கப்பலின் வாயிலாக சிங்கைவந்து தற்காலிக இந்திய அரசு (*Azad Hind*) அமைத்தும் மலாயாவின் பல பகுதிகளுக்குச் சென்று மலாயா இந்தியர்களிடம் வீரவுரை ஆற்றி அவர்களுக்கு எழுச்சியூட்டி இந்தியநாட்டை ஆங்கிலேயரிடமிருந்து விடுவிக்கப் படையும் (*Indian National Army*) அமைத்து, பொருளும் திரட்டியது வரலாறு. இவற்றை மையமாகக் கொண்டு இந்நாவல் புனையப்பட்டுள்ளது.

தொன்னூறுகளில் மலேசியத் தமிழ் நாவல் இலக்கியத்தை வளப்படுத்தியவர்களுள் மருத்துவத்துறையைச் சார்ந்த டாக்டர் சி.சொக்கலிங்கத்தின் பங்களிப்பும் கணிசமாகவே காணப்படுகின்றது. பெரும்பாலும் அறிவியல், மருத்துவம் ஆகிய துறைகளைச் சார்ந்தவர்கள் இலக்கியத்துறையை அவ்வளவாக விரும்புவதில்லை. அல்லது அத்துறைகளில் அவ்வளவு ஈடுபாடு காட்டுவதில்லை. ஆனால், அதற்கு மாறுபட்ட எழுத்தாளராக இவர் விளங்குகின்றார். மொழியின் மீதும் இலக்கியத்தின் மீதும் கொண்ட ஈடுபாட்டினால் எழுத்துத்துறையில் நுழைந்து மலேசியத் தமிழ் நாவல் இலக்கியத்திற்கு வளம் சேர்த்தவருள் ஒருவராக இன்று காணப்படுகின்றார். தம் மருத்துவத்தொழிலோடு இலக்கியங்கள் படைப்பதனையும் கொள்கையாகக் கொண்டவர் இவர். தாம் சார்ந்துள்ள மருத்துவத்துறையில் கிடைத்த அனுபவங்களை நாவல்களில் காட்டியுள்ளார். அவ்வப்போது நடந்தேறும் இலக்கிய நிகழ்வுகளில் தவறாது கலந்துகொள்ளும் ஒருவராக உள்ளார். தொன்னூறுகளுக்குப்பின் இவர் மனவீணை (1990), பேசும் ஊமைகள் (1991), சுவர் (1997), மனித்தப்பிறவியும் (1995), சுவர் (1997) ஆகிய ஐந்து நாவல்களை எழுதியுள்ளார். இவை யாவும் இவர் கதை எழுதிய காலத்தில் தமிழ்ச்சமூகம் எதிர்நோக்கிய சமூகப் பிரச்சினைகளைப் பேசுகின்றன. மனவீணை எனும் நாவல் தமிழக, மலேசியப் பின்னணியில் நடக்கும் கதையைக் கொண்டுள்ளது சந்தர்ப்பச் சூழ்நிலையால் இருபெண்களை மணக்க நேரிட்ட ஓர் ஆடவனின் கதையாக இது அமைக்கப்பட்டுள்ளது. இக்கதையில் வரும் கதிரவன் முதலில் இளநங்கை என்ற பெண்ணையும் இரண்டாவதாகக் மலர்விழி என்ற பெண்ணையும் மணந்து பல்வேறு போராட்டங்களுக்கு ஆளாகின்ற கதையே நாவலின் முழுவதும் காட்டப்பட்டுள்ளது. பேசும் ஊமைகள் எனும் நாவல் கலைகளைப்பற்றியும் கலைஞர்களைப்பற்றியும் விளக்கும் வகையில் கதை அமைக்கப்பட்டுள்ளது. காமம் கடந்தநிலையில் தெய்வீகக் காதலாய் மலரும் மங்கை எனும்

*பெண்ணின் கதையைக் கொண்டது மனித்தப்பிறவியும் எனும் நாவல். சுவர் எனும் நாவலில் தமிழ் இளைஞர்களின் மத்தியில் காணப்படும் நடைமுறைப் பிரச்சினையான போதைப்பொருள் பழக்கத்தைக் கதையாக்கிக் காட்டியுள்ளார். பல்வேறு காரணங்களுக்காக இன்றைய இளைஞர்கள் விட்டில்பூச்சிகளைப் போன்று போதைப்பொருளை நாடிச்சென்று அழிந்துபோகின்றனர். அவற்றுள் ஒன்றாகப் பெற்றோரின் அக்கறையற்ற போக்கினாலும் அன்பற்ற நிலையினாலும் இந்நிலை ஏற்படுவதாக இந்நாவலில் ஆசிரியர் காட்டிப் போகிறார். இக்கதையில் வரும் மிகவும் கெட்டிக்கார மாணவனான கார்த்திகேயன் எனும் படிவம் ஆறு மாணவன் தன் தந்தை பூங்குன்றனின் அன்பிற்கு ஏங்கி, அது கிடைக்காதநிலையில் போதைப்பொருளில் மிதந்து வாழ்க்கையையே முடித்துக்கொண்ட சோகம் கதையில் காட்டப்பட்டுள்ளது.*

*மூத்த எழுத்தாளர்களுள் ஒருவர் தங்காக் மா. இராமையா. ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக இந்நாட்டிலே விடாமல் எழுதிவரும் முதன்மையான எழுத்தாளர் இவர். மலேசியத் தமிழ் இலக்கிய வரலாற்றோடு தம்மைப் பிணைத்துக் கொண்டவர்களுள் முக்கியமானவர். இவருடைய நாவல் எழுதும் பணி அறுபதுகளிலேயே தொடங்கி விட்டாலும் தொன்னூறுகளிலும் அழகின் ஆராதனை (1992), சுவடுகள் (1994), சங்கமம் (1995) விழலும் நீரும் (1999) ஆகிய தலைப்புகளில் நான்கு நாவல்களை வெளியிட்டுள்ளார். அழகின் ஆராதனை எனும் தமிழகத்தின் சங்கொலி இதழில் தொடராக வந்தது இங்குக் குறிப்பிடத்தக்கது. இந்நாவலில் புற அழகைவிட அக அழகே வாழ்க்கைக்குத் தேவையானது என்பதனையும் இன்றைய இளைஞர்கள் வெறும் புற அழகில் மயங்கித் தங்களின் வாழ்க்கையையே சீரழித்துக் கொள்கின்றனர் என்பதனையும் இந்நாவலில் வரும் லதா, ரகு (காதலர்கள்) என்கிற கதைமாந்தர்கள் மூலம் காட்டியுள்ளார். சுவடுகள் எனும் நாவல் தமிழ் மலர் பத்திரிகையில் எழுபதுகளில் தொடராக வந்தபோது புரியாத பாதையில் அழியாத சுவடுகள் எனும் நீண்ட தலைப்பில் வெளிவந்தது குறிப்பிடத்தக்கது. இந்நாவல் தோட்டப்புறப் பின்னணியை மையமாகக் கொண்டு கதை எழுதப்பட்டுள்ளது. தோட்டப்புறச் சூழலில் போதைப்பொருள் பழக்கம் இளைஞர்களைப் பற்றிக்கொள்ளும்போது ஏற்படும் விபரீதங்களும் அவலங்களும் இக்கதையில் காட்டப்பட்டுள்ளன. இக்கதையில் வரும் வேலு போதைப்பொருளுக்கு அடிமையாகிச் சீரழியும்போக்கு இந்நாவலில் இயல்பாக ஆசிரியரால் காட்டப்பட்டுள்ளது. தோட்டப்புறத்தை விட்டு புதுவாழ்வு தேடி, பட்டணப் பிரவேசம் செய்யும் ஓர் இளைஞனான குணாளன் நகர்ப்புறத்தில் எதிர்கொள்ளும் போராட்டங்களைக் காட்டும் கதையைக்காட்டும் நாவல் சங்கமம். பொதுவாக மலேசியத் தமிழ் நாவல்களில் பிற இனக் கதைமாந்தர்கள் வருவது மிகமிகக் குறைவு. அக்குறையைப் போக்குவதுபோல அமைந்துள்ள இந்நாவலில் பிற இனக் கதைமாந்தர்கள் பரவலாகக் கதையில் இடம் பெறுவதும் கதையில் முக்கியப்பாத்திரங்களை ஏற்பதும் இந்நாவலில் சிறப்பம்சமாகக் காணப்படுகின்றது. படித்த பெண்களைப் பணம் கறக்கும் இயந்திரமாகக் கருதும் ஆண்களைக் காட்டும் நாவல் விழலும் நீரும். இக்கதையில் வரும் குமாரவேலு ஒரு பட்டதாரிப் பெண்ணான கயல்விழியைப் பணத்திற்காக மணந்து தன் தாய் கன்னியம்மாவுடன் சேர்ந்து படுத்தும்பாடுதான் நாவலில் கதையாக விரிந்துள்ளது.*

### *5.6.3* தேடியிருக்கும் தருணங்கள் நாவலுக்கான கருத்தரங்கு *(1993)*

*மலேசியத் தமிழ் நாவல் வளர்ச்சியில் நடந்தேறிய மற்றொரு முக்கிய நிகழ்வு 1993-இல் பேராசிரியர் ரெ.கார்த்திகேசு எழுதி வெளியிட்ட நாவலான தேடியிருக்கும் தருணங்கள் எனும் நாவலுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஒருநாள் கருத்தரங்காகும். இக்கருத்தரங்கு மலேசியத் தலைநகர் கோலாலும்பூர் முத்தமிழ்ப் படிப்பகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இக்கருத்தரங்கின் சிறப்பு யாதெனில் மலேசியத் தமிழ்நாவல் வரலாற்றில் முதன்முறையாக நாவலொன்று வெளிவந்த கையோடு அதனைப்பற்றி அறிந்துகொள்ள கருத்தரங்கு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது ஆகும். இக்கருத்தரங்கில் இந்நாவலைப் பற்றிய ஆய்வுக்கட்டுரைகள் படைப்புகளோடு கருத்துப்பரிமாற்றம், கலந்துரை-யாடல் ஆகியனவும் இடம்பெற்றன. இக்கருத்தரங்கின்போது கடுமையான விவாதங்களும் காரசாரமான கருத்துப்பரிமாற்றங்களும் நடைபெற்றதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.*

*இக்கட்டுரையாளரும் திறனாய்வு அடிப்படையில் தேடியிருக்கும் தருணங்கள் நாவல் - ஓர் ஆய்வு எனும் தலைப்பில் கட்டுரை வாசித்ததும் இங்குக் குறிப்பிடத்தக்கது. அக்கட்டுரையில் "மலேசியத் தமிழ் நாவல் வரலாற்றில் தொன்னூறுகளின் முற்பகுதியில் மாற்றத்தை ஏற்படுத்திய சிறப்பிற்குரிய நாவலாக இந்நாவல் அமைந்துள்ளது. கதை சொல்கின்ற அழுத்தத்தில், வேகத்தில் இதுகாறும் மலேசியத் தமிழ் நாவலாசிரியர்கள் யாரும் எட்டியிராத ஆழத்தை இந்நாவல் அடைந்துள்ளதே புதுமைக்குரிய ஒன்றாகவே விளங்குகின்றது. கதையைச் சுவையாகவும் ஆர்வநிலையோடும் வாசகர்களைப் படிக்கத் தூண்டிய நாவல் இது. உள்ளடக்கக் கட்டமைப்பு, உத்திகளின் பயன்பாடு, கலைத்திறன் ஆகியவற்றால் சிறந்தமைந்து மலேசியத் தமிழ்நாவல் வரலாற்றில் சிறந்ததோர் இடத்தைப் பெறத்தக்க ஒரு நல்ல நாவலாக இந்நாவல் திகழுகின்றது" என்று கூறும் கூற்றே இந்நாவலின் சிறப்பை உணர்த்தப் போதுமானது.(9)*

*இதனால் இந்நாவல் இதுவரையில் எந்த மலேசியத் தமிழ் நாவலும் பெற்றிராத அளவுக்கு வாசகர் மத்தியில் பரவலாகவும் பரபரப்பாகவும் அப்போது பேசப்பட்டது. இந்நாவலில் வரும் சூர்யா என்பவனின் விமானப் பயணத்தில் தொடங்கும் நாவலின் கதை மீண்டும் அவனுடைய விமானப்பயணத்திலேயே முடிவடைகின்றது. நாவலின் கதை முழுக்க முழுக்க சூர்யாவையே மையம் கொண்டு அவன் விழிவழியாகக் (point of view) கூறப்பட்டுள்ளது. நாவலின் கதைநிகழ்ச்சிகளின் அமைப்பில் ஒரு சிறுகதைக்குரிய அமைப்பான ஓர்மைப் பண்பே காணப்படுகின்றது. அந்த ஓர்மையைக் கட்டிக்காப்பதைப் போல வலுப்படுத்துவதைப் போல கதை விமானத்திலேயே தொடங்கி விமானத்திலேயே முடிவடைகின்றது. நாவலின் இறுதிவரை கதைச்சுவை குன்றாது வாசகர்களை ஆர்வநிலையோடு படிக்கத் தூண்டிய நாவலாக இது அமைந்திருந்தது. "என்னைச் சுற்றி ஒரு மர்மச் சுவரைக் கட்டிவிட்டு அதில் இவன் எப்படி-யெல்லாம் தத்தளிக்கப் போகிறான் என வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா?"(10) என சூர்யா நினைப்பது போலவேதான் நாவலில் கதை அமைக்கப்பட்டுள்ளது. இந்நாவலுக்குக் கிடைத்த வரவேற்பானது சோர்ந்து காணப்பட்ட மலேசியத் தமிழ் நாவலாசிரியர்கள் பலருக்கும் ஊக்கம் தருவதாய் அமைந்தது. இக்கருத்தரங்கு தந்த உந்துதலின் விளைவாகப் பலர் நாவல் எழுதமுனைந்ததும் பின் அவற்றை வெளியிட்டதனையும் காணமுடிந்தது. ஆக, தொன்னூறுகளில் நாவல்களின் எண்ணிக்கை உயர்வுக்கு இந்நாவலுக்காக நடத்தப்பட்ட கருத்தரங்கும் ஒரு காரணம் எனில் மிகையில்லை.*

### *5.6.4 1992-ஆம் ஆண்டின் சிறந்த குறுநாவல்*

*தொன்னூறுகளில் குறிப்பாக 1992-இல் எம். துரைராஜ் அவர்கள் நடத்திய இதயம் இதழில் தொடராக வெளிவந்த கொப்புளங்கள் எனும் தலைப்பிலான குறுநாவல் அவ்வாண்டின் சிறந்த குறுநாவல் வீ. செல்வராஜ் அவர்களால்*

அடையாளங்காணப்பட்டு அவரது ஆண்டுத்தொகுப்பான மலேசியத் தமிழ் இலக்கியம் 1992 எனும் நூலில் இணைக்கப்பட்டுள்ளது. இக்குறுநாவல் பேராசிரியர் ரெ. கார்த்திகேசுவின் இரண்டாவது சிறுகதைத் தொகுப்பான மனசுக்குள் (1995) என்ற தொகுப்பிலும் சேர்க்கப்பட்டுள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது. சமூகச் சீர்கேட்டைக் கதைப்பொருளாகக் கொண்ட படைப்பான இதில் சமூகத்தில் குழந்தை வளர்ப்பில் காணப்படும் செல்லரித்துப்போன ஒரு போக்கொன்று காட்டப்படுகின்றது. நம்மவர்கள் குழந்தை வளர்ப்பில் கடைபிடிக்கும் மிகையான கண்டிப்பு (சூடு போடுவது) ஏற்படுத்தும் பின்விளைவுகளை நடப்பியல் பாங்கில் இப்படைப்பு விளக்குகின்றது. "இவன எப்பிடித் திருத்தறது. இது ஒன்னுதான் எனக்குத் தெரிஞ்ச வழி! எங்கப்பா எனக்கு எத்தனை சூடு போட்டு வளத்தாரு தெரியுமா?"(11) என இக்கதையில்வரும் ரவீந்திரன் தன் மனைவியைப் பார்த்து இயல்பாகக் கூறுவது பிள்ளைகள் வளர்ப்பில் நம்மவர்கள் காலம் கடந்த சிந்தனைகளைக் கொண்டிருப்பதும் பிள்ளைகள் வளர்ப்பில் காலத்தால் பின்னுக்குத் தள்ளப்பட்டிருப்பதும் காலவளர்ச்சியை அறியாமல் இருப்பதும் உணர்த்தப்படுகின்றது. இக்கதையில் வரும் ரவீந்திரன், பிரேமா தம்பதியினர் சமூகத்தில் படிப்பறிவு குறைந்த கணவன், மனைவி ஆகியோருக்குப் பிரதிநிதியாகவும் அவர்களின் மகன் ஆனந்தன் வளர்ப்புச் சரியாக இல்லாத பிள்ளைக்குப் பிரதிநிதியாகவும் காட்டப்பட்டுக் கதைப்பொருளுக்கும் கருபொருளுக்கும் உயிர் கொடுத்துள்ளனர். மலேசியத் தமிழ்நாவல் இலக்கியம் நடப்பியல் பாங்கில் சொல்லத் தொடங்கியுள்ளதற்கு இக்குறுநாவல் சிறந்ததோர் எடுத்துக்காட்டாக அமைகின்றது.

**5.6.5 மலேசியத் தமிழ்நாவலில் துப்பறியும் போக்கு**

மர்மமும் அதனையொட்டிய துப்பறிதலும் தமிழ் நாவலுக்குப் புதிதல்ல. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ் நாவல் உலகில் பரவலாகத் தமிழக நாவலாசிரியர்களால் கையாளப்பட்ட போக்குகள் அவை. அக்காலப்பகுதியில் (1900-1930) தமிழ் நாவல் உலகில் கொடிகட்டிப்பறந்த ஜாம்பவான்கள் என வருணிக்கப்பட்ட வடுவூர் துரைசாமி ஐயங்கார், ஆரணி குப்புசாமி முதலியார், ஜே.ஆர்.ரங்கராஜீ ஆகியோர் இத்துறையை வேகமாக வளர்த்துவிட்டவர்கள் ஆவர். முப்பதுகளில் கல்கி ஆசிரியருக்குப்பிறகு தமிழ் நாவல் உலகம் நடப்பில் நெறிக்குத் திரும்பி விட்டதால் தமிழக நாவல்களில் துப்பறிதலும் மர்மப்பண்பும் ஏறத்தாழ மரித்துப்போன போக்காகவே போய்விட்டன. தொடக்ககால மலேசியத் தமிழ் நாவல்களிலும் ஓரளவிற்கு இப்போக்குகள் தமிழகத்தின் தாக்கங்களினால் காணப்பட்டன. தமிழகத்தைப் போலவே பின்னாளில் மலேசியாவிலும் அதன் செல்வாக்கு வழக்கிழந்து போனது. ஆனால், இப்போக்கு மலேசியத் தமிழ் நாவல்களில் அவ்வப்போது தலைநீட்டுவதைக் காண முடிகின்றது. அறுபதுகளிலும் எழுபதுகளிலும் எண்பதுகளிலும் ஓரிரு நாவல்களாவது மர்மம், துப்பறிதல் ஆகிய போக்குகளைக் கொண்டு அமைவதை ஆய்வாளர்கள் அறிவர். அவ்வகையில் தொன்னூறுகளில் வா! அருகில் வா! (1990) எனும் தொகுப்பில் வா! அருகில் வா!, நெஞ்சுக்குத் தெரியும் எனும் தலைப்புகளில் அமைந்துள்ள இரு வேறு குறுநாவல்கள் மர்மம், துப்பறிதல் ஆகிய போக்குகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. இவ்விரு குறுநாவல்களும் தினமணி பத்திரிகையில் தொடராக வெளிவந்தன. "மலேசிய மண்ணில் முதன்முதலாக தவழவிருக்கும் முதல் மர்மநாவல் என்ற பெருமைக்குரியவன் நான் என்பதைவிட, அதில் வாசகர்களுக்குத்-தான் அதிகம் பங்குண்டு என்பதில் எனக்கு இரட்டிப்பு மகிழச்சி" என்று தன்னுரையில் படைப்பாளர் கூறும் கூற்றில் அவரது மலேசியத் தமிழ்நாவல் இலக்கியம் பற்றிய பிரக்ஞை எத்தகையது என்பதனைக் காட்டுவதாய் உள்ளது. தன்னைக் காதலித்துப் பின் கொன்றுவிட்ட காதலன் குமாரைக் காத்திருந்து பழிவாங்கும் ஆவிப்பெண் நித்யாவின் கதையைத் திகிலுடனும் விறுவிறுப்புடனும் கூறும் படைப்பு வா! அருகில் வா!. நெஞ்சுக்குத் தெரியும் எனும் குறுநாவலிலும் ஏறத்தாழ ஓரே கதையமைப்பே காணப்படுகின்றது. தயாளனால் காதலித்துக் கைவிடப்பட்ட பெண் சுமதி அவனைத்தேடும் முயற்சியின்போது விபத்தில் இறந்து ஆவியாகக் காதலனைச் சுற்றி வர, விவரமறிந்து அவனும் தன்னையறியாமல் மாடியிலிருந்து விழுந்து இறந்துபோகும் கதை திகிலுடன் காட்டப்பட்டுள்ளது. இவ்விரு குறுநாவல்களிலுமே ஆவிக்கதைமாந்தர் வருவதாகக் காட்டப்படுவது நாவல் இலக்கியத்தின் நடப்பியல் தன்மைக்கு ஊறுவிளைவிப்பதாய் உள்ளது.

**5.6.6 மலேசியத் தமிழ்நாவலில் புதியபோக்கு**

தொன்னூறுகளில் மலேசியத் தமிழ்நாவல்களில் பெண்களின் பிரச்சினைகளை மாறுபட்ட கோணத்தில் அணுகப்பட்டு பார்க்கப்படும் நிலை உருவானது. அவ்வகையில் பெண்பிரச்சினையைத் துணிச்சலாக மாறுபட்ட கோணத்தில் அணுகிய முதல் மலேசியத் தமிழ் நாவலாக சை.பீர் முகம்மதுவின் பெண்குதிரையைக் (1997) குறிப்பிடலாம். பரவலாகவும் தீவீரமாகவும் பெண்ணியம் பேசப்படும் இந்நாளில் அதனைத் தொட்டுப்பேசி பெண்ணியத்தைப் பற்றி வாசகர்களைச் சிந்திக்கத் தூண்டிய முதல் மலேசியத் தமிழ் நாவல் இது. இந்நாவல் மலேசிய நண்பன் பத்திரிகையில் தொடராகவந்து பின் நூலுருவம் பெற்றது. தொடராக வந்தபோதே வாசகர் மத்தியில் சலசலப்பையும் சச்சரவையும் ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது. முரண்பட்ட போக்குகள் உடைய பெண்களிருவரை இந்நாவலில் படைத்து அவர்களின் வாயிலாகப் பெண்ணின் பலத்தையும் பலவீனத்தையும் அடையாளங்கண்டு வெளிப்படுத்திய நாவலாக இது அமைகின்றது. இன்றைய நிலையில் மாற்றங்கண்டு வரும் இந்தியப் பெண்களின் நிலையைப் பற்றியும் மேலைநாடுகளில் தோன்றி வளர்ந்து வந்துள்ள தீவீரவாதப் பெண்ணியச் சிந்தனைகள் இந்திய, தமிழ்ப் பண்பாட்டில் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தையும் விளைவையும் இந்நாவல் வெளிப்படுத்த முயன்றுள்ளது. மேற்கத்திய நாகரிகத்தில் பெண்கள் மத்தியில் காணப்படும் 'லெஸ்பியன்' உறவில் இந்நாவலின் கதைத்தலைவி கமலவேணி ஈடுபடுவதாக நாவலாசிரியர் காட்டுவதானது மலேசியத் தமிழ் நாவல் இலக்கியத்திற்குப் புதிய போக்காக உள்ளது. "முதலில் பெண்மை என்று குறிக்கப்-பட்டிருக்கும் வரையறைகளை மீறவேண்டும். இந்த மீறுதல் ஒன்றுதான் விடுதலைக்கு வழி. முதலில் எங்களைப் பாருங்கள். நாங்கள் தொழிலால் வெவ்வேறு தளங்களில் இயங்குகிறோம். ஆனால், ஏற்றத்தாழ்வுகள் இல்லை. நாங்கள் மூவரும் ஒரே குடும்பமாக வாழ்கிறோம். ஐ மீன் கணவன் மனைவி போல வாழ்கிறோம். வீ ஆர் லெஸ்பியன்ஸ் அதாவது ஓரினக் காதலர்கள். இதில் வெட்கப்படுவதற்கு ஒன்றுமில்லை. பெண்கள் விடுதலை பெற முதலில் ஆண் சேர்க்கையிலிருந்து விடுபட வேண்டும் என்பது எங்களுடைய கொள்கை"(12) என இக்கதையில் வரும் மார்கிரெட் கூறுவது தீவீரவாதப் பெண்ணியமாகக் காணப்படுவதுடன் மலேசியத் தமிழ் வாசகர்களுக்குப் புதியதாகவும் உள்ளது. அதனைக் காட்டியுள்ள நாவலாசிரியரின் துணிச்சல் வியக்கும் வகையில் உள்ளது. இந்நாவலுக்குப்பின் பெண்ணியம் பற்றிப் பரவலாகவும் விரிவாகவும் மலேசியத் தமிழ்நாவல் இலக்கியத்தில் பேசுதற்கு வழிவகுத்துத் தந்த முன்னோடி முயற்சியாக இந்நாவல் அமைகின்றது.

***5.6.7 'சம்ப்பா - நரேந்தர்' குறுநாவல் போட்டி (1999)***

*தொன்னூறுகளின் இறுதியில், செப்டம்பர் 1999-இல் பேராசிரியர் ரெ.கார்த்திகேசுவின் நாளைக்கு எனும் தலைப்பிலமைந்த குறுநாவல் தமிழகத்தில் நடத்தப்பட்ட 'சம்ப்பா-நரேந்தர்' குறுநாவல் எழுதும் போட்டியில் பரிசு பெற்றது குறிப்பிடத்தக்கது.(13) தமிழகத்தில் நடத்தப்பட்ட குறுநாவல் போட்டியில் பரிசுபெற்ற முதல் மலேசியத் தமிழ்ப்படைப்பு என்ற சிறப்பினை இக்குறுநாவல் பெற்றுள்ளது. 1976-இல் ராணிமுத்து என்ற தமிழக இதழில் வெளிவந்த மா.இராமையாவின் எதிர்வீடு எனும் நாவலுக்குப்பிறகு கணையாழி இதழில் (செப்டம்பர், 1999) வெளிவந்து தமிழக வாசகர்களால் அறியப்பட்ட நாவல் இது. பெண்ணியப் பார்வை கொண்டு எழுதப்பட்ட நாவலாக இது அமைகின்றது. நிகழ்காலத்தில் பெண்கள் தங்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளைக் கண்டு மூலையில் முடங்கிவிட மாட்டார்கள்; அவன் கணவனாகவே இருந்தாலும் எதிர்க்கத் துணிவர் என்ற நிகழ்காலத்து நடப்பியல் உண்மையை ராஜேஸ்வரி (ராஜி), பத்மா ஆகிய இரு சகோதரிகளின் வாயிலாகக் காட்டியுள்ளார் கதாசிரியர். "இதோ பாருங்க! கொஞ்சம் யோசிச்சுப்பாருங்க! அவளுக்கு வேற யார் இருக்கா? எங்க போவா? வேற வழியே இல்ல! என்றாள். வேற வழி இல்லியா? நீ இந்த வீட்ட விட்டு வெளியே போய் அவளோட குடும்பம் நடத்து. நீ அவளோட தொடர்பு வச்சிக்கறதுன்னா நம்ம உறவு அறுந்து போகும். நானும் நீயும் கணவன்-மனைவி இல்ல! கோப்பையைக் கீழே வைத்தாள். சரி என்றாள். சேகரன் அதிர்ந்தான். என்ன சரி?... அதான் ஒவ்வொரு முறையும் உறவு அறுந்துபோகும்னு மிரட்டிக்கிட்டே இருக்கிங்கள! அவ்வளவு சுலபமா அறுத்துட முடியும்னா அறுத்துக்கத் தயார்! என் தங்கச்சிய நானே தனியா வச்சிக் காப்பத்தறேன்.... சம்பாரிக்கிறோம்கிற திமிரா என்றான் சேகரன். ஏன் இருக்கக்கூடாது? உங்களுக்குச் சமமாபாரிக்கிற திமிர் இருக்கும்போது உங்களுக்குச் சமமா சம்பாதிக்கிற எனக்கு இருக்கக் கூடாதா?. அப்ப வீட்டவிட்டு வெளியே போயிடுவ? ஆமா என்றாள். அப்ப புள்ளைங்க? உங்க இஷ்டம். நீங்களே வச்சிக்கலாம். வேண்டாம்ன்னா என்னோட அனுப்பலாம்"(14) எனவரும் உரையாடற்பகுதி இன்றைய சூழலில் கணவன், மனைவி உறவுமுறையில் ஏற்பட்டுவரும் மாற்றங்களைக் காட்டுவதோடு மிதவாதப் பெண்ணியத்தையும் காட்டுவதாக உள்ளது. தொன்னூறுகளில் பெண்ணியச் சிந்தனைகள் கொண்ட படைப்புகளுக்கு இக்குறுநாவலும் சிறந்த எடுத்துக்காட்டாக அமைகின்றது. மலேசியத் தமிழ் இலக்கியத்திற்கு அயலகத்தில் நல்ல மதிப்பையும் மரியாதையையும் ஏற்படுத்தித் தந்த படைப்பு இது.*

***6. புத்தாயிரத்தில் மலேசியத் தமிழ்நாவல் இலக்கியம்***

*இப்புத்தாயிரத்தில் மலேசியத் தமிழ்நாவல் இலக்கியம் நல்ல வளர்ச்சிகண்டு தரத்திலும் எண்ணிக்கையிலும் உயர்வு கண்டுள்ளது. இப்புத்தாயிரத்திலும் மூத்த எழுத்தாளர்களே தொடர்ந்து நாவல் எழுதும் முயற்சியில் தீவீரம் காட்டியுள்ளனர். அவ்வகையில் மா. இராமையா, கோலலங்காட் அ.ரெங்கசாமி, நா. ஆ. செங்குட்டுவன், ப.சந்திரகாந்தம், பேராசிரியர் ரெ. கார்த்திகேசு போன்றோர் நாவல் எழுதி வருகின்றனர்.*

***6.1 பத்திரிகைத் தொடர்களும் நூலாக்க முயற்சிகளும்***

*இப்புத்தாயிரத்தில் நாவலாசிரியர்கள் பத்திரிகைகளில் தொடர்கதை எழுதுவதில் அதிக ஈடுபாடு காட்டி வருவதனைக் காணமுடிகின்றது. ப. சந்திரகாந்தம் அமுதசுரபிகள் (மலேசிய நண்பன் - 2001), ஆளப்பிறந்த மருதுமைந்தன் (தமிழ் நேசன் - 2001), நா. ஆ. செங்குட்டுவன் கனவுப்பந்தல் (மலேசிய நண்பன் - 2001), பேராசிரியர் ரெ. கார்த்திகேசு சூதாட்டம் ஆடும் காலம் (மலேசிய நண்பன் - 2004) அ. சந்திரசேகரன் நீர்நிலைகள் (மலேசிய நண்பன் - 2005) கல்யாணி மணியம் வஞ்சிக்கோட்டை (மலேசிய நண்பன்) முதலான தொடர்களை எழுதியுள்ளனர். இத்தொடர்களுள் அமுதசுரபிகள், சூதாட்டம் ஆடும் காலம் ஆகியவை மட்டுமே பின்னர் நூலுருவம் பெற்றுள்ளன.*

*கடந்த காலங்களில் பத்திரிகைகளில் எழுதிய தொடர்களை இப்புத்தாயிரத்தில் படைப்பாளர்கள் நூலுருவில் கொண்டு வந்துள்ள-தனையும் காணமுடிகின்றது. அவ்வகையில் நா.ஆ.செங்குட்டுவன் துன்பங்கள் உறங்குவதில்லை (தமிழ் முரசு - 1970), கால்களே நில்லுங்கள் (தமிழ் மலர் - 1973), கோலலங்காட் அ.ரெங்கசாமி நினைவுச்சின்னம் (மயில் வார இதழ் - 1993) ஆகிய தொடர்கள் இப்புத்தாயிரத்தில் நூலுருவில் கொண்டு வரப்பட்டுள்ளன.*

***6.2 சிறுகதையாசிரியர்களின் பங்களிப்பு***

*நீண்டகாலமாகச் சிறுகதை எழுதிவருகின்றவர்கள் இப்புத்தாயிரத்தில் நாவல் துறையில் நுழைந்து தங்களின் நுண்மான் நுழைபுலத்தைக் காட்டி தங்களாலும் நாவல் படைக்கமுடியும் என நிலைநிறுத்திக் கொண்டதனைக் காண முடிகின்றது. அவர்களுள் நிர்மலா பெருமாள், கல்யாணி மணியம், சின்னருணா ஆகியோர் சிறப்பாக நினைவு கூரத்தக்கவர்கள் ஆவர். மலேசியத் தமிழ்நாவல்துறையில் பெண் எழுத்தாளர்களின் பங்களிப்பு மிகவும் அருகியே காணப்படும் குறையை ஓரளவுக்குப் போக்கும் வண்ணம் நிர்மலா பெருமாள், கல்யாணி மணியம் ஆகியோரின் நாவல் எழுதும் முயற்சிகள் இப்புத்தாயிரத்தின் தொடக்கத்தில் அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. இப்புத்தாயிரம் தொடங்கி இதுவரையில் இவ்விரு பெண்படைப்பாளர்களின் நாவல் முயற்சிகளைத் தவிர வேறு பெண்படைப்பாளர்களின் நாவல் எழுதும் முயற்சிகள் எதனையும் மலேசியத் தமிழ் நாவல் உலகம் காணவில்லை. இவ்விருவருள் மலேசியத் தமிழ்ச்சிறுகதை உலகம் நன்கு அறிந்த எழுத்தாளரான நிர்மலா பெருமாள் குயில்கூவி துயில்எழுப்ப (2002), வேள்வி (2007) ஆகிய தலைப்புகளில் இருநாவல்களை எழுதி நூல்வடிவில் கொணர்ந்துள்ளார். அதேபோன்று சிறுகதைத் துறையில் சிறந்து விளங்கிய கல்யாணி மணியம் அவர்கள் வஞ்சிக்கோட்டை (2005) எனும் தலைப்பில் மலேசிய நண்பன் இதழில் வரலாற்றுத் தொடரொன்று எழுதி வாசகர்களின் மதிப்பையும் பாராட்டையும் பெற்றார். இவருடைய இத்தொடர் தமிழக வரலாற்றுப் பின்னணியில் குறிப்பாக மூவேந்தர்களுள் சேரமன்னரைப்பற்றியதாக அமைந்திருந்தது. ஆனால், இத்தொடர் இன்னும் நூலுரு பெறவில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. நீண்ட காலமாகச் சிறுகதைத் துறையில் உழன்றுகொண்டிருந்த சின்னருணா வசந்தமே உன்னைத் தேடுகிறேன் எனும் சமூகத்தொடர்கதையொன்றை (மலேசிய நண்பன் - 2005) எழுதியிருந்ததனைக் காணமுடிகின்றது. இத்தொடரும் இன்னும் நூலுருவம் பெறாமலே உள்ளது.*

*இப்புத்தாயிரத்தில் இளைய தலைமுறையினரும் நாவலைத் தொடராக எழுதும் முயற்சியில் ஆர்வத்தோடு ஈடுபட்டுள்ளதனைக் காணமுடிகின்றது. அவ்வகையில் கி.உதயகுமாரி எனும் இளைய தலைமுறை எழுத்தாளர் மலேசிய நண்பன் இதழில் உன்னால்தான் நானே வாழ்கிறேன் (2005) எனும் தலைப்பில் எட்டுவாரத் தொடரொன்று எழுதியுள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது. இத்தொடரும் இதுவரையில் நூலாகவில்லை.*

***6.3 நாவலாசிரியர்களும் கள ஆய்வும்***

இப்புத்தாயிரத்தில் மலேசியத் தமிழ் நாவலாசிரியர்களின் கவனம் நாவல் படைப்பதில் உள்ள நுட்பங்களை அறிந்து அதனைச் சிறப்பாக மேற்கொண்டு நாவலை உயிரோட்டமுடனும் உண்மையின் சாயலிலும் எழுதுவதில் திரும்பியுள்ளதனைக் காணமுடிகின்றது. குறிப்பாக, நாவலில் கதையாக்க எடுத்துக்கொண்ட கதைப்பொருளை உள்ளவாறும் இயல்பாகவும் உண்மையின் சாயலிலும் வெளிப்படுத்திக் காட்டுவதற்குக் அக்கதைப்பொருளை நன்கறிந்து கொள்ள கள ஆய்வு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். விளக்குவதற்கு எடுத்துக்கொண்ட கதை நிகழ்ந்த இடங்களுக்கு நேரடியாகச் சென்றும் அதுதொடர்பான விரங்கள் அடங்கிய ஆவணங்களைப் பெற்றும் அதுபற்றி நன்கு தெரிந்த அல்லது நேரடி அனுபவம் உள்ளவர்களைச் சந்தித்து நேர்காணல் நடத்தியும் விவரங்களை முழுமையாகப் பெற்று நாவல்களைப் படைத்துள்ளநிலை இப்புத்தாயிரத்தில் வெளிவந்துள்ள சில நாவல்களைப் படிக்கும்போது அறியமுடிகின்றது. மலேசியத் தமிழ் நாவல்துறை நடப்பியல் பக்கம் திரும்பி நடைபோடத் தொடங்கிவிட்டதனை இது காட்டுவதாயுள்ளது. அவ்வகையில் கோலலங்காட் அ. ரெங்கசாமி, ப. சந்திரகாந்தம் ஆகிய இருவரும் இவ்வாறு உள்நாட்டில் கள ஆய்வில் ஈடுபட்டு நாவல்கள் படைத்து வெற்றியும் பாராட்டுகளும் பெற்றவர்கள் ஆவர். இவர்கள் கள ஆய்வில் திரட்டிய தரவுகள் நாவல்களுக்கு நடப்பியல் தன்மையையும் உண்மை உணர்வையும் தந்து நாவலைச் சமூகத்தின் சமகால வரலாறாக ஆக்கியுள்ளதனைக் காணமுடிகின்றது. ப.சந்திரகாந்தம், கல்யாணி மணியம் ஆகியோர் தமிழகத்து வரலாற்று ஆவணங்களில் உழன்று தமிழகப் பின்னணியில் வரலாற்று நாவல்கள் படைத்துப் பாராட்டுப் பெற்றனர்.

இவர்களுள் கோலலங்காட் அ. ரெங்கசாமி தொன்னூறு-களிலிருந்து தாம் எழுதிவரும் அத்தனை நாவல்களையும் கள ஆய்வில் ஈடுபட்டு வேண்டிய தரவுகளையும் விவரங்களையும்பெற்று நாவல்கள் எழுதிவருவது குறிப்பிடத்தக்க ஒன்று. புத்தாயிரத்தில் வெளிவந்துள்ள அவரது மூன்று நாவல்களான நினைவுச்சின்னம் (2005, லங்காட் நதிக்கரை (2006), இமயத்தியாகம் (2007) ஆகியன கள ஆய்வின்வழி விளைந்த நாவல்கள் ஆகும். இவை மேன்றும் இரண்டாம் உலகப்போருக்கு முன்னும் உலகப்போரின் போதும் உலகப்போருக்குப் பின்னும் அன்றைய மலாயாவின் அரசியல், சமூகப் பின்னணியில் நாவலாக அமைக்கப்பட்டுள்ளன. அப்போதைய அனைத்துலக, உள்நாட்டு அரசியல், சமூக உண்மை நிலவரங்களை அறிந்துகொள்ள தாம் கள ஆய்வில் ஈடுபட்டு, தரவுகளையும் விவரங்களையும் திரட்டி, அவற்றின் துணைகொண்டே இந்நாவல்களை எழுதியதாக இந்நாவல்களின் முன்னுரைகளில் குறிப்பிட்டுள்ளார். அவர் கள ஆய்வில் ஈடுபட்ட விவரங்களும் தகவல்கள் திட்டியதற்கான சந்திப்பு நடத்தி விவரங்கள் வழங்கியவர்கள் பற்றிய விவரங்களும் கதைச்சம்பவங்கள் நடந்தேறிய இடங்களைப் பற்றிய வரைபடங்களும் மேற்கோள் அடங்கிய நூற்பட்டியலும் பின்னிணைப்புகளாக அவரால் படைப்பில் இணைக்கப்பட்டுள்ளன. இவருடைய லங்காட் நதிக்கரை எனும் நாவல் இரண்டாம் உலகப்போருக்குப் பிந்திய மலாயாவில் காணபட்ட உண்மை நிலவரத்தை அடிப்படையாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ள திறத்தால் 2004/2005 ஆண்டில் நடைபெற்ற நாவல் எழுதும் போட்டியின் சிறப்புப்பரிசான மலேசிய ரிங்கிட் பத்தாயிரத்தைப் பெற்றது இங்குக் குறிப்பிடத்தக்கது.

நாவலாசிரியர் ப.சந்திரகாந்தம் இயல்பாகவே வரலாற்றுத்துறையில் மிகுந்த ஈடுபாடும் விருப்பமும் கொண்டவர். தமிழ் நேசன் நாளிதழில் மலேசிய இந்தியர்களின் கடந்தகால வாழ்க்கையைப்பற்றிய வரலாற்றுச் செய்திகளைப் பல வாரங்களுக்குத் தொடர்ந்து எழுதியவர் ஆவார். அதற்காக அவர் அரிதின் முயன்றுபெற்ற கள ஆய்வுச் செய்திகளையும் திரட்டிய தகவல்களையும் துணையாகக்கொண்டு இருபதாம் நூற்றாண்டின் முப்பதுகளின் பின்னணியில் அமுதசுரபிகள் எனும் தலைப்பிலமைந்த வரலாற்றுப் பின்னணிகொண்ட நாவலைக் கலைத்தன்மையோடும் கட்டமைப்புடனும் சிறப்புடன் படைத்துள்ளார். இந்நாவல் மலேசிய நண்பன் நாளிதழில் 2001-ஆம் ஆண்டில் தொடராக எழுதி, பின் நூலுரு பெற்றது. தயாபரன் எனும் நாடகக் கலைஞனைப்பற்றிய கதையான இது காலனித்துவத் தமிழகத்தையும் மாலாயாவையும் பின்னணியாகக் கொண்டு புனையப்பட்டுள்ளது. தமிழகத்திலும் மலாயாவிலும் முப்பதுகளில் நாடகக் கலையின் இடமும் நிலையும் எத்தகையது என்பதும் அரசியல், பொருளாதார நிலவரங்களும் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது. எனவே, சிறப்புகள் பல கொண்டிருந்த காரணத்தால் இந்நாவல் 2002 - 2006 ஆகிய ஆண்டுகளில் வெளிவந்த மலேசியத் தமிழ் நாவல்களுள் சிறந்ததாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் டான்ஸ்ரீ மாணிக்கவாசகம் புத்தகப் பரிசான ரிங்கிட் மலேசியா ஏழாயிரத்தைப் பெற்றது இங்குக் குறிப்பிடத்தக்கது. இவர் தமிழ் நேசன் இதழில் ஆளப்பிறந்த மருது மைந்தன் எனும் தமிழகப் பின்னணியில் அமைந்த தொடர் ஒன்றையும் 2001-இல் எழுதினார். தமிழகத்தில் ஐரோப்பியரின் வரவிற்குப்பின் குறிப்பாக பதினெட்டாம் நூற்றாண்டிற்குப் பிந்திய சூழலைப் பின்னணியாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. ஆங்கிலேயர்கள் செல்வாக்கு, தமிழகத்தில் வேகமாகப் பரவிவரும் சூழலில் சிவகங்கை சமஸ்தானத்தின் மருது பாண்டியர்களின் கடைசி வாரிசான துரைசாமியை மையப்படுத்தி தமிழகத்திலும் அன்றைய பினாங்கிலும் கதை நடப்பதாகக் காட்டப்-பட்டுள்ளது.

### *6.4 மலேசியத் தமிழ் நாவல் இலக்கியத்தின் பொற்காலத் தொடக்கம்*

இப்புத்தாயிரத்தில் கடந்துவந்த சில ஆண்டுகளில் மலேசியத் தமிழ் நாவல் இலக்கியம் அடைந்துவரும் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு அது பொற்காலத்தின் தொடக்கப்படிகளில் இருந்து கொண்டிருக்கின்றது எனலாம். மலேசியத் தமிழ் இலக்கிய வகைகளிலேயே மிகவும் குறைவான வளர்ச்சியைப் பெற்ற இலக்கிய வடிவம் நாவல் இலக்கியமே. இவ்வுண்மையினை ஆய்வாளர்களும் எழுத்தாளர்களும் இலக்கிய ஆர்வலர்களும் நன்கறிவர். நாவல் இலக்கியத்தை இம்மலேசிய மண்ணில் நன்கு தழைக்கச்செய்ய விடுதலைக்குப்பின் அவ்வப்போது ஆர்வமுள்ள தரப்பினர் பலர் முயன்றுள்ளனர். அவ்வகையில் 1969, 1973, 1979, 1987, 1989 ஆகிய ஆண்டுகளில் நாவல்/குறுநாவல் எழுதும் போட்டிகள் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம், தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கம், தமிழ் நேசன் பத்திரிகை, சா. ஆ. அன்பானந்தன் இலக்கியப் பரிசு வாரியம் ஆகிய அமைப்புகள் இப்போட்டிகளை நடத்தின. எனினும், வளர்ச்சியில் மிகவும் பின்னுக்கு இருக்கின்ற மலேசியத் தமிழ் நாவல் இலக்கிய வளர்ச்சிக்கு இப்போட்டிகள் கடலில் கரைத்த பெருங்காயம் போலப் போதுமானதாக இருக்கவில்லை. தவிர, இப்போட்டிகளில் வந்து சேர்ந்த நாவல்களின் எண்ணிக்கையும் மிகக் குறைவாகவே இருந்தன என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. எனவே, அக்குறையைப் போக்கி நாவல் இலக்கியத்தை நன்கு வளர்த்தெடுத்து, புதிய தோற்றமும் ஏற்றமும் தருவதற்கான பல முயற்சிகள் பல்வேறு தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம், தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், அஸ்ட்ரோ வானவில் செயற்கைக்கோள் தொலைக்காட்சி, மலேசியத் தமிழ்ப் பத்திரிகைகள் போன்றவற்றால் பல்வேறு நடவடிக்கைகளும் முயற்சிகளும் நாவல் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு மேற்கொள்ளப்-பட்டு வருகின்றன. ஆனால், இப்புத்தாயிரத்தாம் ஆண்டுகளல் 2004-ஆம் ஆண்டிலிருந்து 2007-ஆம் ஆண்டுவரை நடத்தப்பட்ட நாவல் எழுதும் போட்டிகளின் எண்ணிக்கை நான்கு ஆகும். இப்போட்டிகளில் ஆர்வத்தோடு

கலந்துகொள்ளும் எழுத்தாளர்களின் எண்ணிக்கையும் கணிசமாகக் கூடியுள்ளது. இவற்றுக்கெல்லாம் மேலாக இவ்வாண்டில் *(2007)* மட்டும் மூன்று நாவல்/குறுநாவல் எழுதும் போட்டிகள் அறிவிக்கப்பட்டன. இவற்றைக் கருத்திற்கொண்டே மலேசியத் தமிழ் நாவல் இலக்கியத்திற்குப் பொற்காலம் தொடங்கியுள்ளது எனப்படுகின்றது. இதனை அறிந்தே மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் நடப்புத் தலைவர் உயர்திரு பெ.ராஜேந்திரன் அவர்கள் பெருமித உணர்வோடு, "மலேசியத் தமிழ் நாவல்துறைக்கு இது பொற்காலம் எனலாமா?" என வியப்பாகக் கேட்பது சிந்திக்கத்-தக்கது.*(15)* இனி, இந்நான்கு போட்டிகள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:-

### 6.4.1 மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம், அஸ்ட்ரோ வானவில்

தொலைக்காட்சி, தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கம் இணைந்து நடத்திய நாவல் எழுதும் போட்டி *(2004/2005)* இப்போட்டி *2004,* மே மாதத்தில் அதிகாரபூர்வமாக ஓர் ஆடம்பர தங்கும் விடுதியில் கவிப்பேரரசு இரா.வைரமுத்து அவர்களால் அறிவிக்கப்பட்டது. மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் முன்னாள் தலைவர் அமரர் ஆதி குமணன் அந்நிகழ்வில் உடனிருந்தார். "மலேசியாவில் நல்ல நாவல்கள் அதிகம் தோன்றாத குறையைக் கருத்தில் கொண்டும் எழுதத் திறமையுள்ள முதிர்ந்த எழுத்தாளர்-களும் ஆர்வமுள்ள இளைய எழுத்தாளர்களும் போதிய ஊக்குவிப்பு இன்றி இருப்பதைக் கருத்தில் கொண்டும் இந்தப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டது" என்ற மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவரின் கூற்று இப்போட்டி ஏற்பாடு செய்ததற்கான நோக்கங்களைப் புலப்படுத்துவதாய் உள்ளது.*(16)* இப்போட்டிக்கு மொத்தம் *34* படைப்புகள் வந்து சேர்ந்தன. இப்படைப்புகளை மூன்று கட்டங்களில் நடுவர்கள் நியமிக்கப்பட்டு, எவ்விதத் குறுக்கீடுமின்றி, அவர்கள் மிகக்கவனமாகவும் சிறப்பாகவும் சிறந்த படைப்புகளை அலசி ஆராய்ந்து தேர்ந்தெடுத்தனர். மூன்றாவது கட்டமான இறுதிக் கட்டத்தேர்விற்குத் தமிழகத்திலிருந்து மூவரும் மலேசியாவிலிருந்து ஒருவரும் நடுவர்களாக நியமிக்கப்பட்டனர். தமிழகத்திலிருந்து நாவல்துறையிலும் எழுத்துத்துறையிலும் சிறந்து விளங்கும் எழுத்தாளர்களான சிவசங்கரி, பிரபஞ்சன், திலீப் குமார் ஆகியோரோடு மலேசியாவிலிருந்து மலாயாப் பல்கலைக்கழகத்தின் இந்திய ஆய்வியல் துறையின் இணைப்பேராசிரியர் டாக்டர் வே.சபாபதியும் இறுதிக்கட்ட நடுவர்களாக இருந்து செயல்பட்டு பரிசுக்குரிய நாவல்களைத் தேர்ந்தெடுத்தனர். அவ்வகையில் சிறப்புப் பரிசுக்குக் கோலலங்காட் அ. ரெங்கசாமியின் லங்காட் நதிக்கரை நாவலும் *(RM10,000),* முதற்பரிசு *(RM2,500)* சீ.முத்துசாமியின் மண் புழுக்கள் நாவலும், இரண்டாம் பரிசு *RM1,500)* ம.நவீனின் ஞானத்தின் வாசலிலே நாவலும் மூன்றாம் பரிசு *(RM1,000)* கோ.புண்ணியவானின் நொய்வப்பூக்கள் நாவலும் தேர்ந்தெடுக்கப்பட்டு, பரிசுகள் வழங்கப்பட்டன. இவற்றுள் லங்காட் நதிக்கரை, மண்புழுக்கள் மட்டுமே நூல் வடிவம் பெற்றுள்ளன. ஏனைய படைப்புகளான ஞானத்தின் வாசலிலே, நொய்வப்பூக்கள் ஆகியன நூல்வடிவில் வராமலே உள்ளன. தவிர, ஆறுதல் பரிசுக்குரிய பத்து நாவல்களும் அடையாளங் காணப்பட்டு, பரிசுத்தொகை தலா ஒவ்வொன்றுக்கும் *RM500* வழங்கப்பட்டன. ஆறுதல் பரிசுபெற்ற நாவல்களின் விவரம் பின்வருமாறு:-

அ. அசலா? நகலா?
ஆ. மறுமலர்ச்சி
இ. பெண்ணினத்தின் இருபெரும் பேரொளிகள்
ஈ. வாழ்க்கையே அலைபோலே
உ. இக்கரையா? அக்கரையா?
ஊ. மனவீணை
எ. மண் மாற்றம்
ஏ. ஆண்களும் பெண்களும்
ஐ. மலரே மௌனம் ஏன்?
ஒ. உனக்காகவே...!

ஆகியன. இவையாவும் இன்னும் நூலுருவம் பெறாமல் எழுத்துப் பிரதிகளாகவே உள்ளன. மொத்தம் *14* நாவல்கள் பரிசுகளைப் பெற்றுள்ளன. ஆக, இதுவரை நடத்தப்பட்ட போட்டிகளில் அதிகமான படைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டது மலேசியத் தமிழ்நாவல் வரலாற்றில் இதுவே முதல் முறையாகும். இப்படைப்புகளால் உயர்வடைந்தது நாவல்களின் எண்ணிக்கை மட்டுமல்ல, மலேசியத் தமிழ்நாவல் இலக்கியத்தின் தரமும்கூட உயர்ந்துள்ளது. தவிர, இப்போட்டியின்வழி மூத்த எழுத்தாளர்களோடு இளையதலைமுறை எழுத்தாளர்களும் கலந்து கொண்டுள்ளதானது போட்டியின் நோக்கத்தை எட்டிப் பிடித்ததாக உள்ளது. இப்போட்டியில் வயதில் மிகவும் இளைஞரான ம. நவீன் (அப்போது அவருக்கு வயது இருபத்தொன்று) இரண்டாம் பரிசு பெற்றது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டிக்கான பரிசளிப்பு விழா மிகவும் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பரிசளிப்பு நாளன்று *(30.09.2005)* முதலில் நாவல் பற்றிய கருத்தரங்கு ஒன்றுக்குச் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டது. அக்கருத்தரங்கில் நாவல் இலக்கியம் பற்றியும் போட்டியைப்பற்றியும் போட்டிக்கு வந்துகிடைத்த நாவல்கள் பற்றியும் நடுவர்களும் எழுத்தாளர்களும் இலக்கிய ஆர்வலர்களும் பார்வையாளர்களும் அலசியும் ஆராய்ந்தும் கலந்துரையாடினர். இப்பரிசளிப்புவிழாவும் கருத்தரங்கும் கோலாலும்பூருக்கு அருகேயுள்ள *Palace of The Golden Horses Hotel* எனும் பிரபல நட்சத்திரத் தங்கும் விடுதியில் மிக்க மதிப்போடுகூடிய நிலையில் நடத்தப்பட்டது. மலேசியத் தமிழ் இலக்கிய உலகு முதன்முறையாக மிகவும் பிரபலமான இடத்தில் விழா நிகழ்ச்சிகளைக் கண்டதானது மலேசியத் தமிழ் இலக்கியமும் மலேசியத் தமிழ் எழுத்தாளர்களும் கௌரவமானதோர் இலக்கை அடைய மேற்கொண்ட இலட்சியப் பயணமாய் அது அமைந்திருந்தது எனலாம். மிகவும் மதிப்பான, உயர்வான இடத்தில் பரிசளிப்பு நடத்தப்பட்டதானது எழுத்தாளர்களுக்குக் கொடுக்கப்பட்ட கௌரவமும் கிடைத்த மதிப்பும் மரியாதையும் ஆகும்.

### 6.4.2 2007-இல் அறிவிக்கப்பட்டுள்ள நாவல்/குறுநாவல் எழுதும் போட்டிகள்

இரண்டாவது முறையாக மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் அஸ்ட்ரோ வானவில் செயற்கைக்கோள் தொலைக்காட்சி நிலையத்துடன் இணைந்து இவ்வாண்டு ஏப்ரல் மாதத்தில் (01.04.2007) பெட்டாலிங் ஜெயா, ஹில்டன் தங்கும் விடுதியில் கவிப்பேரரசு இரா. வைரமுத்து அவர்களால் அதிகாரபூர்வமாகத் தொடக்கி வைக்கப்பட்டது.

தமிழ் நேசன் நாளிதழ் மலேசியாவின் 50-ஆம் ஆண்டின் சுதந்திர முன்னிட்டு குறுநாவல் எழுதும் போட்டியினை நடத்தியுள்ளது. தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கமும் மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையும் (துறையின் ஐம்பதாவது பொன்விழாவினை முன்னிட்டு) இணைந்து நாவல் எழுதும் போட்டியினை ஏற்பாடு செய்துள்ளன.(17)

இவ்வாண்டில் அறிவிக்கப்பட்டுள்ள மேற்குறிப்பிட்டுள்ள மூன்று போட்டிகளுக்கான முடிவுகளும் அதற்கான பரிசளிப்பு நிகழ்வுகளும் இன்னும் அறிவிக்கப்படாதால் அவற்றை ஒட்டிய செய்திகளையும் கருத்துகளையும் பிற விவரங்களையும் இக்கட்டுரையில் குறிப்பிட முடியவில்லை.

இப்புத்தாயிரம் தொடங்கி இன்னும் ஏழு ஆண்டுகள் முழுமையாகப் நிறைவடையாத நிலையில் மலேசியத் தமிழ் நாவல் இலக்கியம் சிறப்பான வளர்ச்சிகாண வேண்டும் என்பதற்காக இத்தனைப் போட்டிகள் அறிவிக்கப்பட்டுள்ளதானது மலேசியத் தமிழ் நாவல் இலக்கியத்தைத் தரமாக்குவதற்குப் போடப்பட்டுள்ள நல் உரமாகும். எனவே, எதிர்வரும் காலங்களில் மலேசியத் தமிழ் நாவல் இலக்கியம் எண்ணிக்கையிலும் தரத்திலும் சிறந்து விளங்கும் என்பதனை இப்போட்டிகளைக் கொண்டு துணிந்து நம்பலாம்.

### 6.4.3 புத்தாயிரத்தில் மலேசியத் தமிழ் நாவல் கருத்தரங்கு

இரண்டாவது முறையாக நாவல் எழுதும் போட்டி இவ்வாண்டு ஏப்ரல் மாதத்தில் அறிவிப்புச் செய்த பின்னர், எழுத்தாளர்களுக்கும் இலக்கிய ஆர்வலர்களுக்கும் பயனளிக்கும் வகையில் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் மே மாதத்தில் (01-02/05/2007) நாவல் கருத்தரங்கு ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தது. இக்கருத்தரங்கு கோலாலும்பூரிலுள்ள Puteri Park தங்கும் விடுதியில் நடைபெற்றது. இக்கருத்தரங்கானது நாவல் எழுதிக் கொண்டிருப்பவர்கள் நாவல் இலக்கியத்தை ஒட்டிய கூடுதல் விவரங்கள், புதிதாக நாவல் எழுத விரும்புபவர்க்கு நாவல் இலக்கியம் பற்றிய உருவம், உட்கூறுகள் பற்றிய விவரங்கள், இளைய தலைமுறை எழுத்தாளர்களுக்கு நாவல் எழுதப் போதிய வழிகாட்டிக் குறிப்புகள், நாவல் இலக்கியத்தைப்பற்றி அறிந்துகொள்ள விரும்புபவர்க்கு நாவலைப் பற்றிய செய்திகள் போன்றவற்றை விளக்கும் நோக்கிலும் அவைகுறித்துக் கருத்துப்பரிமாற்றங்கள் நிகழ்த்தும் போக்கிலும் ஏற்பாடு செய்யப்படிருந்தது. ஆக, இக்கருத்தரங்கு ஒரு பயிலரங்காகத் திட்டமிடப்பட்டது. இப்பயிலரங்கில் பயிலரங்க உறுப்பினர்களை நாவலைப்பற்றிய விளக்கங்களைக் கேட்டபின்பு நாவல் எழுதுவதற்குரிய ஒரு கதைச்சுருக்கத்தை தயாரிக்கப் பணிக்கப்பட்டு, பின் கதைச்சுருக்கத்தை விளக்கியும் விவாதித்தும் சீர்செய்தும் தரப்பட்டது. இக்கருத்தரங்கில் கலந்து, நாவலை ஒட்டியும் பொதுவாகத் தமிழ் இலக்கியங்கள் பற்றியும் தம் எழுத்துலக வாழ்க்கையைப் பற்றியும் விளக்குவதற்கும் கருத்துப்பரிமாற்றம் நிகழ்த்துவதற்கும் தமிழகத்திலிருந்து சிறந்த பெண்ணிய எழுத்தாளரான திலகவதி ஐ. பி. எஸ். அவர்கள் வரவழைக்கப்படிருந்தார். இக்கருத்தரங்கில் அவரோடு இணைந்து நாவல் இலக்கியத்தின் கூறுகள் பற்றி (Aspects of the novel) மலாயாப் பல்கலைக்கழக இணைப்பேராசிரியர் டாக்டர் வே.சபாபதி அவர்கள் விளக்கமளித்தார். தம் நாவல் படைப்பு அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டதோடு கருத்தரங்கை மிகச் சிறப்பாக வழிநடத்தினார் மலேசியாவின் முன்னோடி நாவலாசிரியர்களுள் ஒருவரான பேராசிரியர் ரெ. கார்த்திகேசு அவர்கள். 2004/2005 -ஆம் ஆண்டின் நாவல் போட்டியில் சிறப்பு, முதல் பரிசுகளைப் பெற்ற கோலலங்காட் அ. ரெங்கசாமி, சீ. முத்துசாமி ஆகிய இருவரும் பரிசுபெற்ற நாவல் படைப்புபற்றிய (லங்காட் நதிக்கரை, மண் புழுக்கள்) தம அனுபவங்கள் பற்றியும் விளக்கங்கள் அளித்தனர். இவர்களோடு நாடறிந்த எழுத்தாளரும் மூத்த நாவல் ஆசிரியருமான ப.சந்திரகாந்தம் அவர்கள் கடந்த ஆண்டுக்கான (2006) டான்ஸ்ரீ மாணிக்கவாசகம் புத்தகப்பரிசுத் திட்டத்தின்கீழ் சிறந்த நூலுக்கான பரிசான மலேசிய ரிங்கிட் ஏழாயிரத்தைப் பெற்ற அவருடைய நாவலான அமுதசுரபிகள் கருவான, உருவான அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. மேலும், இக்கருத்தரங்கில் ஓர் அங்கமாக முதல்நாளின் மாலையில் நாவல் போட்டியில் பரிசு பெற்ற நாவல்களான லங்காட் நதிக்கரை, மண் புழுக்கள் ஆகிய இரு நாவல்களையும் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் அச்சிட்டு அவற்றுக்கு வெளியீட்டுவிழா நடத்தியதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. இக்கருத்தரங்கும் இரு நாவல்களின் வெளியீடும் நாவல் எழுதத் துடிப்போர்க்கு ஊக்கம் தந்த நிகழ்வுகளாக அமைந்திருந்தன.

### 6.4.4 புத்தாயிரத்தில் நாவல் வெளிவராத ஆண்டுகள்

புத்தாயிரத்தில் 2003, 2004-ஆம் ஆண்டுகளில் எந்தவொரு நாவலும் நூல்வடிவில் வெளிவந்ததாகத் தெரியவில்லை. பத்திரிகைகளில் எழுத்தாளர்களின் படைப்புகள் தொடராக வெளிவந்ததைக் காணமுடிகின்றது. நூல்வடிவில் நாவல் வெளிவராததற்குக் காரணம் யாதென்று சரியாகக் கண்டு கூற இயலவில்லை. 2004-ஆம் ஆண்டிற்குப் பிறகு நாவலுக்காக நான்கு போட்டிகள் அறிவித்ததற்கு நாவல் வெளிவராத இந்த இடைவெளியும் ஒரு காரணமாக அமைந்து ஏற்பாட்டாளர்களுக்கு உந்துதல் தந்திருக்கலாம் எனத் தோன்றுகின்றது.

## 7. தொன்னூறுகளுக்குப்பின் (1990-2007) மலேசியத் தமிழ் நாவல்களின் தரமும் திறமும்

தொன்னூறுகளில் அதாவது பத்தாண்டுக் காலத்தில் (1990-1999) சுமார் 43 நாவல்கள்/குறுநாவல்கள் நூல் வடிவில் வெளிவந்துள்ளன. புத்தாயிரத்தில் ஏறத்தாழ ஆறரை ஆண்டுகளில் (2000-2007) இதுவரையில் 32 நாவல்கள்/குறுநாவல்கள் வெளிவந்துள்ளன. இவற்றுள் 2005-ஆம் ஆண்டில் நாவல் போட்டியில் இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசு, பத்து ஆறுதல் பரிசுகள் பெற்ற நாவல்கள் மொத்தம் 12 இன்னும் நூலுருவம் பெறவில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. இப்பன்னிரண்டும் நூல்வடிவம் பெறுகின்ற பொழுதே மலேசியத் தமிழ் நாவல் இலக்கியத்தை வளர்க்க மேற்கொள்ளும் முயற்சிகள் முழுமை அடையும் எனலாம். நாவல் போட்டி ஏற்பாட்டாளர்கள் இதனைக் கருத்திற் கொள்வார்கள் என நம்பலாம். ஆக, 1990-ஆம் ஆண்டிலிருந்து 2007- ஆம் ஆண்டுவரை சுமார் 75 நாவல்கள்/குறுநாவல்கள் படைக்கப்-பட்டுள்ளன.(18) குறுகிய காலப்பகுதியில் நாவல்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதனைக் கடந்த காலங்களில் வெளிவந்த நாவல்களின் எண்ணிக்கையோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் தெரிய வருகின்றது. விடுதலைக்குப்பிறகு 1957-

ஆம் ஆண்டிலிருந்து 1989-ஆம் ஆண்டுவரையில் ஏறத்தாழ 33 ஆண்டுகளில் நூல்வடிவில் வெளிவந்துள்ள நாவல்களின் எண்ணிக்கை 62 ஆகும். ஆனால், தொன்னூறுகளுக்குப்பின் ஏறத்தாழ 17 ஆண்டுகளில் மட்டும் வெளிவந்துள்ள நாவல்களின் எண்ணிக்கை 75 ஆகும். ஆக, மலேசியத் தமிழ்நாவல் வளர்ச்சி தொன்னூறுகளுக்குப்பின் சூடுபிடிக்கத் தொடங்கி விட்டது எனலாம். மலேசியத் தமிழ் நாவல் இலக்கியம் இந்நிலையை எய்த பாடுபட்டவர்களுள் முதன்மையாளராக மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தினரைக் குறிப்பிடலாம். அதனையடுத்து, தேசியத் தோட்டத்தொழிலாளர் சங்கம், தமிழ் நேசன் நாளிதழ் ஆகியவற்றின் பங்களிப்பும் நாவல் வளர்ச்சிக்கு மனநிறைவைத் தருவதாக உள்ளன. அதே வேளையில் மலாயாப் பல்கலைக்கழக, இந்திய ஆய்வியல் துறையினரின் பங்களிப்பான முதன்முதலாக நடத்தப்பட்ட மலேசியத் தமிழ் நாவல் கருத்தரங்கும்(1992) இவ்வாண்டு தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தோடு இணைந்து ஏற்பாடு செய்துள்ள நாவல் எழுதும் போட்டியும் மலேசியத் தமிழ்நாவல் வளர்ச்சிக்கு உதவுவனவாக உள்ளன. தவிர, இப்புத்தாயிரத்தில் செயற்கைக்கோளத் தொலைக்காட்சியான அஸ்ட்ரோ வானவில்லின் பங்களிப்பும் மலேசியத் தமிழ் நாவல் வளர்ச்சிக்கு ஊக்கமூட்டும் வகையில் கணிசமாகக் காணப்படுகின்றது. ஆதாயத்தையே கருத்திற்கொண்டு பணம் புரளும் ஒளிபரப்புகளில் மட்டும் தங்களின் கவனத்தைச் செலுத்தாமல் தாம் சார்ந்த மொழி, இலக்கியம் ஆகியவற்றின் வளர்ச்சியிலும் கவனத்தைச் செலுத்துவதால் இத்தகைய போட்டிகளை அஸ்ட்ரோ வானவில் மேற்கொள்வதானது பாராட்டுக்குரிய சீரிய பணியாகும். இவர்களின் இச்சீரிய முயற்சிகளினால் வாடியும் வதங்கியும் போய்க் காணப்பட்ட மலேசியத் தமிழ்நாவல் பயிருக்கு நீரூற்றுவதாகவும் எருவிட்டு உரமேற்றுவதாகவும் அமைந்துள்ளது. அதனால், இங்குத் தொன்னூறுகளுக்குப்பின் நாவல் இலக்கியம் எண்ணிக்கையளவிலும் தரத்திலும் உயர்ந்துகொண்டே வருவதனைத் தெளிவாகக் காணமுடிகின்றது.

**7.1 பத்தாண்டுகால மலேசியத் தமிழ்நாவல்கள்**

1990 - 2007 ஆகிய காலப்பகுதியில் சுமார் 75 நாவல்கள் வெளிவந்துள்ளதால் அவ்வளவு படைப்புகளின் தரமும் திறமும் பற்றி இக்கட்டுரையில் விளக்கிட முடியாது என்பதனால் அண்மையப் பத்தாண்டுகளில் (1997 - 2007) வெளிவந்த நாவல்களில் சிறப்பாக அமைந்த நாவல்களின் தனித்தன்மைகள் மட்டுமே இங்குத் தொடர்ந்து விளக்கப்படுகின்றன. கடந்த பத்தாண்டுகளில் மட்டும் 52 நாவல்கள் வெளிவந்துள்ளன.(19) இவற்றுள் 12 நாவல்கள் இன்னும் அச்சிடப்படாமல் வெறும் ஏட்டுப்பிரதிகளாகவே அஸ்ட்ரோ தொலைக்காட்சி நிலையத்தாரின் வசமே உள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது. அச்சிலேறாததால் அவற்றை இக்கட்டுரையின் உள்ளடக்க ஆய்வுக்குப் பயன்படுத்தவில்லை. மீதமுள்ள 40 நாவல்களிலும் பல எழுபதுகளிலும் எண்பதுகளிலும் தொன்னூறுகளின் தொடக்கத்திலும் தொடர்களாக வெளிவந்தவை. அவை தாம் எழுந்த அக்காலப் பகுதியான எழுபதுகளிலும் எண்பதுகளிலும் காணப்பட்ட போக்குகளைக் கொண்டுள்ளன. அவ்வகையில் நெருப்புக்கொடிகள், விடியலுக்காக, விலங்கு, வானம் காணாத விமானங்கள், துன்பங்கள் உறங்குவதில்லை, கால்களே நில்லுங்கள், நினைவுச் சின்னம், அழகின் ஆராதனை, சுவடுகள், சங்கமம் முதலான பத்து நாவல்களும் தொன்னூறுகளுக்குப்பின் காணப்படும் மலேசியத் தமிழ் நாவலாக்கத்தின் உள்ளடக்க ஆய்வுக்குப் பொருந்தாது எனும் காரணத்தால் அவையும் இக்கட்டுரையில் சேர்க்கப்படவில்லை. இந்நாவல்கள் யாவும் எழுபதுகள், எண்பதுகள் ஆகிய காலக்கட்டங்களில் காணப்பட்ட மலேசியத் தமிழ்ச்சமூகத்தையும் அதன் வாழ்வியல் கூறுகளையும் உள்ளடக்கமாகக் கொண்டுள்ளதால் தொன்னூறுகளின் பிற்பகுதிப் போக்குகளை உள்ளடக்கமாகக் கொண்ட நாவல்களோடு வைத்துக் காண்பது முரண் பட்டுப்போகும் என்பதனால் அவையும் இக்கட்டுரையில் பெயர் சுட்டப்படுவதோடு உள்ளடக்கத்தைக் காண்பதற்குச் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. எம். ஏ. இளஞ்செல்வனின் பசித்திருக்கும் இளம் கொசுக்கள் எனும் குறுநாவல் 1978-இல் தனி நூலாக வந்து அப்போதைய ஆய்வுகளிலும் பயன்படுத்தப்பட்டு விட்டது. அதேபோன்று அவருடைய கனகாம்பரமும் கிளிஞ்சல் மலர்களும் 1979-ஆம் ஆண்டில் தமிழ் நேசன் பத்திரிகை நடத்திய குறுநாவல் போட்டியில் பரிசுபெற்ற படைப்பு ஆகும். அப்பொழுது இப்படைப்பு நூலுருவம் பெறாமல் பின்னர் (1999) நூல்வடிவில் அவரால் கொண்டு வரப்பட்டது. எனவே, இவ்விரு குறுநாவல்களும் தொன்னூறுகளுக்குப்பின் வெளியான நாவல்களின் உள்ளடக்கத்தைக் காணும் ஆய்வில் சேர்ப்பது முறையாகாது என்பதாலும் சேர்த்துக்-கொள்ளப்படவில்லை. அ. கந்தனின் அம்மா, விடியலை நோக்கி, எழுச்சி முதலான நாவல்கள் பள்ளிச்சிறார்களைக் கருத்திற்கொண்டு எழுதப்பட்டுள்ளன. தவிர, இம்மூன்றும் முறையான அச்சும், கட்டமைப்பும் (bind) நூலாக்கப்படாமல் monograph அமைப்பில் அமைந்துள்ளதாலும் இம்மூன்றும் இக்கட்டுரையின் உள்ளடக்க ஆய்வுக்குச் சேர்த்துக்-கொள்ளப்படவில்லை. மேலும், தஞ்சோங் மாலிம் ஆர். சண்முகத்தின் தனயனைக் காப்பாற்றிய தாய், கோலலங்காட் அ.ரெங்கசாமியின் இமயத் தியாகம் ஆகிய இரு நாவல்கள் அரிதின் முயன்றும் இக்கட்டுரையாளருக்குக் கிடைக்கப்பெறாமையால் அவ்விரண்டு நாவல்களும் உள்ளடக்க ஆய்வுக்குச் சேர்த்துக்கொள்ள முடியவில்லை. சை.பீர்முகம்மதுவின் அக்கினி வளையங்கள் எனும் நாவல் அச்சில் இறுதிக்கட்டப் பணிகளில் உள்ளதாக அதன் படைப்பாளர் தெரிவித்துள்ளதால் அப்படைப்பும் இக்கட்டுரையில் சேர்த்துக்கொள்ள முடியவில்லை. ஆக, மீதமுள்ள 22 நாவல்களுள் மலேசிய இந்தியச் சமுதாயத்தின் வாழ்வியல் கூறுகளையும் நெறிகளையும் சிறப்பாக அடையாளங்காட்டி, வெளிப்படுத்தியுள்ள படைப்புகளின் உள்ளடக்கம் மட்டுமே தொடர்ந்து விளக்கப்படுகின்றன. இந்நாவல்களின் உள்ளடக்கங்கள் மலேசிய இந்தியச் சமூகத்தின் சமகாலத்து வாழ்வின் நிலைகளையும் பதிவுசெய்யாமல் விடுபட்டுப்போன கடந்தகால வாழ்வின் சுவடுகளையும் வெளிப்படுத்துவனவாய் அமைந்துள்ளன.

**7.1.1 பத்தாண்டுகால மலேசியத் தமிழ்நாவல்களின் உள்ளடக்கம் (1997-2007)**

பத்தாண்டு காலத்தில் வெளிவந்த மலேசியத் தமிழ்நாவல்களின் உள்ளடக்கத்தைப் பார்க்குங்கால் அவை இருவகையாக அமைக்கப்பட்டுள்ளது. அவையாவன:-

அ. கடந்தகால வாழ்வியலை உள்ளடக்கமாகக் கொண்ட நாவல்கள்
ஆ. சமகால வாழ்வியலை உள்ளடக்கமாகக் கொண்ட நாவல்கள்.

இனி, இவை ஒவ்வொன்றும் தனித்தனியாக விளக்கப்படுகின்றன.

**7.1.1.1 கடந்தகால வாழ்வியலை உள்ளடக்கமாகக் கொண்ட நாவல்கள்**

இன்று மலேசியாவில் காணும் இந்தியச் சமுதாயத்தின் வாழ்க்கை வரலாறு இந்நாட்டில் ஏறத்தாழ நூற்றைம்பது ஆண்டுகளைக் கடந்ததாக உள்ளது. இந்நீண்டகாலப்பரப்பில் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் மலேசிய இந்தியர்கள் உலகின், உள்நாட்டின் அரசியல், பொருளியல், சமூகவியல் தாக்கங்கள், மாற்றங்கள், பாதிப்புகள் ஆகியவற்றிற்கு ஏற்பப் பல்வேறு அவலங்களுக்கு ஆளாகி வருந்தியுள்ளனர் என்பது வரலாற்று உண்மைகள் ஆகும். ஆனால், இவற்றுள் மிகுதியானவை முறையாக இலக்கியங்களில் பதிவு செய்து வைக்கப்படவில்லை என்பது வருந்துதற்குரியது.

குறிப்பாக, அன்றைய மலாயாவில் இரண்டாம் உலகப்போரின்போது காணப்பட்ட ஜப்பானியர் ஆட்சி, சயாம் மரண ரயில்பாதை அமைத்தல், கம்யூனிஸ்டு தீவிரவாதிகளின் தாக்குதல்கள், அன்றையத் தோட்டப்-புறங்களின் உண்மை நிலவரங்களும் வாழ்வியல் கூறுகளும் போன்றவை முறையாகவும் முழுமையாகவும் இலக்கியப் படைப்புகளில் பதிவுசெய்யப்-படாமல் உள்ளநிலையே மலேசியத் தமிழ் இலக்கியத்தில் இன்றளவும் காணப்படுகின்றது. குறிப்பாகச் சில காலக்கட்டங்களைப் பற்றியவை மலேசியத் தமிழ் இலக்கியங்களில் காட்டப்படாமல் வெற்றிடமாகவே உள்ளது அறியத்தக்கது. இலக்கியங்கள் ஒரு சமூகத்தின் வரலாறாக்க் கருதப்படுகின்றன. இலக்கியங்கள் தாம் சார்ந்த இனத்தின் ஒவ்வொரு காலக்கட்டத்தின் வளர்ச்சியையும் தளர்ச்சியையும் பதிவு செய்யும் முக்கிய ஆவணங்களாகக் கருதப்படுகின்றன. அவ்வகையில் மலேசியத் தமிழ் நாவலாசிரியர்கள் முறையாகப் பதிவுசெய்யாத கடந்தகால வாழ்வியல் கூறுகளைப் பதிவுசெய்து அச்சில் பிடித்து வைக்கும் நோக்கிலும் பின்னர் அவற்றை இளையதலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கும் நோக்கிலும் தொன்னூறுகளிலும் புத்தாயிரத்திலும் மலேசியத் தமிழ் நாவலாசிரியர்களுள் பலர் முயன்றுள்ளனர். அவ்வகையில் கடந்தகால வரலாற்றுப் பின்னணியில் காணப்பட்ட அவலவாழ்க்கையைக் காட்டும் வகையில் சில நாவல்கள் படைக்கப்பட்டுள்ளன. அவையாவன:-

அ. கள்ளச்சந்தையில் சொக்கத்தங்கங்கள்(செங்கதிரோன்)
ஆ. லங்காட் நதிக்கரை(கோலலங்காட் அ.ரெங்கசாமி)
இ. மண் புழுக்கள்(சீ.முத்துசாமி)
ஈ. அமுதசுரபிகள்(ப.சந்திரகாந்தம்)

இனி, இவற்றுள் கடந்தகால மலேசிய இந்தியர்களின் வாழ்வியல்-கூறுகளைச் சிறப்பாக வெளிப்படுத்தி நிற்கும் மூன்று நாவல்களின் உள்ளடக்கம் மட்டுமே தொடர்ந்து விளக்கப்படுகின்றன.

**அ. லங்காட் நதிக்கரை (கோலலங்காட் அ.ரெங்கசாமி)**

இந்நாவலின் உள்ளடக்கமானது நாட்டின் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு காலப்பகுதியைப்பற்றிப் பேசுகின்றது. இரண்டாம் உலகப்போரின் இறுதியில் கொடுங்கோலாட்சி நடத்திய ஜப்பானியர் தோல்விகண்டு மலாயாவை விட்டுச் செல்வதிலிருந்து கதை தொடங்குகின்றது. ஜப்பானியர் ஆட்சியில் இல்லை. ஆங்கிலேயர் மீண்டும் வந்து சேரவில்லை. இடைப்பட்ட இரண்டுவார காலத்திற்குள் மலாயா மக்களின் ஜப்பானிய எதிர்ப்புப்படையில் (Malayan Peoples Anti Japanese Army) இருந்த மிகுதியான கம்யூனிஸ்டுகள் அராஜக ஆட்சி நடத்தி மலாயா மக்களை ஆட்டிப்படைத்தனர். மலாயாவை ஒரு கம்யூனிஸ நாடாக மாற்றவேண்டும் என்ற எண்ணத்தில் செயல்பட்டனர். அந்த அராஜக ஆட்சியின் பிடியில் சிக்கிய சிலாங்கூர் மாநிலத்திலுள்ள லங்காட் நதிக்கரை மக்கள் குறிப்பாக இந்திய மக்கள் பட்ட அவல வாழ்வு நாவல் முழுவதும் விவரிக்கப்பட்டுள்ளன. மீண்டும் ஆங்கிலேயர் நாட்டுக்குவந்த பின்னர் அவர்கள் மேற்கொண்ட கம்யூனிஸ்டுகளுக்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளாலும் இந்தியர்கள் அதிகப் பாதிப்புக்-குள்ளானதை இந்நாவல் காட்டுகின்றது. ‘உரலுக்கு ஒரு பக்கம் இடி; மத்தளத்துக்கு இரு பக்கமும் இடி’ என்ற பழமொழியின் விளக்கமாக அமைந்திருந்தது நாட்டில் அப்போதைய மலேசிய இந்தியர்களின் நிலை என்பதனை இந்நாவலின் உள்ளடக்கம் தொடக்கம் முதல் இறுதிவரை ஆர்வத்துடனும் விறுவிறுப்புடனும் திகிலுடனும் காட்டி நிற்கின்றது. கம்யூனிஸடுப் பயங்கரவாதிகளினால் ஏற்பட்ட வன்முறைகள், கொடுஞ்செயல்கள், பயங்கர அனுபவங்கள் ஆகியன நாவலின் உள்ளடக்கத்தில் இயல்பாகக் காட்டப்பட்டுள்ளன.

இந்நாவலின் முதன்மைமாந்தர் வெள்ளையன். கதாசிரியர் வெள்ளையனின் நோக்கில் கதையைக் கொண்டு சென்றுள்ளார். லங்காட் மக்களின் மனங்கவர்ந்த தலைவராயிருந்த அவர் தம் அறிவுக்கூர்மை-யினால் கம்யூனிஸ்டு பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து மக்களைக் காக்கும் காவலனாக காட்டப்பட்டுள்ளார். அவர் எவ்வாறு மக்களைக் காக்கிறார் என்பதே உள்ளடக்கமாக அமைக்கப்பட்டுள்ளது. அவ்வகையில் அவருடைய பாத்திரப்படைப்பு சிறப்பாக வார்க்கப்பட்டுள்ளது. கதையின் உள்ளடக்கத்தில் கதாசிரியரின் சமூக அக்கறை வெளிப்படுகின்றது.

ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியின் குரலாகவும் சமூக வரலாறாகவும் இது அமைந்துள்ளது. அவ்வகையில் நாவலில் மண்ணின் மணம் இயல்பாக வெளிப்படுகின்றது. “உரலுக்கு ஒரு பக்கம் இடி! மத்தளத்துக்கு இருபக்கமும் இடி!ன்னு சொல்வாக. அந்தநெலம இப்ப நமக்கு வந்திருக்கு.

கம்யூனிஸ்டுகாரனுக்கு உதவி செஞ்சா மரணதண்டனை நிச்சயம்ன்னு அரசாங்கம் ஒரு பக்கம் சட்டத்தைக் காட்டி கழுத்தை நெருக்குது. எங்களக் காட்டிக் கொடுக்கிறவங்களை நாங்க உயிரோடு விடமாட்டோம்ன்னு இன்னொரு பக்கம் கம்யூனிஸ்டு-காரனுங்க துப்பாக்கியைக் காட்டுறானுக! நாம யாருக்குப் பயப்படுறது! எப்படி வாழுறது!” பெருமூச்சு விட்டார் வெள்ளையன்(20) எனவரும் பகுதி அன்றைய வரலாறு மிகச்சிறப்பாக நாவலாக்கம் செய்யப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது.

**ஆ. மண் புழுக்கள் (சீ.முத்துசாமி)**

நீண்டகாலப் பரப்பை உள்ளடக்கமாகக் கொண்ட நாவல் இது. சில தலைமுறைகளை உள்ளடக்கிய இப்படைப்பில் ஓர் இனத்தின் வரலாற்றையே ஒட்டுமொத்தமாக்க் காட்டிவிட வேண்டும் என்ற கதாசிரியரின் வேகத்தையும் துடிப்பையும் காணமுடிகின்றது. இந்நாவல் இந்திய இனத்தை இந்நாட்டில் புழுவாகக் கருதி கட்டியாண்ட அதிகார வர்க்கத்தினரைக் காட்டும் முயற்சி இந்நாவலில் இடம்பெற்றுள்ளது. அடிப்படையில் அதிகாரம் ஒன்றுதான். அது பல பெயர்களில் பலவாகச் சுட்டப்படுகின்றன. ஒரு நூற்றாண்டுகால மலேசிய இந்தியர்களின் வரலாற்றில் இடம் பெற்றுள்ள அதிகார வர்க்கங்களின் அடக்குமுறையும் ஆர்ப்பாட்டமும் நாவல் முழுவதும் காட்டப்பட்டுள்ளது. தோட்டப்புற நிர்வாகம் எனும் அதிகார வர்க்கத்தின் ஒடுக்குமுறை, ஆங்கில ஏகாதிபத்தியத்தின் அதிகாரப்போக்கு, ஜப்பானியர்களின் அடக்குமுறை, கொடுங்கோலாட்சி, கம்யூனிஸ்டுப் பயங்கரவாதிகளின் வன்முறைப்போக்கு முதலான அதிகார வர்க்கங்களினால் பட்ட அடிகளின் சுவடுகளை நாவல் முழுக்கக் காட்டிச் சென்றுள்ளார் கதாசிரியர். இவை புறத்தே இருந்து வந்த பாதிப்புகள்

*ஆகும். அதே வேளையில் சமுதாயத்தின் உள்ளருந்தே புரையோடிப்போன, செல்லரித்த போக்குகளான சாதிவேறுபாடு, ஒற்றுமையற்ற போக்கு, குடிப்பழக்கம் போன்ற சீர்கேடுகளினால் ஏற்பட்ட நலிவுகளையும் இந்நாவல் விட்டுவிடாமல் பேசுகின்றது. சுருங்கக் கூறின் மலேசிய இந்தியர்களின் வாழ்வின் உள்ளும் புறமும் விளக்கப்பட்டுள்ளது.*

*கதாசிரியர் கதையில் வரும் செங்காளி என்ற கதைமாந்தரின் நோக்கில் கதை என்பதனைவிட அனுபவப் பகிர்வுகள் காட்டிச் செல்லப்பட்டுள்ளன. செங்காளியின் மன ஓட்டத்தின்வழி இவ்வனுபவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மன ஓட்டத்திற்கேற்ப ஒரே நேரத்தில் பல்வேறு காலக்கட்டங்களும் நிகழ்ச்சிகளும் கதைமாந்தர்களும் காட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. எதனையும் நிரல்பட அமைக்காமல் பின்நவீனத்துவ அடிப்படையில் எதற்கும் கட்டுப்படாது ஒரே நேரத்தில் பலவற்றையும் காட்டிச் சென்றுள்ளது அனுபவங்களையும் உணர்வுகளையும் எந்தவொரு அலங்காரமும் இல்லாமல் கதாசிரியர் அப்படியே கொட்டிச் சென்றுள்ளார். மண்ணின் செழிப்புக்கு மண் புழுக்கள் உதவுவதைப்போல இந்நாட்டு வளப்பத்திற்கு மண்புழுபோல விளங்கிய இந்தியச் சமுதாயத்தை அதிகார வர்க்கம் மதிக்கவும் இல்லை; கவனிக்கவும் இல்லை; கண்டுகொள்ளாமல் மண்ணிலேயே விட்டுவிட்டது என்பதனைப் பொருள்படும்படி நாவலுக்குத் தலைப்பிடப்பட்டுள்ளது.*

*இதுவரையில் வந்த மலேசியத் தமிழ்நாவல்களிலேயே இந்த அளவுக்குத் தோட்டப்புற மக்களையும் அவர்தம் வாழ்வையும் உள்வாங்கிக்கொண்டு உள்ளதை உள்ளவாறே, ஒதுங்கலும் இல்லாமல், மிகையும் இல்லாமல் அப்படியே வெளிப்படுத்திக் காட்டியுள்ள அற்புத நாவல் இதுதான் என்று சொன்னால் அதில் மிகையில்லை. தோட்டப்புறக் காட்சிகளும் அங்குள்ள சூழல்களும் தோட்டப்புற மொழியும் அங்குள்ள மாந்தர்களோடு கைகோர்த்து நாவலில் உலா வருவது படிப்பவரை ஒரு கணம் சிலிர்க்க வைத்துவிடும். படிப்பவர் ஒவ்வொருவரையும் நாவலின் மாந்தர்களோடும் அவர்களின் அறியாமை நிறைந்த வாழ்க்கையோடும் ஒன்றச்செய்து அவர்களோடு தோட்டப்புறத்தில் சேர்ந்து வாழச் செய்துவிடும் தன்மை இந்நாவலுக்குண்டு. "நாநூறு மரத்துல குனிஞ்சு நிமிந்து, பொணமா கனக்குற ஆளு ஒசர ஏணிய தோள்ல சொமந்து மலக்காட்டுல ஓடி நாநூறு தடவ ஏணில ஏறி எறங்கி மரத்த சீவி...பால எடுத்து வாளிய காண்டால மாட்டி தோள்ல வச்சு வெறுங்கால்ல கித்தாகாட்டு ஒத்தயடிப் பாதயில லொங்குலொங்குனு மூச்சு வாங்க பால் கொட்டாய்க்கு ஓடி பால ஊத்திட்டு வூட்டுக்கு வந்து பழச வயித்துல கொட்டிகிட்டு கூத்து கொட்டாய்க்கு வந்து ஒடம்ப சாச்சா, களப்புல ஒடம்பு அடிச்சு போட்ட மாதிரி வலிக்குது"(21) எனவரும் பகுதியில் தோட்டப்பாட்டாளியின் வாழ்வியல்நிலை அப்படியே இறக்கி வைக்கப்-பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.*

***இ. அமுதசுரபிகள் (ப.சந்திரகாந்தம்)***

*மலேசிய இந்தியர்களின் வரலாற்றுப் பதிவாக அமைந்துள்ள இந்நாவல் தயாபரன் எனும் நாடகக் கலைஞனின் கதையாக அமைக்கப்பட்டுள்ளது. தன் வாழ்க்கையையே தன் அக்கா மதுராவுக்காக அர்ப்பணித்தும் அவளை அவனால் காப்பாற்ற முடியாமல் இழந்து விடுவதுதான் கதையாகும். இக்கதை நடக்கும் காலப்பகுதியாக நாவலாசிரியர் இருபதாம் நூற்றாண்டின் முப்பதுகளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டுள்ளார். கலைஞர்கள் கலைச்செல்வத்தை மக்களுக்கு வாரி வாரி வழங்குவதால் அவர்கள் அள்ளஅள்ளக் குறையாத அமுதசுரபிகள் என வருணிக்கப்படுகின்றனர். "நம்முடைய சிரமங்களையும் சோகங்களையும் மறந்திட்டு மக்களைச் சந்தோஷப்-படுத்துறோமே... அதுதான் நாம் செய்யிற கலைத்தொண்டு... கலைஞர்கள் ஏழையா இருக்கலாம்... ஆனா, அள்ள அள்ளக் குறையாத செல்வம் நம்மகிட்டே இருக்கு... அதுதான் கலைச்செல்வம்... அமுதசுரபியைப்பத்தி கேள்விப்பட்டிருப்பீங்க... மணிமேகலைக் காப்பியத்தில் அதைப்பத்திக் குறிப்பிட்டிருக்-காங்க... மணிமேகலைக்குக் கிடைத்த அந்த அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபி ஏழைகளின் பசியையும் போக்கியிருந்த-தாம்... கலைஞர்களும் ஒருவகையில் அமுதசுரபிகள்தாம் ... குறையாம இருக்கற நம் கலைச்செல்வத்தை மக்களுக்கு வாரி வழங்கிக்கிட்டே இருக்கிறோம்..."(22) எனவே, கலைஞரைப் பற்றிய கதையாக இது இருப்பதால் நாவலுக்குப் பொருத்தமாக அமுதசுரபிகள் எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்நாவலின் கதை தமிழகத்திலும் மலாயாவிலும் நடப்பதாக மாறி மாறிக் காட்டப்பட்டுள்ளது.*

*சுமார் ஏழாண்டு காலம் நடைபெறும் கதையில் போகிற போக்கில் கதாசிரியர் பொருத்தமாக அன்றைய மலாயாவின் அரசியல் போக்குகளையும் இந்தியச் சமுதாயத்தின் நிலவரங்களையும் காட்டிச்செல்வது நாவலுக்குத் தனித்தன்மையையும் சிறப்பையும் அளித்துள்ளது. அவ்வகையில் பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியில் இந்நாட்டிற்கு உடலுழைப்புத் தொழிலாளர்களாக இறக்குமதி செய்யப்பட்ட தமிழர்களின் தோட்டப்புற வாழ்வும் தமிழகத்தில் நாடகக்கலையை மேற்கொண்ட நாடகக்குழுக்களின் கலையுலக வாழ்வும் இந்நாவலின் பின்னணியில் வைத்து அதற்கேற்ப ஓர் அழகான கதையை அமைத்துள்ளார் கதாசிரியர்.*

*இந்நாட்டிற்கு இந்தியர்களை இறக்குமதி செய்யப் பிரிட்டிஷார் மேற்கொண்ட ஒப்பந்தக்கூலிமுறை, பின்னர் அறிமுகப்படுத்திய கங்காணிமுறை, தொழிலாளர்கள் தோட்டநிர்வாகத்தினாலும் கங்காணிகளாலும் மோசமாக நடத்தப்பட்டமுறை, தோட்டநிர்வாகத்தின் கெடுபிடிகளும் அடக்குமுறைகளும், கமிஷனுக்காக (தலைக்காசு) சொந்த இனத்தையே மிக மோசமாக நடத்திய கங்காணிகள், உலகளவில் பொருளாதார மந்தம், ரப்பர்/பால்விலை வீழ்ச்சி பற்றிய நிலவரங்கள், தொழிலாளர் மத்தியில் எழுந்த விழிப்புணர்ச்சியும் அதனால் விளைந்த கிளர்ச்சிகளும், மலாயா இந்தியர்களை ஒருங்கிணைக்கத் தோற்றுவிக்கப்பட்ட சம்மேளனம், அன்றைய இந்தியத் தலைவர்கள், அவர்களின் போராட்டங்கள், தொழிற்சங்கங்களின் தோற்றம், தொழிலாளர்களையும் தொழில் சங்கங்களையும் ஒடுக்கப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சர்வாதிகார நடவடிக்கை, தொழிலாளர்களின் சம்பளத் தகராறுகள் போன்ற உண்மை வரலாற்றுச் செய்திகள் கதைப்போக்கில் காட்டப்பட்டுள்ளன.*

*தவிர, பல்வேறு சவால்களுக்கும் போராட்டங்களுக்கும் மத்தியில் நமது கலை, பண்பாடு போன்றவற்றை இழந்துவிடாமல் அவற்றைக் கட்டிக்காக்கும் கலைஞர்களின் முயற்சிகளையும் நாவலில் காட்டிச் சென்றுள்ளார். இவ்வாறு காட்டும் வேளையில் தமிழகத்திலும் மலாயாவிலும் நாடகக்கலை பற்றிய செய்திகள், நாடகக் கலைஞர்கள், நாடகக் குழுக்கள், சினிமாவினால் நாடகக் கலையின் நலிவுகள், நாடகக் கலைக்காக வாழ்வையே அர்ப்பணித்த கலைஞர்கள் போன்ற உண்மைச் செய்திகளையும் கதைப்போக்கில் பொருத்தமாக இணைத்துக் காட்டப்பட்டுள்ளது.*

***7.1.1.2 சமகால வாழ்வியலை உள்ளடக்கமாகக் கொண்ட நாவல்கள்***

*சமகால வாழ்வியலின் உள்ளடக்கம் என்பது நாவலாசிரியர் தாம் எழுதிய நாவல் வெளியான காலத்து நிகழ்வுகளைப் பிரதிபலிப்பது ஆகும். நாவலாசிரியர் தாம் கண்டு, கேட்டு, உயிர்த்த அன்றாட வாழ்வியல் நிலவரங்கள், போக்குகள்,*

*சிக்கல்கள் ஆகியவற்றைக் காட்டும் வகையில் நாவல் படைப்பது ஆகும். குறிப்பாகத் தொன்னூறுகளில் மலேசிய இந்தியர்களின் வாழ்க்கை பல்வேறு சிக்கல்களுக்கும் சவால்களுக்கும் இடையில் அமைந்திருந்தது. இந்தியச் சமுதாயத்தின் வாழ்க்கை தொன்னூறுகளில் அரசியல் ரீதியாகவும் பொருளியல் ரீதியாகவும் பல்வேறு மாற்றங்களுக்காளாகிப் புதியதோற்றத்தைப் பெறத்தொடங்கியிருந்தது. எனவே, அப்போதைய மலேசிய இந்தியச் சமுதாயத்தில் வாழ்வியல் சிக்கல்கள், நெருக்கடிகள் இக்காலப்பகுதியில் அதிகரித்து காணப்பட்டது குறிப்பிடத்தக்கது. இச்சிக்கல்களும் நெருக்கடிகளும் பெருகிக் கூர்மைப்பட்ட சூழலில் அவை இலக்கியங்களில் பேசப்படும் நிலையை அடைகின்றன. எனவே, தொன்னூறுகளில் மலேசியத் தமிழ் நாவல்களில் அச்சிக்கல்கள், நெருக்கடிகள் ஆகியவற்றை உள்ளிட்ட புதிய போக்குகள் இடம்பெற்றுள்ளதைக் காணமுடிகின்றது.*

*குறிப்பாக, தொன்னூறுகளில் தனிமனித உணர்வுகளும் சிக்கல்களும் அவற்றையொட்டிய போராட்டங்களும் ஒருபுறம் வலுபெறத் தொடங்கியிருந்ததனைக் காணமுடிகின்றது. இவ்வகையான நாவல்களில் சமுதாய உணர்வைவிடத் தனிமனித உணர்வுகளுக்கு முதன்மை தரப்படுவதால் அவ்வுணர்வுகள் மேலோங்கிக் காணப்படுகின்றன. சமுதாயத்தின் அங்கங்களாயிருக்கும் தனிமனிதர்களின் தேவைகளும் உணர்வுகளும் குறைவில்லாமல் காக்கப்படும்போதே சமுதாயம் சிக்கலில்லாமல் சுமுகப்போக்கில் நலம்பெற்று, சீரானவழியில் செல்லும் என்பது இவ்வகையான நாவல்களில் அடிநாதமாக உணர்த்தப்படும் அடிப்படைச் செய்திகள் ஆகும். தனிமனிதர்களின் நியாயமான உணர்வுகளும் தேவைகளும் காக்கப்படாமல் போகும் பட்சத்தில் காலப்போக்கில் அவை சமுதாயத்தில் அமைதியின்மையையும் குழப்பத்தையும் ஏற்படுத்தி, வாழ்வை அலைகழிக்கும் நிலையை ஏற்படுத்தும்போது அவை சமுதாயப்பிரச்சினையாக உருமாற வாய்ப்புண்டு. எனவே, தனிமனித நிலையிலேயே அக்குறைபாடுகள் களையப்பட வேண்டும் எனும் நோக்கத்திலேயே இவ்வகை நாவல்கள் எழுதப்படுகின்றன. இக்காலப்பகுதியில் தனிமனித உணர்வுகளை மிகையில்லாமலும் நடப்பியல் பாங்கு குன்றாமலும் இயல்பாக வெளிப்படுத்திய நாவலுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக பேராசிரியர் ரெ. கார்த்திகேசுவின் அந்திம காலம் எனும் நாவலைக் குறிப்பிடலாம்.*

*தொன்னூறுகளில் மலேசிய இந்தியச் சமுதாயம் எதிர்நோக்கிய சீரழிவுகளும் சிக்கல்களும் சமுதாய உணர்வுடன் நாவல்களின் உள்ளடக்கங்கள் ஆக்கப்பட்டுள்ளன. போதைப்பொருள் பிரச்சினை, இளைஞர்களின் வன்னடத்தையும் வன்முறைச் செயல்களும், ஆணாதிக்கப்போக்கு, சினிமா மோகம் கொணர்ந்த சீரழிவு, பங்களாதேஷ் இளைஞர்களால் இந்தியப்பெண்களுக்கு விளைந்துள்ள தீமைகள் போன்றவை தொன்னூறுகளில் இந்தியச் சமுதாயத்தில் நெருக்கடியை உண்டுபண்ணிய பிரச்சினைகளாகும். தொன்னூறுகளின் மலேசியத் தமிழ் நாவலாசிரியர்கள் இப்பிரச்சினைகளைச் சமுதாயக்கண்கொண்டும் அக்கறை கொண்டும் பார்த்து அவற்றைத் தங்களின் படைப்புகளின் உள்ளடக்கங்களாக ஆக்கிக் கொண்டுள்ளனர். அவ்வகையில் படைக்கப்பட்டுள்ள நாவல்கள் பின்வருமாறு:-*

1. *சுவர் (டாக்டர் சி. சொக்கலிங்கம்)*
2. *பெண் குதிரை (சை. பீர் முகம்மது)*
3. *நித்திலப்பூ (வீ. கு. சந்திரசேகரன்)*
4. *ராகதேவதை (பேராசிரியர் ரெ. கார்த்திகேசு)*
5. *நல்லவராவதும் (பேராசிரியர் ரெ. கார்த்திகேசு)*
6. *அந்திம காலம் (பேராசிரியர் ரெ. கார்த்திகேசு)*
7. *கோடுகள் கோலங்களானால் (பாவை)*
8. *நொண்டிப்பறவை (பாவை)*
9. *விழலும் நீரும் (மா. இராமையா)*
10. *காதலினால் அல்ல (பேராசிரியர் ரெ. கார்த்திகேசு)*
11. *நாளைக்கு (பேராசிரியர் ரெ. கர்த்திகேசு)*
12. *மன ஊனங்கள் (மா. இராமையா)*
13. *ஊனக்கனவுகள் (மா. இராமையா)*
14. *புழுத்துளைகள் (பேராசிரியர் ரெ. கார்த்திகேசு)*
15. *தீக்காற்று (பேராசிரியர் ரெ. கார்த்திகேசு)*
16. *குயல்கூவி துயில்எழுப்ப (நிர்மலா பெருமாள்)*
17. *இந்த மண்ணுக்கும் மணமுண்டு (சி. வடிவேலு)*
18. *சூதாட்டம் ஆடும் காலம் (பேராசிரியர் ரெ. கார்த்திகேசு)*
19. *கனவுப்பந்தல் (நா. ஆ. செங்குட்டுவன்)*
20. *வேள்வி (நிர்மலா பெருமாள்)*

***7.1.1.2.1 தொன்னூறுகளுக்குப்பின் தமிழகத்து நாவல்களின் உள்ளடக்கங்கள்***

*இந்தத் தொன்னூறுகளின் தமிழகத்து நாவல்களின் உள்ளடக்கங்களைக் காணும்போது அங்குத் தலித் மக்களின் சிக்கல்கள், மார்க்சியச் சிந்தனைகள், பெண்ணின் உரிமைகளுக்குக் குரல் கொடுக்கும் பெண்ணியச் சிந்தனைகள் ஆகியன நாவல்களின் உள்ளடக்கத்தில் அழுத்தம் பெறுவதனைக் காணமுடிகின்றது. தமிழகச் சமூகத்தில் சிக்கல்கள் பெருகிக் கூர்மைப்பட்ட சூழலில் தமிழக நாவல்களில் இத்தகைய புதியபோக்குகள் எழுந்து தீவீரம் அடைந்தன. முன்னைய நடப்பியல் நாவல் படைப்பு தொடரும் அதேவேளையில் பெண்ணியம், தலித்தியம், மார்க்சியம், பின் நவீனத்துவம் போன்ற அணுகுமுறையில் நாவல்கள் அதிகம் வெளிவரத் தொடங்கின. கதைசொல்லும் நெறியிலும் புதிய அணுகுமுறைகள் எழுந்தன. அமைப்பியல் நோக்கில் நாவல்கள் எழுதப்படுதல், கதைக்கு முதன்மை தராதநிலை ஆகியன கதைசொல்லும் நெறியில் தமிழகத்தில் காணப்பட்டன. எம்.ஜே.சுரேஷ், ஜெயமோகன், சுப்ரபாரதிமணியன், பெருமாள் முருகன், பாமா, பாவைச்சந்திரன் போன்றவர்களின் நாவல்களில் இவ்வகைப் போக்குகள் நாவல்களின் உள்ளடக்கங்களாயின.*

***7.1.1.2.2 தொன்னூறுகளுக்குப்பின் மலேசியத் தமிழ்நாவல்களின் உள்ளடக்கங்கள்***

*தமிழகத்து நாவல்களின் உள்ளடக்கங்களுள் தலித்தியம், மார்க்சியம் நீங்கலாக பெண்ணியம் மட்டுமே மலேசியத் தமிழ் நாவல் ஆசிரியர்களால் எடுத்தாளப்பட்டுள்ளது. மலேசியத் தமிழ் நாவல்களில் பெண்ணியச் சிந்தனைகளுக்கு அழுத்தம் கொடுத்துப் படைக்கும் போக்கு தொன்னூறு-களில் காணப்படுகின்றது. தமிழகத்தைப்போல சாதீயத்தின் தீமைகள்*

மலேசிய மண்ணில் காணப்படாததால், மலேசியத் தமிழ் நாவல்களில் தலித்தியச் சிந்தனைகளைக் காண முடியவில்லை. மார்க்சியத்தின் பெயரால் எழும் கருத்துகளுக்கும் சிந்தனைகளுக்கும் மலேசியச் சமுதாயத்தில் வெளியிடுவதற்கு அறவே இடம் கிடையாது. அதனால் மார்க்சியப் போக்கு அல்லது பார்வை கொண்ட நாவல்களும் தோன்றுவதற்கு இங்கு வாய்ப்பில்லை.

பெண்கள் தங்களின் உரிமைகளைப் பெறுவதற்கான முயற்சிகளில் இறங்கியுள்ளதால் அதுபற்றிய சிந்தனைகள் தொன்னூறுகளுக்குப்பின் மலேசியத் தமிழ் நாவல்களில் ஒலிக்கத் தொடங்கிக் கூர்மையடைந்து வருவதனைக் காணமுடிகின்றது. இங்குப் படைப்புகளில் வலியுறுத்தப்படும், பேசப்படும் பெண்ணியம் மிகுதியும் மிதவாதப் பெண்ணியமாகவே காணப்படுகின்றது. மலேசியாவின் பல்லின, சமயச் சூழலுக்கு மிதவாதப் பெண்ணியமே ஏற்றதாகவும் தேவைப்படுவதாகவும் உள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது. பெண்குதிரை, நாளைக்கு, போன்ற நாவல்களில் பெண்ணியச் சிந்தனைகள் சிறப்பாக எழுப்பப்பட்டுள்ளன.

பின்நவீனத்துவக் கருத்தியல் பற்றிய புரிதலும் உள்வாங்குதலும் உடைய எழுத்தாளர்கள் மலேசிய மண்ணில் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிலேயே கானப்படுகின்றனர். ஆகவே, பின்நவீனத்துவக் கருத்தியல் மலேசிய மண்ணில் மிகக்குறைந்த எழுத்தாளரகளிடம் மட்டுமே தாக்கத்தை உண்டுபண்ணியுள்ளது. அதனால், பின்நவீனத்துவ அடிப்படையில் முழுக்க முழுக்க எழுதப்பட்ட நாவல் என்று எந்தவொரு மலேசியத் தமிழ் நாவலையும் இத்தருணத்தில் சுட்ட முடியவில்லை. ஆனால், பின்நவீனத்துவத்தின் சில கூறுகள் உள்ளடங்கிய நாவலாக சீ.முத்துசாமியின் மண் புழுக்கள் எனும் நாவலில் காணமுடிகின்றது. அந்த வகையில் மலேசியத் தமிழ் நாவல் இலக்கியத்தில் பின்நவீனத்துவத்தின் கூறுகளைப் பயன்படுத்தி நாவல் எழுதத் தொடங்கிய முன்னோடி என்று அவரைச் சுட்டலாம்.

இனி, சமகால வாழ்வியலை உள்ளடமாகக் கொண்டு வெளிவந்துள்ள நாவல்களைப்பற்றிக் காண்போம். இந்நாவல்களில் காட்டப்பட்டுள்ள சமகாலத்துப் பிரச்சினைகள் பற்றியும் காண்போம். சுவர் எனும் நாவல் போதைப்பொருள் பழக்கத்தினால் சீரழிந்து போகும் இளைஞர் சமுதாயத்தைக் குறிப்பாக மாணவர் சமுதாயத்தைக் காட்டுகின்றது. இந்நாவலில் வரும் கார்த்திகேயன் படிவம் ஆறு படிக்கும் மாணவன் ஆவான். அக்கறையற்ற தந்தையின் அன்புக்கு ஏங்கித்தவித்து, அது கிடைக்காதநிலையில் போதைப்பொருளை நாடி அதற்கு அடிமையாகி இறுதியில் அதற்கே பலியாகிப்போவது கதையில் காட்டப்பட்டுள்ளது.

பெண் குதிரை எனும் நாவல் இன்றையநிலையில் மாறிவரும் பெண்மையையும் ஆணாதிக்கத்திற்கு எதிராக வளர்ந்துவரும் பெண்ணியச் சிந்தனைகளையும் வெளிப்படுத்தப்படுத்தியுள்ளது. தவிர, இந்நாவலில் ஆணாதிக்கத்தைத் தகர்க்க முயலும் போக்கும் காட்டப்பட்டுள்ளது. இந்நாவலில் வரும் கமலவேணி மிகவும் சுதந்திரமாக வாழ ஆசைப்பட்டுப் பல ஆடவர்களோடு சுதந்திரமாகப் பழகியும் உறவுகொண்டும் திருப்தியுறாமல், இறுதியில் ஆண்களை வெறுத்து தீவிரவாதப் பெண்ணியம் பேசி, அதற்கு ஏற்றது மேலை நாடே என்று கருதி அங்கேயே சென்றுவிடுகிறாள்.

நாளைக்கு எனும் நாவலில் வரும் ராஜேஸ்வரி தன் ஒரே தங்கை பத்மாவுக்காக கணவனையும் மாமியாரையும் எதிர்த்துக்கொண்டு வாழ்க்கையையே இழக்கத் துணியும் அளவிற்கும் செல்லத் தயாராகி விட்டதாகக் காட்டப்படுவதானது மலேசியத் தமிழ்நாவலின் உள்ளடக்கத்திற்குப் புதிய போக்காகப்படுகின்றது. இக்குறுநாவலில் கதாசிரியர் மிதவாதப் பெண்ணியத்தை மெல்லிய இழையாக நாவலில் கதையோடு கலந்து குழைத்துத் தந்துள்ளது சிறப்பாக உள்ளது.

நித்திலப்பூ எனும் நாவல் காதலுக்கும் காமத்திற்கும் வேறுபாடு அறியமறுக்கின்ற இன்றைய இளசுகளின் போக்குகளைச் சாடுவதோடு பங்களாதேஷ் இளைஞர்களின் காமச்சேட்டைகளின் கவர்ச்சியில் விட்டில்பூச்சிகளாய் கவரப்பட்டு இந்தியப் பெண்கள் சிக்கிச் சீரழிவதைக் காட்டுகின்றது. தொன்னூறுகளில் நாட்டிற்குள் பிழைப்புக்காகவந்த பங்களாதேஷ் இளைஞர்கள் தம் காமச்சேட்டைகளை மலேசியப் பெண்களிடம் குறிப்பாக, இந்தியப் பெண்களிடம் கட்டவிழ்த்து விடப்பட்டது அப்போதைய நடப்பியல் சிக்கலாகும். இந்நாவலில் வரும் மங்கை பங்களாதேஷ் இளைஞர்களின் வலையில் நம்மினப் பெண்கள் விழாதவகையில் போதிய பாதுகாப்பும் தந்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதும் தேவையேற்பட்டால் அவர்களைத் தாக்கவும் தயங்கக் கூடாது என்று காட்டுவதும் குறிப்பிடத்தக்கது.

இன்றைய நவீனச் சூழலில் காதலுக்குரிய இடம் யாது என்பதனை அடையாளம் காட்டும் வகையில் படைக்கப்பட்டுள்ள நாவல் காதலினால் அல்ல. இன்று கல்வியோடு கூடிய நிலையில் அகவளர்ச்சியும் புறவளர்ச்சியும் ஏற்பட்டிருந்தும்கூட, சமுதாயத்தில் காதலுக்குரிய மதிப்பும் மரியாதையும் எப்படி இருக்கிறது என்பதனை எதார்த்தபூர்வமாக அணுகும் நாவல் இது. இந்நாவலின் கதையில்வரும் பல்கலைக்கழக மாணவர்களான கணேஷ், அகிலா அகிய இரு கதைமாந்தர்மூலம் இன்றையநிலையில் காதலின்நிலை காட்டப்படுகின்றது. இன்றைய படித்த இளைஞர்கள் காதலைப்பற்றிக் கொண்டுள்ள கருத்துகளும் காதலை எப்படிப் பார்க்கிறார்கள் என்பதும் அவ்விருவரின் அறிவுபூர்வமான கருத்துப் பரிமாற்றங்களின் வழியாக உணர்த்தப்பட்டுள்ளன. *“இந்தக் காதல் எவ்வளவு தூரம் சரி, எவ்வளவு தூரம் பிழைன்னு தெரியில. ரொம்ப சீக்கிரமாப் பழகி ரொம்ப சீக்கிரமா முடிவுக்கு வந்திடறோமோன்னு ஒரு சந்தேகம்! இதுக்கு இன்னும் கொஞ்சம் கால அவகாசம் கொடுத்து பின்னால எல்லாத்தையும் உறுதி செய்யலாமேன்னு ஒரு தயக்கம்!”(23)* எனவரும் பகுதியிலிருந்து இன்றைய நிலையில் காதல் வேகவேகமாகத் தொடங்கி வேகவேகமாக முடியும் நிலை காட்டப்படுகின்றது.

பதவி ஓய்வுபெற்றுவிட்ட பெரியவர் ஒருவரின் மனவுணர்வுகளையும் அவர் எதிர்நோக்கியுள்ள உடல்நோய், குடும்பச்சிக்கல் ஆகியவற்றை மையப்படுத்தியும் முதன்மைப்படுத்தியும் படைக்கப்பட்டுள்ள நாவல் அந்திமகாலம். இக்கதையில் வரும் பெரியவர் சுந்தரம் ஓய்வுபெற்ற பள்ளி ஆசிரியர் ஆவார். கதைநடக்கும் காலப்பகுதியில் உடல், உளத் தொடர்பான பிரச்சினைகளில் சிக்கியுள்ளார். அதனால் அக,புற தனிமனிதப் போராட்டங்களுக்கு ஆளாகி வருந்துவதும் அவை தொடர்பான உணர்வுகளிலும் அவ்வப்போது ஆழ்ந்துபோவதும் கதை நெடுகிலும் காட்டப்பட்டுள்ளது. இந்நாவலைக்குறித்து, *“உண்மையில் மலேசியத் தமிழ் நாவல்கள் கோட்பாடுகளின் சிந்தனைகளோடு படைக்கப்படுவது என்பது மிகவும் குறைந்த எண்ணிக்கையிலே மட்டுமேயாகும். ஆனால், இங்குப் படைக்கப்படுகின்ற பெரும்பாலான நாவல்களில் கோட்பாட்டுச் சிந்தனைகள் இயைந்து வருவதை மறுக்கவியலாது. அவ்வகையிலே , ரெ.கார்த்திகேசுவின் அந்திமகாலம் என்ற நாவலிலும் கோட்பாடுகள் இயைந்து வந்துள்ளதைத் திறனாய்வின்வழி அறியமுடிகின்றது”(24)* என்ற கருத்து இவண் கருதத்தக்கது.

கோடுகள் எல்லாம் கோலங்களாக மாறுவதில்லை. அதுபோல பெண்ணாய்ப் பிறந்தவர்களுக்கெல்லாம் திருமண பந்தம் வாய்ப்பதில்லை என்ற செய்தியைத் தாங்கியுள்ள படைப்பு கோடுகள் கோலங்களானால் எனும் நாவல். இக்கதையில் வரும் ரேணுகாவிற்கு வருகின்ற வரனெல்லாம் உப்புசப்பற்ற புறக்காரணங்களால் தட்டிப்போகிற

நிலையில் திருமணத்தின் மீதே வெறுப்பு ஏற்பட, தன்னை விரும்பிய பரணியையும் புறக்கணித்துப் பெற்றோருக்காகவும் உடன்பிறப்புகளுக்காகவும் திருமணமே செய்துகொள்ள மறுத்து விடுகிறாள். மாற்றங்களும் புதுமைகளும் எவ்வளவோ வந்தும்கூட திருமணம் பெண்ணை ஏதோ ஒருவகையில் அடக்கியாளவே நினைப்பதனைக் கதாசிரியர் கதையில் காட்டிப் போகிறார். *"நான் திருமணம் செய்துகொண்டால் என் குடும்பமும் இதுபோல் ஆதரவின்றிதான் தவிக்குமோ? திருமணத்துக்குப் பின்னாலும் என்னால் என் குடும்பத்தைக் காப்பாற்ற முடியும் என்பது என்ன நிச்சயம்! அதற்குப்பின் எனக்கு ஏற்படும் பிரச்னைகள் எப்படியிருக்குமோ?"(25)* என இந்நாவலில் வரும் ரேணுகாவின் சிந்தனையின்வழி இன்றைய நிலையில் திருமணத்திற்குமுன் ஒரு பெண் பல கோணங்களில் நன்றாகச் சிந்தித்தும் அலசியும் பார்த்தே திருமணத்தை மேற்கொள்ள வேண்டிய தேவையிலும் கட்டாயத்திலும் இருக்கிறாள் என்பதனை உணர்த்துகின்றது.

பிள்ளைகளின் திருமண விஷயத்தில் பெற்றோரின் அக்கறை சிலவேளைகளில் அது பிள்ளைகளையே ஊனமாக்கி விடுகிறது என்பதைக் காட்டும் நாவல் நொண்டிப்பறவை. இந்நாவலில் வரும் தந்தை கணபதி தம் மூத்தப்பெண் இந்திராவின் திருமணத்தினால் மற்றப் பெண்களுக்கு வரும் வரன்களையும் மறுக்க அதனால் விளைந்துவிட்ட அவலங்களினால் இளைய மகள் ஒருவனுடன் ஓடிப்போக, அதனைத்தாளாது உயிரையே விட்டுவிடுவதனைக் காட்டும் கதையிது. இந்நாவலில் முதிர்கன்னிப் பிரச்சினை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பழமையிலேயே ஊறிப்போனவர்கள் அதனைவிட்டு அவ்வளவு எளிதில் வெளியேற முடியாது என்பது கணபதியின் கதைமாந்தர்ப் படைப்பின்வழி உணர்த்தப்பட்டுள்ளது. *"அப்பா, எனக்கு இன்னமே கல்யாணம் நடக்கப் போறதே இல்ல...! அந்த வயசுகூட எனக்குத் தாண்டிப் போச்சுப்பா...! என் வயசுக்குப் பொருத்தமான மாப்பிள்ளைக்கூட கிடைப்பாருங்கிறது சந்தேகம்தான்...ஆனா, அதுக்காக நான் கவலைப்பட போறதில்லே...அதனாலே, என்னைக் காரணம் காட்டி அர்த்தமில்லாததைக் கொஞ்சம் தளர்த்திக்கிட்டு நேத்து வந்த மாப்பிள்ளைக்கே பூரணியை முடிச்சிடுறதுதான் நல்லது..."(26)* எனக்கூறும் இந்திராவின் கூற்றில் முதிர்கன்னிகளின் ஏக்கமும் உணர்வும் வெளிப்படுவதோடு அவர்களின் பரிதாபத்திற்குரிய இரக்கநிலையும் வெளிப்படுகின்றது.

கனவுத்தொழிற்சாலையான தமிழ்ச்சினிமா ஏற்படுத்திய தாக்கத்தையும் அதனால் விளைந்துவிட்ட பாதிப்புகளையும் உள்ளடக்கமாகக்-கொண்டு படைக்கப்பட்டுள்ள நாவல் கனவுப்பந்தல். சினிமா இல்லையேல் இன்று வாழ்க்கையே இல்லை என்று சொல்லும் அளவுக்குச் சமுதாயத்தின் அனைத்துத் தரப்பினரையும் கவர்ந்துள்ள சினிமாத்துறையில் காணப்படும் சீர்கேடுகளைத் தெளிவாக விளக்கும் நாவல் இது. இந்நாவலின் கதையின் தொடக்கமும் இறுதியும் மட்டும் மலேசியாவில் நடைபெறுவதாகக் காட்டப்படுகின்றது. மீதமுள்ள பெரும்பகுதிக் கதை தமிழகத்தில் நடக்கிறது. இந்நாவலில் வரும் வசந்தன் எனும் இளைஞன் மூலம் தமிழ்த்திரையுலகம் போலித்தனங்களும் ஒழுங்கீனங்களும் நிறைந்துள்ளது காட்டப்படுகின்றது. பெண்களின் கற்பு அங்கே கசக்கியெறியப்படும் மோசமானநிலை இந்நாவலில் வரும் லதா மூலப் காட்டப்படுகின்றது.

பெண்கள் எவ்வளவுதான் படித்திருந்தாலும் படிப்பறிவற்ற கணவனாயினும் அவனுடைய அதிகாரத்திற்கு முன்னால் எதுவும் செய்ய இயலாத நிலையில் அடங்கிப்போகும் அவலத்தைக் காட்டும் நாவல் விழலும் நீரும். ஒருகாலத்தில் ஆணாதிக்கம் பெண்கல்விக்கு மறுப்புத் தெரிவித்தது. ஆனால், காலவளர்ச்சியில் பெண்கள் படித்து ஆணைவிடச் சிறந்திருக்கும் வேளையில் ஆணாதிக்கம் வேறுவகைகளில் தொடரவே செய்கின்றது என்பதனைக் காட்டும் நாவல் இது. இக்கதையில்வரும் படித்த பெண்ணான கயல்விழி கணவனுக்குப் பணம் சம்பாதித்துத் தரும் ஓர் இயந்திரமாகவே பார்க்கப்படுகிறாள்.

மன ஊனங்கள் எனும் நாவல் போலி அரசியல்வாதியின் முகத்திரையைக் கிழித்தெறியும் படைப்பு. இந்நாவலில் வரும் போலி அரசியல்வாதி பசுபதி பணத்திமிராலும் அதிகாரப்போதையாலும் பெண்களின் கற்புக்குக் களங்கத்தை ஏற்படுத்துவது மிகையில்லாமல் காட்டப்பட்டுள்ளது.

ஊனக்கனவுகள் எனும் நாவல் படிப்பதற்கு வாய்ப்பற்ற ஏழை இந்திய மாணவர்கள் எவ்வாறு வன்னடத்தைக்கு ஆளாகி, வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டு வீணாகிப் போகிறார்கள் என்பதனை விளக்குகின்றது. இக்கதையில்வரும் குமரேசன் வன்னடத்தைக்கும் வன்முறைக்கும் ஆளாகித் தறிகெட்டுத் திரியும் இளைஞர்களுக்குப் பிரதிநிதியாகக் காட்டப்பட்டுள்ளான்.

தனிமனித உணர்வுகளுக்கு முதன்மைகொடுத்துப் படைக்கப்பட்ட நாவல் சூதாட்டம் ஆடும் காலம். தாய்மையின் சிறப்பையும் பெருமையையும் காட்டும் நாவல் இது. பெற்றவளுக்கு நல்ல குழந்தையோ ஊனக்குழந்தையோ எல்லாக் குழந்தைகளும் ஒன்றுதான். இக்கதையில் வரும் தாய் சாரதா தன் ஊனக் குழந்தையைக் கொடிய கணவனிடமிருந்தும் தீய மாமியாரிட-மிருந்தும் காப்பாற்ற தன் வாழ்க்கையையே இழப்பது மட்டுமல்லாமல் கொலைகாரி என்ற வீண்பழிக்கும் ஆளாகிறாள். அத்தாயின் மூத்த மகன் கதிர் ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகளுக்குப்பின் உண்மையறிந்து துடித்துப் போகிறான். *"என்னைத் துறந்து போனதால் உன்னைப் பாசமில்லாதவள் என எண்ணி-யிருந்தேன். ஆனால் இன்னொரு உயிரின் மேல் எத்தனை பாசம் இருந்திருந்தால் நீ எந்தத் துன்பமும் ஏற்கத் தயாராக அந்த விடியற்காலையில் படி தாண்டிப் போயிருப்பாய்? தாயின் தியாகம் என்பதற்கு எல்லைகள் இல்லையா?"(27)* எனவரும் அவ்விளைஞனின் உணர்வுகளும் சிந்தனைப் போக்குகளும் கதைக்கேற்ப இயல்பாக அமைந்து நாவலுக்குச் சிறப்பைச் சேர்க்கின்றது.

குயில்கூவி துயில் எழுப்ப எனும் நாவல் ஆணாதிக்கப்போக்கும் அதிகாரவெறியும் கொண்ட கணவனால் பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகும் பெண்ணின் அக, புறப் போராட்டங்களை உள்ளடக்கமாகக் கொண்டது. இந்நாவலின் கதையில் வரும் தேவகி பொறுப்பற்ற கணவனுடன் போராட்டங்கள் நிறைந்த வாழ்க்கை நடத்தி நான்கு குழந்தைகளுக்குத் தாயாகி, யாருடைய ஒத்துழைப்புமின்றிப் பிள்ளைகளைக் கரைசேர்ப்பது காட்டப்படுகின்றது.

தோட்டப்புற வாழ்வைப் பின்னணியாகக்கொண்டு தோட்டப்புற முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு புனையப்பட்ட நாவல் இந்த மண்ணுக்கும் மணமுண்டு. இக்கதையில் வரும் தோட்டத்து இளைஞன் சண்முகம் தோட்டநிர்வாகத்தினாலும் தோட்டநிர்வாகத்தின் கைக்கூலிகளாலும் எதிர்நோக்கும் அக, புறப் போராட்டங்களே நாவலின் உள்ளடக்கமாக விரிந்துள்ளது. புறவாழ்வில் தோட்டநிர்வாகத்தின் பிரச்சினைகளை வென்றவன் அகவாழ்வில் தன் காதலில் தோல்வியைத் தழுவுகிறான். அவன் காதலி வசந்தி சூழ்ச்சியால் வேறொருவனுக்கு மனைவியாக்கப்-படுகிறாள். இந்நாவலின் கதையைப் படிக்கும்பொழுது செம்மண்ணும் நீலமலர்களும் (1969), பால்மரக்காட்டினிலே (1976) ஆகிய நாவல்களின் கதைகள் நம நினைவலைகளில் வந்து மோதுவதைத் தடுக்க இயலவில்லை. அதேபோன்று இந்நாவலின் கதைத்தலைவன் சண்முகத்தை நினைக்கும்பொழுதும் செம்மண்ணும் நீலமலர்களும் நாவலின்

கன்னியப்பனும் பால்மரக்காட்டினிலே நாவலின் பாலனும் நம்மனக்கண்ணில் வந்துவந்து போவதையும் தவிர்க்க இயலவில்லை.

கலையுலகில் ஒரு பெண்ணுக்கு நேர்ந்த அவலத்தைப் பேசும் படைப்பு வேள்வி. கலையுலகில் பெண்களுக்கு மறைமுகமாகக் கொடுக்கப்படும் தொல்லைகள் குறிப்பாகக் காமத்தொல்லைகள் இந்நாவலில் வரும் பவித்ரா எனும் கதைமாந்தர் மூலம் வெளிப்பட்டுத்தப்பட்டுள்ளது. கொத்தித்தின்னும் கழுகுகளைப் போலவும் விழுங்கக் காத்திருக்கும் முதலைகளைப்போலவும் உள்ள மோசமான ஆண்களே கலையுலகில் அது சினிமாவாகட்டும் சின்னத்திரையாகட்டும் நிறைந்திருக்கிறார்கள் என்ற செய்தியைத் தாங்கியுள்ள படைப்பு.

கடந்தகால வாழ்வியலையும் சமகால வாழ்வியலையும் உள்ளடக்கமாகக்கொண்ட நாவல்களின் கதைகளின் அமைப்பைக் காணும்போது அவை மிகுதியும் நேர்க்கோட்டுக் கதைகளாக, நேர்க்கோட்டுத் தன்மையில் அமைக்கப்பட்டுள்ளது தெரியவருகின்றது. பேராசிரியர் ரெ. கார்த்திகேசு, ப.சந்திரகாந்தம், கோலலங்காட் அ.ரெங்கசாமி, சீ. முத்துசாமி போன்றாரின் படைப்புகளின் கதைகள் நேர்க்கோட்டுத்தன்மையில் அமைக்கப்படாமல், சிக்கல்கள் நிறைந்தும் நிரல்படக் (chronological order) காட்டப்படாமல் மனவுணர்வுகளுக்கு ஏற்ப மாறிமாறிக் காட்டப்படுவதுமான நிலை காணப்படுகின்றது. இவர்களது இம்முயற்சிகள் மலேசியத் தமிழ் நாவல் இலக்கியத்திற்கு வளம் சேர்க்கும் வகையில் உள்ளன. இவர்களது பாணியிலோ அல்லது வேறு புதிய முறைகளிலோ புதிய தலைமுறை எழுத்தாளர்கள் நாவல்கள் படைத்து மலேசியத் தமிழ் நாவல் இலக்கியத்திற்கு வளம் சேர்ப்பர் எனத் துணிதற்கு இடமுண்டு.

### 8. தொகுப்புரை:

இதுவரை பார்த்தவற்றால் பின்வரும் செய்திகள் புலனாகின்றன. நாவல் இலக்கியம் நிகழ்காலச் சமுதாயத்தின் சமகாலப் பிரச்சினைகளைப் பிரதிபலித்துக் காட்டும் கண்ணாடி. அது வாழ்வின் அர்த்தங்களைத் தேடி வெளிப்படுத்துவதோடு எதிர்காலச் சமுதாயத்திற்கு வழியைக் காட்டிச் சிந்திக்கத் தூண்டுவதாக உள்ளது. தமிழகத்தின் தாக்கத்தினால் மலேசியாவில் நாவல் இலக்கியம் தொடங்கப்பட்டிருந்தாலும், காலப்போக்கில் மலேசியத் தமிழ் நாவல் இலக்கியம் தனக்கேயுரிய தனித்துவக் கூறுகளையும் பண்புகளையும் கொண்டு விளங்குகின்றது. விடுதலைக்குப்பின்னர் மலேசியத் தமிழ் நாவல்கள் மலேசிய இந்தியச் சமுதாயத்தின் வாழ்வியல் கூறுகளைச் சிறப்பாகவும் முழுமையாகவும் வெளியிடத் தொடங்கின. குறிப்பாகத் தோட்டப்புற மக்களின் வாழ்வியல் சிக்கல்கள் நாவல்களில் வெளிபடுத்தப்பட்டன. தொன்னூறுகளுக்குப்பின் மலேசியத் தமிழ் நாவல் இலக்கியம் எண்ணிக்கையிலும் தரத்திலும் வேகமாக வளர்ச்சி கண்டுள்ளது. அவற்றுள் மிகுதியானவை குறுநாவல்களாகவே அமைந்துள்ளன. மலேசியத் தமிழ் படைப்பாளர்கள் மத்தியில் குறுநாவல் பற்றிய தெளிவு காணப்படுவதால் அவ்வடிவத்தை அவர்கள் உணர்ந்து செம்மையாகப் படைத்து வருவது தெரிய வருகின்றது. குறுநாவல்கள் வளர்ச்சிக்குப் பத்திரிகைகள் கணிசமான பங்கை ஆற்றி வருகின்றன.

தொன்னூறுகளுக்குப்பின் தொடர்கள் எழுதிய படைப்பாளர்கள் அவற்றை நூல்வடிவில் கொண்டு வருவதில் ஆர்வம் காட்டியுள்ளனர். தொன்னூறுகளில் பெண் நாவல் ஆசிரியர்களின் பங்களிப்பு மிகவும் கவலையளிப்பதாய் உள்ளது. தொன்னூறுகளில் ஒருவரும் புத்தாயிரத்தில் இருவரும் என காணப்படுவது வருத்தமளிப்பதாய் உள்ளது. தொன்னூறுகளில் 1996-ஆம் ஆண்டிலும் புத்தாயிரத்தில் 2003, 2004-ஆம் ஆண்டுகளிலும் எந்தவொரு நாவலும் நூல்வடிவில் வராதது குறிப்படத்தக்கது. தொன்னூறுகளுக்குப்பின் மலேசியத் தமிழ் நாவல் இலக்கியத்தின் எண்ணிக்கை கூடவும் தரம் உயரவும் பல்வேறு நிலைகளில் இலக்கிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நாவல் தொடர்பான கருத்தரங்குகள், நாவல் எழுதும் போட்டிகள் இவ்வகையில் மேற்கொள்ளப் பட்டுள்ளன. தொன்னூறுகளில் சிறுகதையாசிரியர்கள் பலர் நாவல் துறையில் தங்களின் கவனத்தைத் திருப்பியுள்ளனர். இந்நிலை புத்தாயிரத்திலும் தொடரவே செய்தது. தொன்னூறுகளுக்குப்பின் மூத்த எழுத்தாளர்களின் பங்களிப்பு நாவல் துறைக்குக் கணிசமாகக் கிட்டியுள்ளதால் மலேசியத் தமிழ் நாவல் இலக்கியம் வளம் பெற்றுள்ளது. இவர்களுள் ரெ.கார்த்திகேசுவின் பங்களிப்பு மலேசியத் தமிழ்நாவலுக்குத் தரம், திறம், உரம் ஆகியவற்றைச் சேர்ப்பதால் அவரை மலேசியத் தமிழ் நாவல்துறையின் முன்னோடி எழுத்தாளர் என்று துணிந்து குறிப்பிடலாம்.

தமிழ்நாவலின் தொடக்ககால போக்கான மர்மமும் துப்பறிதலும் இந்தத் தொன்னூறுகளிலும் மலேசியத் தமிழ்நாவல்களில் தொடர்வதனைக் காணமுடிகின்றது. பெண்ணியச் சிந்தனைகளை வலியுறுத்தி நாவல்கள் எழுதும் புதிய போக்குத் தொன்னூறுகளுக்குப்பின் காணப்படுகின்றது. மலேசியத் தமிழ் நாவல் ஆசிரியர்களுள் சிலர் மிதவாதப் பெண்ணியத்தையும் சிலர் தீவீரவாதப் பெண்ணியத்தையும் ஆதரித்துப் பின்பற்றுகின்றநிலை காணப்படுகின்றது. மலேசியாவில் நாவல்களில் காட்டப்படும் பெண்ணியம் ஆண் எழுத்தாளர்களால் பேசப்படுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. தமிழகத்தில் நடைபெற்ற 'சம்ப்பா-நரேந்தர்' குறுநாவல் போட்டியில் பேராசிரியர் ரெ.கார்த்திகேசுவின் நாளைக்கு எனும் படைப்பு பரிசு பெற்றுள்ளதானது மலேசியத் தமிழ் நாவலின் சிறப்புக்குக் கிடைத்த ஓர் அங்கீகாரம்.

புத்தாயிரத்தில் நிறையத் தொடர்கள் எழுதப்பட்டு, பின் அவற்றுள் பல நூல்வடிவம் பெற்றன.புத்தாயிரத்தில் மலேசியத் தமிழ் நாவல் ஆசிரியர்களுள் நாவலைச் சிறப்பாகப் படைக்க வேண்டும் என்ற உந்துதலில் கள ஆய்வை மேற்கொண்டு நாவல் படைத்து நாவல் இலக்கியத்திற்கு நடப்பியல் தன்மையைத் தந்துச் சிறப்புச் சேர்த்துள்ளனர். புத்தாயிரத்தில் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம், தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், தமிழ் நேசன் நாளிதழ், மலாயாப் பல்கலைக்கழகத்தின் இந்திய ஆய்வியல் துறை ஆகியவற்றின் பங்களிப்பு நாவல்துறை வளர்ச்சிக்கு ஊக்கமூட்டுவதாக உள்ளன. போட்டியில் வெளிவந்த நாவல்களுள் பல அச்சில் வராமல் உள்ளன.

2007-இல் மூன்று நாவல்/குறுநாவல் எழுதும் போட்டிகள் அறிவிக்கப்பட்டுள்ளதானது மலேசியத் தமிழ்நாவல் தன் பொற்காலத்தை நோக்கிச் செல்லுவதனைக் காட்டுவதாயுள்ளது. அண்மைய பத்தாண்டுகால மலேசியத் தமிழ் நாவல்கள் மலேசிய இந்தியச் சமுதாயத்தின் கடந்தகால வாழ்வியலையும் சமகால வாழ்வியலையும் உள்ளடக்கமாகக் கொண்டு விளங்குகின்றன. தொன்னூறுகளுக்குப்பின் மலேசியத் தமிழ் நாவல்களில் தனிமனித உணர்வுகள் மேலோங்குதலும் அவற்றையொட்டிய போராட்டங்கள் வலுபெறுதலும் காணப்பட்டன. தொன்னூறுகளுக்குப்பின் சமகால வாழ்வியலை உள்ளடக்கமாகக் கொண்ட நாவல்களில் சமுதாய உணர்வு மேலோங்கிக் காணப்படுகின்றது. போதைப்பொருள் பிரச்சினை, இளைஞர்களின் வன்னடத்தை, பெண்ணுரிமைக்கான குரல்கள், சினிமா மோகம் கொண்டுவந்த சீரழிவுகள், பங்களாதேஷ் இளைஞர்களால் ஏற்பட்ட தொல்லைகள் போன்ற நடப்புப் பிரச்சினைகள் பரவலாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### 9. அடிக்குறிப்புகள்

1. எழில்முதல்வன் (மா.இராமலிங்கம்), (1979). தேசிய உணர்வு, நூறாண்டு நாவல் தரும் செய்தி, சென்னை, (சென்னை கிறித்துவ இலக்கியச் சங்கம்), பக்.65
2. தமிழ் நேசன், 31.08.2007, பக்.17
3. எம்.ஏ.இளஞ்செல்ஙன், (1999). வானம் காணாத விமானங்கள், பக். X
4. முன்னுரல், பக். X
5. தட்சிணாமூர்த்தி.பி, (1979). நாவல் ஆய்வு, இலஞ்சியார் பதிப்பகம், திருநெல்வேலி, பக்.48
6. சுப்பிரமணிய்.ச.வே. (1983). எண்பத்தொன்றில் தமிழ், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, பக்.101
7. சீதாலட்சுமி.வே. (1985). தமிழ் நாவல்கள் (அகரவரிசை), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, பக். XXXIX
8. மலேசியத் தமிழ் நாவல் கருத்தரங்கின் (1992) ஐந்து படைப்புக்கட்டுரையின் தலைப்புகள்

அ. பேராசிரியர் ரெ.கார்த்திகேசு:
- அண்மைய மலேசியத் தமிழ்நாவல்களில் வாழ்க்கை, கற்பனை, மலேசியச்சூழல் ஆகியவை பயன்படுத்தும் விதங்கள்: ஒரு பார்வை.

ஆ. டாக்டர் வே. சபாபதி:
- மலேசியத் தமிழ் நாவல் இலக்கியம்,
- விடுதலைக்கு முந்திய மலேசியத் தமிழ் நாவல்கள்

இ. டாக்டர் லெட்சுமி மீனாட்சிசுந்தரம்:
- மலேசியத் தமிழ் நாவல்கள் (1960 -79 வரை)

ஈ. டாக்டர் எம். கிருஷ்ணன்:
- மலேசியத் தமிழ் நாவல்கள் (1980 - 90 வரை)

9. சபாபதி.வே. (1996). மலேசியத் தமிழ் நாவல் வளம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, ப.ப. 152-162
10. கரார்த்திகேசு. ரெ, தேடியிருக்கும் தருணங்கள், ப.46
11. கார்த்திகேசு. ரெ, நாளைக்கு, மனசுக்குள், ப.ப 54-55
12. பீர் முகம்மது, பெண் குதிரை, ப.92
13. கணையாழி, (1999) செப்டம்பர் மாத இதழ், ப.ப 53 - 65
14. கணையாழி, (1999) சப்டம்பர் மாத இதழ், ப.ப 63 - 64
15. மக்கள் ஓசை (ஞாயிறு ஓசை), 15.07.2007, பக். 2
16. அ.ரெங்கசாமி (கோலலங்காட்), லங்காட் நதிக்கரை, பதிப்புரை
17. தமிழ் நேசன், 08.07.2007, பக். 19
18. பின்னிணைப்பினைக் காண்க.
19. பின்னிணைப்பினைக் காண்க.
20. ரெங்கசாமி.அ, லங்காட் ந்திக்கரை, ப.76
21. முத்துசாமி. சீ, மண் புழுக்கள், ப. 57
22. சந்திரகாந்தம்.ப, அமுதசுரபிகள், ப. 394-395
23. கார்த்திகேசு.ரெ, காதலினால் அல்ல, ப. 277
24. மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்விதழ், 8-வது பொகுப்பு, ப. 89
25. பாவை, கோடுகள் கோலங்களானால், ப.ப 103 -104
26. பாவை, நொண்டிப்பறவை, ப. 129
27. கார்த்திகேசு. ரெ, சூதாட்டம் ஆடும் காலம், ப.171


**10**. பின்னிணைப்பு - தொன்னூறுகளுக்குப்பின் வெளிவந்த மலேசியத் தமிழ் நாவல்கள் (1990 - 2007)

1. வா! அருகில் வா! (கே. நடராஜன்) - 1990
2. நெஞ்சுக்குத் தெரியும்! (கே. நடராஜன்) - 1990
3. ஓடும் நதி (உம்மு சல்மா) - 1990
4. மனவீணை (டாக்டர் சி. சொக்கலிங்கம்) - 1991
5. கனவுகளின் சுயம்வரம் (அரவிந்தன்) - 1991
6. இதய ரோஜா (ந. சந்திரன்) - 1991
7. விலாங்குகள் (மு. அன்புச்செல்வன்) - 1991
8. ராகதேவதை (ரெ. கார்த்திகேசு) - 1991
9. கொப்புளங்கள் (ரெ. கார்த்திகேசு) - 1991
10. மனசுக்குள் கட்டுகிற மணற்கோபுரங்கள் (ரெ. கார்த்திகேசு)-1991
11. பேசும் ஊமைகள் (டாக்டர் சி. சொக்கலிங்கம்) - 1991
12. பௌர்ணமி நிலவில் (பூ. அருணாசலம்) - 1992
13. அழகின் ஆராதனை (மா. இராமையா) - 1992
14. அவளுக்கென்று ஓர் மனம் (எம். எஸ். விஜயராஜ்) - 1992
15. தேடியிருக்கும் தருணங்கள் (ரெ. கார்த்திகேசு) - 1993
16. சயாம் மரண ரயில் (ஆர். சண்முகம்) - 1993
17. புதியதோர் உலகம் (அ. ரெங்கசாமி) - 1993
18. சுவடுகள் (மா. இராமையா) - 1994
19. அம்மாவும் சாரங்கனும் (ரெ. கார்த்திகேசு) - 1994
20. சாரங்கன் வருகிறான் (ரெ.கார்த்திகேசு) - 1995

21. சங்கமம் (மா.இராமையா) - 1995
22. ஐந்தாவது பௌர்ணமி (சரஸ்வதி அரிகிருஜ்ணன்) - 1995
23. மனித்தப்பிறவியும் (டாக்டர் சி. சொக்கலிங்கம்) - 1995
24. நானும் ஒரு தமிழ்ப்பெண்தான் (சரஸ்வதி அரிகிருஜ்ணன்) - 1995
25. சுவர் (டாக்டர் சி. சொக்கலிங்கம்) - 1997
26. பெண் குதிரை (சை. பீர்முகம்மது) - 1997
27. நித்திலப்பூ (வீ. கு. சந்திரசேகரன்) - 1997
28. நெருப்புக்கொடிகள் (நா. ஆ. செங்குட்டுவன்) - 1998
29. விடியலுக்காக (நா. ஆ. செங்குட்டுவன்) - 1998
30. விலங்கு (நா. ஆ. செங்குட்டுவன்) - 1998
31. அந்திமகாலம் (ரெ. கார்த்திகேசு) - 1998
32. கோடுகள் கோலங்களானால் (பாவை) - 1998
33. நொண்டிப்பறவை (பாவை) - 1998
34. அம்மா (அ. கந்தன்) - 1998
35. விடியலை நோக்கி (அ. கந்தன்) - 1998
36. எழுச்சி (அ. கந்தன்) - 1999
37. விழலும் நீரும் (மா. இராமையா) - 1999
38. வானம் காணாத விமானங்கள் (எம். ஏ. இளஞ்செல்வன்) - 1999
39. மோகங்கள் (எம். ஏ. இளஞ்செல்வன்) - 1999
40. பசித்திருக்கும் இளம்கொசுக்கள் (எம். ஏ. இளஞ்செல்வன்) - 1999
41. கனகாம்பரமும் கிளிஞ்சல் மலர்களும் (எம். ஏ. இளஞ்செல்வன்) - 1999
42. காதலினால் அல்ல (ரெ. கார்த்திகேசு) - 1999
43. நாளைக்கு (ரெ. கார்த்திகேசு) - 1999
44. கள்ளச்சந்தையில் சொக்கத்தங்கங்கள் (செங்கதிரோன்) - 2000
45. துன்பங்கள் உறங்குவதில்லை (நா. ஆ. செங்குட்டுவன்) - 2001
46. மன ஊனங்கள் (மா. இராமையா) - 2001
47. ஊனக்கனவுகள் (மா. இராமையா) - 2001
48. குயில்கூவி துயில்எழுப்ப (நிர்மலா பெருமாள்) - 2002
49. நல்லவராவதும் தீயவராவதும் (ரெ. கார்த்திகேசு) - 2002
50. தீக்காற்று (ரெ. கார்த்திகேசு) - 2003
51. புழுத்துளைகள் (ரெ. கார்த்திகேசு) - 2004
52. இந்த மண்ணுக்கும் மணமுண்டு (சி. வடிவேலு) - 2005
53. நினைவுச்சின்னம் (அ. ரெங்கசாமி) - 2005
54. சூதாட்டம் ஆடும் காலம் (ரெ.கார்த்திகேசு) - 2005
55. கனவுப்பந்தல் (நா. ஆ. செங்குட்டுவன்) - 2005
56. கால்களே நில்லுங்கள் (நா. ஆ. செங்குட்டுவன்) - 2005
57. லங்காட் நதிக்கரை (அ. ரெங்கசாமி) - 2006
58. மண்புழுக்கள் (சீ. முத்துசாமி) - 2006
59. அமுதசுரபிகள் (ப. சந்திரகாந்தம்) - 2006
60. தனயனைக் காப்பாற்றிய தாய் (ஆர். சண்முகம்) - 2006
61. இமயத் தியாகம் (அ. ரெங்கசாமி) - 2007
62. வேள்வி (நிர்மலா பெருமாள்) - 2007
63. அக்கினி வளையங்கள் (சை. பீர் முகம்மது) - 2007

போட்டியில் பரிசுகள் பெற்றவை. ஆனால், இன்னும் நூலுருவம் பெறாத நாவல்கள்

1. ஞானத்தின் வாசலிலே (ம. நவீன்)
2. நொய்வப்பூக்கள் (கோ. பண்ணியவான்)
3. அசலா? மாற்றமா?
4. மறுமலர்ச்சி
5. பெண்ணினத்தின் இரு மாபெரும் போராளிகள்
6. வாழ்க்கையே அலைபோலே.
7. இக்கரையா? அக்கரையா?
8. மனவீணை
9. மண்மாற்றம்
10. ஆண்களும் பெண்களும்
11. மலரே மௌனம் ஏன்?
12. உனக்காகவே...

## *தமிழர் சமய வரலாறு: ஒரு பொதுப் பார்வை*

*இரா. சீதா லட்சுமி*
*இந்திய ஆய்வியல் துறை, மலாயாப் பல்கலைக்கழகம்*
*rseetha@um.edu.my*

**ஆய்வுச்சுருக்கம்**

*தமிழர் சமய வரலாறு காலநெடுமையைக் கடந்து விளங்குகின்றது. பண்டைய காலந்தொட்டே தமிழ்மக்கள் கடவுட்கொள்கையுடையவராகத் திகழ்கின்றனர். ஆதியில் இயற்கையைப் போற்றும் வழிபாட்டுமுறையில் தொடங்கி, படிப்படியாக சிறுதெய்வ வழிப்பாடாகத் தமிழர் வாழ்வியல் வளர்ச்சி கண்டது. பன்னெடுங்காலமாக வளர்ந்துவந்த வழிப்பாட்டுமுறைகள் இன்றளவும் தமிழர்தம் சமயவாழ்வில் நிலைபெற்றிருப்பதைக் காணவியலுகின்றது. பழந்தமிழர் நிலப்பாகுபாடு அடிப்படையில் இனக்குழுக்களாக வாழ்ந்த காலந்தொட்டே கடவுட்கொள்கையை முன்னிலைப்படுத்தி வாழ்ந்துள்ளதைத் தொல்காப்பியம் சுட்டுகின்றது. சங்க இலக்கியங்கள் ஐவகை நிலப்பாகுபாட்டைப் பாடும்போது பழங்குடிமக்களின் சமய நம்பிக்கைகளைத் தெளிவுபடக் கூறுகின்றன. சங்கம் மருவிய காலத்தில் தமிழ் மக்களிடையே சமய நம்பிக்கை தொடர்ந்து இருந்து வந்துள்ளது என்பதற்குத் தக்கச் சான்றாக அக்காலப்பகுதியில் தோன்றிய இலக்கியங்களிலுள்ள குறிப்புகள் திகழ்கின்றன. சங்க காலத்தில் மூவேந்தராலும் சிற்றரசர்களாலும் ஆளப்பட்டு வந்த தமிழ்நாடு, கி.பி. 3-ஆம் நூற்றாண்டில் அயலவர்களான களப்பிரர், பல்லவர் முதலானோர் ஆட்சிக்குட்பட்டது. சாதி அமைப்பு முறை, போர், மது, மாது, ஊனுண்ணல் போன்றவற்றால் மக்கள் உள்ளம் சலிப்படைந்திருந்தனர். இச்சூழலிலே, நீதிப் போதனைகளை அடிப்படையாகக் கொண்ட சமண, பௌத்தத் துறவிகள் வலியுறுத்திய அமைதி, ஒற்றுமை, ஒழுக்கம், புலனடக்கம், புலால் மறுத்தல் போன்ற நெறிகளைத் தமிழ் மக்களும் மனமுவந்து ஏற்றுக்கொண்டனர். இதனால், களப்பிரர்கள் காலத்தில் சமண, பௌத்தச் சமயங்கள் தமிழ் நாட்டில் செல்வாக்குப் பெறலாயின. ஆயினும், ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் களப்பிரர்கள் தம் அரசியல் செல்வாக்கை இழந்தனர். அதே வேளை, சைனரும் பௌத்தரும் வலியுறுத்தி வந்த புலனடக்கம், உண்ணாநோன்பு, இன்ப வெறுப்பு முதலியவற்றால் மக்கள் சஞ்சலமும் அச்சமும் கொண்டனர். காதல் வாழ்விலும் இல்லற வாழ்விலும் கிட்டிய இன்பமும் பாதுகாப்பும் புறச்சமயக் கொள்கைகளால் பறிபோவதைக் கண்ட மக்கள் தன்னுணர்வு பெற்றனர்; புறச்சமயங்களை வெறுக்கத் தொடங்கினர். இக்காரணங்களால், சமண-பௌத்த சமயங்கள் செல்வாக்கை இழந்தன. இதனைத் தொடர்ந்து கி.பி. 6, 7, 8-ஆம் நூற்றாண்டுகளில் தமிழகத்தில் சைவ, வைணவ சமயப் பெரியார்களான நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோன்றி, ஊர் ஊராகச் சென்று பக்திப்பாடல்கள் பாடி, தத்தம் சமயக் கொள்கைகளைப் பரப்பினர். தமிழ் மக்களிடையே சமய எழுச்சியும் கலைப்பாதுகாப்பும் தோன்றலாயின. அதன் விளைவாக, பக்தி இயக்கம் உருபெற்றது. இப்பக்தி இயக்க வளர்ச்சியால் சைவ, வைணவ சமயங்கள் பெற்ற நன்மதிப்பிற்கும் பேராதரவிற்கும் உரிய காரணங்களாக கொள்கைகள், மன்னர்களின் ஆதரவு, நாயன்மார் ஆழ்வார்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகள், சமத்துவச் சிந்தனைகள், தமிழ்ப்பற்று, பெண்டிர் ஆதரவு, புராணக்கதைகளைப் பயன்படுத்துதல், வட்டார உணர்வு ஆகியவற்றைக் கூறலாம்.*

***குறிச்சொற்கள்**: தமிழர் சமயம், பழந்தமிழ் இலக்கியங்கள், பக்தி இயக்கம், சைவம், வைணவம்.*

Abstract

Tamil religious history transcends time. Since ancient times, the Tamils have believed strongly in god, where it started with worshipping the nature before gradually progressed to demi-gods worshiping. This tradition is developed into an institution in the religious life of Tamils. This is well-documented in Tolkappiyam that the ancient Tamils basically have held up the principles of God, according to different landscaped types of ethnic groups. There were amble of evidences in Sangam literature supporting this. Tamilnadu was ruled by the three kings, then it was taken over by the outsiders Kalabhras and Pallavas since the 3rd BC till the 7th AD. The crippling caste system, war, prostitution and non-vegetarianism which were prevalent during this time were pushed away by them. The Tamils were willingly to adopt principles of peace, unity, discipline, self-control and refusal to meat promoted by the Jainism and Buddhism. As a result of this, both religions garnered influence in Tamil Nadu during the era of Kalabhras until they lost hold in at the end of sixth century. At the same time, the Tamils, too, became intolerance to overtly self-control, fasting and happiness aversion principles promoted by the Jainism and Buddhism, soon they started to avoid their teachings and opt to other options that offer a balanced life-style between the material world and meta-physical world. The renaissance of Hinduism that took place between 6th and 8th century offered an alternatives to them. The icons of Saiva and Vaishnava religions (Nayanmars and Alvars), travelled from a place to another in to sing devotional hymns and spread their religious thoughs. Religious motivation and art conservation started to bloom during this era. This is called as the Bakthi Movement. The development of this Bakthi Movement has vast influence in the lifestyle of the locals, including the virtues of vegetarianism, the life events of Alvars and Nayanmars, the life

of the nobles, the egalitarian ideals, the loyalty towards Tamil language, the use of mythology and the sense of locality. This article is aimed to offer a glimpse of ides of such development that experienced by the Tamils.

**Keywords**: Tamils religion, Ancient Tamil Literatures, Bakthi Movement, Saivisme, Vaishnavisme.

***முன்னுரை***

*தாம் பார்க்கின்ற உலகத்தை, இயற்கைக் கூறுகளைக் கண்டு மனிதன் அஞ்சினான்; வியந்தான். இந்த உணர்வின் அடிப்படையில் இயற்கையை மனிதன் வழிபடத் தொடங்கினான். உலகின் எல்லா நாடுகளிலும் மனிதன் கண்டுணர்ந்த சமய நெறியின் தொடக்கம் இதுவாகவே இருந்தது. பின்னர், இச்சிந்தனை மரபுநெறி வழிபாடாகப் பரிணாமம் பெற்றது. சான்றோர் பெருமக்களின் சிந்தனைத் திறத்தால் ஆகமநெறி சமயங்களாக அவை வளர்ச்சி கண்டன (நாகப்பன் ஆறுமுகம், 2001: 2-3). அவ்வகையில், தொல்காப்பியர்க் காலம் தொடங்கி பக்தி இயக்கக் காலம் வரையிலான தமிழர் சமயத் தோற்றம், புறச்சமய ஊடுருவல், பக்தி இயக்கத் தோற்றமும் அதன் வளர்ச்சியும் ஆகிய தமிழர் சமய வரலாறு குறித்த ஒரு பொதுப் பார்வையினைத் தொகுத்து வழங்குதலை அடிப்படை நோக்கமாகக் கொண்டு இந்த ஆய்வுக் கட்டுரை அமைகின்றது.*

***1.0 சமயத் தோற்றம்***

*ஆதியில் அலைந்து திரிந்த மனிதன், இயற்கையோடு போராடி வெற்றி கொள்ள இயலாதென்று உணர்ந்ததும் நாகரிக வளர்ச்சியால் ஓரிடத்தில் கூட்டமாக நிலைத்து வாழ முற்பட்டான். இவ்வாறு வாழத் தொடங்கியதும் இயற்கைச் சக்தியால் தனக்குத் தீமை விளைவது குறித்த அச்சம் தோன்றவே, அதிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வழியைச் சிந்தித்தான். அதன் விளைவாக, இயற்கையை இயக்குகின்ற ஒரு பேராற்றல் இருப்பதாக நம்பினான். காலப்போக்கில் அதனைத் தெய்வமாக ஏற்று வழிபட்டு அதன் அருளை வேண்டினான்; கடவுள் கொள்கை தோன்றியது. இப்படியாக, இயற்கையின் நிறைவான பஞ்சபூதங்களை மக்கள் வழிபடத் தொடங்கியதும் 'சமயம்' உருவானது (சுலோச்சனா, ப., 1999: 5-8). அச்சம், முற்காப்பு, நன்றியறிவு, பாராட்டு, அன்பு, கருதுகோள், அறிவு வளர்ச்சி முதலான காரணங்களைச் சமயம் தோன்றிய வகையாக ஆசிரியர் ஞா.தேவநேயப் பாவாணர் தமது நூலில் குறிப்பிட்டுள்ளதும் இவ்விடம் கருதத்தக்கது (தேவநேயப் பாவாணர், ஞா., 2000: 6-9).*

*மனித இனம் அறிவுத்திறம் பெறத் தொடங்கிய காலத்திலிருந்தே சமயமும் உடன் வளர்ந்து வந்ததாகத் தோன்றுகிறது. சமயத் தேவை மனிதனது இயற்கைத் தேவைகளுள் ஒன்று என்பதுடன் இத்தேவை நிறைவு செய்யப்படுவது மனநிறைவினைத் தருவதாகவும் அமைகிறது. சமயம், மதம், நெறி, மார்க்கம் என்பன 'வழி' என்ற ஒரு பொருள் குறித்த பல சொற்கள் ஆகும். 'சமயம்' என்ற சொல்லுக்கு "இறைவனிடம் இணைத்தல், சேர்த்தல்" என்று பொருள்படும்.*

***2.1 பழந்தமிழ் இலக்கியங்களில் சமயச் சிந்தனைகள்***

*தொல்காப்பியர் காலத்திலும் அவர் காலத்திற்கு முன்னும் கூட மக்கள் மனதில் சமய உணர்வு காணப்பெற்றிருந்தது எனத் தெளியலாம். "இல்லறத்தில் ஈடுபட்டு மக்களை ஈன்று இன்ப வாழ்வு வாழும் தலைவனும் தலைவியும் கடவுளைப் பற்றி எண்ண முற்பட வேண்டும். அதுவே வாழ்க்கையின் குறிக்கோளாகும்" என்று தொல்காப்பிய நூற்பா உரைக்கின்றது. இதிலிருந்து, பழந்தமிழர்கள் கடவுட்கொள்கை உடையவர்கள் என்பதும், எல்லாவற்றையும் கடந்து நின்ற முழுமுதற் கடவுள் ஒருவனைப் பற்றிய கோட்பாட்டினை உடையவர்கள் என்பதும் பெறப்படும் (தொல்காப்பியம்: பொருளதிகாரம்: 640).*

*'கடவுள்' என்னும் சொல் எல்லாவற்றையும் "கடந்து நிற்பது" என்னும் பொருளைக் குறிக்கின்றது. தொல்காப்பியரால் இச்சொல் கையாளப்பட்டுள்ளது. திருவள்ளுவர் கையாண்டுள்ள "இறை" (திருக்குறள்: 39:8, 1:5&10) என்னும் சொல்லும், இருத்தலையும் எல்லாவிடத்திலும் நிறைந்திருத்தலையும் குறிப்பதாகும். தொல்காப்பியத்தில் வரும் 'கந்தழி' என்னும் சொல்லும் கடவுளையே குறிப்பதாகும். இச்சொல், 'இறைவன்' முழுமுதற் கடவுள், தன்வயத்தவன், கடந்து நிற்பவன் என்னும் பொருள்களைக் குறிக்கும் என்று நச்சினார்க்கினியர் மொழிகின்றார் (தொல்காப்பியம்: பொருளதிகாரம்:85).*

*"தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவி"*

*(தொல்காப்பியம்: சொல்லதிகாரம்: கிளவியாக்கம்: 4)*

*எனப் பகரும் தொல்காப்பியச் சொல்லதிகார நூற்பா தெய்வங்களின் பெயர்களைக் குறிக்கும் சொற்களைத் தனியாகச் சுட்டுகின்றது. இந்நூற்பா பல தெய்வங்களின் பெயர்கள் வழக்கில் இருந்துள்ளதைப் பதிவுச் செய்கின்றது.*

*"தெய்வம் உணாவே ............ "*

*(தொல்காப்பியம்: பொருளாதிகாரம்: அகத்திணையியல்: 20)*

*என்று தொடங்கும் நூற்பாவும் இதற்குச் சான்றாக விளங்குகிறது. முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்ற நால்வகை நிலங்களுக்குரிய தெய்வங்களின் பெயர்களை மற்றொரு நூற்பா கூறுகின்றது (தேவநேயப் பாவாணர், ஞா., 2000: 6-9).*

*மாயோன், சேயோன், வேந்தன், வருணன் ஆகிய தெய்வங்களின் பெயர்களைக் குறிப்பிடும் வகையில்,*

*"மாயோன் மேய காடுறை உலகமும்,<br>
சேயோன் மேய மைவரை உலகமும்,<br>
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்,<br>
வருணன் மேய பெருமணல் உலகமும்,<br>
முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனச்<br>
சொல்லிய முறையான் சொல்லவும் படுமே"*

*(தொல்காப்பியம்: பொருளாதிகாரம்: அகத்திணையியல்: 5)*

என்னும் நூற்பா அமைந்துள்ளது.

*"மறம் கடை கூட்டிய துடிநிலை சிறந்த*
*கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே"*

*(தொல்காப்பியம்: பொருளாதிகாரம்: புறத்திணையியல்: 4)*

என்ற நூற்பா 'கொற்றவை' எனும் பெண் தெய்வ வழிபாடு இருந்துள்ளதை உறுதிப்படுத்துகின்றது.

சூரியன், சந்திரன், அக்கினி முதலான இயற்கைச் சக்திகளையும் தெய்வமாக வழிபட்டுள்ளதை,

*"கொடிநிலை, கந்தழி, வள்ளி என்ற*
*வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்*
*கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"*

*(தொல்காப்பியம்: பொருளாதிகாரம்: புறத்திணையியல்: 27)*

என்ற நூற்பா பதிவுச்செய்கின்றது.

இயற்கையோடு இயைந்து வாழ்ந்த சங்க காலத் தமிழ் மக்களின் வாழ்க்கையோடு சமயம் ஒருங்கிணைந்த நிலையைச் சங்க இலக்கியங்கள் மிகத் தெளிவாக எடுத்துணர்த்துகின்றன. பண்டையத் தமிழர் கடவுளை எண்ணியே அகப் புற வாழ்வினை மேற்கொண்டதாக இவ்விலக்கியங்கள் சான்று பகர்கின்றன (பாலசுப்பிரமணியன்,சி., 1959: 75). சங்க இலக்கியங்களில் கடவுளைக் குறிக்கும் சொற்களாக, 'இறைவன்' *(பரிபாடல்: 17:49)*, 'கடவுள்' *(அகநானூறு: 13:1-4, 14-15, 125:14, 15: 6;: 15, 230, 282, 307: 12, 348: 8, 372: 1-3, ஐங்குறுநூறு: 32, 259, குறிஞ்சிப்பாட்டு: 208, குறுந்தொகை: 105:1-2, நற்றிணை: 82:2, 189:4, 216:6, 344:4, பதிற்றுப்பத்து:* கடவுள் வாழ்த்து*: 12, முன்னுரல்: 30:34, 41:6, மதுரைக்காஞ்சி: 651, மலைபடுகடாம்: 82-83, 250, 538)*, 'படைத்தோன்' *(நற்றிணை: 240:1, புறநானூறு: 194:5)* என்பன கையாளப்படுகின்றன.

சங்க நூல்களில் சிவனைப் பற்றிய குறிப்புகள் விரிவாக வந்துள்ளன. 'ஆலமர் கடவுள்' *(புறநானூறு: 198:9)*, 'ஆலமர் செல்வன்' *(சிறுபாணாற்றுப்படை: 96)*. 'காஅய்கடவுள்' *(பரிபாடல்: 5:13)*, 'முக்கட்செல்வன்' *(அகநானூறு: 18:16, புறநானூறு: 6:17-18)*, 'முக்கணான்' *(கலித்தொகை: 2:4, திருமுருகாற்றுப்படை: 154)* என்று சிவபெருமான் அந்நூல்களில் குறிக்கப்பெறுகின்றான். மேலும், சிவபெருமான் கொன்றை மலர் மாலை அணிந்தவனாகவும் *(கலித்தொகை: 142,28: 150:1-3, பதிற்றுப்பத்து:* கடவுள் வாழ்த்து*: 1:2)*, ஐந்து தலைகளையுடையவனாகவும் *(பரிபாடல்: 1:43)*, மூன்று கண்களைக் கொண்டவனாகவும் *(கலித்தொகை: 104: 11-12, பரிபாடல்: 5:30, புறநானூறு: 55: 1-5)*, நீலமணிமிடற்றோனாகவும் *(கலித்தொகை: 142-27, பதிற்றுப்பத்து:* கடவுள் வாழ்த்து*: 9-10, பரிபாடல்: 8:127, 9:7, புறநானூறு: 5,9, 55:4, 56:2, 91:5, மலைபடுகடாம்: 83)*, நீல மணி போன்ற நிறமுடையவனாகவும் *(கலித்தொகை: 105:17)*, சிவந்த நிறம் உடையவனாகவும் *(அகநானூறு: 104:11-12, 360:6, பதிற்றுப்பத்து:* கடவுள் வாழ்த்து*: 1, புறநானூறு: 56:2)*, சடைமுடியுடையோனாகவும் *(கலித்தொகை: 38, பதிற்றுப்பத்து:* கடவுள் வாழ்த்து*: 4-5, புறநானூறு: 166:1)* சடையில் கங்கையைத் தரித்தவனாகவும் *(கலித்தொகை:* கடவுள் வாழ்த்து*: 38:12, திருமுருகாற்றுப்படை: 93-4, பரிபாடல்: 5,6, 9:6)*, மலைமகள் மணாளனாகவும் *(பரிபாடல்: 5:28)*, உமையொருபாகனாகவும் *(திருமுருகாற்றுப்படை: 152, பதிற்றுப்பத்து:* கடவுள் வாழ்த்து*: 7-8, ஐங்குறுநூறு:* கடவுள் வாழ்த்து*)*, பிறைத்திங்கள் சூடியவனாகவும் *(கலித்தொகை: 25:26, 103, பதிற்றுப்பத்து:* கடவுள் வாழ்த்து*: 8-9, புறநானூறு: 1-9, 55:5, 91:5-6)* வருணிக்கப்பெறுகின்றான்.

சிவபெருமானின் ஆனேற்றுக்கொடி *(கலித்தொகை: 21:3, திருமுருகாற்றுப்படை: 151:52)*, ஆனேறு ஊர்தி *(பரிபாடல்: 8:2, கலித்தொகை: 150:13)*, ஆதிரைநாள் *(கலித்தொகை: 150:20, பரிபாடல்: 8:26)*, சிவனுக்குரிய படைக்கலன்களான கணிச்சி *(கலித்தொகை: 101:8, 103:25, 105:13)*, மழு *(பரிபாடல்: 5:34, புறநானூறு: 56:2,* மதுரைக்காஞ்சி*: 455)*, சூலம் *(பதிற்றுப்பத்து:* கடவுள் வாழ்த்து*: 10-11)* முதலியனவும் சுட்டப்பெறுகின்றன. சிவபெருமானின் அடியவர்களுக்கு அருளும் அருட்செயல்களும், தீயனவற்றை அழிக்கும் பேராற்றலும் குறிக்கப்பெறுகின்றன *(அகநானூறு: 18:16, கலித்தொகை: 2:1, 38:1-2, 150:1-3, திருமுருகாற்றுப்படை: 154, பதிற்றுப்பத்து:* கடவுள் வாழ்த்து*: 3-12, பரிபாடல்: 1:44, 5:20-26, புறநானூறு: 55:1-5, 166:1, மதுரைக்காஞ்சி: 53-54)*. இவ்வாறு சிவபெருமானைக் குறித்து வரும் செய்திகள் புராண காலத்திற்கு முற்பட்ட வேதகாலத்தில் வெளிப்பட்ட செய்திகளாக இருக்கலாம் எனக் கருத்துரைக்கப்படுகின்றது (ஞானசம்பந்தன், அ.ச., 1987: 63).

சங்க இலக்கியங்களில் முல்லைத் திணைக்குரிய தெய்வமான திருமாலைப் பற்றிய குறிப்புகள் மிகுதியாக உள்ளன. இந்நூல்களில் திருமால், 'கோவலன்' *(பரிபாடல்: 8:83)*, 'நெடியோன்' *(பதிற்றுப்பத்து: 15:36, 19:22, பெரும்பாணாற்றுப்படை: 402)*, 'நெடுவேள்' *(பரிபாடல்: 3:37)* 'நேமியோன்' *(கலித்தொகை: 104:9-10, 105:71-72, 119:3, 127:1-4, அகநானூறு: 175:14)*, 'மாயவன்' *(கலித்தொகை: 134:1-2, 145:64, நற்றிணை: 32:1, பரிபாடல்: 32:1, பரிபாடல் திரட்டு: 7:1, புறநானூறு: 57:2, மதுரைக்காஞ்சி: 591)*, 'மாயோன்' *(புறநானூறு: 57:2, கலித்தொகை: 103:55)*, 'மால்' *(கலித்தொகை: 52:5, 107:32-33, 123:4, பதிற்றுப்பத்து: 3:35, 13:6, பெரும்பாணாற்றுப்படை: 487, முல்லைப்பாட்டு:2)* என்ற பெயர்களால் அழைக்கப்பெறுகின்றான்.

திருமாலின் காயாம்பூ, முகில், கருமை, வெஞ்சுடர் ஆகிய நிறங்களும் *(அகநானூறு: 175:14, 360:6, கலித்தொகை: 104:38, 105:9, 119:3, பரிபாடல்: 1:59, 2:52, 2:56, 3:3, 3:67, 3:73, 4:67, புறநானூறு: 58:15, 174:5, பெரும்பாணாற்றுப்படை: 30, 391, 402)*, தாமரை மலர் போன்ற கண்களும் *(பதிற்றுப்பத்து: 4:58)*, துளப மாலையும் *(பதிற்றுப்பத்து: 3:60, 15:54, 31: 7-10)*, சங்கும் *(கலித்தொகை: 105:9, பரிபாடல்: 1:57, 2:36-40, 2:87, 13:8-9, 15:59, முல்லைப்பாட்டு: 2)*, சக்கரப்படையும் *(அகநானூறு: 175:14, புறநானூறு: 5814-16, கலித்தொகை: 104:9-10, 105:9 & 72, 119:3, 127:4, பரிபாடல்: 1:52 & 58, 2:19 & 50, 3:88, 4:9, 15:9, முல்லைப்பாட்டு: 2)*, கருடனாகிய ஊர்தியும் *(பரிபாடல்: 3:16)*, கருடக் கொடியும் *(பரிபாடல்: 1:11, 1:52, 2:60, 3:16-18, 4:36, 8:2, 13:4 & 38-39, 15:56, திருமுருகாற்றுப்படை: 15, புறநானூறு: 56:5-6)*, திருமகளை மார்பில் கொண்டுள்ளமையும் *(கலித்தொகை: 104:9-10, பரிபாடல்: 1:3, 1:8, 2:31, 3:90, முல்லைப்பாட்டு: 2)* வருணிக்கப்பெறுகின்றன. திருமால் உலக உயிர்களைக் காக்கும் முதல்வனாகவும் *(கலித்தொகை: 124:1)*, ஐஸ்வரியங்கள் கொண்ட செல்வனாகவும் *(கலித்தொகை: 108:55)*, பிரம்மனைப் படைத்தவனாகவும் *(கலித்தொகை: 140:8, பரிபாடல்:1-28, 3:11-14, பெரும்பாணாற்றுப்படை: 404)*, பத்து அவதாரங்கள் எடுத்தவனாகவும் போற்றப்பெறுகின்றான் *(பரிபாடல்: 2:1-19, 3:24, 4:10-24, 13:34-36)*.

சங்க நூல்களில் குறிஞ்சி நிலக் கடவுளான முருகனைப் பற்றிய செய்திகளும் பரந்து காணப்படுகின்றன. இந்நூல்களில் முருகன், ‘செவ்வேள்’ (அகநானூறு: 267:17, குறிஞ்சிப்பாட்டு: 1:3, குறுந்தொகை: 51, பரிபாடல்: 5:13, பட்டினப்பாலை:154), ‘சேஎய்’ (குறுந்தொகை: 1:3, ஐங்குறுநூறு: 242, பெரும்பாணாற்றுப்படை: 458, குறிஞ்சிப்பாட்டு: 51, திருமுருகாற்றுப்படை: 271), ‘நெடியோன்’ (அகநானூறு: 149:16, ஐங்குறுநூறு: 244), ‘நெடுவேள்’ (அகநானூறு: 22:6, 98:27, 120:1,328:5, குறிஞ்சிப்பாட்டு: 174 & 175, குறுந்தொகை: 111:1-2, திருமுருகாற்றுப்படை: 45-46, 211-213 & 273, நற்றிணை: 173:9, 288:10, பட்டினப்பாலை: 145, பரிபாடல்: 19:84, புறநானூறு: 51:19, பெரும்பாணாற்றுப்படை: 75), ‘முருகன்’ (அகநானூறு: 59:10-11, 98:9, 158:16, ஐங்குறுநூறு: 308:4), ‘முருகு’ (அகநானூறு: 22:7-11, 28:6-7, 178:4, 232:11, 246:6, 272:13-15, 273:13, குறுந்தொகை: 261:1, 263:1-6, நற்றிணை: 34:11, 47:8-11, 82:4, 255:1, 288:5-10, பதிற்றுப்பத்து: 26:12, புறநானூறு: 56:14, 295:5, மதுரைக்காஞ்சி: 181, 609, திருமுருகாற்றுப்படை: 59-61), ‘வேள்’ (பதிற்றுப்பத்து: 11:6, பரிபாடல்: 8:61, 9:36, 18:25, பெரும்பாணாற்றுப்படை:75) என்ற பெயர்களால் குறிக்கப்பெறுகிறான்; சிவபெருமானுக்கும் உமாதேவிக்கும் புதல்வனாகவும் (பரிபாடல்: 5:13, 8:127), கொற்றவைச் சிறுவனாகவும் (திருமுருகாற்றுப்படை: 258), காடுகிழாள் குழவியாகவும் (திருமுருகாற்றுப்படை:259) சுட்டப்பெறுகின்றான். முருகன் ஆறுமுகங்களையும் பன்னிரு கைகளையும் கொண்டவனாகவும் (பரிபாடல்: 5:11, 14,21, திருமுருகாற்றுப்படை: 64, 91,), சிவபெருமானின் நெற்றிக் கண்ணினின்றும் சரவணப் பொய்கையில் தோன்றியவனாகவும் (பரிபாடல் 5:12, 5:30, 9:1, 9:14-15) வருணிக்கப்பெறுகின்றான்.

சங்க இலக்கியங்களில் கொற்றவை (கலித்தொகை: 89:8, குறுந்தொகை: 218: 1-3, பதிற்றுப்பத்து: 88:2, 88:23-24, 90:19), பலராமன் (கலித்தொகை: 104: 7-8, 105:11, 124:2, புறநானூறு: 56:4, 58:14, நற்றிணை: 32:2), நான்முகன் (கலித்தொகை: 2:1, 106:18, பெரும்பாணாற்றுப்படை: 402-403, புறநானூறு: 194:5), காமன் (கலித்தொகை: 26:4, 35:14, 36:9, 84:23-24, 109:19-20, 139:22-23, 143:34, 147:42, புறநானூறு: 194:5), இந்திரன் (திருமுருகாற்றுப்படை: 155-159) முதலான கடவுளர்களும் குறிக்கப்பெறுகின்றனர். சங்க காலத்தில் நடுகல்லை நீராட்டி, மணப்புகையூட்டி, நெய் விளக்கேற்றி, மலரையும் நெல்லையும் தூவி தெய்வமாக வழிபடுதலும், ஆட்டுக்கடாவைப் பலியிட்டுக் கள்ளைச் சிறுகலத்தில் ஊற்றி வைத்து வழிபடுதலும் காணப் பெற்றுள்ளன (அகநானூறு: 289, புறநானூறு: 232, 261, 263, 264, 265, 306, 314, 329, 335)

கடவுளைப் பல்வேறு நிலைகளில் வழிபட்ட சங்க கால மக்கள் கடவுளுக்குக் கோவில்கள் எழுப்பியும் சிறப்புகள் செய்துள்ளனர். இக்கோவில்கள், ‘அம்பலம்’ (அகநானூறு:157, பரிபாடல்: 18:28), ‘இறைப்பொதுவில்’ (அகநானூறு: 167), ‘கோட்டம்’ (கலித்தொகை: 49:9), ‘நகர்’ (அகநானூறு: 99:9, பரிபாடல்: 8:126), ‘பொதுயில்’ (அகநானூறு: 287:5, 307:11-12, புறநானூறு: 52:12-13), ‘மன்றம்’ (குறுந்தொகை: 87:1-2) எனச் சுட்டப்பெறுகின்றன. கடவுளுக்குத் திருவிழாக்கள் எடுத்தும் மக்கள் தம் சமய உணர்வினை வெளிபடுத்தியுள்ளனர். திருவிழாவினைக் குறிக்கும் சொற்களாக ‘விழவு’, ‘சாறு’ என்பன திகழ்ந்துள்ளன (பரிபாடல்: 8:96, மதுரைக்காஞ்சி: 366). சங்க காலச் சமுதாயத்தில் பௌத்த சமயப் பள்ளிகளும் (மதுரைக்காஞ்சி: 465-467) சமண சமயப் பள்ளிகளும் (மதுரைக்காஞ்சி: 475-485) காணப்பெற்றுள்ளன. இப்படியாக, சங்கத் தமிழரது வாழ்வியலில் சமய உணர்வு பரிணமித்து ஆழ வேரூன்றியுள்ளது புலனாகின்றது.

சங்கம் மருவிய காலத்தில் தமிழ் மக்களிடையே சமய நம்பிக்கை தொடர்ந்து இருந்து வந்துள்ளது என்பதற்குத் தக்க சான்றாக அக்காலப் பகுதியில் தோன்றிய இலக்கியங்களிலுள்ள குறிப்புகள் திகழ்கின்றன. தமிழகத்தில் அன்னை வழிபாடு தொன்றுதொட்டு எங்கும் பரவலாக இயங்கி வந்துள்ளது. சிலப்பதிகாரத்தில் அம்பிகை, ‘கொற்றவை’ (சிலப்பதிகாரம்: 12:64, 12:5:1, 12:14:4, 20:36, 23:111, 181), ‘குமரி’ (சிலப்பதிகாரம்: 11:214, 12:67, 72, 73), ‘நீலி’ (சிலப்பதிகாரம்: 12:68), ‘பாவை’ (சிலப்பதிகாரம்: 11:197 & 214, 12:70 & 71, 13:111), ‘ஐயை’ (சிலப்பதிகாரம்: 12:69, 12:6:1), ‘தையல்’ (சிலப்பதிகாரம்: 12:66), ‘அந்தரி’ (சிலப்பதிகாரம்: 12:21:3), ‘சங்கரி’ (சிலப்பதிகாரம்: 12:21:3), ‘உமையவள்’ (சிலப்பதிகாரம்: 6:42), ‘சூலி’ (சிலப்பதிகாரம்: 12:68) என்ற பெயர்களில் சுட்டப்பெறுகின்றாள். மணிமேகலையில் கொற்றவை, ‘காடமர் செல்வி’ (மணிமேகலை: 6:53) என்று குறிக்கப்படுவதும் இவ்விடம் சுட்டத்தக்கது.

சிவபெருமான், முருகன், திருமால், நான்முகன், காமன் முதலானோரின் பெயர்களும் சங்கம் மருவிய நூல்களில் காணப்பெறுகின்றன. சிலப்பதிகாரம் சிவனை, ‘இறையோன்’ (சிலப்பதிகாரம்: 14:7), ‘இறைவன்’ (சிலப்பதிகாரம்: 22:87), ‘உயர்ந்தோன்’ (சிலப்பதிகாரம்: 26:55), ‘ஆனேறு ஊர்ந்தோன்’ (சிலப்பதிகாரம்: 30:141), ‘செஞ்சடைக் கடவுள்’ (சிலப்பதிகாரம்: 26:64), ‘கண்ணுதலோன்’ (சிலப்பதிகாரம்: 12:10:3), ‘அரன்’ (சிலப்பதிகாரம்: 12:9:3), ‘இமையவன்’ (சிலப்பதிகாரம்: 6:43, 28:75) என்ற பெயர்களில் சுட்டுகின்றது. சிவதாண்டவம் பற்றியும் (சிலப்பதிகாரம்: 6:39-43), திருவைந்தெழுத்தையும் (சிலப்பதிகாரம்: 11:128-131), சிவதலங்களையும் (சிலப்பதிகாரம்: 5:169, 14:7) இந்நூல் குறிக்கின்றது. முருகனின் நாமங்களும் (சிலப்பதிகாரம்: 1:38, 5:170, 24:13:4, 24:17:1) திருமாலின் திருப்பெயர்களும் (சிலப்பதிகாரம்: 6:35, 17:14:1, 17:15:1, 17:16:1, 17:19:1, 17:20:1, 17:21:1, 17:27:1, 17:30:4, 17:36:4) இந்நூலில் பரவலாகக் குறிக்கப்படுகின்றன. மணிமேகலையில், சிவன் (மணிமேகலை: 1:54, 3:144, 27:86), முருகன் (மணிமேகலை: 3:144, 5:13-14), திருமால் (மணிமேகலை: 27:98-99), காமன் (மணிமேகலை: 3:23 & 124) முதலானவரது குறிப்புகளும் அடங்கியுள்ளன.

### 2.2 புறச்சமய ஊடுருவல்

சங்க காலத்தில் மூவேந்தராலும் சிற்றரசர்களாலும் ஆளப்பட்டு வந்த தமிழ்நாடு, கி.பி மூன்றாம் நூற்றாண்டில் அயலவர்களான களப்பிரர், பல்லவர் முதலானோர் ஆட்சிக்கு உட்பட்டது. சங்கம் மருவிய காலத்தில் (கி.பி.100-500) தமிழ் நாட்டின் ஆட்சி களப்பிரர் கையில் சிக்கியது. புறச்சமயத்தினரான களப்பிரர் தமிழ்நாட்டின் பழஞ்சமயங்களான சைவ, வைணவ சமயங்களுக்கு ஆதரவு அளிக்கவில்லை; பௌத்த சமண சமயங்களின் செல்வாக்கே இக்காலப்பகுதியில் மிகுந்திருந்தது (பால சுப்பிரமணியன்,சி., 1959: 77). வைதீக சைவ சமயம் வைதீகத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. வேள்வி செய்தல், பலியிடுதல், சாதி அமைப்பு போன்றவை அதன் உள்ளடக்கமாக இருந்தன. மேலும், வேதக்கல்வி பிராமணருக்கே உரியது; பிராமணரல்லார் காதாலும் வேதத்தைக் கேட்கக் கூடாது என்ற தடை விதிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு, சாதி அமைப்பு முறையாலும், போர்களாலும், மது, மாது, ஊனுண்ணல் போன்றவற்றாலும் உள்ளம் சலிப்படைந்திருந்த மக்கள், அத்தகு வாழ்க்கை முறைக்குப் பதிலாகத் தங்களை இணைத்துக் கொள்வதற்கு ஏற்றதொரு புதிய பிடிப்பினை இக்காலப் பகுதியில் எதிர்நோக்கியிருந்தனர்.

இச்சூழலிலே, நீதி போதனைகளை அடிப்படையாகக் கொண்ட சமண, பௌத்தத் துறவிகள் வலியுறுத்திய அமைதி, ஒற்றுமை, ஒழுக்கம், புலனடக்கம், புலால் மறுத்தல் போன்ற நெறிகள் மக்கள் எண்ணிய வாழ்க்கை முறைக்கு வழிகாட்டுவனவாக அமைந்திருந்தன. தமிழ் மக்களும் அவற்றை மனமுவந்து ஏற்றுக்கொண்டனர். இதனால், களப்பிரர்கள் காலத்தில் சமண, பௌத்தச் சமயங்கள் தமிழ் நாட்டில் செல்வாக்குப் பெறலாயின. மேலும், சமணர்கள் அடைக்கலம் அளிக்கும் அறத்தை மேற்கொண்டனர்; எக்குலத்தைச் சார்ந்தவராயினும் அவர்களிடையே குலவேறுபாடு

*கருதாது சமண சமயத்தில் அனைவரையும் இணைத்துக் கொண்டனர். குறிப்பாக, இவர்கள் தமிழ்மொழியைக் கற்றுணர்ந்ததனால் தமிழக மக்களின் உள்ளத்தைக் கவர்ந்தனர். கூடவே, நாடாளும் மன்னர்களின் ஆதரவும் கிட்டியதனால் இச்சமயம் பெருவளர்ச்சி பெற்றது (ஈசுவரபிள்ளை,தா., 2000: 256-257).*

### ***2.3 புறச்சமய வீழ்ச்சியும் அகச்சமய மீட்பும்***

*ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் களப்பிரர்கள் தம் அரசியல் செல்வாக்கை இழந்தனர். தெற்கே, நின்ற சீர் நெடுமாறன் என்ற பாண்டிய மன்னன் களப்பிரர்களை வென்று நாட்டைக் கைப்பற்றினான். வடக்கே, பல்லவர்கள் ஆட்சி செல்வாக்குப் பெற்று நல்லதோர் ஆட்சியை நிலைநாட்டினர். இவர்கள் காலத்தில் சைவ, வைணவச் சமயங்கள் புத்துயிர் பெறத் தொடங்கின (பால சுப்பிரமணியன்,சி., 1959: 110-111).*

*அதே வேளை, சைனரும் பௌத்தரும் புலனடக்கத்தையும் உண்ணாநோன்பு, இன்ப வெறுப்பு முதலியவற்றையும் மக்களிடையே தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டிருந்தனர் (வரதராசன்,மு., 1972: 99). சமண சமயத்தின் நிலையாமை பற்றிய எண்ணமானது மக்கள் மனதில் சஞ்சல உணர்வையும் அச்சத்தையும் ஏற்படுத்தியது. மக்கள் கடும்துறவறத்தை மேற்கொள்ள இயலாமல் தடுமாறினர். மன்னர்கள் சமணப்பள்ளிகளுக்குப் பெருமளவு நிலங்களையும் பொருளையும் தானமாக வழங்கியதால் சமணத் துறவிகள் பொருளாதார நிலையில் மேம்பட்டிருந்தனர். இதனால், அவர்களது நீதி போதனையில் நெகிழ்வு ஏற்படத் தொடங்கியது. தமிழ் மக்களின் நன்மதிப்பையும் இழக்க முற்பட்டனர். மேலும், சமணம் பெண்களை முக்திக்குத் தகுதியற்றவர்களாகக் கூறி ஒதுக்கி வைத்தது. ஆடவர் பிறப்பறுத்து முக்தி பெறப் பெண்கள் தடையாக அமைகின்றனர் என்ற கருத்துப் பரப்பப் பெற்றது. ஆண்கள் பெண்கள்மேல் வெறுப்புற்றுத் துறவு மேற்கொள்ளும் பொருட்டுப் பெண்கள் இழித்துரைக்கப்பட்டனர். காதல் வாழ்விலும் இல்லற வாழ்விலும் கிட்டிய இன்பமும் பாதுகாப்பும் சமணக் கொள்கைகளால் பறிபோவதைக் கண்ட மக்கள் தன்னுணர்வு பெற்றனர்; சமண சமயத்தை வெறுக்கத் தொடங்கினர். இதனால், சமண சமயம் செல்வாக்கை இழந்தது (ஈசுவரபிள்ளை,தா., 2000: 266-267).*

*பிறிதொரு நிலையில், பௌத்தச் சமயத்தில் தோன்றிய ஈனயானம், மகாயானம், சிராவகயானம், மந்திரயானம் முதலான பிரிவுகளும், இப்பிரிவுகளுக்கிடையே காணப்பெற்ற வழக்கங்களும் இச்சமய வீழ்ச்சிக்கு அடிப்படைகளாயின. கி.பி. 757-இல் ஆச்சாரிய அகளங்கள் என்ற சமண சமயத் துறவி காஞ்சியிலுள்ள பௌத்தக் கோவிலுக்குச் சென்று நிகழ்த்திய சமய வாதத்தில் பௌத்தத் துறவிகள் தோல்வியுற்று இலங்கை சென்று விட்டனர் என்ற மரபுவழிச் செய்தியும் உள்ளது. மன்னர்களும் பொதுமக்களும் கொடுத்த கொடைகளால் பௌத்தத் துறவிகள் தங்கள் கடமைகளை மறந்து உலகியலில் மூழ்கத் தொடங்கிவிட்டனர். கற்றறிந்த பெருமக்கள் ஏற்றுப் போற்றும் அளவுக்கு எவ்வளவோ நற்கூறுகள் பௌத்தத்தில் காணப்பெற்ற போதிலும் பௌத்தத் துறவிகள் காலச் சூழலால் தமது அறபோதனையிலிருந்து விலகிவிட்ட காரணத்தினால் திருஞானசம்பந்தரின் கடுங்கணைக்கு இலக்காகி வீழ்ந்தனர் எனக் கருத்துரைக்கப்படுகின்றது. இக்காரணங்களினால் பௌத்தச் சமயச் செல்வாக்கும் குன்றியது எனலாம் (ஈசுவரபிள்ளை,தா., 2000: 267).*

### ***2.4 பக்தி இயக்க உருவாக்கம்***

*கி.பி. 6,7,8-ஆம் நூற்றாண்டுகளில் தமிழகத்தில் சைவ, வைணவ சமயப் பெரியார்களான நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோன்றினர்; ஊர் ஊராகச் சென்று பக்திப் பாடல்கள் பாடி, தத்தம் சமயக் கொள்கைகளைப் பரப்பினர். தமிழ் மக்களிடையே சமய எழுச்சியும் கலைப் பாதுகாப்பும் தோன்றலாயின. அதன் விளைவாக, தமிழர் தம் பண்பாட்டினையும் கலைச் செல்வங்களையும் பேணிக் காக்கும் பெருநோக்கில் பக்தி இயக்கம் உருபெற்றது (வரதராசன்,மு., 1972: 99).*

*தமிழகத்தில் இப்பக்தி இயக்க வளர்ச்சியால் சைவ, வைணவ சமயங்கள் பெற்ற நன்மதிப்பிற்கும் பேராதரவிற்கும் உரிய காரணங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்:*

#### ***(i) கொள்கைகள்:***

*நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோன்றி, இல்லறக் கடமைகளை மேற்கொண்ட வண்ணமே இறைவனை வழிபட்டு உயர்நிலை அடையலாம் எனக் கடவுள் வழிபாட்டை எளிமைப்படுத்தினர். சஞ்சலம் கொண்டிருந்த மக்கள் உள்ளத்தில் நம்பிக்கையொளி சுடர்விட்டது. மக்கள் ஆறுதலும் புத்துணர்வும் அடைந்தனர். காதலும் வீரமும் பண்டைய தமிழர் மரபாக இருந்துள்ளதைச் சங்க இலக்கியம் சான்று பகர்கின்றது. அன்புநெறியே தமிழர்களது இயற்கை இயல்பாகும். இல்லறம் காத்தலையே நல்லறமாகக் கொண்டு தமிழர் வாழ்ந்துள்ளனர். இதனையே,*

> *“அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்*
> *பிறன்பழிப்பது இல்லாயின் நன்று” (திருக்குறள்: 49)*

*என்று தமிழ்மறை சுட்டுகின்றது. ஆக, காதல் உணர்வு இரத்தத்தோடு, ஊறிய உணர்வாகத் தமிழர் மரபில் அமைந்து விட்டது. இவ்வியற்கையுணர்வு யாரும் சொல்லியோ எவராலும் திட்டமிடப்பட்டோ ஏற்படவில்லை. இந்த இயற்கை இயல்பு ஒரு சில காலத்திற்குச் சமண, பௌத்தக் கருத்துகளால் மேல்பூச்சுப் பூசப்பட்டதுபோல் மறைக்கப்பட்டிருந்தாலும், அவை நிரந்தரமான இடம் வகிக்க வில்லை. காலப்போக்கில், தமிழர்களின் அன்பும் காதலும் கொண்டொழுகும் அடிப்படை பண்பாடு வெளிப்பட்டே தீர்ந்தது. ஆகவே, மக்கள் இயற்கையிலிருந்து மீற முடியாமல் மீண்டும் இயற்கை இயல்பிற்கே திரும்பினர். அன்பு நெறியே பக்தி இலக்கியத்திற்கு அடிப்படையாகத் திகழ்ந்தது. ஆக, உயிர்கள் இறைவன் மீது கொண்ட தூய அன்பே பக்தியாகவும், இவ்வாறு உயிர்கள் ஒன்றுபட்ட அன்பு இயக்கமே பக்தி இயக்கமாகவும் பரிணமித்தது (ஈசுவரபிள்ளை,தா., 2000: 268).*

#### ***(ii) மன்னர்களின் ஆதரவு:***

*சைவ, வைணவ சமயங்களின் கொள்கைகளால் கவரப்பெற்ற மன்னர்கள் சமய மாற்றம் அடைந்தனர். உதாரணத்திற்கு, பல்லவ மன்னன் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாறியதும் பாடலிபுரத்திலுள்ள சமணப் பள்ளிகளையும் சமண்பாழிகளையும் இடித்துத் திருவதிகை நகரில் சிவபெருமானுக்குக் குணபரவீச்சுரம் என்ற கோவிலைக் கட்டியதைத்*

*திருநாவுக்கரசர் பெருமான் வரலாறு எடுத்துணர்த்துகின்றது. மேலும், கந்தசிஷ்யன் என்ற பல்லவ மன்னன் திருக்கழுக்குன்றத்துச் சிவபெருமான் கோவிலுக்கு நிலங்களை அளித்துள்ளதைக் கல்வெட்டு காட்டுகின்றது. மற்றும், நந்திபுரவிண்ணகரம் நந்திவர்மன் பணி செய்த இடம் என்றும் திருச்சித்திரக்கூடம் பொன்னும் மணியும் முத்தும் கொண்டு, படைமன்னன் பல்லவர்கோன் பணிந்த இடம் என்றும் வைணவத்தில் வருணிக்கப்பெற்றிருப்பது மன்னர்கள் பேராதரவையே எடுத்தியம்புகிறது (ஈசுவரபிள்ளை,தா., 2000: 268-269).*

***(iii) நாயன்மார் ஆழ்வார்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகள்:***

*திருநாவுக்கரசர் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாறியதைக் கண்ணுற்ற சமணர்கள் அவருக்குப் பல துன்பங்கள் இழைக்கின்றனர். ஆயினும், சிவபெருமான் திருவருளால் சமணர்களின் மறச்செயல்களை அப்பர் கடந்து விடுகிறார். இது தவிர, சம்பந்தர் பெருமான் சமணர்களையும் பௌத்தர்களையும் அனல் வாதமும் புனல் வாதமும் செய்து அவர்களை வென்று சைவத்தை நிலைநாட்டிய நிகழ்ச்சிகளும், மேலும் மாணிக்கவாசகர் ஈழநாட்டுப் பௌத்த சமய துறவர்களுடன் வாதிட்டுச் சைவச் சமயத்தை நிலைநாட்டிய செய்தியும் உண்டு (ஈசுவரபிள்ளை,தா., 2000: 269-271).*

***(iv) சமத்துவச் சிந்தனைகள்:***

*நாயன்மார்களும் ஆழ்வார்களும் சமுதாயப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளால் மக்களிடையே காணப்பெற்ற வேறுபாடுகளை அகற்றிச் சமநிலையான சமுதாயத்தை உருவாக்க பாடுபட்டனர்; இறைப்பற்றையூட்ட முயன்றனர்; சமுதாயத்தில் காணப்பெறும் சாதிவேறுபாடுகளும் வகுப்புப்பிரிவுகளும் இறைவனிடத்து அன்பு செலுத்துவதற்கும் இறைவனை வழிபட்டு உயர்நிலையை அடைவதற்கும் தடைகளல்ல என்ற புரட்சிச் சிந்தனையைப் பரப்பினர்; சமுதாய அடித்தளத்தில் வாழ்ந்த மக்களின் பேராதரவையும் பெற்றனர் (ஈசுவரபிள்ளை,தா. 2000: 271-272).*

***(v) தமிழ்ப்பற்று:***

*வடமொழி மட்டுமே இறையன்பை வெளிப்படுத்த ஏற்ற மொழி என்று பக்தி இயக்கம் வலியுறுத்தவில்லை. மாறாக, தாய்மொழியாகிய தமிழ்மொழியின் மூலம் இறையுணர்வை வெளிப்படுத்த முடியும் என உறுதியாக நின்று நிலைநாட்டியதால் மக்களின் நன்மதிப்பைப் பெற்றது (ஈசுவரபிள்ளை,தா. 2000: 272-273).*

***(vi) பெண்டிர் ஆதரவு:***

*சமண, பௌத்த சமயங்கள் துறவறத்தை வலியுறுத்தி, பெண்ணாசையை நீக்க முற்பட்டன. ஆனால் பக்தி இயக்கம் பெண்களுக்கும் ஏற்ற இடமளித்து ஆடவருக்குச் சமமாக சமுதாய அங்கீகாரம் வழங்கியது. இதனால், பெண்களின் பேராதரவு கிட்டியது. சைவத்தில் திலகவதியார், காரைக்கால் அம்மையார் போன்றவர்களும் வைணவத்தில் ஆண்டாளும் பெண்ணின முன்னேற்றத்திற்கு வழிகாட்டியாய் அமைந்தனர்; பெண்களுக்குச் சமய, சமுதாய, பொருளாதார உரிமை உண்டு என அறிவுறுத்தினர்; ஆண், பெண் சமத்துவச் சிந்தனை வெளிப்பட்டது (ஈசுவரபிள்ளை,தா. 2000: 273).*

***(vii) புராணக்கதைகளைப் பயன்படுத்துதல்***

*சமண ஒழுக்க அறிவும், ஒழுக்க உயர்வும் பக்தி இயக்கம் பயன்படுத்திய புராணக் கதைகளால் தலைதூக்காமல் முடக்கி விட்டன. புராணக்கதைகள் சமூக மதிப்புகளை ஊட்டின; கல்வியறிவற்ற சாதாரண மக்களும் கூட இவற்றை உணர்ந்து கொள்ள புராணக்கதைகள் பெரிதும் உதவின (ஈசுவரபிள்ளை,தா. 2000: 273).*

***(viii) வட்டார உணர்வு***

*பக்தி இயக்கச் சான்றோர் திருத்தலங்கள் தோறும் சென்று இறைப்புகழைப் போற்றிப் பாடினர். தம் ஊரினை அல்லது வட்டாரத்தைப் பிறர் புகழ்ந்து கூறும்போது அதனைக் கேட்டு மனம் மகிழ்தல் மக்களின் பொதுவான உள்ள நிலையாதலால் அவ்வுத்தியைக் கையாண்டு, அவ்விடங்களில் வாழ்கின்ற மக்களிடையே வட்டாரப்பற்றை மிகுவித்து அவர்களின் பேராதரவை அச்சான்றோர் பெற்றனர். இவ்வண்ணம் பக்தி இயக்கம் பெருவளர்ச்சியுற்றது (ஈசுவரபிள்ளை,தா. 2000: 273-274).*

*இவ்வாறு வளர்ந்து வளம்பெற்ற பக்தி இயக்கமே பக்தி இலக்கியம் தோன்ற வழிவகுத்தது. இவ்வியக்கம் ஒரு மக்கள் இயக்கமாக வளர்ச்சிப் பெற்றது. பல்வகைக் கலைகளின் வளர்ச்சிக்கு நிலைக்களனாக கோவில்கள் திகழ இவ்வியக்கம் பெரும் பங்காற்றியது. மக்கள் மொழியாகிய தமிழுக்கு முதன்மை வழங்கப்பெற்றதால் சமயப் பெரியார்கள் தமிழ்ப் பக்தி பாடல்களை இசையோடு அமைத்துப் பாடி மக்களிடையே பக்தி இயக்கம் பரவி நிலைப்பெற வழிகோலினர் (வரதராசன்,மு., 1972: 99).*

*பக்தி இயக்கத்தின் விளைவாகத் திருமுறைகள் தோன்றின. நாயன்மார்களும் ஆழ்வார்களும் சமய உணர்வு கொண்டு பாடிய இசைப்பனுவல்களே சைவத்திருமுறை பன்னிரெண்டாகவும் நாலாயிரத்திவ்வியப் பிரபந்தமாகவும் அழைக்கப்பெற்றன. "சோழப் பேரரசர் ஆண்ட காலம் (கி.பி. 850-1350) தமிழ் பண்பாட்டின் பொற்காலமாகும். இவர்கள் காலத்தில் இலக்கியங்கள் நன்முறையில் ஆதரிக்கப்பட்டு யாண்டும் பரவின" என்று நீலகண்ட சாஸ்திரி அவர்கள் தமது நூலில் குறிப்பிட்டுள்ளது இவ்விடம் கருதத்தக்கது. சைவத் திருமுறைகளை நம்பியாண்டார் நம்பியும், வைணவப் பிரபந்தங்களை நாதமுனிகளும் திரட்டித் தந்தனர். அவை சோழர் காலத்திலேயே தொகுக்கப்பட்டன (பால சுப்பிரமணியன்,சி., 1959: 140-141).*

***2.0 முடிவுரை***

*தமிழர் மதங்கள்மீது அந்நிய மதங்களின் தாக்குதல் ஏற்பட்டு மீட்சிபெற்ற பின்னர், சுமார் 13, 14-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு மெய்கண்ட சாத்திரங்கள் தோன்றின. அவற்றுக்குக் காரணமான சந்தான குரவர்கள் மரபில் வந்தது சைவ மடங்கள். இவற்றின் தொடர்ச்சியே இன்றைய சைவ ஆதினங்கள். அது போலவே வைணவ மடங்களும் தோன்றின. வேதாந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் வைணவம் வளர்ந்தது. இக்கோட்பாட்டினை இராமானுஜர் உள்ளிட்ட*

*ஆசாரியர் விளக்கப்படுத்தினர். காலநெடுமையில் சைவ, வைணவ அடியார் பெருமக்களின் அரிய தொண்டினால் சைவமும் வைணவமும் தழைத்து வளர்ந்துள்ளது உய்த்துணரத்தக்கது.*

**மேற்கோள் நூல்கள்**

*அகநானூறு*. உரையாசிரியர்: பொ.வே. சோமசுந்தரனார். 1970. திருநெல்வேலி: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். முதற்பதிப்பு.
அருணாச்சலம், ப. 1973. *பக்தி இலக்கியம்*. சென்னை: தமிழ்ப் புத்தகாலயம். முதற்பதிப்பு.
இளவரசு, சோம. 1992. *இலக்கிய வரலாறு*. சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.
ஈசுவரபிள்ளை, தா. 2000. *பக்தி இலக்கியத்தில் சமுதாயப் பார்வை*. தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம். முதற்பதிப்பு.
*ஐங்குறுநூறு*. உரையாசிரியர்: பொ.வே. சோமசுந்தரனார். 1961. திருநெல்வேலி: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். முதற்பதிப்பு.
கந்தசாமி, ந. 1995. *தமிழ் பக்தி இலக்கியம்*. கோலாலம்பூர்: திருமகள் வெளியீடு. முதற்பதிப்பு.
*கலித்தொகை*. உரையாசிரியர்: பொ.வே. சோமசுந்தரனார். 1970. திருநெல்வேலி: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். முதற்பதிப்பு
*குறிஞ்சிப்பாட்டு*. உரையாசிரியர்: பொ.வே. சோமசுந்தரனார். 1956. திருநெல்வேலி: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். முதற்பதிப்பு.
*குறுந்தொகை*. உரையாசிரியர்: பொ.வே. சோமசுந்தரனார். 1958. திருநெல்வேலி: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
கோவிந்தசாமி, மு. 1960. *இலக்கியத் தோற்றம் (தமிழ் இலக்கிய வரலாறு) கி.பி. 250-1960*. சென்னை: பாரி நிலையம்.
சாமி சிதம்பரனார். 1961. *பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும்*. சென்னை: சிவகாமி சிதம்பரனார் சௌராஷ்திரா நகர். முதற்பதிப்பு.
*சிலப்பதிகாரம்*. உரையாசிரியர்: பொ.வே. சோமசுந்தரனார். 1969. திருநெல்வேலி: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். முதற்பதிப்பு.
சுப்பிரமணிய பிள்ளை, கா. 1940. *தமிழர் சமயம்*. சென்னை: திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம். முதற்பதிப்பு.
சுப்பிரமணியன், சு. 1990. *தமிழ் இலக்கிய வரலாறு*. புதுச்சேரி: நம்மொழி பதிப்பகம்.
சுலோச்சனா, ப. 1999. *தமிழ் இலக்கியங்களில் ஊழ்வினைக் கோட்பாடு-ஓர் ஆய்வு*. திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் கீழ்த் தன்னாட்சி உரிமை பெற்ற ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரித் தமிழ்த்துறை ஆய்வு மையத்தில் முனைவர் பட்டத்திற்காக அளிக்கப்பட்ட ஆய்வேடு. குற்றாலம்: தமிழ்த்துறை, ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி.
*திருக்குறள்*. நாமக்கல் கவிஞர் உரை. 2004. நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கநார். சென்னை: பூம்புகார் பதிப்பகம்.
*திருமுருகாற்றுப்படை*. உரையாசிரியர்: பொ.வே. சோமசுந்தரனார். 1981. திருநெல்வேலி: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். இரண்டாம் பதிப்பு.
*தொல்காப்பியம்*. பொருளதிகாரம்: அகத்திணையியல் புறத்திணையியல். 1947. சென்னை: நச்சினார்க்கினியர் உரை.
தேவநேயப் பாவாணர், ஞா. 2000. *தமிழர் மதம்*. சென்னை: தமிழ்மண் பதிப்பகம். மறுபதிப்பு.
*நற்றிணை நானூறு*. உரையாசிரியர்: பொ.வே. சோமசுந்தரனார். 1967. திருநெல்வேலி: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். மறுபதிப்பு.
நாகப்பன் ஆறுமுகம். 2008. *சித்தாந்த சைவம்*. கோலாலம்பூர்: சிவா எண்டர்பிராய்ஸ். முதற்பதிப்பு.
*பட்டினப்பாலை*. உரையாசிரியர்: பொ.வே. சோமசுந்தரனார். 1970. திருநெல்வேலி: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். முதற்பதிப்பு.
*பரிபாடல்*. உரையாசிரியர்: பொ.வே. சோமசுந்தரனார். 1961. திருநெல்வேலி: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். முதற்பதிப்பு.
பாலசுப்பிரமணியன், சி. 1959. *தமிழ் இலக்கிய வரலாறு*. சென்னை: நறுமலர்ப் பதிப்பகம்.
*புறநானூறு*. உரையாசிரியர்: பொ.வே. சோமசுந்தரனார். 1957. திருநெல்வேலி: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். முதற்பதிப்பு.
*மணிமேகலை*. உரையாசிரியர்: ந.மு. வேங்கடசாமி நாட்டார்-வித்துவான் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை பதவுரை விளக்கவுரையுடன். 1964. திருநெல்வேலி: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். ஐந்தாம் பதிப்பு.
வரதராசன், மு. 1972. *தமிழ் இலக்கிய வரலாறு*. புது தில்லி: சாகித்திய அக்காதெமி.
Jesudan, C. And Jesudasan, H. 1961. *A History of Tamil Literature*. Culcutta: Y.M.C. Publishing House.
O'Malley, L.S.S. 1935. *Hinduisme through the Ages*. Bombay: Bharatiya Vidya Bhavan.
Swaminathan, A. 1998. *Hindu Religion – Its Growth, Ethics and Culture*. Chennai: Deepa Pathippagam. First Edition.

# இந்தியர்களின் சோதிடக்கலை: ஓர் அறிமுகம்

கோவி.சிவபாலன்
*மலாயாப் பல்கலைக்கழகம்*
gsiva_palan@um.edu.my

**ஆய்வுச்சுருக்கம்**

*இக்கட்டுரை இந்தியர்களின் சோதிடக் கலையைப் பற்றிய ஒரு பொதுவான புரிதலைக் கொடுக்கின்ற நோக்கத்தில் படைக்கப்பட்டிருக்கின்றது. இக்கட்டுரையில் தரப்பட்டுள்ள இந்திய சோதிடக்கலையைப் பற்றிய விளக்கங்களும் குறிப்புகளும் மக்கள் சோதிடக்கலையை பற்றி அறிந்துகொள்ள துணைசெய்யும். சோதிடக் கலையைப் பற்றிய பொதுவான புரிதலைப் பெற்றிருப்பதற்கு, சோதிடம் என்னும் பெயருக்கான சொற்பொருள் விளக்கம் அறியப்படவேண்டும். எனவே இக்கட்டுரையில் அதுசார்ந்த விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. இக்கலைக்கு அடிப்படையாக உள்ள விண்ணியல் சார்ந்த செய்திகளும், விண்ணியலுக்கும் சோதிடத்துக்கும் இடையிலான தொடர்புகளும் புரிந்துகொள்ளப்பட வேண்டும். அவற்றைப்பற்றியும் இக்கட்டுரை விளக்குகின்றது. எதன்பொருட்டு சோதிட நம்பிக்கை உருவாகியிருக்கக்கூடும் என்பதைப்பற்றிய புரிதல் மிக முக்கியமானதாகும். எனவே அதைப்பற்றியும் இக்கட்டுரை கருத்துரைக்கின்றது. உலக சோதிடங்களுள் இந்திய சோதிடம் முதன்மை வகிப்பதனாலும் இக்கட்டுரையின் மையக்கருத்து இந்திய சோதிடத்தைப் பற்றி அமைந்திருப்பதனாலும் இந்திய சோதிடத்தைப் பற்றிய விளக்கங்கள் சற்று விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இனி, சோதிடக்கலை இயலும் முறையைப் பற்றிய புரிதலும் இன்றியமையாததாகின்றது. எனவே இக்கட்டுரை, சோதிடம் இயற்றப்பட்ட முறையையும் அக்கலை இயலும் முறையையும் விளக்குகின்றது. இந்திய சோதிடத்தைக் காலந்தோறும் பல தலைமுறைகளாகத் தொடரச் செய்வதில் சோதிடர்களும் அவர்கள் இயற்றிய நூல்களும் அளப்பரிய பங்காற்றியுள்ளன. அவற்றையும் இக்கட்டுரை விளக்கமாகத் தருகின்றது. இன்று எதையும் அறிவியல் கண்ணோட்டத்துடன் அணுகும் போக்கு உலக வழக்காகிவிட்டது. எனவே நம்பிக்கை சார்ந்த இக்கலை அறிவியல் சார்ந்ததா என்னும் விளக்கத்தையும் இக்கட்டுரை அளிக்கின்றது. இந்தியர்களுள் பெரும்பிரிவினரான இந்துக்கள் நம்புகின்ற கலையாதலால் இச்சோதிடக்கலைக்கும் இந்து சமயத்தின் கோட்பாடுகளின் முக்கியக்கூறான கருமவினைக்கும் இடையிலான தொடர்பும் இக்கட்டுரையில் சுட்டப்பெறுகின்றது. சோதிடக் கலையினால் விளையும் பயன்தான் என்ன என்பதைபற்றிய தேடல், இக்கலையைப் பற்றிய ஒட்டுமொத்தப் புரிதலுக்கும் உதவும் என்பதனால் சோதிடக்கலையின் பயன் என்னும் பொருளிலும் இக்கட்டுரையில் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. இந்திய சோதிடக் கலையைப் பற்றிய பொதுவான புரிதலை இக்கட்டுரையை வாசிப்பவர்கள் பெறவியலும்.*

***குறிச்சொற்கள்**: இந்திய சோதிடம், விண்ணியல், சோதிடர், கருமவினை, நம்பிக்கையியல்*

Abstract

The aimed at elevating the general public's understanding of Indian Astrology, including its origin and definition. Astronomical views about Astrology, as well as the relationship between Astrology and Astronomy, were also highlighted in this article. It also addresses the belief system surrounding the Indian Astrology. On top of giving an overall view of the Astrological beliefs that prevalent in various countries, the article also discusses the variety of Indian Astrology, as it is widely regarded as one of the major systems in the world. For this, it is importance to understand how the Astrology works and benefits the public.Therefore, the article describes the intricate process and the disciplines that required to practice this art. Indian Astrology, in particular, has been meticulously studied and the knowledge has been passed on to subsequent generations by Astrologers. The contributions and publications of these Astrologers were also detailed in this article. As the current society has developed a keen sense of critical thinking, scientific reasoning has become crucial to prove the validity of theories and systems. In keeping this in view, the scientific basis of Astrology were also discussed here. Since Indian Astrology has a vast majority of Hindu followers, the article also explores the relationship between the Astrological art and the Hindu religion's law of karma, besides of explaining the benefits of the proper practice and extensive understanding of Indian Astrology.

**Keywords**: Indian Astrology, astronomy, Astrologer, law of karma, belief system

### *முன்னுரை*

*உலக மக்களின் வாழ்க்கைமுறை எப்போதும் ஒரு நம்பிக்கையையோ கொள்கையையோ சார்ந்திருக்கும். இந்த வாழ்க்கைமுறை இயற்கையையும் அதன் இயக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. இயற்கை சார்ந்த நிகழ்வுகளும், அவை ஏற்படுத்துகின்ற விளைவுகளும் மனிதனுடைய உணர்வு நிலையில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. மனிதனுக்குள் ஏற்படும் இந்த உணர்வு நிலை மாற்றங்கள் அவனுக்குள் நம்பிக்கைகள் தோன்றக் காரணமாகின்றன. இத்தகைய நம்பிக்கைகள் பல்வகையினவாகவும் எண்ணிறந்தவையாகவும் மனிதனிடம் காணப்படுகின்றன. மனிதனின் நம்பிக்கைகளுள் உலகளாவிய நிலையில் பல்வேறு ஒற்றுமைக்கூறுகளைக் கொண்டு*

விளங்குவது சோதிட நம்பிக்கை. இந்நம்பிக்கை உலக நாடுகள் பலவற்றிலும் அவ்வந்நிலத்தன்மைக்கேற்பவும் மக்களின் மனப்பண்புக்கேற்பவும் தோன்றி வளர்ந்து இதுநாள்வரையும் வேர்க்கொண்டுள்ளது.

உலக நாடுகளில் பின்பற்றப்படும் சோதிட நம்பிக்கையை உற்றுநோக்கினால் அவை தோன்றிய காலந்தொடங்கி பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்டு வந்துள்ளதை அறிய முடியும். ஆதியில் ஏற்படுத்தப்பட்ட குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு தலைமுறைதோறும் அந்நம்பிக்கை அவர்களிடம் தொடர்ந்து வருகின்றது. ஆனாலும் அந்நம்பிக்கை சார்ந்த ஆவணப்பதிவுகளோ புதிய தேடல்களோ ஆய்வுகளோ எழுத்தாக்கங்களோ அவர்களிடம் மிக அருகியே காணப்படுகின்றன. ஆனால் இந்திய சோதிட நம்பிக்கை இந்நிலைக்கு மாறாக அமைந்துள்ளது. ஆதியில் உருவாக்கப்பட்ட சோதிட விதிகளை அடிப்படையாகக் கொண்டு காலந்தோறும் மக்களின் வாழ்க்கை முறைக்கும் தேவைக்கும் ஏற்ப அவை தொடர்ந்து எளிமைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால் மூல சோதிட விதிகளில் எத்தகைய பெரிய மாற்றங்களும் அனுமதிக்கப்படுவதில்லை. இதன் காரணமாகவே இந்திய சோதிடம் அதன் மூலத்தன்மையை இழக்காமல் இதுநாள்வரை வாழமுடிகின்றது. மேலும் வேறெந்த சோதிட மரபுக்கும் இல்லாதச் சிறப்பாக இந்திய சோதிடத்தில் மூல நூல்களும், வழி நூல்களும், விளக்க நூல்களும் முறையாக ஆவணப்படுத்துள்ளன. இந்தியர்களிடம் காணப்படும் சோதிடச் செய்திகளை ஆவணப்படுத்தும் இந்தப்போக்கு இந்திய சோதிடத்தின் தனி பலம். இதனால் இந்திய சோதிடர்களால் இக்கலையை இயன்றவரை மரபுக்கெடாமல் வளர்க்கமுடிகின்றது.

இன்றைய காலக்கட்டத்தில் மக்களிடையே சோதிடத்தின் மீது எதிர்மறையான சிந்தனைப்போக்கு ஒருபுறம் இருந்தாலும், சோதிடர்களை நாடிப் பயன்பெறும் நோக்கமும் அக்கலையைப்பற்றி ஆராயவும் கற்றுத்தேறவும் மக்கள் காட்டுகின்ற முனைப்பும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. இவ்வாறு, சோதிடக்கலையைக் கற்கவும் ஆராயவும் தலைப்படுவோருக்கு சோதிடக்கலையைப் பற்றியும் அதுசார்ந்த நம்பிக்கையைப் பற்றியும் ஒரு பொதுவான புரிதல் இருப்பது இன்றியமையாததாகும். அந்த வகையில் இந்தியர்களின் சோதிடக்கலையைப்பற்றி அறிய விழைவோர்க்கு அக்கலையைப் பற்றிய பொது அறிமுகத்தைத் தருவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**கட்டுரையின் நோக்கமும் பொருளும்**

சோதிடம் பற்றிய பொதுவான புரிதலைப் பெற்றிருப்பதற்கு, சோதிடம் என்னும் பெயருக்கான சொற்பொருள் விளக்கம் அறியப்படவேண்டும். எனவே இக்கட்டுரையில் அதுசார்ந்த விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. இக்கலைக்கு அடிப்படையாக உள்ள விண்ணியல் சார்ந்த செய்திகளும், விண்ணியலுக்கும் சோதிடத்துக்கும் இடையிலான தொடர்புகளும் புரிந்துகொள்ளப்பட வேண்டும். அவற்றைப்பற்றியும் இக்கட்டுரை விளக்குகின்றது. எதன்பொருட்டு சோதிட நம்பிக்கை உருவாகியிருக்கக்கூடும் என்பதைப்பற்றிய புரிதல் மிக முக்கியமானதாகும். எனவே அதைப்பற்றியும் இக்கட்டுரை கருத்துரைக்கின்றது. உலக சோதிடங்களுள் இந்திய சோதிடம் முதன்மை வகிப்பதனாலும் இக்கட்டுரையின் மையக்கருத்தும் இந்திய சோதிடத்தைப் பற்றி அமைந்திருப்பதனாலும் இந்திய சோதிடத்தைப் பற்றிய விளக்கங்கள் சற்று விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இனி,சோதிடக்கலை இயலும் முறையைப் பற்றிய புரிதலும் இன்றியமையாததாகின்றது. எனவே இக்கட்டுரை, சோதிடம் இயற்றப்பட்ட முறையையும் அக்கலை இயலும் முறையையும் விளக்குகின்றது. இந்திய சோதிடத்தைக் காலந்தோறும் பல தலைமுறைகளாகத் தொடரச் செய்வதில் சோதிடர்களும் அவர்கள் இயற்றிய நூல்களும் அளப்பரிய பங்காற்றியுள்ளன. அவற்றையும் இக்கட்டுரை விளக்கமாகத் தருகின்றது. இன்று எதையும் அறிவியல் கண்ணோட்டத்துடன் அணுகும் போக்கு உலக வழக்காகி விட்டது. எனவே நம்பிக்கைச் சார்ந்த இக்கலை அறிவியல் சார்ந்ததா என்னும் விளக்கத்தையும் இக்கட்டுரை அளிக்கின்றது. இந்தியர்களுள் பெரும்பிரிவினரான இந்துக்கள் நம்புகின்ற கலையாதலால் இச்சோதிடக் கலைக்கும் இந்து சமயத்தின் கோட்பாடுகளின் முக்கியக்கூறான கருமவினைக்கும் இடையிலான தொடர்பும் இக்கட்டுரையில் சுட்டப்பெறுகின்றது. சோதிடக்கலையினால் விளையும் பயன்தான் என்ன என்பதைபற்றிய தேடல், இக்கலையைப் பற்றிய ஒட்டுமொத்தப் புரிதலுக்கும் உதவும் என்பதனால் சோதிடக்கலையின் பயன் என்னும் பொருளிலும் இக்கட்டுரையில் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

**சோதிடம் - பொருள் விளக்கம்**

சோதிடம் தமிழ்ச்சொல். மனித உடலாகிய இடத்தில் தங்கி, சோதியாகிய ஆன்மா நடத்தும் வாழ்க்கைக் கணக்கைச் சொல்லுகின்ற கலையாதலால் இக்கலைக்கு சோதிடம் என்பது பெயரானது(தி.மகாலட்சுமி, 1996:114). சோதிடன், தன்னை நாடி வருகின்றவனுடைய காலச்சூழலைச் சோதித்து அவனைத் திடப்படுத்தி அனுப்புவதனாலும் இக்கலைக்கு சோதிடம் என்னும் பெயர் பொருந்துகிறது. சோதி என்பது ஒளி, கிரணம், தீபம், தீ, சூரியன், நட்சத்திரம் என்றும் பொருள்படுகின்றது (மேலது:113). தமிழ் லெக்சிகன் நாள், ஓரை, நிமித்தம், பஞ்சாங்கம், சாதகம் என்று சோதிடத்திற்குப் பொருள் தருகிறது ( Tamil Lexicon Vol III,1982:1667). இன்னும், வானத்தில் சோதியாய் நமக்குப் புலப்படுகின்ற கோள்கள், நட்சத்திரங்களால் உண்டாகின்ற நன்மை, தீமைகளைப் பற்றி முன்கூட்டித் தெரிவிப்பது, சோதித்துத் திடப்படுத்துவது, நட்சத்திரங்களின் தூது, நேத்திரமென்னும் கண்ணொளி, அறிவைத் தரும் ஒளி என்ற பல பொருள்களும் சோதிடம் என்பதற்குச் சுட்டப்பெறுகின்றன (கடலங்குடி நடேச சாஸ்திரிகள், 1998:1). அபிதான சிந்தாமணி, சோதிடமானது கிரகங்களின் சஞ்சாரஞ் சொன்னக் கணித நூல் என்ற பொருளையும் தருகிறது (சிங்காரவேலு முதலியார்,1881:1734). மேலும், சோதிடம் என்பது தோற்றத்தில் அறிவியல் போன்ற ஒன்று என்று பிரிட்டானிகா கலைக்களஞ்சியமும், சோதிடம் ஒரு செயல்முறை வானவியல் என்று ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதியும் குறிப்பிடுகின்றன (தி.மகாலட்சுமி, 1996:115).

சோதிடம் ஆங்கிலத்தில் 'Astrology' என்று அழைக்கப்படுகிறது. இச்சொல்லை, 'Aster - a star; Logos -Reason or Logic' என இரண்டாகப் பிரித்துப் பொருள் கூறுவர். 'அஸ்டர்' என்பது நட்சத்திரத்தையும் 'லோகொஸ்' என்பது தத்துவத்தையும் குறிக்கும். ஆக 'அஸ்ட்ராலஜி' என்னும் சொல் கிரகங்களின் மூலம் கிடைக்கும் பலன் எனப் பொருள்படும்(மேலது:113). மேலும், சோதிடத்தைப் பொதுவாக 'காலத்தின் விஞ்ஞானம்' என்பர் (M.V.கிருஷ்ணசாமி, 1993:11) சோதிடமானது மைவித்தைகள், பில்லி, ஏவல், சூன்யம், மந்திர வித்தைகள் முதலான எந்தத் துறையுடனும் சேர்ந்தது அல்ல(தி.மகாலட்சுமி,1996:115). ஆக, சோதிடம் என்னும் சொல் தனக்குள் அதன் பொருள், முக்கியத்துவம், பயன்பாடு ஆகிய கூறுகளைத் தாங்கியுள்ளது என்பதை மேற்கண்ட விளக்கங்களின் வழி அறிய முடிகிறது.

இனி சோதிடத்தை வடவர்களின் பண்பாட்டுப் பின்னணியில் காண்போம். அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று தருமங்களுக்கும் உரிய ஆலோசனையை வழங்கக் கூடியது சோதிடம் என்று இந்து சாத்திரங்கள் கூறுகின்றன (கடலங்குடி நடேச சாஸ்திரிகள், 1998:1). இக்கலை, 'ஜோதிஷம்' அல்லது 'ஜ்யௌதிஷம்' என சமஸ்கிருத மொழியில்

குறிக்கப்படுகின்றது. இச்சொல் 'ஜோதி' + 'ஷம்' எனப்பிரியும். இங்கு, ஜோதி என்பது ஒளி எனவும், ஷம் என்பது அந்த ஒளியைப் பற்றிய வரலாறு எனவும் பொருள் கூறப்படுகிறது (வே.சங்கர், 2002:3). மேலும், ஜ்யௌதிஷம் என்பது அறிவைத்தரும் ஒளி என்றும் பொருள் படும். ஜோதி எப்படி இருளை நீக்கி ஒளியைத் தருகிறதோ அதுபோல சோதிடம் ஒருவரின் வாழ்க்கையில் இருளை நீக்கி நல்வாழ்வைப் பெற உதவுகிறது என்ற அடிப்படைத் தத்துவத்தை விளக்குவதால் சோதிடம் இப்பெயரைப் பெற்றுள்ளது (ராமய்யங்கார், 2000:18). ஆக, இக்கலையின் பயனை உணர்ந்தே முன்னோர்கள் இப்பெயரைச் சூட்டியுள்ளனர் எனக்கொள்ளலாம். சமஸ்கிருதத்தில் சோதிடம் 'ஹோரா' (Hora) என்றும் குறிப்பிடப்படுகின்றது. இந்த 'ஹோரா' என்ற சொல்தான் மருவி 'hour' என்ற ஆங்கிலச் சொல்லாகத் திரிந்துள்ளது. ஹோரா சாஸ்திரம் என்றால் நேரத்தைக் கணக்கிடும் சாஸ்திரம் என்பது பொருள் (தி.மகாலட்சுமி, 1996:113).

**விண்ணியலும் சோதிடமும்**

சோதிடக்கலையின் வரலாறு விண்ணியல் கலையின் வரலாற்றோடு பின்னிப் பிணைந்ததாகும். விண்ணியல் கலையே சோதிடக்கலைக்கு அடிப்படையானதாகும். விண்ணில் உள்ள கோள்கள் மற்றும் நட்சத்திரங்களின் இயங்கு நிலையைக் காட்டுவதே விண்ணியல் கலை (astronomy). சோதிடக் கலையானது விண்ணியல் அறிவைக்கொண்டு மண்ணில் வாழும் உயிர்களுக்கு ஏற்படப்போகும் மாற்றங்களை அறிந்து தெரிவிக்க உதவுகிறது.

பூமியிலுள்ள அனைத்துப் பொருள்களின் மீதும் கோள்கள் ஆதிக்கம் செலுத்துகின்றன. மனிதனுடைய அனைத்துக் கொள்கைகளும் கோள்களின் ஆதிக்கச் செய்தியை அடிப்படையாகக் கொண்டுள்ளன (கடலங்குடி நடேச சாஸ்திரிகள், 1998:2). இந்த தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு மனிதன், இயற்கை, கோள்கள், கடவுள் இவற்றுக்கிடையிலான தொடர்பைக் காட்டி அருமையான ஒரு கலையாகச் சோதிடக்கலையை நம் முன்னோர்கள் உருவாக்கித் தந்துள்ளனர்.

அண்டவெளியில் பூமி என்னும் கோள் யாதொரு சிக்கலுமின்றி தன்னிலையில் இயங்குவதற்குச் சூரியக்குடும்பத்தைச் சார்ந்த ஏனைய கோள்கள் அடிப்படையாக உள்ளன. அவற்றின் ஈர்ப்பு ஆற்றலால்தான் பூமி அதனுடைய செல்பாதையில் (orbit) மிகச்சரியாகச் செல்கின்றது. இதன்வழி பூமியின்மீது பிறகோள்கள் கொண்டுள்ள தாக்கத்தினை நாம் ஒருவாறாக உணர்ந்து கொள்ளலாம்.

நிலவு என்னும் கோளினால் கடல் நீர் பெருகுவதும் சுருங்குவதுமாக உள்ளது. முழுநிலவன்று மனிதனுக்கு ஏற்படும் நோய்கள் கடுமையாகின்றன. இதுபோலவே ஒவ்வொரு கோளும் வெவ்வேறு பாதிப்பைப் பூமியின்மீது ஏற்படுத்துகின்றன. இந்தக் கோள்கள் அடிக்கடி நேர்க்கோட்டில் வந்து நின்று ஒன்றையொன்று மறைத்து மக்களின் மனதில் பல்வேறு உணர்ச்சிகளை ஏற்படுத்துகின்றன. கோள்களிலிருந்து தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் காந்த அலைகள் உலகின்மீதும் உயிர்களின்மீதும் வீசும்போது உயிர்களின் உடலிலும் உள்ளத்திலும் எழும் விளைவுகளை நீண்ட காலக் கண்காணிப்பால் கணித்து விளக்கியது சோதிடம் என்பார் வேதாத்திரி மகரிஷி (சித்தயோகி சிவதாசன் ரவி, 2007: 5). அவரது கூற்றுப்படி வான வெளியில் பல கோள்கள் உள்ளன; அவை பல மாற்றங்களுக்கு ஆட்படுகின்றன; அந்த மாற்றங்கள் மனித வாழ்க்கை முறையில் பல தாக்கங்களை ஏற்படுத்துகின்றன; இந்த மாற்றங்களையும் தாக்கங்களையும் எடுத்தியம்புவதே சோதிடக்கலை.

கோள்களுக்கு, பூமியின் மீதும் அதன் தாவரக்கூட்டங்களின் மீதும் அதிகமான தாக்கம் உண்டென்பதைத் தற்கால புவியியல் அறிஞர்களும் பருவநிலை ஆராய்ச்சியாளர்களும் ஒப்புக்கொள்கின்றனர். கோள்களிலிருந்து வெளிப்படும் மின்காந்த அலைவீச்சு (cosmic rays) பூமியின் காலநிலையில்(atmosphere) அணுமாற்றத்தை உண்டாக்கி அதன்மூலம் பூமியில் வாழும் உயிரினங்களின் உடலுறுப்புகளில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது என ரொட்னி காலின் (Rotney collin) என்னும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றார் (மு.மாதேஸ்வரன், 1997:7). நட்சத்திரங்களிலிருந்து வெளிப்படும் எக்ஸ்ரே கதிர்கள் நம் ஒவ்வொருவரின் உடலிலும் ஆதிக்கம் செலுத்துகின்றன என்று சார்லஸ் நாட்மேன் (Charles Notman) என்பவர் கருதுகின்றார் (மேலது). சோதிடக் கலை விண்ணியல் கலையோடு தொடர்புடையது (தி.மகாலட்சுமி,1996:16). ஏனெனில், தொடக்கக்காலத்தில் வான ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்களே சோதிடக்கலைக்கு வித்திட்டார்கள். எனினும், வான ஆராய்ச்சி முழுக்க முழுக்க அறிவியலோடு தொடர்புடையதாகவும் சோதிடவியல் அறிவியலுக்கு அப்பாற்பட்ட ஞான இயலாக அல்லது தத்துவ இயலாகவும் அமைந்துள்ளன.

**சோதிடக்கலையின் பின்னணி**

இந்திய சமுதாயத்தினரிடையே வேரூன்றி காணப்படும் சோதிடத்தை நன்கு விளங்கி கொள்ள வேண்டுமானால், இச்சோதிட நம்பிக்கை உலகளாவிய நிலையில் உருவாகி வளர்ந்த போக்கைப்புரிந்து கொள்வது மிக அவசியமாகும். இனி அவற்றை விரிவாகக் காண்போம்.

சோதிடக்கலைத் தோன்றிய காலம், அதனைத் தோற்றுவித்தவர், தோன்றிய இடம் போன்ற குறிப்புகள் இன்றும் எந்த ஆய்வுகளின் வழியிலும் உறுதிப் படுத்தப்படவில்லை என்றே குறிப்புகள் காட்டுகின்றன (மேலது:2). ஆயினும், வின்வெளியில், சூரியன், சந்திரன், நட்சத்திரம், கோள்கள் இருப்பதாகவும் அவை பல மாற்றங்களுக்கு ஆட்படுகின்றதாகவும், விஞ்ஞானக் கருவிகள் கண்டுப்பிடிப்பதற்கு முன்னரே அவற்றை மனிதன் அறிந்து வைத்திருந்தான் என்றும் சுமார் 3000 கி.மு. ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மக்கள் தங்கள் வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்திச் செய்ய இவற்றைத் தெரிந்து வைத்திருந்தனர் என்றும் பல சரித்திர நூல்கள் கூறுகின்றன (Sivachandralingam Sundara Raja, 1999:244). "சுமேரியம்" (Sumeria) என்ற "மெசபடோமியா" (Mesopotamia) அல்லது இவர்கள் வழி வந்த "கிரேக்கர்கள்" (Greek), "பாபிலோனியா" (Babylonia), "எகிப்து" (Egypt), இந்தியா போன்ற நாட்டு மக்கள் தொன்று தொட்டே இக்கலையைத் தெரிந்து வைத்திருந்தனர் என்று ஆய்வுகள் காட்டுகின்றன (தி.மகாலட்சுமி, 1996:2).

குறிப்பாக, பாபிலோனியா மக்களே தொடக்கத்தில் வான நூலையும் சோதிட நூலையும் அறிந்து வைத்திருந்தனர் என்று வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர் (மேலது:3). தவிர, இன்று நாம் பயன்படுத்தும் நாள், வாரம் மற்றும் நேரம் போன்ற காலப் பயன்பாட்டு முறைகளுக்கு அவர்களே முன்னோடிகளாக இருந்துள்ளனர் (Sivachandralingam Sundara Raja, 1999:425). மெசபடோமியா மக்களின் வானிலை அறிவும், கிரேக்கர்களின் வடிவக் கடிதம் ஆகியவையும் ஒன்றிணைந்து சோதிடக்கலையை வளர்த்தன என்பதனை வாழ்வியல் களஞ்சியம் குறிப்பிடுகின்றது (வாழ்வியல் களஞ்சியம்-தொகுதி 9,1988:641). பாபிலோனியா மக்களிடமிருந்தே எகிப்து, கிரேக்கம், உரோம் (Rom), இந்தியா, சீனா, ஐரோப்பா போன்ற நாடுகளுக்குச் சோதிடம் பரவி இருக்கலாம் (தி.மகாலட்சுமி, 1996:3).

ஆதியில் மனிதர்கள் இயற்கைச் சூழலை நம்பியே தங்கள் வாழ்க்கையை வாழ்ந்து வந்தனர். இயற்கையினால் ஏற்படும் மாற்றங்கள் அதாவது வெள்ளம், நிலநடுக்கம், கடல் கொந்தளிப்பு போன்ற பேரிடர்கள் மனிதர்களின் வாழ்க்கைச் சூழலில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தின (மேலது:2). விவசாயத்தையே நம்பி வாழ்க்கை நடத்திய அக்கால மனிதர்கள் இப்பேரிடர்களைத் தவிர்ப்பதற்காக இயற்கையைப்பற்றி ஆராயத்தொடங்கினர். அதற்கென்றே சிலரை நியமித்து இயற்கைப் பேரிடர்கள் ஏற்படும் காலங்களைக் குறிப்பிட்டு வைத்தனர்; அதற்கு ஏற்றவாறு தங்கள் வாழ்க்கையையும் அமைத்துக்கொண்டனர். அதுமட்டுமின்றி, பகல் இரவு மாற்றங்கள்; பருவ மாற்றங்கள்; அதற்கான காரணங்கள் போன்றவற்றை ஆராய்ந்து பின் அவற்றினால் பூமியில் வாழும் உயிர்களுக்கு ஏற்படும் மாற்றங்கள் என அனைத்தையும் அக்காலத்திலே ஆராய்ந்து வைத்தனர். இக்காரணத்தினாலேயே அக்காலத்தில் வான ஆராய்ச்சி ஒரு முக்கிய அங்கமாக இருந்து வந்திருக்கிறது(Sivachandralingam Sundara Raja, 1999:430).

தொடக்கத்தில் வான ஆராய்ச்சிக்கென்று கருவிகள் தனியாக இல்லை. ஆனால், பின்னர் வந்த அறிவியலாளர்கள் இதற்கென்றே பல கருவிகளைக் கண்டுப்பிடித்தனர் என்று குறிப்புகள் காட்டுகின்றன (மேலது:435). தாலமி (Ptolomy), கலிலீயோ (Galileo), நியூட்டன் (Newton), பிதாகோராஸ் (Pythagores), கொப்ளர் (Coppler) போன்றவர்கள் வானவியலின் அறிஞர்களாக இருந்து விண்ணில் உள்ள கோள்களையும், அவற்றின் பாதைகளையும் பற்றிப் பல உண்மை நிலைகளைக் கண்டுப்பிடித்து உலகிற்கு வழங்கினர் (பி.சி.கணேசன்,2001:5). பிதாகோராஸ் என்கிற விஞ்ஞானி 'ஜியோமித்ரி' (Geometry) மூலம் கோள்களின் நடமாட்டத்தையும், நட்சத்திரங்களின் திசைகளையும் கணித்துச் சொன்னார் (மேலது:6). இவரின் வான ஆராய்ச்சிகள் சோதிடவியல் வளர்ச்சி காண வழிவகுத்தன.

அக்காலத்தில் சமயப் பிரமுகர்களே மக்களின் நலன்களைப் பேணிக் காத்து வந்தனர். சமய நிருவாகம், நாட்டு நிருவாகத்திலும் அவர்களே முக்கிய பங்கும் வகித்தனர். அரசர்களும், அமைச்சர்களும் இவர்களின் துணையோடுதான் நாட்டை நிருவாகம் செய்து வந்தனர் என்று சில சரித்திரக் குறிப்புகள் கூறுகின்றன (Sivachandralingam Sundara Raja, 1999:430). வான ஆராய்ச்சியிலும் சமயப் பிரமுகர்களே மிக அதிகமாக ஈடுபட்டனர். இதன் விளைவு, பிற்காலத்தில் வான ஆராய்ச்சி சமயத்தோடு தொடர்பு படுத்தப்பட்டது. வான வெளியில் இருக்கும் கோள்கள் மனித வாழ்க்கையில் தாக்கங்களைக் ஏற்படுத்துகின்றன என்ற நம்பிக்கையும் அக்காலம் முதற்கொண்டே வளர்க்கப்பட்டது. அந்த நம்பிக்கையே சோதிடம் உருவாகக் காரணமாக விளங்கியது என்று ஆய்வுகள் காட்டுகின்றன (மேலது). ஆக மொத்தத்தில், மனித நல்வாழ்விற்காக ஆராயப்பட்ட ஒன்று அவர்களின் நம்பிக்கையாக மலர்ந்து பின்னாளில் பண்பாட்டில் முக்கியக் கூறாகவும் கலந்தது எனலாம். சுமேரிய மக்களின் இக்கலையே மற்ற இடத்திற்கும் குறிப்பாக சிந்து வெளி மனிதர்கள் என்று விளங்கிய இந்தியர்களிடையே பரவி இருக்கலாம் என்ற கருத்துமுண்டு (மேலது:424).

**இந்திய சோதிடம்**

இது இவ்வாறு இருக்க, சில ஆய்வாளர்கள் தொடக்கக்காலங்களிலிருந்தே இந்தியர்களிடையே சோதிடக்கலை உருவாகி வளர்ச்சி பெற்று இருந்தது என்று கருத்து தெரிவிக்கின்றனர் (B.V.Raman, 1992:259). சுமேரியா அல்லது கிரேக்கர்களுக்கு முன்னமே இந்திய மக்கள் இக்கலையில் கைத்தேர்ந்தவர்களாக விளங்கினர் என்பது இவர்களின் கருத்தாகும். இக்கலை, சுமார் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சிந்து வெளி மக்களாகிய திராவிடர்களால் கையாளப் பட்டு வந்திருக்கின்றது என்று ஆய்வுகள் கூறுகின்றன (மேலது:260). ஹரப்பா மற்றும் மொகஞ்சதாரோ ஆகிய இரு நகரங்களும் சிந்து வெளி மக்களின் உயரிய சின்னமாக திகழ்கின்றன. இங்குக் கிடைத்த பானை ஓடுகள், முத்திரைகள் ஆகியவற்றில் நட்சத்திரக் குறியீடுகளும், கோள்களின் குறியீடுகளும் காணப்பட்டுள்ளதாக ஆய்வுகள் காட்டுகின்றன (தி.மகாலட்சுமி, 1996:10). மேலும், கொற்கை என்ற துறைமுகப் பகுதியில் மேற்கொண்ட ஆய்வின் போது சிந்துவெளியில் கிடைத்தது போல் அங்குக் கிடைத்த பல பானை ஓடுகளில் நட்சத்திரக் குறியீடுகள் காணப்படுகின்றன. கார்த்திகை நட்சத்திரத்தைக் குறிக்க ஆறுமீன்கள் குறியீடாகவும், செவ்வாய்க்கோளைக் குறிப்பிடுவதற்கு ஒரு மீனைப் போட்டு அதில் சிவப்பு வர்ணம் தீட்டப்பட்டதாகவும் ஆய்வுகள் குறிப்பிடுகின்றன (மேலது:11). பண்டைக் காலத்தில் தமிழர்கள் கடல்பயணத்தில் அதிகளவு ஈடுபட்டிருந்தனர் (தி.மகாலட்சுமி, இலக்கியத்தில் சோதிடம் 1996:53). பயணக் காலங்களில் மாலுமிகள் விண்மீன்களையும் திங்களையும் நோக்கித் திசை அறிந்து மரக்கலங்களைச் செலுத்தினர்; வானத்தை நோக்கி நேரம் அறிந்து கொள்ளவும் பயின்றிருந்தனர்; சந்திரனது இயக்கத்தைக் கொண்டே மாதங்களைக் கணக்கிட்டனர்; மாதத்திற்கு மதி, திங்கள் என்னும் பெயர்களை வழங்கினர்(மேலது).

ஆக மொத்தத்தில், இன்று இந்தியச் சோதிடத்தில் சிறப்பிடம் வகிக்கும் நட்சத்திரங்கள், ஹரப்பா கலாச்சார இனம் வழங்கியதாக இருக்கலாம் என்று வரலாற்றாசிரியர்கள் கூறுவது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது (மேலது). பின்னாளில் ஆரியர்களுடன் சேர்ந்து விண்ணியல், கணிதவியல், சோதிடவியல் முதலான பல கலைகளைத் திராவிட மக்கள் அறிந்து வைத்திருந்தனர் என்ற குறிப்பும் கிடைக்கப்பெறுகிறது (புலியூர் பாலு, 1997:10).

இவ்வாறு, இந்தியர்களின் சோதிடக்கலைத் தோன்றி வளர, பாபிலோனியச் சோதிடமும் இந்தியாவிற்குள் நுழைந்திருக்கின்றது(தி.மகாலட்சுமி, 1996:12). கி.மு.ஐந்தாம் நூற்றாண்டில் சிந்துநதிச் சமவெளியில், 'எனுமா அனு என்லில்' (Enuma Anu Enlil) போன்ற சகுன நூல்கள் நுழைந்தன(B.V.Raman, 1992:260). குறிப்பாகப் பௌத்த சமயத்தவர் தொடக்க காலத்தில் சோதிடத்தை ஏற்றுக் கொண்டமையால் இந்தியாவில் முதன் முதலில் பௌத்த சமய நூல்களில் தான் சோதிடம் நுழைந்தது. பின்னர், சீனா, திபெத்து, ஜப்பான், மத்திய ஆசியா, தென்கிழக்கு ஆசியா போன்றவற்றிலெல்லாம் சோதிடம் பரவுவதற்குப் பௌத்த சமயத் துறவிகள் முக்கியக் காரணமாக இருந்தனர் (தி.மகாலட்சுமி, 1996:13).

இந்தியாவில் கி.மு. 1000 நூற்றாண்டுகளுக்கு முன் '27 நட்சத்திரம்' என்னும் முறை பின்பற்றப்பட்டது என்ற குறிப்பு கிடைக்கப்பெறுகிறது (வாழ்வியல் களஞ்சியம்-தொகுதி 9 1988:641). இதைத் தவிர, கி.மு. முதல் நூற்றாண்டில் 'யவனர் சோதிடம்' இந்தியாவிற்கு வந்ததாகவும், 5-ஆம் நூற்றாண்டில் 'நட்சத்திரமான ஆண்டினைப்' பஞ்சாங்கத்தில் குறித்து வந்தனர் என்ற குறிப்பும் கிடைக்கிறது(மேலது).

ஆக மொத்ததில், மிகத் தொன்மையான காலத்திலிருந்தே இந்தியர்களிடையே சோதிடக்கலை இருந்து வந்திருக்கிறது என்பதனை இதன் வழி அறியலாம். இதனை மேலும் உறுதிப்படுத்துவதுபோல, பல நூற்றாண்டுகளுக்கு முன் தோன்றிய தமிழ் இலக்கியங்களாகிய இதிகாசங்கள், புராணங்கள் போன்றவற்றில் சோதிடம் சார்ந்த செய்திகள் பரவலாகக் காணக்கிடக்கின்றன. இராமாயணம், மகாபாரதம் போன்ற காப்பியங்களில் சோதிடக் கூறுகள் நிறையவே காணப்படுகின்றன. சான்றாக, இராமாயணத்தில் ஒரு காட்சி. சித்திரக்கூடத்தில் குடில் அமைக்கும்போது இராமன் சகுனம் பார்ப்பதாக கம்பர் குறிப்பிட்டுள்ளார் (தி.மகாலட்சுமி & கோவி.சிவபாலன் (பதிப்.). 2016:80). மற்றொரு காப்பியமான சிலப்பதிகாரத்தில், கண்ணகிக்குக் கோயில் கட்டச் சேர மன்னன் செங்குட்டுவன், அரண்மனைச் சோதிடப் பெருங்கணி,

*அறக்களத்து அந்தணர், கட்டடக்கலை அறிஞர், சிற்பக்கலை வல்லுநர் ஆகியோருடன் செல்வதை ஒரு பாடல் குறிப்பிடுகின்றது (மேலது:81). இதில், 'பெருங்கணி' என்ற சொல் சோதிடம் கணிப்பவரைக் குறிக்கிறது. பழங்காலத்தில் சோதிடத்தைக் கணிக்கும் நபரை பெருங்கணி என்றும் அழைப்பர்.*

*இதைத்தவிர, சங்க இலக்கிய நூலான பதிற்றுப்பத்தில்,*

*"சொற்பெயர் நாட்டம் கேள்வி நெஞ்சமென்*
*றைந்துடன் போற்றி அவை துணையாக"(பதிற்றுப்பத்து,3:1)*

*என்ற வரிகள் காணப்படுகின்றன. இப்பாடல் வரிகள், பல்யானைச் செல்கெழுகுட்டுவன் என்ற அரசன் நடத்திய வேள்வியை, சொல்லிலக்கண நூலையும், பொருள் இலக்கண நூலையும், சோதிட நூலையும், வேத நூலையும் நன்கு கற்றறிந்த முனிவர்கள் செய்து முடித்தனர் என்பதனை தெளிவுபடுத்துகின்றன. இப்பாடல் வரியில் காணப்படும் 'நாட்டம்' என்ற சொல் சோதிடத்தைக் குறிப்பதாகக் கூறப்படுகிறது (உ.வே.சாமிநாதையர், 1957:59). ஆக, அக்காலத்தில் கட்டாயமாக கற்க வேண்டிய மிக முக்கியமான நூல்களில் சோதிட நூலும் ஒன்றாக இருந்தது என்பதை அறியமுடிகின்றது.*

*இதே கருத்தினை யாப்பருங்கல விருத்தி எனும் தமிழிலக்கண நூலிலும் காணலாம் (தி.மகாலட்சுமி, 1996:115). பல தொழில்களைக் கற்பிக்கும் பல கருவி நூல்களுள் சோதிட நூலும் ஒன்றாகப் பண்டைத் தமிழகத்தில் இருந்தது என்று இந்த நூல் குறிப்பிடுகிறது. மேலும், சோதிடச் செய்திகள் சதக இலக்கியங்களிலும் விரிவாக இடம்பெற்றுள்ளன. தரித்திரயோகம், மரணயோகம், நட்சத்திரத்திற்கும் நாளுக்கும் பகை, கிரகச்சுற்றும் அவற்றின் ஆட்சி நிலையும், மனுஷகணம் முதலிய மூன்றும் அறிவது, குளிகன் இராகு காலம், கெர்ப்போட்ட நாள் என்ற பல சோதிடக் கூறுகளைக் கயிலாசநாதர் சதகம் கூறுகிறது (மேலது:116). இவற்றைப்போல் சோதிடம் தொடர்பான இன்னும் பல குறிப்புகள் நம் தமிழ் இலக்கியங்களில் அதிகமாகக் காணப்படுகின்றன. இவை யாவும் சோதிடக்கலை பழமை வாய்ந்த கலை என்பதனை உறுதிச்செய்கின்றன.*

*இந்தியர்களிடையே சோதிடக்கலை இறைவனால் உலகிற்குப் போதிக்கப்பட்டது என்ற நம்பிக்கை பரவலாக இருந்து வந்துள்ளது. அதனால்தான், அவர்கள் சோதிடத்தை இந்து சமயத்தின் ஒரு கூறாகவே வளர்த்து வந்துள்ளனர் எனலாம். ஆழ்ந்த சமய அறிவும், ஞானமும், தவமும், கடவுள் அருள் பெற்ற ஒருவரால் மட்டும்தான் சோதிடத்தை நன்கு கூற முடியும் என்றும் அவர்களே முக்காலமும் உணரக் கூடிய தீர்க்கத்தரிசிகளாகவும் விளங்குவர் என்றும் இந்தியர்கள் நம்புகின்றனர். இவ்வாறு தகுதிப் பெற்றவர்களை அவர்கள் சித்தர்கள் என்றும் முனிவர்கள் என்றும் ஞானிகள் என்றும் குறிப்பிடுகின்றனர் (ராமய்யங்கார். 2000:15).*

*இந்துக்களின் முதன்மைக் கடவுளான சிவபெருமான்தான் முதன்முதலில் இக்கலையைத் தன் பத்தினியாகிய பார்வதி தேவிக்கு உபதேசித்தார் என்றும் அதன்பிறகு தேவி முனிவர்களுக்கு உபதேசித்து உலகு உய்ய வழிவகுத்தார் என்ற ஒரு கருத்தும், பிரம்மா கார்க்கி முனிவருக்கு உபதேசித்ததாகவும் இம்முனிவரிடமிருந்தே ஏனையோர் கற்றுப் பின் உலகம் முழுவதும் பரப்பினார்கள் என்ற கருத்தும் சில நூல்களில் காணப்படுகிறது (வே.சங்கர், 2002:3). மேலும், சில நூல்கள் நாரத மகா முனிவர் பிரம்மனிடமிருந்து இக்கலையைக் கற்று சூனாகா என்ற முனிவருக்கு உரைத்ததாகக் கூறுகின்றன (S.P.சுப்பிரமணியன், 1998:268). மற்றொரு நூல், விஷ்ணு என்ற முனிவர் தமது பிறப்பின் காரண காரியத்தைத் தெரிந்து கொள்ளவும், நன்மை தீமையிலிருந்து காத்துக் கொள்ளவும் கோள், நட்சத்திரம் முதலியவற்றை உருவாக்க எண்ணிப் பிரம்ம கடவுளை நோக்கி தவம் புரிய; அவரும் தோன்ற; அவரிடம் 27 நட்சத்திரங்களையும், ஒன்பது கோள்களையும் உண்டாக்கும்படி கட்டளையிட, பிரம்மன் அதனை உமையாளிடம் கூற, உமையாள் தானே சூரிய சந்திரர்களாக விளங்க, சதாசிவம் குருவாகவும், மயேசுபரர் சனியாகவும், உருத்திரர் அங்காரகனாகவும், திருமால் புதனாகவும், பிரம்மன் சுக்கிரனாகவும், விஷ்ணு முனிவர் தாமே இராகு கேதுக்களாகத் திகழ்ந்தார் என்று குறிப்பிடுகிறது(தி.மகாலட்சுமி, 1996:15).*

*சோதிட சாத்திரம் என்பது பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் ஆதி மனிதர்களால் அவர்களது ஞான ஒளியினால் உலகிற்கு வழங்கப்பட்டது. இன்றைக்கு இருக்கும் அறிவியல் கருவிகள் ஏதுமற்ற நிலையில், அக்காலத்து ஞானிகள் பலரும் பல்வேறு இடங்களில் இருந்து கொண்டு ஒரே விதமாக இச்சாத்திரத்தைக் கணித்தனர். எனவே, இது ஆன்மீகக் கலையாகத் தோன்றி வளர்ந்தது என்ற கருத்துமுண்டு (மேலது).இக்கருத்தானது சோதிடக்கலை சமயம் சார்ந்த ஒன்று என்பதனை மேலும் உறுதிச் செய்கின்றது.*

*தொடக்கத்தில் சோதிடக்கலை வாய்மொழியாகவே பல காலமாகப் பேணிக்காக்கப்பட்டு வந்துள்ளது என்றும், அக்கலைப் பரம்பரை பரம்பரையாகப் போதிக்கப்பட்டு, நாளடைவில் கல் தூண்களிலும், பெரிய பாறைகளிலும், செப்புத் தகடுகளிலும் ஓலைச்சுவடிகளிலும் எழுத்துகளால் எழுதப்பெற்று ஏட்டுருவம் பெற்றிருக்கக்கூடும் என்றும் ஆய்வுகள் காட்டுகின்றன (மு.மாதேஸ்வரன்,1997:97). இருப்பினும், இவ்வாறு ஏட்டுருவம் பெற்றப் பல சோதிட மூலங்கள் சரியாகப் பராமரிக்கப்படாததாலும், இயற்கைப் பேரிடர்களாலும் அழிந்து விட்டன. இது, சோதிட உலகிற்கு பேரிழப்பாகக் கருதப்படுகிறது.*

**சோதிடம் இயலும் முறை**

*இனி, சோதிடக்கலை இயற்றப்பட்ட முறையினைக் காண்போம். அதாவது, அறிவியல் வளர்ச்சியடையாத அக்காலத்தில் வாழ்ந்த மக்கள் எவ்வாறு சோதிட உட்பிரிவுகளான கோள்கள், நட்சத்திரங்கள், இராசிகள் போன்றவை வரையறுத்திருக்ககூடும் என்பதனைப் பற்றி இப்பிரிவில் காண்போம்.*

*நம் மூதாதையர்கள் மனித உடலுள் அடங்கியுள்ள பஞ்ச பூதங்களும், சூரியன் முதல் சனி ஈறாக உள்ள கிரகங்களினால் ஆளப்படுகின்றன என்று நம்பினர் (கலைக்களஞ்சியம்,தொகுதி 5,1958:260). வான மண்டலத்திலிள்ள கோள்கள் மனித உடலில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்றும் அதனால் மனிதனும் உலக மேற்பரப்பில் உள்ள அனைத்தும் கோள்களின் இருப்புநிலை, ஈர்ப்புவிசை முதலியவற்றினால் இயக்கப்படுகின்றன என்றும் அவர்கள் நம்பினர் (சித்தயோகி சிவதாசன் ரவி, 2007:5).*

*இந்திய சோதிடக்கலைத் தெய்வத்தன்மைப் பெற்றது என்றும் அது சித்தர்கள் மற்றும் ரிஷிகளால் வளர்க்கப்பட்டது என்றும் முன்னம் கண்டோம். சித்தர்களும் ரிஷிகளும் தங்கள் தவத்தால் முக்காலமும் உணரக் கூடிய தீர்க்கதரிசிகளாக விளங்கினர். அவர்கள் வான் மண்டலத்தில் ஏற்படும் மாற்றங்களை ஆராய்ந்து பின் அம்மாற்றங்களால் மனிதர்களுக்கு ஏற்படும் விளைவுகளையும் அதற்கான பரிகாரங்களையும் அறிந்திருந்தனர்; பின், அவற்றைக் குறித்து வைத்திருந்தனர் (லேனா தமிழ்வாணன், 1990:11).*

*சூரியன் செல்லும் வானவீதியை 'ஓரைவட்டம்' அல்லது 'ராசி மண்டலம்' என்று சோதிட ஆசான்கள் குறிப்பிடுகிறார்கள். இது, ஆங்கிலத்தில் 'Zodiac' என்று அழைக்கப்படுகின்றது. சூரியன் இந்த வட்டப்பாதையில் ஒரு முறை சென்று முடியும் போது 12 பௌர்ணமிகள் வந்ததைக் கண்ட இவர்கள் இதைக் காலக் கணிதத்திற்குப் பயன்படுத்திக் கொண்டார்கள் (புலியூர் பாலு, 1997:10). ஒரு பௌர்ணமி முதல் அடுத்த பௌர்ணமி வருவதை ஒரு மாதமென்று முதலில் கண்டுபிடித்து சூரியனின் வான மண்டல சஞ்சாரத்தைப் 12 பகுதிகளாகப் பிரித்திருக்க வேண்டும். ஒவ்வொரு பகுதியிலும் அடங்கியுள்ள விண்மீன் கூட்டங்களின் தோற்றத்தையும், இயக்கத்தையும் ஒட்டி மேஷம் முதலிய 12 இராசிகளுக்கும் பெயரிட்டிருக்க வேண்டும். அவற்றின் தோற்றம் ஆடு போலவும் நண்டுபோலவும் இருப்பதை ஒட்டி அவர்கள் இராசிகளுக்குப் பெயர் சூட்டி இருக்கக்கூடும் (கலைக்களஞ்சியம்-தொகுதி 5, 1958:261).*

*அந்த வகையில், சாதகக் கணிப்பில் "Induction" முறையை அவர்கள் கையாண்டிருக்க வேண்டும் என்று ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர் (பி.சி.கணேசன், 2001:55). அதாவது, வானில் ஏற்படும் மாற்றங்களை நீண்ட நாள் கவனித்து, பின்னர் குறிப்பெடுத்து இறுதியில் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு பொதுவான விதியினை உருவாக்குவது என்பது இதன் பொருளாகும்.*

*பின்னர், இவ்வாறாக இயற்றப்பட்ட விதியினை அடிப்படையாகக் கொண்டு வான மண்டலத்தில் காணப்படும் பல்வேறு கிரகங்களின் நிலைகளை ஏராளமான சாதகங்களோடு ஒப்பிட்டு அவர்கள் சில விதிகளை உருவாக்கி வைத்திருந்து, அவ்வாறு உருவாக்கிய விதிகளை ஏனைய புதிய சாதகங்களோடு பொருத்திப் பார்த்து உறுதி செய்திருக்க வேண்டும். இவ்வாறு, சோதிட பலன்களைக் கூறுவதற்கு நூற்றுக்கணக்கான விதிகளை அவர்கள் உருவாக்கி, எழுதி வைத்திருக்கக்கூடும். பிற்காலத்தில் வாழ்ந்தவர்கள் சித்தர்கள் மற்றும் ரிஷிமார்கள் எழுதி வைத்த இக்குறிப்புகளைத் துணையாகக் கொண்டு சோதிடத்தைக் கணித்துக் கூறி இருக்கலாம்.*

*சோதிடம் ஒரு யூகத்தின் அடிப்படையில்தான் மேற்கண்டவாறு உருவாகியிருக்கக்கூடும் என்பதனை ஆய்வாளர்கள் ஒப்புக்கொள்கின்றனர்(மேலது). இப்படிதான் நடந்திருக்கக்கூடும் என்று எந்த நூலும் அறுதியிட்டுக் கூறவில்லை. எனினும், நீண்ட ஆய்வு அல்லது கணிப்பிற்கு பின்னர்தான் சோதிடம் உருவாகி இருக்கலாம் என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்(B.V.Raman,1992:244).*

**சோதிடமும் அறிவியலும்**

*ஒரு சமுதாயத்தில் தொகுநிலை உறவுகள், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், அந்தச் சமுதாயத்தில் ஏற்படும் எழுச்சி வீழ்ச்சிகள், ஏற்றத் தாழ்வுகள், வரலாற்றுக் கொந்தளிப்புகளையும் சோதிடத்தால் கூற இயலும் என்று சோதிட நிபுணர்கள் பெருமளவில் நம்புகின்றனர்(கே.என்.சரஸ்வதி,1994:40). சோதிடத்தில் பல உண்மைகள் இருப்பதையும் அது இயற்கைச் சூழலோடு தொடர்புடையது என்றும் அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் சில ஆய்வுகளின் வழி நிரூபித்தும் உள்ளனர். எனவேதான், அறிஞர்கள் பலர் சோதிடம் ஒரு விஞ்ஞானம் தான் என்று ஏற்றுக்கொண்டுள்ளனர் (தி.மகாலட்சுமி, 1996:115).*

*இன்றைய அளவில் அறிவியலின் பல பிரிவுகள் இயற்கையைப் பற்றியும், மனித குலத்திற்கு அதனால் உண்டாகும் நன்மை தீமைகளைப் பற்றியும், விளையும் பயன்களைப் பற்றியும் ஆராய்ந்து கொண்டிருக்கின்றன. அதுபோல், சோதிடக்கலையும் இயற்கையில் நிகழும் இயக்கங்களைப் பற்றியும் அதனால் உயிரினங்களுக்கு உண்டாகும் விளைவுகளைப் பற்றியும் ஆராய்ந்து கூறுகின்றது என்பதும் ஆய்வாளர்களின் கருத்தாகும் (வே.சங்கர், 2002:5).*

*உளவியல், மருத்துவம், குற்றவியல் போன்ற துறைகளில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளின் முடிவுகள் சோதிடக்கலையை அறிவியல் என்று உறுதிச் செய்கின்றன. உதாரணத்திற்குச் சந்திரன் வளர்பிறையில் இருக்கும்போது குற்றங்கள் அதிகமாவதையும், தேய்பிறையில் இருக்கும் போது குற்றங்கள் குறைவதையும் பிரஞ்சு குற்றவியல் விஞ்ஞானி கண்டறிந்து கூறியுள்ளார் (மேலது). எட்சன் ஆன்ட்ருட்ஸ் என்ற மருத்துவ அறிஞர் சந்திரனின் நிலையைப் பொருத்து மருத்துவ சிகிச்சைகள் பாதிக்கப்படுகின்றன என்று கூறியுள்ளார்(மேலது:6). மேலும், மனோதத்துவ சிகிச்சைகளும் சந்திரன் அடிப்படையில்தான் அளிக்கப்படுகின்றன. கோள்களின் பாதிப்புகள் மனித மூளையைத் தாக்குகின்றன என்பதால் மனபலம் பாதிக்கப்பட்டவர்களை உளவியலின் அடிப்படையில் மருத்துவர்கள் அணுகுகின்றனர்.*

*சோதிடக்கலை வகுத்துச் சொல்லியுள்ள விதிகளை, வெறும் விதிகளாக மட்டும் பார்க்காமல் அறிவியல் கண்ணோட்டத்தோடு ஆராய வேண்டும் என்று பல அறிவியல் நிபுணர்கள் கூறுகின்றனர் (கே.என்.சரஸ்வதி,1994:42). ஏனெனில், அப்பொழுதுதான் அந்த விதிகளுக்கான காரண காரியங்களை எளிதில் புரிந்து கொள்ள முடியும் என்பது அவர்களின் கருத்தாகும்.*

*ஆக, பிரபஞ்ச இயக்கம் ஒன்றுக்கொன்று தொடர்புடையது என்ற உண்மையினை அறிவியல் உறுதிப்படுத்துகின்றது. சில கிரகங்களினுடைய இடமாற்றங்களுக்கு ஏற்ப சூரியனிலும் தட்பவெப்ப நிலை குறிப்பிடத்தக்க அளவிற்கு மாற்றம் பெறுவதை ஆய்வாளர்கள் கண்டுப்பிடித்துள்ளனர் (மேலது). மேலும், ஒரு கோளுக்கும் இன்னொரு கோளுக்கும் உள்ள இடைவெளி மிக நுண்ணிய சிக்கலான ஆற்றல்களாலும் கதிர்வீச்சுகளாலும் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளது என்ற உண்மையை அறிவியலாளர்கள் கண்டுப்பிடித்துள்ளனர் (மேலது:43).*

*சுருங்கக்கூறின், மனிதன் + சூரியன் + பூமி + சந்திரன் + மற்ற கிரகங்கள், இவையாவும் ஒன்றுக்கொன்று ஆதிக்கம் பெற்று விளங்குகின்றன. இந்த ஆதிக்கமே சோதிடக்கலைக்கு ஆதாரமாக அமைகிறது. இந்த ஆதிக்கம் செயல்படுகின்ற முறைகளையும், விதிகளையும் அடிப்படையாக வைத்துத்தான் நம்முடைய முன்னோர்கள் சோதிடக் கலையை உருவாக்கினார்கள் என்ற உண்மை தெள்ளத் தெளிவாகிறது. இருப்பினும், சோதிடம் ஒரு போலி அறிவியல் என்று கூறுபவரும் இருக்கின்றனர் (தி.மகாலட்சுமி, 1996:116). பூமியிலுள்ள மனிதனுக்கும் விண்வெளிக்கும் இடையேயுள்ள மிகுதியான தூரம் மனிதன் மீது குறிப்பிடத்தக்க பாதிப்பு எதனையும் ஏற்படுத்த முடியாது எனும் நம்பிக்கையை இவர்கள் கொண்டிருக்கின்றனர். சோதிடம் அறிவியலா இல்லையா என்பதை உறுதிப்படுத்த இன்னும் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.*

**சோதிடமும் கருமவினையும்**

*சோதிடத்தை, அறிவியல் கண்ணோட்டத்தோடு பார்ப்பவர் ஒரு புறமிருக்க, அதனை ஆன்மீகக் கண்ணோட்டத்தோடு பார்ப்பவர்களே அதிகம் இருக்கின்றனர். சோதிடத்திற்கும் கருமவினைக்கும் நெருக்கமான தொடர்பு உள்ளது என்று ஆன்மீகவாதிகள் கருதுகின்றனர்.*

*இந்தியர்கள் பிறவிகள் மீது அதிக நம்பிக்கை வைத்துள்ளனர். அதாவது, உலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் முற்பிறவி, மறுபிறவி என்ற ஒன்று உள்ளது என்று அவர்கள் நம்புகின்றனர். ஒருவர் முற்பிறவியில் செய்த நல்வினை,*

தீவினையைப் பொறுத்தே அவருடைய மறுபிறவியும் அமைந்திருக்கும் என்பது இந்துக்களின் நம்பிக்கை. இதை, இந்து சாத்திரங்களும் வலியுறுத்துகின்றன (S.P.சுப்ரமணியன், 1998:5). இதையே வினைப்பயன், கருமவினை, ஊழ்வினை, விதி என்று இந்துக்கள் அழைப்பர். இக்கருமவினை ஒருவரின் வாழ்க்கைப் பாதையை முடிவுசெய்கின்றது என்பது அவர்களின் உறுதியான நம்பிக்கை. அவ்வாறாயின், சோதிடக்கலையின் பயன் என்ன என்னும் கேள்வி இங்கு எழுகிறது.

**சோதிடக்கலையின் பயன்**

சோதிடம் என்பது கடந்த காலம், நிகழ்காலம், வருங்காலம் போன்ற பலன்களை எடுத்தியம்பும் ஒரு கலையாகும். சோதிடம் வழி, எந்தெந்தக் காரியத்தை எந்தெந்த நேரத்தில், எந்தெந்த முறைப்படி செய்ய வேண்டும்; அதனால் எவ்விதப் பலன்கள் கிட்டும் என்பதைச் சோதிடம் தெரிவிக்கிறது (ரிஷபானந்தர், 1999:4). பண்டைக்காலத்தில் வேள்வி, பூசை, தவம் போன்றவற்றைச் செய்ய ஏற்ற கால நேரங்களையெல்லாம் தேர்ந்தெடுப்பதற்கான சிறந்த கலையாக உதவியது சோதிடக்கலை.

சோதிடத்தின் வாயிலாக, அவரவர்கள் தங்களிடம் புதைந்துள்ள ஆற்றலை உணர்ந்து அதற்கு உகந்த தொழில்களிலும், இதர நடவடிக்கைகளிலும் ஈடுபட முடியும் என்று சிலர் கருதுகின்றனர் (மேலது). மேலும், கிரகங்களின் நிலையையும் நட்சத்திரங்களின் நிலையையும் கொண்டு நாம் உலக விவகாரங்களைப் பற்றி முன் கூட்டியே அறிய முடியும் என்றும் கூறுகின்றனர் (கலைக்களஞ்சியம்-தொகுதி 5, 1958:260).

இருப்பினும், சோதிடத்தின் மூலம் அனைத்தையுமே கணிக்க முடியாது. ஒருவரின் வாழ்க்கையை ஓரளவு மட்டுமே சோதிடத்தால் கணித்துக் கூற முடியும் என்னும் கருத்தும் உள்ளது. “சோதிடர்கள் கிரகங்களின் அசைவுகளைக் கொண்டு இயன்றவரை பலன்களை முன்கூட்டி அறிவிக்கிறார்கள். ஆயினும், நம்மைப் படைத்த பிரமனைத் தவிர, வேறு யாராலும் திட்டவட்டமாக இதுதான் நடக்கும் என்று கூற முடியாது” என்பார் காளிதாசர் (ராமய்யங்கார். 2000:முன்னுரை).

சோதிடம் மனிதனுக்கு சரியாக வாழ்வதற்குரிய வழியைக் காட்டி அவனைப் பக்குவப்படுத்துகின்றது. இருள் சூழ்ந்த பாதையில் நடந்து செல்பவனுக்குச் சூரியனின் கதிரொளி பாதை காட்டுவதுபோல மனிதன் செம்மையுற வாழ்வதற்குச் சோதிடம் பாதை காட்டுகின்றது. சோதிடக்கலையை அறிந்தவர்கள் கோள்களின் நியதியை மனந்துணிந்து ஏற்றுக்கொள்வதோடு பொறுமை, சகிப்புத்தன்மை, தியாகம் ஆகிய நற்குண நற்செயல்களால் தன்னைப் பற்றியிருக்கும் தீவினைகளைப் போக்கிக் கொள்ள தயாராகின்றனர். மனிதன், தனக்கு வரும் நன்மைக்குரிய காலத்தை முன்னரே அறிந்து வைத்துக் கொண்டு தன் வாழ்க்கையை மேலும் வளப்படுத்திக் கொள்ளவும், துன்ப காலத்தில் மனம் துவண்டு விடாமல் தனக்கு அமைந்துள்ள வாழ்க்கையை ஏற்றுக்கொண்டு வாழவும் சோதிடக்கலை துணைபுரிகின்றது. இக்கலை, இயற்கையின் அளப்பெரும் ஆற்றலை மனிதனுக்கு உணர்த்தி, இறைவனின் திருவடியே கதியென சரணடையச் செய்கின்றது. மனிதன் துன்பங்களுக்கு ஆட்பட்டுவிடாமல் வாழ்க்கைப் பாதையைக் கடந்து வந்து மன நிம்மதி பெறுவதற்கும் இக்கலை வகை செய்கின்றது. இதன்வழி சோதிடம் என்பது மனிதனின் கருமவினைக் கணக்கைச் சொல்லுகின்ற கலை என்பதைப் புரிந்துகொள்ளவியலும்.

சோதிடக்கலை, பல்வேறு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. ‘சாராவளி’யின் ஆசிரியர் கல்யாணவர்மா, ஒருவர் செய்யும் தொழில் விருத்திக்கும், குடும்ப நிலைக்கும், வியாபாரம் முதலியவற்றிற்கும், திருமணம் போன்ற சுபகாரிய முயற்சிக்கும், குடும்ப வாழ்க்கை சிறக்கவும், மக்கள் கல்வி நிலை அறிந்து அதற்குத் தக்கபடி அவர்களைச் சீர்திருத்திக் கொண்டு போகவும், புது முயற்சிகள் ஏதாவது செய்ய வேண்டுமானால் அதற்குத் தக்க, நல்ல நேரத்தைத் தெரிந்து கொண்டு செயல்படவுமே சோதிடம் பயன்படுகிறது என்று சோதிடம் உருவாகிய நோக்கத்தைத் தெளிவுப்படுத்தியுள்ளார் (புலியூர் பாலு, 1997:34).

பண்டைய காலத்துச் சக்கரவர்த்திகள், பேரரசர்கள், பெருநில குறுநில மன்னர்கள் எல்லாம் தமது அரசவைகளில் அரசவை சோதிடர்களை அமர்த்திக் கொண்டுள்ளனர். அவர்கள் மதியுரைப்படி அரசாட்சியைத் திறம்பட நடத்தினர் என்ற குறிப்புகளும் நமது இலக்கியங்களில் காணப்படுகின்றன(தி.மகாலட்சுமி,1996:19). போர்க்காலங்களில், கிரக நிலைகளை ஆராய்ந்து அதற்குத் தக்கபடி தமது போர் நடவடிக்கைகளை அமைத்துக் கொண்டு வெற்றி கண்டிருக்கின்றனர் அக்கால மன்னர்கள்(மேலது). மேலும், சமாதான காலங்களில், நாட்டில் சோதிடக்கலை அறிவை பரப்புவதிலும் வளர்ப்பதிலும் ஈடுபாடு கொண்டு வளரச்செய்திருக்கின்றனர் (புலியூர் பாலு, 1997:35).

தவிர, பழங்காலத்தில் உலகம் முழுவதும் நலமுடன் இருப்பதற்கு வேண்டிய வேள்வி, பூசை, தவம், போன்றவைச் செய்வதற்குரிய கால நேரங்களையெல்லாம் அறிவதற்கு சோதிடம் அடிப்படையாக அமைந்துள்ளது (தி.மகாலட்சுமி,1996:14). இக்காலத்திலும், மக்கள் சோதிடத்தைப் பல்வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்துகின்றனர். தத்தம் வாழ்க்கை தேவைக்கு ஏற்ப மக்கள் இக்கலையின் வழி வழிகாட்டுதலைப் பெற்று பயன்காண்கின்றனர். இதன்வழி, மனித இனத்துக்கு நல்ல முறையில் பயன்பட வேண்டும் என்கிற சீரிய நோக்கத்தோடுதான் நம்முடைய முன்னோர்கள் சோதிடக்கலையை உருவாக்கினர் என்பது புலப்படுகின்றது.

**சோதிடரும் சோதிட நூல்களும்**

சோதிடக்கலை மக்களைச் சென்றடைய சோதிடர் பெரும் பங்காற்றுகின்றனர் என்பதில் வேறுபட்ட கருத்து இல்லை. அக்காலத்தில் சில மன்னர்களும் கூட இக்கலையில் சிறந்து விளங்கினர் என்பதனை நமது இலக்கியங்கள் மூலம் படித்துணரலாம். சோதிடத்தைப் பொருள் ஈட்டித் தரும் தொழிலாக மட்டும் பாராமல் முழு ஆர்வத்தோடும், தெய்வத் தன்மையோடும் சோதிடவியலிலுள்ள உண்மைச் செய்திகளை உள்ளது உள்ளவாறே எடுத்தியம்பி வந்தனர் அக்கால சோதிடர்கள். ஆதலால்தான், சோதிடர்களைத் தீர்க்கதரிசிகள் என்று கூறுவர். அக்காலத்தில், சோதிடர்களின் வாக்கு பொய்யாகாது என்று பெரும் நம்பிக்கையுடன் இந்தியர்கள் இருந்து வந்தனர். இதன் காரணமாகத்தான் சோதிடம் இன்றளவும் பேணி காக்கப்பட்டு வந்துள்ளது எனலாம்.

அரசவை மட்டுமின்றி ஆலயங்களிலும் தனியாகச் சோதிடர் இருந்தனர் என்று ஆய்வுகள் காட்டுகிறன (கே.என்.சரஸ்வதி, 1994:97). அவர்கள் ஆலய நிகழ்வுகளை மட்டுமே கவனிப்பர். ஆண்டுதோறும், அரசவையிலும் கோயில்களிலும் பஞ்சாங்கம் படிப்பது ஒரு பழக்கமாக அந்நாளில் இருந்துள்ளது (மேலது). ஆதியில், அட்சரேகை (Latitude), தீர்க்கரேகை (Longitude) முதலியவற்றைச் சூரியனது நிழலைக் கொண்டு சோதிடரே கணித்தனர் என்பது ‘ஜாதக சாகரம்’ எனும் நூலினால் அறியலாகும் செய்தியாகும்(தி.மகாலட்சுமி,1996:169).

*மேலும், 'சாதக அலங்காரம்' என்னும் நூல், ஊர்களின் அட்சரேகை, தீர்க்கரேகை, காலநிர்ணயம் முதலியவற்றை அறிந்திருத்தல், உத்தம குணம், பொறுமை, மனுநீதி, நூலறிவு, பெரியோர்க்கு இணக்கம் முதலியன சோதிடனுக்குரிய தகுதிகள் எனக் கூறுகிறது (மேலது). இதன்வழி, சோதிடன் என்பவன் நிரம்பிய அறிவுடையவனாக இருத்தல் வேண்டும் என்பது புலனாகிறது. சோதிடர்களின் பெருமைகளை நமது இலக்கியங்கள் பலவாறாக எடுத்து கூறியுள்ளன.*

*பொதுவாக, சோதிடத்தைக் கணித்துக் கூறுபவரைச் சோதிடர் என்பர். அந்நாளில் 'அறிவன்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இச்சொல் சோதிடரைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டதைப் பின்வரும் நூற்பாவினால் அறியமுடிகிறது.*

*"மறுவில் செய்தி மூவகைக் காலமும்*
*நெறியின் ஆற்றிய அறிவன் தேயம்*
*நாவிரு வழக்கில் தாபதப் பக்கமும்*
*பாலறி மரபில் பொருநர் கண்ணும்" (புறத்திணை.16)*

*இப்பாடலுக்கு, இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்னும் மூவகைக் காலத்தையும் நெறியோடு முழுமனதுடன் உணர்ந்தவர் என்றும் இல்லற வாழ்க்கையைத் துறந்து தவம் செய்யும் முனிவர் என்றும் உரையாசிரியர் நச்சினார்க்கினியர் உரை எழுதியுள்ளார் (தி.மகாலட்சுமி,1996:117). மேலும், உரையாசிரியர் இளம்பூரணர், அறிவன் என்பது கணியனைக் குறிக்கும் என்பார்(மேலது). இதுவன்றி இன்னும் பல பாடல்களின் மூலம் தொல்காப்பியர் காலத்திலும் சங்ககாலத்திலும் சோதிடர், அறிவன், அறிவர் என்ற சொற்களால் குறிக்கப்படுவது மட்டுமின்றி இவர்கள் முனிவர்களாகவும் இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டவர்களாகவும் இருந்தனர் என்பதும் தெரிய வருகிறது.*

*மேலும், 'கணி', 'கணிகள்', 'கணியன்', 'கணியான்', 'கணிவன்' என்றெல்லாம் சோதிடர்கள் அழைக்கப்பட்டுள்ளனர் (மேலது:120). கணி என்பதற்குச் சோதிடன் என்று செந்தமிழ் அகராதியும்), சோதிடம் என்று சங்க இலக்கியப் பொருட்களஞ்சியமும் பொருள் தருகின்றன (இரா.சாரங்கபாணி, 1986:95)*
*தவிர, தமிழ் இலக்கியங்களான பெருங்காப்பியங்கள், சிறுகாப்பியங்கள், இலக்கண நூல்கள், பக்தி இலக்கியங்கள், புராணங்கள் சோதிடரைக் குறிக்கக் 'கணி' என்ற சொல்லையே பரவலாகக் கையாண்டுள்ளன (தி.மகாலட்சுமி,1996:121). கணியன் பூங்குன்றனார் என்னும் புலவர் சங்ககாலச் சோதிடர்களில் ஒருவராகத் திகழ்ந்திருக்கின்றார் என்ற குறிப்பும் கிடைக்கப்பெறுகிறது(மேலது). இங்கு, கணியன் பூங்குன்றனார் என்னும் பெயரில் வரும் 'கணியன்' என்னும் சொல் அவர் ஒரு சோதிடர் என்பதனை உறுதிச்செய்கிறது.*

*சோதிடரைக் குறிக்கும் வகையில் 'பஞ்சவர்' என்ற சொல்லும் காப்பிய காலத்தில் நிலவி வந்திருக்கிறது. பன்னிரண்டு மாதமும் கோள்கள் நிற்கும் நிலையினை நன்கு கற்ற கணித நூல் வல்லுனர் அக்கணித நூலுக்குரிய திதி, வாரம், நாள், யோகம், கரணம் என்னும் ஐவகை உறுப்புகளின் இலக்கணங்களை அறிந்திருந்ததால் அவர்களைப் பஞ்சவர் என்று பண்டைத்தமிழர்கள் அழைத்து வந்துள்ளனர் (மேலது:130). மேலும், ஆட்சி, உச்சம், பகை, நீச்சம், சமம் என்ற ஐந்து நிலைகளையும் நுட்பமாய் அறிந்து கூறுவதாலும் இவர்களைப் பஞ்சவர் என்றும் கூறுவதுண்டு (மேலது).*

*இதுவன்றி, கோளர், குறிக்கோளாளர், காலக் கணிதர், அந்தணர், நிமித்தகர், நாழிகைக் கணக்கர் என்று இன்னும் பல பெயர்களாலும் சோதிடர்கள் குறிப்பிடப்படுகின்றனர் என்பது நமது இலக்கியங்கள் வழி அறியப்படும் செய்திகளாகும் (இரா.சாரங்கபாணி, 1986:81) அக்காலத்தில் சோதிடர்கள் மக்களிடையே நன்மதிப்பையும் முக்கியத்துவத்தையும் பெற்றிருந்தனர் என்பதனை இது காட்டுகிறது.*

*ஆதியில், சோதிட ஆசிரியர்கள் என்று எடுத்துக் கொண்டால் அவர்கள் சித்தர்களும் ரிஷிமார்களுமே ஆவர். மொத்தம் 18 சித்தர்கள் இந்துக்களின் சோதிட ஆசிரியர்களாக இருந்திருக்கின்றனர். இவர்களே சோதிடவியலுக்கு முதல் நூல் இயற்றினர். இவர்கள் இயற்றிய மொத்தச் சுலோகங்கள் நான்கு இலட்சத்து ஐம்பதினாயிரம் என்று 'சாதக அலங்கார'த்தின் பாயிரம் குறிப்பி றது (தி.மகாலட்சுமி & கோவி.சிவபாலன்(பதிப்.). 2016:56). சி.சி. இராசன், துருவன், சயமுனி, கர்க்கர், வியாசர், சத்தியாச்சாரியார், மணித்தர் ஆகியவர்களால் சோதிட மரபு வந்தது என்று குறிப்பிடுகின்றார் (வாழ்வியல் களஞ்சியம்-தொகுதி 9,1988:642).*

*சித்தர்களும் ரிஷிமார்களும் கடவுளின் அருளாலும், தங்களின் தவ வலிமையாலும் முக்காலமும் உணர்ந்தவர்களாக விளங்கினர். அவர்களே மக்களின் நல்வாழ்வுகளுக்காகச் சோதிடத்தைக் கணித்துக் குறித்து வைத்திருந்தனர். இவ்வாறு இவர்கள் சோதிடத்தைப் பற்றி எழுதி வைத்திருந்த குறிப்புகள்தான் பிற்காலத்தில் பல சோதிடர்களும் சோதிட நூல்களும் உருவாகுவதற்குக் காரணமாக இருந்திருக்கின்றன. இத்தகைய சிறப்புக்குரிய பணியை ஏற்று சோதிட சாத்திரத்தை வகுத்து நடத்தியவர்கள், சுவாயம்புமனு, சுவாரோசிஷன்மனு, உத்தமன்மனு, தாமசமனு, ரைவதன்மனு, சாசுஷன்மனு, வைவசுதனமனு, சாவர்ணிமனு, தஷசாவர்ணிமனு, பிர்ம்மசாவர்ணிமனு, தர்மசாவர்ணிமனு, ருத்திரசாவர்ணிமனு, ரவுச்யன்மனு, பவுத்யன்மனு முதலான பதினான்கு மனுக்கள் ஆவர் என்று குறிப்புகள் காட்டுகின்றன (தி.மகாலட்சுமி,1996:10-11).*

*சோதிட ஆசிரியர்களில் வராஹமிஹிராசாரியார் மிகவும் முக்கியமானவர். இவர் சித்தர்கள், ரிஷிகள் இயற்றிய நூல்களை அடிப்படையாகக் கொண்டு பல நூல்களை இயற்றியுள்ளார் (வாழ்வியல் களஞ்சியம் - தொகுதி 9, 1988:642). இவரே சோதிட ஆசிரியர்களுக்கெல்லாம் முன்னோடியாகத் திகழ்கின்றார். வராஹமிஹிராசாரியார் வான ஆராய்ச்சியிலும் சோதிடத்திலும் சிறந்தவர் ஆவார். அவர் குப்தப் பேரரசர்களின் ஆட்சிக்காலத்தில் கி.பி.4 அல்லது 5-ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்தவராகக் கருதப்படுகிறார் (லேனா தமிழ்வாணன், 1990:12). இவர் இயற்றிய நூல்கள், பிருஹத்ஜாதகம், பிருஹத்சமிதா, பிருகத் யாத்திரை, பஞ்ச சித்தாந்தம், லகு ஜாதகம், பிருஹத் விவாக படலம் போன்றவை ஆகும். இவர், தமது 'பிருஹத்சமிதா'யில் வேறு தேசத்தாரால் மேஷம் முதல் மீனம் வரையுள்ள பன்னிரண்டு இராசிகட்கு இடப்பட்ட பெயரைத் தாமும் ஏற்றுக்கொள்வதாகக் கூறியுள்ளார் (வாழ்வியல் களஞ்சியம்-தொகுதி 9, 1988:642). இக்கூற்றானது, வராஹமிஹிராசாரியாரின் காலத்திற்கு முன்னே பல சோதிட நூல்கள் பிற நாட்டிலும் இருந்திருக்கின்றன என்பதனை உறுதிப்படுத்துகின்றது. வராஹமிஹிராசாரியாரின் நூல்களுக்கு ஸ்ரீபதிபட்டாச்சாரியார் என்பவர் விளக்கவுரை எழுத்தியுள்ளார். இது, 'சிரிபதி பத்ததி' (Sripathy System) எனப்படும் (ரிஷபானந்தர், 1999:13). இந்து தெய்வப்பெயர்களும் வருணப் பகுப்புகளும் சிரிபதி முறையில் சேர்க்கப் பெற்றுள்ளமையால், 'இந்து முறைச் சோதிடம்' என்றும் இந்நூலுக்குப் பெயரிடப் பெற்றுள்ளது(வாழ்வியல் களஞ்சியம்-தொகுதி 9, 1988:642).*

இவரைத் தவிர, பாஸ்கராச்சார்யா, ஆரியபட்டர் போன்ற வான ஆராய்ச்சி நிபுணர்களும் சோதிடவியல் வளர்ச்சிக்கு வழிவகுத்துள்ளனர். பூமி உருண்டை வடிவானது என்பதையும், அது தன்னைத்தான் சுற்றிக்கொண்டு சூரியனைச் சுற்றி வருவதையும் பல ஆராய்ச்சிகளின் மூலம் இவர்கள் உறுதிப்படுத்தி உள்ளனர்.
குப்த பேரரசு காலத்தில் வாழ்ந்ததாகக் கூறப்படும் ஆரியபட்டர், வான சாஸ்திர ஆராய்ச்சியில் ஈடுபட்டு, கோள்களின் நிலைகளைக் கண்டறிந்து, உலகத்திலேயே முதன் முதலில், 'பஞ்சாங்கம் போடும்' முறையைக் கண்டறிந்து, முதல் பஞ்சாங்கத்தை அவர் வெளியிட்டார் (லேனா தமிழ்வாணன்,1990:12). வான சாஸ்திரம், பஞ்சாங்கம் போன்ற துறைகளுக்கு ஆரியபட்டர் ஒரு வழிகாட்டியாக இருந்ததனால் தான் இந்தியா பறக்கவிட்ட முதன் முதல் விண்வெளிக் கப்பலுக்கு ஆரியபட்டர் என்ற பெயர் சூட்டப்பட்டது. இவருடைய காலம் கொப்பர்னிகஸ் (Coppernicus-15th century) என்ற வானியல் நிபுணரின் காலத்திற்கு ஓராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் என்ற கருத்தும் காணப்படுகிறது(B.V.Raman,1992:244). அவருடன் கூட்டாகச் சேர்ந்து செயல்புரிந்தவர் வராஹமிஹிராச்சாரியார் என்று சொல்லப்படுகிறது (மு.மாதேஸ்வரன், 1997:15).

'சாராவளி' என்ற மற்றொரு சோதிட சாஸ்திர மூலகிரந்தத்தை வட மொழியில் எழுதி வெளியிட்டவர் கல்யாணவர்மா ஆவார். கல்யாணவர்மா, கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராக இருக்க வேண்டும் என்று கூறுகின்றனர்(மேலது:13). பிரம்ம குப்தா மற்றும் பாஸ்கரா போன்ற வானாராய்ச்சியாளர்களும் வானவியல் நூல்களை எழுதியுள்ளனர் (தி.மகாலட்சுமி,1996,:16). வராஹமிஹிராசாரியார், ஆரியபட்டர் போன்றவர்களின் காலத்திற்கு முன்னமே கூட பல சோதிட நூல்கள் வெளியாகியுள்ளன என்பதனை ஒரு குறிப்பு காட்டுகிறது. அதாவது, பராசர முனிவர் என்பவர் சோதிடக்கலைக்குச் சீரிய வடிவம் கொடுத்து 'பராசர ஹோரா' என்ற நூலை இயற்றினார் என்றும், இவரது காலம் 6000 ஆண்டுகளுக்கு முன்பு என்றும் குறிப்புகள் கூறுகின்றன (மேலது). மேலும், ஒரு குறிப்பு உஜ்ஜயினியை ஆண்ட விக்ரமாதித்த மாமன்னரின் அரசவையில் உள்ள காளிதாச மகாகவி, 'கலாமிர்தம்', 'சோதிட விதபரணா' போன்ற நூல்களை இயற்றினார்என்று குறிப்பிடுகிறது (S.P.சுப்பிரமணியன்,1998:269). அவரது காலம் கி.மு. 128 என்று கூறப்படுகிறது.

விக்கிரமாதித்தனின் காலக்கட்டத்தில் பல இந்தியச் சோதிடர்கள் பஞ்சாங்கம் கணித்தனர் என்பது தெரிகிறது. மயன், மணித்தர், சத்யாச்சாரி ஆகியோர் முதல் பதினெட்டு நூல் ஆசிரியர் உருவாக்கித் தந்த நூல்களின் அடிப்படையில் சோதிடக் கலையைப் பற்றி எழுதினர். ஆனால், இந்நூல்கள் இன்று கிடைக்கவில்லை (வாழ்வியல் களஞ்சியம்-தொகுதி 9,1988:642). இவர்களுக்குப் பின் வந்தவர்களே சோதிடக் கலையின் முன்னோடிகளாக இன்று போற்றப்பட்டு வரும் வராஹமிஹிராசாரியார், பட்டோத்பவர், வெங்கடேசர் போன்றவர்கள். இருப்பினும், இந்தியர்களின் முதல் சோதிட நூல்கள் எது; முதல் பஞ்சாங்கம் எது என்ற குறிப்பு தெளிவுப்படுத்தப்படவில்லை. ஆதியில் சோதிட நூல்கள் வடமொழியிலேயே இயற்றப்பட்டன. வடமொழியிலுள்ள சோதிடமூல நூல்களையும், வழி நூல்களையும், விரிவுரை நூல்களையும் மூல நூல்களாகக் கொண்டு தமிழில் பல சோதிட நூல்கள் இயற்றப்பட்டுள்ளன. இதனை அந்த நூல்களின் பாயிரத்தாலும், வடமொழிக் கலைச் சொற்களாலும் அறியலாம்.

கீரனூர் நடராஜன் என்பவர் தமிழில் சோதிட நூல்கள் இயற்ற காரணமாக இருந்தவர் எனலாம். கீரனூர் நடராஜன் கி.பி. 1725-ஆம் ஆண்டுக்கு முன்பு வடமொழியிலுள்ள 'ஹோராசாரம்', 'சாராவளி', 'பராசாரியம்', 'சந்தான தீபம்', 'பிருகத் சாதகம்', 'சருவார்த்த சிந்தாமணி', 'மணிகண்ட கேரளம்', 'சம்புநாதம்' போன்ற பல கிரந்தங்களின் உட்பொருளைத் திரட்டி 'சாதக அலங்காரம்' என்ற பெயரில் விருத்தங்கள் என்னும் செய்யுள் வடிவில் வெளியிட்டுள்ளார். அவர் இயற்றிய இந்நூலுக்கு, கோவை மாவட்டம் அனுப்பப் பாளையம் திரு.ஆ.சி.ரா.முருகைய சோதிடர் அவர்கள் விரிவுரை எழுதி 'சாதகலங்காரம்' என்ற பெயரிலேயே கி.பி.1900-ஆம் ஆண்டில் வெளியிட்டார். அது தான் தற்சமயம் தமிழ் மொழியிலுள்ள சோதிட நூல்களுக்கு எல்லாம் சிகரமாகத் திகழ்கிறது (மு.மாதேஸ்வரன், 1997:170). தமிழ்ச் சோதிட நூல்களில் தலை சிறந்த நூல் 'சாதக அலங்காரம்' எனலாம்.
இதைத்தவிரச் சாதக சிந்தாமணி, குமாரசுவாமியம், நாரதர் சோதிடம், கார்க்கேயர் சோதிடம், மாணிக்கக் கணித சோதிட முருகசேகரம், நந்தி வாக்கியம், வராகர் ஓராசாத்திரம், பூர்வப் பராசரியம், அகத்தியர் காண்டம் போன்ற நூல்கள் தமிழில் குறிப்பிடத்தக்கவை.

ஆக, சோதிடக்கலையில் பல ஆசிரியர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்னமே தோன்றி வாழ்ந்திருக்கிறார்கள் என்பது தெரிய வருகிறது. இன்றைய காலத்திலும் சோதிடக்கலையில் பலர் ஈடுபட்டுவருகின்றனர். ஆயினும் இவர்களது ஈடுபாடு பெரும்பாலும் பொருளாதாரத் தேவையைச் சார்ந்ததாகவே உள்ளது. இவர்கள் தொழில்முறைச் சோதிடர்களாகவும், பகுதி நேரச் சோதிடர்களாகவும் உள்ளனர். இவர்கள் அவ்வப்போது தங்களது அனுபவங்களை உள்ளடக்கியும், மூலசோதிட நூல்களிலுள்ள சில கூறுகளை எளிமைபடுத்தியும் சிறு சிறு நூல்களாக வெளியிட்டு வருகின்றனர்.

**முடிவுரை**

இதுகாறும் மேற்காணும் கட்டுரையின் வாயிலாக இந்திய சோதிடம் பற்றி பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்பட்டன. அவற்றையெல்லாம் கோர்வையாக்கி ஆய்வுக்கு உட்படுத்தியதில் சில கருத்து முடிபுகள் கிடைக்கின்றன. சோதிட நம்பிக்கை உலக மக்களுக்குப் பொதுவானதென்பதும், அவர்களிடம் தோன்றிய விண்ணியல் ஆராய்ச்சி அறிவே சோதிடக்கலையாக முகிழ்த்ததென்பதும், பின்னாளில் அதுவே சோதிட நம்பிக்கையாக மலர்ந்ததென்பதும் தெரிய வருகின்றது. இந்தியர்களின் சோதிட நம்பிக்கை காலத்தால் முந்தையது என்பதும், வடவர்களுக்கும் தமிழர்களுக்கும் தனித்த சோதிடப் பாரம்பரியம் இருப்பதுவும், அவர்கள் ஆக்கியுள்ள சோதிட நூல்களே இதற்குச் சான்று பகர்வதாக இருப்பதுவும் அறியப்படுகின்றது. பிற நாடுகளுக்கு இல்லாத பலமாக இந்தியர்களுக்கு அமைந்துள்ள சோதிட இலக்கியங்கள் விளங்குவதும், இந்தியர்களின் சோதிடம் கருமவினைக் கோட்பாட்டின் அடிப்படையில் ஏனைய சோதிடங்களிலிருந்தும் மாறுபட்டிருப்பதும், இறைவன், இயற்கை, மனிதன், வினைப்பயன் ஆகியவற்றின் கூட்டிசைவை எடுத்துச் சொல்லும் முறைமையில் இந்திய சோதிடம் தனித்தன்மையுடன் திகழ்வதும் இந்தக் கட்டுரையின் திரண்ட கருத்து முடிபாக அமைகின்றன.

**மேற்கோள் நூற்பட்டியல்**

*கலைக்களஞ்சியம்-தொகுதி 5* (1958). சென்னை: தமிழ் வளர்ச்சிக் கழகம்.
கணேசன், பி.சி. 2001. *ஜோதிடம்-ஒரு விஞ்ஞானக் கலையா?* சென்னை: சுரா புக்ஸ் (பிரைவேட்) லிமிடெட்.
சங்கர், வே. 2002. *ஜோதிஷ் ஞானம்.* புதுச்சேரி: நன்மொழிப் பதிப்பகம்.
சரஸ்வதி, கே.என். 1994 *ஜோதிட அநுபவ ஆராய்ச்சிக் கட்டுரைகள்.* சென்னை: கடலங்குடி பப்ளிகேஷன்.

சாமிநாதையர், உ.வே. 1957. *பதிற்றுப்பத்து மூலமும் பழைய உரையும்*. சென்னை: கபீர் அச்சுக்கூடம்.
சிங்காரவேலு முதலியார். 1881. *அபிதான சிந்தாமணி*. சென்னை: ஆசியன் எடுகேசனல் சர்வீசஸ்.
சிவதாசன் ரவி, சித்தயோகி. 2007. *நாடி ஜோதிட விளக்கங்கள்*. தம்மம்பட்டி: ஸ்ரீ ஆரோமிரா பிரசுரம்.
சாரங்கபாணி, இரா. 1986. *சங்க இலக்கியப் பொருட் களஞ்சியம்* (தொகுதி 2). தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம்.
சுப்பிரமணியன், S.P. 1998. *ஜோதிடக் கலைக்களஞ்சியம்*. சென்னை: நர்மதா பதிப்பகம்.
சுப்ரமணியன், S.P. 1998. *நீங்களும் ஜோதிடம் கற்கலாம்*. சென்னை: ஸ்ரீ சங்கீத வாணி.
புலியூர் பாலு. 1997. *50 ஜோதிட ஆராய்ச்சி கட்டுரைகளின் தொகுப்பு*. சென்னை:பாரதி பதிப்பகம்.
மகாலட்சுமி,தி. 1996. *இலக்கியத்தில் சோதிடம்*.சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
மகாலட்சுமி,தி. 1996. *சோதிடவியல்*. சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
மகாலட்சுமி, தி.& கோவி.சிவபாலன்(பதிப்.). 2015. *அனைத்துலக வானியல் மற்றும் சோதிட மாநாட்டுக் கருத்தரங்கக் கட்டுரைகள்*. சென்னை:தமிழ்ப்பண்பாட்டுப் பதிப்பகம்.
மகாலட்சுமி, தி. & கோவி.சிவபாலன் (பதிப்.). 2016. *காலக்கணித ஆய்வு* - மலேசியாவில் நடைபெற்ற சோதிடவியல் இரண்டாம் மாநாட்டுக் கட்டுரைகள். சென்னை: தமிழ்ப்பண்பாட்டுப் பதிப்பகம்.
மாதேஸ்வரன்,மு. 1997. *சோதிட ஆராய்ச்சித் திரட்டு* (பாகம்-2). கோயமுத்தூர்: விஜயா பதிப்பகம்.
*நடேச சாஸ்திரிகள்*, கடலங்குடி. 1998. பிருஹத் ஜாதகம். சென்னை: கடலங்குடி பப்ளிகேஷன்ஸ்.
ராமய்யங்கார். 2000. *குடும்ப ஜோதிடம்*. சென்னை: பாரதி பதிப்பகம்.
ரிஷபானந்தர். 1999. *போகம் தரும் எண் கணித சாஸ்திரம்*. சென்னை: அநுராகம் பதிப்பகம்.
லேனா தமிழ்வாணன் (பதிப்பாசிரியர்). 1990. *கிரகங்கள் பேசுகின்றன*. சென்னை: மணிமேகலைப் பிரசுரம்.
*வாழ்வியல் களஞ்சியம்-தொகுதி 9*.1988. தஞ்சாவூர்: தமிழ்ப்பல்கலைக்கழகம்.

*Britannica Concise Encyclopedia* – Tamil Edition (Vol.3). 2007. New Delhi: KM Thomas Pvt. Ltd.
Raman, B.V. 1992. *Hindu Astrology and the West*. New Delhi: UBS publishers Distributors.
Sivachandralingam Sundara Raja. 1999. *Tamadun Dunia*. Shah Alam: Penerbitan Fajar Bakti.
*Tamil Lexicon Vol III*. 1982. Madras: Macmillan India Press.

# மரபுவழி அடையாளமும் வாழும் நாட்டின் அடையாளமும்
# எழுத்தாளர் கே. எஸ். மணியம் படைப்புகளில் அடையாளத் தேடல்கள்

*விஜயலட்சுமி*
*இந்திய ஆய்வியல் துறை, மலாயாப் பல்கலைக்கழகம்.*
viijay@um.edu.my

**ஆய்வு சுருக்கம்**

*எழுத்தாளர் கே.எஸ். மணியத்தின் ஆங்கில மொழி சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள் அனைத்து வகை இலக்கியப் பிரதிகளும் மலாயா/மலேசியாவின் புலம்பெயர் சமூகம் இதுவரை கடந்துவந்திருக்கும் பாதையையும் இனி செல்ல வேண்டிய இலக்கையும் அதற்கான வழிகளையும் மீளாய்வு செய்பவை. ஒவ்வொரு சமூக உறுப்பினரும் தனது மரபுவழி அடையாளங்களையும் வாழும் நாட்டின் அடையாளங்களையும் ஒருங்கே அணைத்துக் கொள்வதன்வழி பன்முகத் தன்மைகொண்ட ஒன்றைச் சமூகமாக உருவெடுக்க முடியும் எனும் பெரும் எதிர்பார்ப்பை கே.எஸ். மணியத்தின் படைப்புகள் முன்வைக்கின்றன. இதுவரையில் இவரது படைப்புக்கு கிடைத்த மிக உயரிய அங்கிகாரம் ராஜா ராவ் விருது ஆகும். இதைத் தவிர அவருடைய 'The Return' நாவலும் இதர சில சிறுகதைகளும் இடைநிலைப் பள்ளிகளில் ஆங்கில இலக்கியப் பாட நூல்களாகப் பயன்படுத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். மலேசிய ஆங்கில இலக்கியச் சூழலில் முன்னோடியாகத் திகழும் கே.எஸ்.மணியத்தின் படைப்புகளில் வெளிப்படும் தனிமனித, சமூக அடையாளத் தேடல்கள்; அதை நோக்கிய பயணங்களின் சுவடுகளை அடையாளம் கண்டு விளக்க இக்கட்டுரை முனைந்துள்ளது.*

*கருச்சொற்கள்: கே.எஸ்.மணியம் சிறுகதைகள், கே.எஸ்.மணியம் நாவல்கள், மலேசிய ஒப்பீட்டு இலக்கியம், இந்தியர்களும் அடையாளமும்*

Abstract

Almost all literary works of K.S.Maniam, regardless to genre, i.e., short stories, Novels, and Dramas, have touched the live-circle of migrant community in Malaysia. His works have discussed the milieus facing the community and the solutions for better livelihood in the foreign land for the migrants. K.S.Maniam's literary works, in particular, projects ways in which the migrant community could receive in and accept the assimilation of the local cultural essences to form a true Malaysian-based cultural infusions. For his significant contributions, the author has been honoured with the honorary award of Rajah Rao, so far. Beyond this, his monumental work, 'The Return' novel and a few short-stories have been used as literary texts in the secondary schools, as well. Unfortunately, his works have received not much appreciation among the Indian community. This article is aimed at studying and highlighting the contributions of K.S.Maniam in promoting the sense of humanity and identity in the alienated setting among the migrant community.

Keywords: K.S.Maniam Short Stories, K.S.Maniam Novels, Malaysian Comparative Literature, Indian and Indentity

**முன்னுரை**

*"நான் யார்?", "எங்கிருந்து வந்தேன்?", "இனி நான் செல்லபோகும் இடம் எது?" போன்ற அடிப்படையான ஆனால் அர்த்தம் பொதிந்த இக்கேள்விகளே மனிதன் தன்னைக் குறித்த அடையாளத்தை நிர்மாணித்துக்கொள்ளவும் தான் யாரெனத் தெளிவாக மீட்டுணரவும் செய்கின்றன. இந்தக் கேள்விகளுக்குப் பதில் அளிக்கவும் சுய அடையாளத்தை உருவாக்கிக்கொள்ளவும் ஒருவர் இனம், மதம், தனது சமூக-பொருளாதார நிலை, அரசியல், அல்லது குறைந்தபட்சம் தன் குடும்ப வரலாற்றுப் பின்புலம் என பல்வேறு விடயங்களைக் கருத்தில்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. அகவயத் தேடலின்; அடைதலின் அத்தனை ஏக்கமும் ஆர்வமும் புறவயமான தேடலிலும் மனித மனங்களில் தேங்கி வழிந்தபடியேதான் இருக்கின்றன. வெறும் பொருள்சார் தேடலாக இல்லாமல் இதுவரை வாழ்ந்த தன் மூதாதையர்களின் இருத்தலை கேள்வி எழுப்புவதோடு தன் இருப்பையும் தடுமாற்றத்துடன் மீள்பார்வை செய்பவையாக இப்புறவயத் தேடல்கள் அமைகின்றன.*

*கே.எஸ். மணியத்தின் படைப்புகளில் அதிகமானவை இப்புறவயத் தேடல் சார்ந்தவையாகவும் அதனுள் ஏற்படும் சிக்கல்களைத் தொடர்ந்து வட்டமிட்டபடியேவும் இருக்கின்றன. அவரது காலத்தை ஒட்டிய சக படைப்பாளிகள் தோட்டப்புற வாழ்வியலையும், காலனித்துவ ஆட்சியின் கொடுங்கரங்களையும், தேசப்பற்றையும் தங்களது படைப்புகளாக்கிக் கொண்டிருக்கையில் மணியத்தின் சிறுகதைகள் அடையாள நெருக்கடி (identity crisis), பன்முக கலாச்சாரவாதம் (*multiculturalism*), பன்மை கலாச்சாரவாதம் (cultural pluralism) என சுய, சமூக, கலாச்சார, தேசிய அடையாள நிர்மாணிப்பை மேற்கொள்வதும் கட்டுடைப்பதுமாக இருப்பது அவரை இதர பின்-காலனித்துவக் காலப் படைப்பாளர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவதாக உள்ளது.*

*பின்-காலனித்துவப் படைப்பாளர்களில் மிக முக்கியமானவர்களாகக் கருதப்படும் சல்மான் ருஷ்டி (Salman Rushdie), ஜீன் ரைஸ் (*Jean Rys*) போன்றவர்களின் கதைகளிலும் இம்மாதிரியான மானுடத்தின் அடையாளத் தேடல்கள் தொடர்ந்து அழுத்தமாக நிறுவப்பட்டிருப்பது காலனித்துவம் மனிதனின் 'வாழ்தல்', 'இருத்தல்' ஆகிய இரண்டுக்குமிடையே விட்டுச்சென்ற மிகப்பெரும் அடையாள தொலைதலைக் காட்டுகிறது (*Hema*, 2011). ஐரோப்பிய*

ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு மனித இருப்பின் மீதான நுண்ணிய பார்வையை பல பின்-காலனித்துவ படைப்பாளர்களிடம் விட்டுச் சென்றுள்ளது. அந்த வரிசையில் கே.எஸ். மணியம் மலேசிய மண்ணுக்கு கூலித் தொழிலாளியாக வந்த ஒட்டுமொத்த தமிழர்களின் அடையாள நெருக்கடியின் சாட்சியாக நிற்கிறார்.

1916ஆம் ஆண்டு இந்திய துணைக்கண்டத்திலிருந்து ஒப்பந்தக் கூலிகளாக இந்நாட்டுக்கு புலம்பெயர்ந்த தமிழ் குடும்பத்தின், இரண்டாம் தலைமுறையைச் சேர்ந்தவர் கே.எஸ். மணியம். ஓரளவு வசதியான வாழ்வை ஏற்படுத்திக்கொள்ள, துணி சலவை செய்யும் தொழிலுடன் ரப்பர் மரம் சீவும் வேலையும் பார்த்துவந்த தந்தைக்கு எடுபிடியாகச் செல்லும் மணியம் சிறுவயதிலிருந்தே தோட்டப்புற வாழ்வையும் தோட்டத் தொழிலாளர்களையும் அறிந்திருந்தவர். அதுவரையில் இந்திய சமூகத்தினருடனே வாழ்ந்து கொண்டிருந்த மணியம் தொடக்கக் கல்வியைத் தமிழ்பள்ளியிலும், தொடர்ந்து ஆங்கிலவழி கல்வியைச் சுங்கைப்பட்டாணி இப்ராஹிம் ஆங்கிலப் பள்ளியிலும் தொடர்ந்தார். இங்கிருந்தே மணியத்தின் அடையாள நெருக்கடி, அடையாள மீட்டுணர்தலின் தேடல் தொடங்கியதாகப் புரிந்துகொள்ள முடிகின்றது. தமிழ்நாட்டிலிருந்து பிரத்தியேகமாகத் தருவிக்கப்படும் புத்தகங்களைப் பாடநூல்களாகக் கொண்டு தமிழ்நாட்டைச் சார்ந்த தமிழ்க் கல்வியையும் அதனூடே தமிழ் கலாச்சாரத்தையும் பற்றி அறியத் தொடங்கியத் தருணம் சற்றும் பரிட்சயம் இல்லாத ஆங்கிலவழிக் கல்வியும் காலனித்துவ கலாச்சாரமும் வழுக்கட்டாயமாக மணியத்தின் மூளைக்குள் புகுத்தப்பட்டது அக்காலப் பகுதியில்தான். இதனை மணியம் *'The Return'* எனும் தன்வரலாற்று நாவலில் ரவி எனும் கதாபாத்திரத்தின் வழியாகச் சொல்கிறார்.

> *"என்னதான் முருகேசு வாத்தியார் தன் வாழ்நாள் அனுபவங்களையும் பல தமிழ் நூல்களையும் பயன்படுத்தி இந்துப் பையன்களுக்குப் பாடம் போதித்தாலும், மிஸ் நான்சி மிகக் கெட்டிக்காரத்தனமாக வெறும் தேவதைக் கதைகளை வைத்தே இந்து மதத்தின், சமூகத்தின் நடைமுறைகளைக் கிண்டல் செய்து புறக்கணித்து விடுவார். மேலும், அவர் இச்சிறுவர்களின் பண்பாடு, கலாச்சாரத்திற்கு முற்றிலும் முரண்பட்ட நெறிகளை அறிமுகப்படுத்திக்கொண்டே இருப்பார்." (Maniam, 1993)*

என்பதாக அமையும் இந்நாவலின் பகுதி, சிறு வயது தொட்டே இப்படியான அடையாள மோதல்கள் அவருக்குள் நிகழ்ந்திருப்பதன் விளைவாகவும், சமூகத்தின் மீதான தொடர் அவதானிப்புகளும் தொடர்ந்து பன்மை கலாச்சாரவாதத்தின் மேலிருந்த ஈர்ப்பும்தான் 'நான் யார்?' என்கிற கேள்வியைக் கதைகளில் தொடர்ந்து அவரை கேட்க வைத்துக்கொண்டே இருந்துள்ளதாகக் காட்டுகிறது. அவரது கதைகள் காலனித்துவ ஆட்சிகால அல்லது அதற்குப் பின்பான காலவெளியில் வாழ்ந்த (புலம்பெயர்) சமூகத்தைக் காட்டுபவையாக மட்டும் இல்லாமல் இக்காலத்திற்கும் பொருந்தி நிற்பவையாக இருக்கின்றன.

**மலேசியாவின் வந்தேறிகள்**

கே.எஸ்.மணியத்தின் படைப்புகள் குறித்து அதிக அளவில் புலம்பெயர்வு தொடர்பான ஆய்வுகளே *(Diaspora studies)* மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. அவரது படைப்பின் நோக்கமும் அதுவாகவே இருந்துள்ளது. இவற்றோடு மேலும், அவருடைய கதைகளில் மிக நுட்பமாக விவாதிக்கப்பட்டுள்ள தனிமனித, சமூக விழுமியங்களும் அவரது கதைகளை உயர்த்திப்பிடித்து நிற்கின்றன.

கே.எஸ். மணியத்தின் (1994) கருத்துப்படி 'புலப்பெயர்வை வெறுமனே ஒரு நாட்டைவிட்டு மற்றொரு நாட்டுக்குச் செல்லும் சாதாரணச் செயல்பாடாகப் பார்த்துவிட முடியாது. இதுவரை தான் வாழ்ந்திருந்த, தன்னோடு ஒன்றிவிட்ட குடும்பம், உறவுகள், பழகிப்போன சமூகச் சூழல், பண்பாடு என அனைத்திலிருந்தும் உணர்வுரீதியாக பெயர்த்தெடுத்து வேறொன்றோடு இணைத்துவிடும் தன்மை கொண்டாத புலப்பெயர்வு அமைகின்றது. ஒருவரது புலப்பெயர்வு அவரை மட்டுமல்லாமல் அவரின் தொடர் வம்சாவளியையே இந்த அடையாள நிர்மானிப்பைச் செய்ய நிர்பந்திக்கக் கூடியவையாக இருக்கின்றது'.

இக்கூற்றை *'Arriving'* மற்றும் *'Haunting the Tiger'* ஆகிய கதைகளில் இருவேறு கோணங்களில் காண முடிகின்றது. *'Arriving'* கதையில், இந்தியாவைத் தனது தாய்நாடாகவும் அதையே தனது அடையாளமாகவும் காட்டிக்கொண்டிருக்கும் தனது தந்தையின் குரலை முற்றிலும் நிராகரித்துவிடும் கிருஷ்ணன் மலேசியாவையே தனது நாடாக உறுதியுடன் நம்புபவராக இருக்கின்றார். கூலித் தொழிலாளியாக வந்த தனது தந்தையின் பயண அனுபவங்கள், நினைவுகள், தாய்நாட்டைப் பற்றிய ஏக்கங்கள் என எதுவுமே தன்னைத் துளியும் பாதிக்காத வண்ணம் தன் இருப்பை நிலைநிறுத்திக் கொள்கிறார். கிருஷ்ணன் பிறந்தது முதல் வளர்ந்தது, படித்தது, வேலை செய்தது, திருமணம் செய்தது, குழந்தைகள் ஈன்றது, சொத்துகள் வாங்கிச் சேர்த்தது, பணி ஓய்வு பெற்றது என அனைத்தும் தன்னுடைய வீடாக (home) நினைக்கும் மலேசியாவில்தான். திவாலாகிவிடும் அபாயத்தையும் சரிகட்டி வாங்கிய வீட்டைத் தவிர்த்து அவர் மலேசியாவைச் சரீரம் தொட்டு ஆன்மா வரை ஊடிருவி நிற்கும் வீடாகவே எண்ணி வாழும் 'அப்பாவி'யாக இருக்கின்றார். இதற்கிடையில் வரும் மாட் (Mat), கிருஷ்ணனைத் திட்ட வந்தேறி (pendatang) என்ற சொல்லை வசைமொழியாகப் பயன்படுத்துகிறான். அந்தச் சொல்லுக்குள் சிக்கிக்கொள்ளும் கிருஷ்ணன் பிறகு எப்படிக் குழம்பி, மனம்நொந்து இறுதியில் அதிலிருந்து விடுதலை பெறுகிறான் என்பதாகக் கதை முடிகிறது.

இக்கதையின் நாயகனான கிருஷ்ணன் மலேசியாவிலேயே பிறந்து முக்கால்வாசி வாழ்வையும் கடந்துவிட்டவர். ஆனால், இந்நாட்டின் மண்ணின் மைந்தனாக (Son of the soil) கருத்தப்படும் மலாய்க்காரர் ஒருவர் அவரை அந்நாட்டில் 'வந்தேறி' என்று பழிப்பது மிகப்பெரும் அடையாள நெருக்கடியை அவருக்குள் விட்டுச் செல்கிறது. 'What did it mean, pendatang? Arrivals? Illegals?' என்கிற குழப்பத்தை அவருக்குள் ஏற்படுத்திவிடுகின்றது. இக்கதை எழுதப்பட்டு பத்தாண்டுகளுக்கு மேலாகிய பின்பும் 2008ஆம் ஆண்டில் இப்படியானதொரு சாடலை இந்நாட்டின் ஆளுங்கட்சித் தலைவர் ஒருவர் தேர்தல் பிரச்சாரத்தின்போது முன்வைத்ததால் பெரும்சர்ச்சைகள் ஏற்பட்டதும், அதன் நீட்சியாக இச்செய்தியை நாளிதழில் பதிவிட்ட சீனப் பத்திரிக்கை நிருபர் உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின் (ISA) கீழ் கைதுசெய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும் (Shantini & Ganakumaran, 2009). இக்கதையில் வரும் கிருஷ்ணனின் தந்தைக்கு 'என் தாய்நாடு' என்று சொல்லிக் கொள்ளும் 'home land' என்ற ஒன்று இருப்பதும் கிருஷ்ணனைப் போன்ற புலம்பெயர்ந்தவர்களின் சந்ததியினருக்கு 'At home and yet not home!' எனும் நிர்க்கதியான உணர்வே எஞ்சி நிற்பதையும்

*மிக நுட்பமாகச் சொல்லும் இக்கதையை இப்போதல்ல இன்னும் ஐம்பது ஆண்டுகள் கழித்து வாசித்தாலும்கூட நூதனமான உணர்வைக் கொடுப்பது உறுதி.*

*மணியத்தினுடைய கதைகளில் வரும் கதாபாத்திரங்கள் இந்நாட்டில் வாழும் சமூகங்களையும் அவர்களின் பலதரப்பட்ட இயல்புகளையும் நடுநிலையோடு முன்வைப்பதாக இருக்கின்றன. அப்பாத்திரங்களின் வாயிலாக மலேசியாவின் நுண்அரசியலையும் மணியம் மிக அழுத்தமாகவே பல கதைகளில் பதிவுசெய்துள்ளார். 'Arriving' சிறுகதையில் மாட் (Mat) எனும் கதாபாத்திரம் ஓரிரு இடங்களில் மட்டுமே வந்தாலும் அவனது பாத்திரப் படைப்பு 'Dynamic' தன்மையுடையதாக கதை முழுவதும் ஆக்கிரமிப்புச் செய்து நகர்த்துவதாக உள்ளது. மேலாதிக்க சமூகம் சிறுபான்மையினரை தங்களுக்குள் ஒருவராக சேர்த்துக் கொள்ளாமல் மேட்டிமை குணத்தோடு புறக்கணிக்கிறது என்பதை நிறுவ 'dynamic character' வகைசார்ந்த இப்பாத்திரப் படைப்பு வலுவாக அமைக்கப்பட்டுள்ளது. மறுநிலையில், 'The Third Child' எனும் சிறுகதையில் பல இடங்களில் தோன்றி மறையும் மாட் (Mat)எனும் கதாபாத்திரம் கதைக்கு பெரிதும் முக்கியத்துவமற்ற, பணிந்து போகின்ற வகையில் 'static character' வகை சார்ந்தும் வேலு மற்றும் வசந்தி ஆகிய கதாபாத்திரங்களை மாட் மீது அதிகாரம் செலுத்தும்படியாகவும் அமைத்துள்ளார். இவ்விடம், மணியம் இந்நாட்டில் வாழும் மேலாதிக்க சமூகம் மற்றும் சிறுபான்மை/புலம்பெயர் சமூகத்திற்கும் இடையில் நிகழ்ந்து கொண்டிருக்கும் சமூக இயக்கவியலை (social dynamic) கதாபாத்திர அமைப்புகளின்வழி பதிவு செய்திருப்பதைக் காண முடிகின்றது. மேலும் இக்கதையில் வரும் 'ரிச்சர்ட்' சீன சமூகத்தினரையும், 'மைடின்' இந்தியச் முஸ்லிம் சமூகத்தினரையும் பிரதிநிதிப்பவர்களாகவும் அவர்களுக்கிடையில் ஏற்படும் அணுக்கமான உறவும் புரிந்துணர்வும் ஒருவரது தனிப்பட்ட, சமூக அடையாளத் தேடலுக்கு மத்தியில் 'மலேசியர்கள்' எனும் தேசிய அடையாள உருவாக்கத்தின் தேவையை முன்னிறுத்துவதாகப் புரிந்துகொள்ள முடிகிறது.*

***தேசிய அடையாள உருவாக்கம்***

*மேலும், ஒரு குறிப்பிட்ட இனக் குழுவை மண்ணின் மைந்தர்களாக பாவிக்கும் மலேசியா போன்ற நாட்டில் தேசிய அடையாளம் எவ்வாறு சாத்தியப்படும் என்ற கேள்வியையும் அதனுள் சிலந்தி வலையாகப் பின்னியிருக்கும் சிக்கல்களையும் மணியத்தின் இதர பல கதைகள் சுட்டிக் காட்டத் தவறவில்லை. இம்மண்ணிலேயே பிறந்து, வளர்ந்து, இந்நாட்டின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் உழைத்துக்கொண்டிருக்கும் இந்திய, சீன சமூகத்தினரின் மனதில் எழும் மிக அடிப்படையான கேள்வி வந்தேறிகள் (pendatang) அல்லது அதற்கு ஈடான இதர அடையாளங்களே தங்களுக்கு மிஞ்சுமா?' என்பதாகும். அடிப்படையில் இந்திய, சீன சமூகத்தினரை போலவே மலாய் இனத்தவர்களும் சில நூற்றாண்டுகளுக்கு முன்பு தங்களது பொருளாதாரத் தேவைக்காக இந்நாட்டிற்கு வந்ததது மலேசிய சரித்திரத்தில் தெரிந்தே நழுவவிடப்பட்ட உண்மையாகும். அவர்களின் பூர்வீகம் சுமத்ரா மற்றும் ஜாவா என்பதாக பல வரலாற்றாசிரியர்களும் ஆதாரம் காட்டுகின்றனர். 'Pendatang' எனும் சொல் வேறொரு நாட்டைப் பூர்வீகமாக கொண்டிருப்பவர்களைக் குறிக்குமெனில் இச்சமூகமும் அதற்குள் அடங்கும் (The Nut Graph, 2010). நிலைமை இப்படியிருக்க, மலேசிய அரசியலமைப்புச் சட்டம் Article 153 மிகத் தெளிவாக மலாய் சமூகத்தினரை இம்மண்ணின் மைந்தர்களாக அங்கீகரித்து அவர்களின் உரிமைகளை மட்டும் பாதுகாப்பதாக இருக்கிறது (Andrew, 2012).*

*சர்ச்சைக்குரியதாகக் கருதப்படும் இவ்விடயம் மணியத்தின் 'Arriving' கதையில் மிகப் பூடகமாகச் சொல்லப்படிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்நாட்டைத் தனது தாய்நாடாக கருதும் ஒருவன் வந்தேறி என ஒதுக்கப்படுவதால் அவன் தொடர்ந்து தனக்கான அடையாளத்தை மட்டும் கட்டமைக்கவும் தக்கவைத்துக்கொள்ளவும் முற்படுவான் என்பதை இக்கதையின் முடிவிலிருந்து அறிய முடிகின்றது. அதேவேளை 'Haunting the Tiger' கதை, புலம்பெயர் சமூகமாக வாழ்பவர்களுக்கு தங்களது அடையாளத் தேடலுக்குரிய நுட்பமான அணுகுமுறையைச் சொல்வதாக அமைகின்றது.*

*மரண நாட்களை எண்ணிக்கொண்டிருக்கும் கிழவனின் எண்ணவோட்டங்களாகவும் மன அலைக்கழிப்புகளாகவும் தொடங்கும் இக்கதை சுல்கிப்லி (Zulkifli) மற்றும் முத்து ஆகிய இருவரின் வனவேட்டை அனுபவங்களைச் சொல்வதாக உருவக (Metaphor) பாணியிலேயே நகர்கிறது. தொடக்கத்தில் காட்டுப்பன்றி வேட்டைக்குத் தனியாகச் செல்லும் முத்து, பிறகு சுல்கிப்லியுடன் சேர்ந்து புலி வேட்டைக்குச் செல்கிறான். வேட்டையின்போது அவர்களுக்கிடையில் நடைபெறும் உரையாடல்கள் culture assimilation மற்றும் cultural immersion ஆகிய இருபெரும் விடயங்களை எளிமையான மொழியில் உணர்த்திக்கொண்டே தேசிய அடையாள உருவாக்கத்தின் சாத்தியங்களை வாசக மனங்களுக்குப் புரிய வைக்கின்றது. தேசிய அடையாளத்தை உருவாக்குவதில் இரண்டே வழிகள் இருப்பதை மணியம் மிகத் திடமாக நம்புகிறார் (Maniam, 1994). ஒன்று, முன்பின் அறியாத ஒரு அடையாளத்துடன் முழுவதுமாக ஒன்றிவிடுவது; மற்றொன்று சுய அடையாளத்திலிருந்து கொண்டே மற்றதையும் ஏற்றுக்கொள்வது. இக்கதையில் வரும் ஒரு பகுதியில் மணியம் பூடகமாக ஆனால் மிகத் தெளிவாக இதனைச் சொல்லிக் கடக்கிறார்.*

*"இதில் என்ன சிக்கலென்று எனக்குத் தெரிந்துவிட்டது. ஏதோ ஓர் அந்நிய வாடையை புலி கண்டுகொண்டது. அந்த வாடை போகும் வரை புலி வெளியே வராது," என சுல்கிப்லி கூற முத்து மிகுந்த பதற்றமடைகிறான்.*

*"என்ன வாடை?" எனக் கேட்கிறான்.*

*"மனதிலிருந்தும் உடலிலிருந்தும் வெளியாகும் வாடை. உன் உடை உன் எண்ணம் இதெல்லாம் எங்கிருந்து வந்தது? இப்படியிருந்துகொண்டு மனிதர்களை நெருங்குவதுபோல் நீ இதுனுடன் நெருங்க முடியாது. உன் மனமும் உடையும் புலி வாழும் இடத்திற்கு ஒத்திருக்க வேண்டும்".*

*"ஏன் ஒத்திருக்க வேண்டும்? நான் என் தந்தையின் பிடியிலிருந்து உடைபட்டு வர வேண்டும். அதுபோதும்."*

*"பிறகெப்படி நீ புலியாகி அதை பிடிக்க முடியும்?"*

*"பச்சோந்தியை மனதில் நினைத்தவாறே "நான் மாறுவேன்," என்கிறான் முத்து.*

சில நூற்றாண்டுகளுக்கு முன்பு இம்மண்ணில் வந்த தனது மூதாதையர்கள் இந்நாட்டின் கலாச்சாரத்துடன் ஒன்றியவர்கள் எனும் அடிப்படையில் அதே உத்தியை முத்துவிற்கும் சுல்கிப்லி சொல்கிறான். புலியாக மாறுவது என்பதை இந்நாட்டின் பண்பாட்டு கலாச்சாரத்துடன் ஒன்றிவிடும் செயலாக நாம் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால், முத்து கடைசிவரை அவ்வாறு செய்யாமல் தன்னை பச்சோந்தியாகவே மற்றிக்கொள்ள முயற்சிக்கிறான் என்பதாகக் காட்டுவது அவன் தனது மரபுகளை தக்கவைத்துக் கொண்டு புதியதையும் ஏற்க முற்படுகிறான் என்பதாகப் புரிந்து கொள்ளலாம்.

முத்துவைப் போலவே பலர் தங்களது பண்பாடு, கலாச்சாரம், மரபுகள் என தங்களுக்கே உரிய அடையாளங்களுடன் தாங்கள் இந்நாட்டில் ஓர் அங்கமாக அறியப்பட்த் தொடர்ந்து முயற்சித்துக் கொண்டே இருப்பதை இன்றும் காண முடிகிறது. மூவின மக்களையும் ஒன்றுப்பட்ட ஒற்றைச் சமூகமாக மாற்ற இந்நாட்டு அரசாங்கம் மேற்கொண்ட *Wawasan 2020, Sekolah Wawasan, 1Malaysia* போன்ற பற்பல திட்டங்கள் இந்திய, சீன சமூகத்தினரிடையே பெரிய அளவில் ஆதரவைப் பெறாமல் போனதற்கும் இவ்வகை மரபுசார்ந்த அடையாளக் கட்டமைப்புகளும் ஆதிக்கச் சமூகத்தின் கெடுபிடிகளும் அடிப்படைக் காரணமாக இருப்பதை இவ்விடம் நினைவு கோரலாம்.

புலம்பெயர்ந்த சமூகத்தினருக்கு எப்போதுமே அந்நாட்டின் பண்பாட்டு, கலாச்சார, மரபுகளுடன் ஓரளவு சமரசம் செய்துகொண்டு, அம்மண்ணை முழுவதும் ஏற்கவும் முன்னோர்களின் தாய்நாட்டு மோகத்திலிருந்து விடுபடவும் உள்ளழுத்தங்கள் ஏற்படுவது நிதர்சனம். புலம்பெயர்ந்தவர்கள் தாங்கள் வாழ்கின்ற நாட்டின் தொடர்ச்சியான மாற்றங்களை உள்வாங்கிக்கொண்டு அதனூடே தங்களது அடையாளங்களையும் வழுவாகப் பிடித்துக் கொள்பவர்களைக் காலத்திற்கேற்ப வாழும் *new diasporic man* என்று மணியம் வர்ணிக்கிறார்.

*'Haunting the Tiger'* சிறுகதை முழுவதும் முத்து எந்த வழியையும் தேர்ந்தெடுக்க முடியாமல் தடுமாறும் நிலைத்தன்மையற்ற ஆன்மாவாக அலைக்கழிவதாக காட்டப்படுகிறது. ஒரு நல்ல சிறுகதை தானாக வலிந்து சென்று எந்தக் கருத்தையும் முடிவையும் சொல்வதில்லை. அவை அதற்கான வேலையை வாசக மனங்களிடமே விட்டுச் செல்கின்றன. அவ்வகையில் இக்கதையை வாசித்து முடிக்கும் தருணம் வாசகன் குறைந்தபட்சம் முத்துவினுடைய அத்தனை அலைக்கழிப்புகளையும் தன்னுள் உணரக்கூடும். அப்படி நடக்குமாயின் அதுவே மணியத்தின் வெற்றியாகவும் இருக்கும்.

ஏறக்குறைய மூன்று அல்லது நான்காவது தலைமுறையைத் தொட்டுவிட்ட மலேசியத் தமிழர்களும் சீனர்களும் இந்நாட்டின் ஓர் அங்கமாக தங்களை இணைத்துக்கொள்ள முடியாமல் தங்களது தனித்த அடையாளத்தையும், அங்கீகாரத்தையும் மட்டுமே நிறுவ முயலுவார்களெனில் அது இன ரீதியான பாகுபாட்டைத் தொடர்ந்துவரும் சந்ததியினரின் மனதில் ஆழ வேரூன்ற செய்துவிடும் எனும் பதைபதைப்பையும் மணியத்தின் கதைகளில் காண முடிகின்றது. *In A Far Country* நாவலில் வரும் *Lee Chin* எனும் சீன கதாபாத்திரமும் *Pelanduk* எனும் சிறுகதையில் வரும் ஆரோக்கியன் எனும் கதாபாத்திரமும் தீவிரமான சுய அடையாள நிர்மானிப்புகள் எவ்வாறு அவர்களைக் குரூரமானவர்களாக மாற்றுகின்றது என்பதைச் சித்திரிக்கின்றன.

*Pelanduk* சிறுகதையில் வரும் ஆரோக்கியன் தொடக்கத்திலிருந்தே மிக மெல்லிய உணர்வாளனாகச் சித்திரிக்கப்படுகிறான். ஆனால், அவனிடம் தொடர்ந்து சொல்லப்படும் சீதை மான் மேல் கொண்ட மோகமும், அதைபிடிக்கச் சென்ற ராமன் அதுவரையில் விரட்டியது மானல்ல மாறாக மானாக மாறிவிட்ட மாரீசன் என்பதை அம்பு எய்திய பிறகு கண்டுகொள்ளும் ராமாயண (புராண) கதையில் முழுவதும் தன்னை அர்ப்பணிக்கிறான். அதே போன்றதொரு மானைத் தங்கள் குடியிருப்புப் பகுதியில் இருப்பதாகச் சொல்லி அவனை வேட்டைக்கு வலுக்கட்டாயமாக அனுப்பும் சூழலில் உடன் சென்ற பாண்டியன் என்பவனைக் கொன்று விடுகிறான். ஊரே பாண்டியன் திரும்ப வராதது குறித்து கேட்கையில் "நான் மானைக் கொன்றுவிட்டேன். ஆனால், மாரீசன் போலவே அதுவும் மனிதனாகி விட்டது," என்கிறான். இக்கதையில் சொல்லப்படும் புராணம் இந்திய சமூகத்தின் தனிப்பட்ட அடையாளத்தையும், பாண்டியன் என்ற கதாபாத்திரம் வேறொரு சமூக அடையாளத்தையும், ஆரோக்கியன் கொலை செய்யும் சம்பவம் ஒரு சமூகம் எப்படிக் குருட்டுத்தனமாக சில அடையாளங்களைப் பின்பற்றுகிறது என்பதையும் உருவக பாணியில் சொல்லிச் செல்கிறது (*Shantini, & Ganakumaran, 2009*). இச்சிறுகதையில் வரும் ஆரோக்கியன் போலவே பலரும் தங்கள் அடையாளங்கள் இன்னதென குருட்டுதனமாக நம்பிக்கொண்டு அவற்றைத் தற்கால சூழலோடு பொருத்திக்கொள்ள முடியாத நிலையில் முரண்செயல்பாட்டிற்குத் தள்ளப்படுகிறார்கள்.

தொடர்ந்து, *'In A Far Country'* நாவலில் வரும் லீ சின் தனது புல்லாங்குழலை மலேசியாவில் விளைந்த மூங்கிலைக் கொண்டு தயாரிப்பதால் அதன் புனிதமும் அசல் தன்மையும் கெட்டுவிடுவதாக உணர்கிறான். தொடர்ந்து, புல்லாங்குழலை கவனமாகப் பாதுகாப்பதும், சீனர்களின் தொல்பொருட்களை மட்டும் தேடி சேகரிப்பவனாகவும் தன்னை ஒரு வட்டத்துக்குள் நிறுத்திக் கொள்கிறான். இவ்வாறு செய்வதன்மூலம் தன் (இனத்தின்) அடையாளங்களை மீட்டெடுப்பதாகவும் கட்டிக்காப்பதாகவும் எண்ணி தன்னை ஒரு கலாச்சாரக் காவலானாக மாற்றிக் கொள்கிறான். "இந்த நாட்டில் விளைந்த மூங்கிலின் மூலம் இதுபோன்றதொரு மூங்கிலைச் செய்ய முடியாது. அப்படி செய்தாலும் அது வலுவற்று, காற்றழுத்தம் குன்றி இருக்கும்," எனக்கூறும் லீ சின் கதாபாத்திரத்தைக் கொண்டு புலம்பெயர்ந்து வாழ்பவர்கள் தங்களது அடையாளங்களை மீட்டெடுக்க நடப்பு வாழ்வுக்கு முரணாக இயங்குகிறார்கள் என்பதை புரிந்துகொள்ள முடிகின்றது. லீ சின் தனது இன, கலாச்சார அடையாளத்தை மீட்பதில் காட்டும் முரட்டுத்தனுமும் பிடிவாதமும் இறுதியில் அன்றாட வாழ்வுடன் ஒத்துப்போக முடியாமல் மனப்பிரள்வு நிலையை எதிர்கொண்டு சற்றும் எதிர்பாராத நிலையில் மரணிக்கச் செய்கிறது.

இந்நாவல் புலம்பெயர் நாடுகளில் மரபுவழி இன, கலாச்சார அடையாளத்தை மீட்டெடுப்பதில் உண்டாகும் சிக்கலை குற்றச்சாட்டாக வைக்காமல் பன்முக கலாச்சாரத்தை (*Multiculturalism*) ஏற்க தவறும் ஒரு சமூகம் எப்படி நிலைத்தன்மையற்று உழலும் என்பதை கோடிகாட்டுவதாக உள்ளது. மேலும் லீ சின்னினுடைய செயல்பாடுகள், ஒரு குறிப்பிட்ட அடையாள மீட்டெடுப்பு என்பது மற்றவர்களின் அடையாளங்களை தாழ்வாக பார்க்கும் வெறித்தன்மைக்கு இட்டுச்செல்லும் என்றும் முரண் செயல்பாட்டை விளைவிக்கும் என்பதையும் உணர்த்துகின்றன. இந்நாவலில் அமையப்பெற்றுள்ள மற்றொரு கதாபாத்திரம் லீ சின்னுக்கு முற்றிலும் எதிர்மறையாகச் செயல்படுவதாக அமைத்திருப்பது கதையின் நகர்ச்சியில் மிகுந்த ஆர்வத்தை ஊட்டுவதாக இருக்கிறது. லீ சின் போல் அல்லாமல், ராஜன் எதையுமே ஏற்காமலும் எந்தவோர் அடையாளத் தேடலுமின்றித் தொடர்ந்து பணத்தை மட்டும் சம்பாதித்துக் குவிப்பதன்வழி தன்னை இந்நாட்டின் ஓர் அங்கமாக்கிக்கொள்ள முயலுகிறான். இம்மாதிரியான அணுகுமுறை சரியானதா எனக் கேள்வி எழுப்பும் வகையில் சுல்கிப்லி மற்றும் ராஜன் ஆகியோருக்கு இடையிலான உரையாடல்கள் அமைகின்றன.

*"என்னால் உங்களைப் போன்றவர்களைப் புரிந்துகொள்ள முடியவில்லை. நீ இந்த மண்ணை அவமதித்துக் கொண்டே இருக்கிறாய்,"* என்கிறான் சுல்கிப்லி.

*"என்ன அவமதிப்பு?"*

*"இந்த மண்ணை, துணிகளை விற்பதுபோல் கூறுபோட்டு விற்கிறாய்."*

*"நீ ஏன் அதைக் குறை சொல்கிறாய்? நான் என் நிலத்தை விற்கவில்லை. என்னுடைய நிலம் என்று எதுவும் இல்லை,"* என்று ராஜன் தனது நிலைப்பாட்டை முன் வைக்கிறான்.

*"நீ இந்த நாட்டை முழுமையாக புரிந்துகொண்டால் உனக்கென்று ஒரு நிலம் இருப்பதை உணருவாய்".*

*"நான் ஏற்கெனவே புரிந்துகொண்டேன். உலகில் உள்ள மற்ற நாடுகளைப் போலத்தான் இதுவும்,"* என்று தனது *'belong to nowhere'* எனும் பிடிமானத்தை இன்னும் ஆழமாகச் சொல்கிறான்.

இந்நாவலில் வரும் இவ்விரு கதாபாத்திரங்களும் பன்முக கலாச்சாரங்கள் குவிந்திருக்கும் மலேசியா போன்ற நாட்டுக்கு முற்றிலும் ஒவ்வாத தன்மையைக் கொண்டதாகவே இருக்கின்றது. ஒரே அடையாளத்தை மட்டும் நிறுவ முயலுவது எப்படி இன, கலாச்சார வெறியைத் தூண்டும் அபாயம் கொண்டதோ அதேபோல அனைத்தையும் புறக்கணிக்கும் போக்கு அருவருக்கத்தக்கதாகக் காட்டப்படுகின்றது. உலகின் பல நாடுகளில் இனக்கலவரங்கள் நடப்பதையும், மொரீசியஸ், தாய்லாந்து போன்ற நாடுகளில் வாழும் தமிழர்கள் தங்களது அடையாளங்களைத் தொலைத்துவிட்டிருப்பதையும் இவ்விரும் முரண் கதாபாத்திரங்களினூடாகத் தொடர்புபடுத்திப் பார்க்க முடிகின்றது.

**முடிவுரை**

கே.எஸ். மணியத்தின் சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள் என அனைத்தும் மலாயா/மலேசியாவின் புலம்பெயர் சமூகம் இதுவரை கடந்து வந்திருக்கும் பாதையையும் இனிச் செல்ல வேண்டிய இலக்கையும் அதற்கான வழிகளையும் அலுக்காமல் சொல்லிக் கொண்டே இருக்கின்றன. அனைத்துச் சமூக உறுப்பினர்களும் தங்களுடைய மரபுவழி அடையாளங்களையும் வாழும் நாட்டின் அடையாளங்களையும் ஒருங்கே அணைத்துக் கொள்வதன்வழி பன்முகத் தன்மைகொண்ட ஒன்றைச் சமூகமாக உருவெடுக்க முடியும் எனும் பெரும் எதிர்பார்ப்பை கே.எஸ். மணியத்தின் படைப்புகள் சுமந்து நிற்கின்றன. 62 ஆண்டுகால சுதந்திர மலேசியாவில் இன்றைய தேசிய அடையாளத்தை நோக்கிய நகர்ச்சி நிச்சயம் மீளாய்வுக்கு செய்யப்படவேண்டிய கட்டாயத்தையும் இவருடைய கதைகளின்வழி உணர முடிகின்றது. தென்னாசியாவின் புலப்பெயர்வு *(South Asian diaspora)* வரலாற்றுப் பதிவுகளில் இன்றியமையா இடம்பிடித்துள்ள கே.எஸ்.மணியத்தின் அடையாளங்களை தேடிச் சென்றபோது மிஞ்சியது ஏற்கமுடியாத ஏமாற்றங்கள் மட்டுமே. இதுவரையில் இவரது படைப்புக்கு கிடைத்த மிக உயரிய அங்கிகாரமாக *Raja Rao Award* இருக்கின்றது. இது அவரின் ஒட்டுமொத்தப் படைப்புக்கும் கிடைத்த ஒற்றை விருதாகும். இதைத் தவிர அவருடைய *'The Return'* நாவலும் இதர சில சிறுகதைகளும் இடைநிலைப் பள்ளிகளில் ஆங்கில இலக்கியப் பாட நூல்களாகப் பயன்படுத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

புலம்பெயர் சமூகமாத்தினரது வாழ்வின் அபத்தங்களையும் குறைபாடுகளையும், இன்னும் பல சர்ச்சைக்குறிய விடயங்களையும் தனது படைப்பாளுமையின்வழி மிக நுட்பமாக படைத்திருக்கும் கே.எஸ். மணியம் இன்றளவிலும் அவரின் படைப்பிற்குரிய அங்கீகாரத்துடன் அடையாளப்படுத்தப்படாமல் இருப்பது இந்நாட்டினுடைய தேசிய அடையாள உருவாக்கத்தின் வறட்சியையே காட்டுகிறது. தனிமனித, தேசிய அடையாள உருவாக்கத்தின் தேக்கத்தை எல்லா இனத்தவர்களும் படித்துணரும் வகையில் அமையப்பெற்றிருக்கும் இவரது படைப்புகள் தேசிய இலக்கிய அடையாளத்தைப் பெற முடியாமல் வெறுமனே ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் இலக்கியமாக எஞ்சி நிற்பது மிகுந்த வருத்தத்திற்குரியதாகும். இதனையே *'to be Indian in a non-Indian world'* எனும் வாசகத்தின் பொருளாகப் புரிந்துகொள்ள முடிகின்றது *(qtd. Peter Wicks, பக்.10).* இந்நாட்டின் ஆதிக்க சமூகம்தான் இப்படியானதொரு கொள்கையினைக் கொண்டிருக்கிறது என்றால் இந்திய சமூகமும் மணியத்தைக் கொண்டாடாமல் இருப்பதை எவ்விடம் சொல்லி நொந்துகொள்வது?

**மேற்கோள்கள்**

Andrew, H. (2012). *The Constitution of Malaysia: A Contextual Analysis*. Oregon: Hard Publishing.

Hema, T.A. & Madhavan Nair. (2011). *Crisis of Identity in Selected Works of Jean Rhys, Salman Rushdie and K.S. Maniam*. Kuala Lumpur: University of Malaya.

Maniam, K.S. (1993). *In A Far Country*. London: Skoob Books.

Maniam, K.S. (1993). *The Return*. London: Skoob Books.

Maniam, K.S. (1994). *In A Search of A Centre*. Doi: http://www.ucalgary.ca/uofc/eduweb/engl392/maniam-cent.html

Maniam, K.S. (1996). *Faced Out: Six Stories*. Selangor: Maya Press.

Maniam, K.S. (1996*). Hunting the Tiger: Contemporary Stories from Malaysia*. London: Skoob Books.

Nut Graph. (2010). *Found in Malaysia*. Selangor: ZI Publications.

Peter Wicks. *Malaysia as a myth in KS Maniam's In a Far Country*. Doi: https://eprints.usq.edu.au/732/1/Wicks_Maniam1.pdf

Sarup, M. (1996). *Identity, Culture and the Postmodern World*. Georgia: The University of Georgia Press.

Schwartz, S.T., & Marilyn, J.M. (2006). *The role of identity in Acculturation Among Immigrant People: Theoretical Propositions, Empirical Questions and Applied Recommendations*. Basel: Karger.

Shantini, P., & Ganakumaran, S. (2009). *Through the Coils of Memory and Ethnicity: The Malaysian Indian Journal of Nationwood*. European Journals of Social Sciences. Vol 7(3).

Zedeck Siew. (2012). *Having to Belong Everywhere*. [Interview Transcript]. Retrieved from http://penangmonthly.com/having-to-belong-everywhere/

## JABATAN PENGAJIAN INDIA

Jabatan Pengajian India telah ditubuhkan sebagai sebuah Jabatan di dalam Fakulti Sastera dan Sains Sosial di Universiti Malaya pada tahun 1956. Kini Jabatan ini menawarkan kursus dalam dua aliran, iaitu, Aliran A yang terdiri dari kursus-kursus yang berkaitan dengan Bahasa dan Kesusasteraan Tamil dan Aliran B, yang terdiri dari kursus-kursus mengenai aspek-aspek persejarahan dan sosio-budaya masyarakat India dan masyarakat orang-orang keturunan India di Malaysia pada zaman purba, pertengahan dan moden. Kursus-kursus Aliran A diajar dalam Bahasa Tamil, manakala kursus-kursus Aliran B diajar dalama Bahasa Malaysia bagi tempoh selama 7 semester untuk Sarjana Muda Sastera (B.A). Kursus-kursus ijazah dasar yang ditawarkan oleh Jabatan ini juga diambl pelajar-pelajar sebagai subjek elektif yang mengambil mata pelajaran lain. Jabatan ini juga menyediakan rancangan pembelajaran untuk ijazah-ijazah Sarjana Sastera (M.A) dan Kedoktoran (Ph.D) melalui penyelidikan.

*மலாயாப் பல்கலைக்கழகக் கலை-சமூக அறிவியல் புலத்தின் ஒரு துறையாக இந்திய ஆய்வியல் துறை 1956-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இளங்களைப் பட்டத்திற்கான மூன்றறை ஆண்டுகாலப் படிப்பில் இத்துறை இரு பிரிவுகளிலான பாடங்களை வழங்கி வருகின்றது. தமிழ் மொழி, இலக்கியம் ஆகிய பாடங்கள் முதற்பிரிவில் உள்ளன. மலேசிய இந்திய சமூகம் உள்ளிட்ட இந்திய சமூகத்தின் பழங்கால, இடைக்கால, தற்கால வரலாற்று, சமூகப் பண்பாட்டுக் கூறுகள் தொடர்பான பாடங்கள் மலேசிய மொழியான மலாய்மொழியில் வாயிலாகப் பயிற்றுவிக்கப்படும் இரண்டாம் பிரிவில் உள்ளன. இத்துறை பட்டப்படிப்பிற்கு அளிக்கும் பாடங்களை ஏனைய துறைகளில் பயிலும் மாணவர்களும் விருப்பப் பாடங்களாக ஏற்றுப் பயில்கின்றனர். பொருளாய்வின் மூலமாக முதுகலை, முனைவர் (கலாநிதி) ஆகிய உயர்பட்டங்களைப் பெறுவதற்குக் கல்வித்திட்டங்களையும் இத்துறை வழங்குகின்றது.*

The Department of Indian Studies was established as a department of the Faculty of Arts and Social Sciences of University of Malaya in 1956. The department is offering two strems of courses, namely Stream A and Stream B, courses on Language and Literature and Socio-Culture, respectively. The former is related to courses in language and literature. It is thought in the medium of Tamil language. The latter is related to courses in Socio-cultural aspects of Indians in Malaysia and general. It is thought in the medium of Malay language. The A Stream courses expose students to various aspects of language and literature of Tamil and its development covering various periods; the ancient, medieval, and modern through these courses. The A Stream courses expose students to various aspects of historical and socio-cultural of the Indians in Malaysia and its developments of the Indians throughout various eras; ancient, medieval and modern. The department also offers undergraduate and postgraduate programmes. The undergraduate degree, B.A., could be obtained within three to four years. The postgraduate degrees, M.A and Ph.D by research, usually take two to three years, minimum.

Jabatan Pengajian India telah ditubuhkan sebagai sebuah Jabatan di dalam Fakulti Sastera dan Sains Sosial di Universiti Malaya pada tahun 1956. Kini Jabatan ini menawarkan kursus dalam dua aliran, iaitu, Aliran A yang terdiri dari kursus-kursus yang berkaitan dengan Bahasa dan Kesusasteraan Tamil dan Aliran B, yang terdiri dari kursus-kursus mengenai aspek-aspek persejarahan dan sosio-budaya masyarakat India dan masyarakat orang-orang keturunan India di Malaysia pada zaman purba, pertengahan dan moden. Kursus-kursus Aliran A diajar dalam Bahasa Tamil, manakala kursus-kursus Aliran B diajar dalama Bahasa Malaysia bagi tempoh selama 7 semester untuk Sarjana Muda Sastera (B.A). Kursus-kursus ijazah dasar yang ditawarkan oleh Jabatan ini juga diambil pelajar-pelajar sebagai subjek elektif yang mengambil mata pelajaran lain. Jabatan ini juga menyediakan rancangan pembelajaran untuk ijazah-ijazah Sarjana Sastera (M.A) dan Kedoktoran (Ph.D) melalui penyelidikan.

*மலாயாப் பல்கலைக்கழகக் கலை-சமூக அறிவியல் புலத்தின் ஒரு துறையாக இந்திய ஆய்வியல் துறை 1956-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இளங்கலைப் பட்டத்திற்கான மூன்றரை ஆண்டுகாலப் படிப்பில் இத்துறை இரு பிரிவுகளிலான பாடங்களை வழங்கி வருகின்றது. தமிழ் மொழி, இலக்கியம் ஆகிய பாடங்கள் முதற்பிரிவில் உள்ளன. மலேசிய இந்திய சமூகம் உள்ளிட்ட இந்திய சமூகத்தின் பழங்கால, இடைக்கால, தற்கால வரலாறு, சமூகப் பண்பாட்டுக் கூறுகள் தொடர்பான பாடங்கள் மலேசிய மொழியான மலாய்மொழியில் வாயிலாகப் பயிற்றுவிக்கப்படும் இரண்டாம் பிரிவில் உள்ளன. இத்துறை பட்டப்படிப்பிற்கு அளிக்கும் பாடங்களை ஏனைய துறைகளில் பயிலும் மாணவர்களும் விருப்பப் பாடங்களாக ஏற்றுப் பயில்கின்றனர். பொருளாய்வின் மூலமாக முதுகலை, முனைவர் (கலாநிதி) ஆகிய உயர்பட்டங்களைப் பெறுவதற்குக் கல்வித்திட்டங்களையும் இத்துறை வழங்குகின்றது.*

The Department of Indian Studies was established as a department of the Faculty of Arts and Social Sciences of University of Malaya in 1956. The department is offering two streams of courses, namely Stream A and Stream B, courses on Language and Literature and Socio-Culture, respectively. The former is related to courses in language and literature. It is thought in the medium of Tamil language. The latter is related to courses in Socio-cultural aspects of Indians in Malaysia and general. It is thought in the medium of Malay language. The A Stream courses expose students to various aspects of language and literature of Tamil and its development covering various periods; the ancient, medieval, and modern through these courses. The A Stream courses expose students to various aspects of historical and socio-cultural of the Indians in Malaysia and its developments of the Indians throughout various eras; ancient, medieval and modern. The department also offers undergraduate and postgraduate programmes. The undergraduate degree, B.A., could be obtained within three to four years. The postgraduate degrees, M.A and Ph.D by research, usually take two to three years, minimum.

ISSN : 1675-171X